வெளியீடு 19-2-1988

Issued 19-2-1988

529/Ac/88
2974

# தமிழ்நாடு
# சட்டமன்றப் பேரவை நடவடிக்கைகள்
# செயலக வெளியீடு

# TAMIL NADU
# LEGISLATIVE ASSEMBLY DEBATES
# OFFICIAL REPORT

சனிக்கிழமை, ஏப்ரல் 11, 1987-தொகுதி 38-எண் 3

Saturday, the 11th April 1987-Volume 38-No. 3

சட்டமன்றப் பேரவைச் செயலகம், சென்னை-600 009

Legislative Assembly Secretariat Fort St. George,
Madras-600 009

[விலை ரூ.3.00 காசுகள்]

[Price Rs-3.00 paise]

2974

# T. N. L. A. Debates

OFFICIAL REPORT

VOL: 38 · NO: 3

April - 11th 1987

C

V211,31 N87
N87.38.3
136519

V211,31 N87
N87.38-3
136519
சென்னை-600 009.

## உள்ளடக்கம்

*11—4—1987*


| | பக்கங்கள் |
|---|---|
| 1. வினாக்கள்—விடைகள்— | |
| (அ) உடுக்குறியிட்ட வினாக்கள் .. .. | 383—424 |
| (ஆ) உடுக்குறியிடாத வினாக்கள் .. | 424—446 |
| 2. தகவல் கோரல்— | |
| (அ) சங்கரன்கோவில் முனிசிபாலிட்டி பள்ளிக் கட்டிட உரிமையாளர் நடவடிக்கையால் மாணவர்கள் பாதிப்பு .. .. | 446—447 |
| (ஆ) உறுப்பினர்கள் கேள்விகளுக்குத் துறைகள் பதில் தருவதில் தாமதம் .. .. | 462—463 |
| 3. கவன ஈர்ப்பு— | |
| (அ) தமிழ் நாடு கெமிக்கல் நிறுவனத்தைத் தனியாருக்கு விற்பதால் தொழிலாளர் பாதிப்பு .. .. .. .. | 448—451 |
| (ஆ) திருத்தங்கலில் உள்ள பிற்பட்டோர் நல விடுதி பழுதடைந்திருத்தல் .. | 451—454 |
| (இ) ஜெயங்கொண்டம் தொகுதியில் தாய் சேய் நல விடுதிக் கட்டிடங்கள் முடிவு றாமை .. .. .. .. | 454—458 |
| (ஈ) இரணியல் மின்வாரிய உதவிக் கோட்டத்தை குழித்துறை கோட்டத்தோடு இணைத்ததால் ஏற்பட்டுள்ள பாதிப்பு.. | 458 |
| (உ) முதுமலை சரணாலயத்தில் யானைகள் சுட்டுக் கொல்லப்படுவது குறித்து .. | 458—461 |
| 4. அறிக்கைகள் அளித்தல்— | |
| (அ) சட்ட விதிகள் ஆய்வுக் குழு .. | 463 |
| (ஆ) பேரவை முன் வைக்கப்பெற்ற ஏடுகள் குழு .. .. .. .. | 464 |
| (இ) மதிப்பீட்டுக் குழு .. .. | 461 |


பு 2 ஏ 56—1

5. வரவு-செலவுத் திட்டம், 1987-88, வாக்கெடுப்பு—(தொடர்ச்சி)
கோரிக்கை எண் 23—கூட்டுறவு .. .. 464—545
மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் .. 464—465, 520—644
திரு மு. இராசாங்கம் .. .. 465—470
திரு கூடலூர் இ. வி. வேலு .. .. 470—479
*திரு சி. சுப்புராயர் .. .. 479—485
திரு சு. திருமலைச்சாமிக்கவுண்டர் .. 485—490
திரு மா. சின்னராசு .. .. 490—498
திரு எஸ். என். இராமசாமி .. 464, 498—501
*திரு இரா. சண்முகம் .. .. 501—511, 541
திரு ந. சிவஞானம் .. .. 511—520, 536, 544

6. அரசினர் தீர்மானம்—
பேரவை ஒத்திவைக்கப்பெறுதல் .. .. 545

7. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள் .. .. 546—547

2974

# தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

*1987, ஏப்ரல் 11, சனிக்கிழமை.*

*பங்குனி 28, அட்சய—திருவள்ளுவர் ஆண்டு 2018.*

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் காலை 10-00 மணியளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. பி. எச். பாண்டியன் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :**

"தள்ளா விளையுளும் தக்காரும் தாழ்விலாச்
செல்வரும் சேர்வது நாடு."

குறையாத விளைபொருளும் தக்க அறிஞரும் கேடில்லாத செல்வம் உடையவரும் கூடிப் பொருந்தியுள்ள நாடே நாடாகும்.

## (அ) உடுக்குறியிட்ட வினாக்கள்.

### 1. வினாக்கள்-விடைகள்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண்கள் 380 முதல் 385 முடிய மாண்புமிகு உணவுத் துறை அமைச்சரின் வேண்டுகோளுக்கிணங்க ஒத்திவைக்கப் பெறுகின்றன.

**நத்தம் தொகுதி, சானார்பட்டி யூனியனில் புதிய தொழிற்சாலை.**

386—(*வினா எண் 1668) **திரு. மெ. ஆண்டி அம்பலம்:** மாண்புமிகு தொழில் மற்றும் வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

நத்தம் தொகுதி, சானார்பட்டி யூனியன், ராசக்காபட்டி கிராமம், தீத்தாம்பட்டி, கல்லுப்பட்டி ஆகிய பகுதிகளில் தொழிற்சாலை ஏதேனும் நிறுவ அரசு முன்வருமா?

**மாண்புமிகு திரு. க. இராசாராம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தப் பகுதிகளில் தொழிற்சாலை நிறுவுவதற்கான திட்டம் எதுவும் அரசின் பரிசீலனையில் இல்லை.

[1987 ஏப்ரல் 11

**திருநெல்வேலி மாவட்டத்தில் சுண்ணாம்புக்கல் சுரங்கத்தில் அரிய கனிப்பொருள்.**

387—(*வினா எண் 4949) **மாண்புமிகு திரு. வேடசந்தூர் வி.பி. பாலசுப்பிரமணியன் (பேரவைத் துணைத் தலைவர்):** மாண்புமிகு தொழில் மற்றும் வேளாண்மைத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பெங்களூரில் உள்ள Indian Bureau of Mines திருநெல்வேலி மாவட்டத்தில் உள்ள சுண்ணாம்புக்கல் சுரங்கம் ஒன்றில் (Wollastonite) என்னும் அரிய கனிப்பொருளை 1983 ஜூன் மாதத்தில் கண்டுபிடித்ததா?

(ஆ) ஆம் எனில், அதன் தொடர்பாக மாநில அரசு ஏதேனும் தொடர் நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளதா?

**மாண்புமிகு திரு. க. இராசாராம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) மற்றும் (ஆ) திருநெல்வேலி மாவட்டம், நாங்குநேரி வட்டம், கள்ளிக்குளம் கிராமத்திலுள்ள பிரண்டமலைப் பகுதியில் சுண்ணாம்புக்கல் படிவத்தின் அருகில் வொல்லாஸ்டோனேட் (Wollastonite) என்னும் அரிய கனிப்பொருள் இருப்பது கண்டுபிடிக்கப்பட்டது. அக்கனிமம் பெங்களூரிலுள்ள இந்தியன் பீரோ ஆப் மைன்ஸ் நிறுவனத்தார் கண்டுபிடிப்பதற்கு முன்பே புவியியல் மற்றும் சுரங்கத்துறை மற்றும் தமிழ்நாடு கனிவள நிறுவனம் ஆகியவைகள் கூட்டாக தமிழ்நாடு கனிம நிறுவனத்தின் சுரங்கக் குத்தகைக்காக சுண்ணாம்புக்கல் படிவங்கள் புவியியல் ஆய்வு செய்யும்போது முதன் முதலில் 1982-ல் கண்டு பிடிக்கப்பட்டது. இக்கனிப் பொருள் பீங்கான் பெயின்ட்ஸ், பிளாஸ்டிக் போன்ற பொருட்களுக்கு அடைப்பான்களாக (Filler Material) பயன்படுகிறது. மேலும் அதிகம் வெப்பம் தாங்கும் செங்கற்கள் (Refractory Bricks) தயாரிக்கப் பயன்படுகிறது. பீங்கான் பொருட்களின் கீரல், உடைதல் போன்றவற்றை தடுப்பதற்கு இவை பயன்படுத்தப்படுகின்றது.

**திரு. மு. ஜான் வின்சென்ட்:** தலைவர் அவர்களே, நெல்லை மாவட்டத்தில் நாங்குநேரி வட்டத்தில் கண்டு பிடிக்கப்பட்டுள்ள சுண்ணாம்புக் கல்லை வைத்து—அது தொழிற்சாலை இல்லாமல் மிகவும் பின்தங்கிய பகுதியாக இருப்பதால்—அந்த இடத்தில் ஒரு தொழிற்சாலை ஆரம்பிக்க அரசு முன்வருமா?



1987 ஏப்ரல் 11]

**மாண்புமிகு திரு. க. இராசாராம்:** தலைவர் அவர்களே, இந்தப் பொருளைக் கண்டு பிடித்து, இப்பொழுது கனிம நிறுவனம், இந்தப் பொருளைத் தொழில் மேம்பாட்டுக்கு எந்த வகையிலே பயன்படுத்தலாம் என்று ஆய்வு செய்து கொண்டிருக்கிறது. அந்த ஆய்விலே நல்ல விளைவுகள் ஏற்படுமானால் தொழிற்சாலை அமைப்பது பற்றி ஆலோசிக்கலாம்.

**டாக்டர் கே. சமரசம்:** பேரவைத் தலைவர் அவர்களே, இந்தச் திருநெல்வேலி மாவட்டத்தில் கண்டுபிடிக்கப்பட்ட சுண்ணாம்புக் கல் மூலம் பல்வேறு பொருள்கள் தயாரிக்க முடிவதாக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். 1982-லிருந்து இதுவரையிலும் இதன் மூலம் தயாரிக்கப்பட்ட பொருள்கள் என்னென்ன, அவற்றினுடைய மதிப்பு எவ்வளவு, இன்னும் எவ்வாறு, எந்தெந்த வகையில், அதைப் பயன்படுத்திக் கொள்ள அரசு உத்தேசித்துள்ளது என்ற விவரத்தை அறிவிக்க இயலுமா?

**மாண்புமிகு திரு. க. இராசாராம்:** பேரவைத் தலைவர் அவர்களே, சுரங்கத்திலே இருக்கிற பொருளைக் கண்டு பிடித்தது 1982-ல் என்று சொன்னேன். இது பீங்கான் பெயின்ட்ஸ், பிளாஸ்டிக் போன்ற பொருள்களுக்கு ஃபில்லர் மெட்டிரியல் ஆக உபயோகப்படுத்தப்படுகிறது. அதுபோல், ரிப்ராக்டரி பிரிக்ஸ் போன்ற பல பொருள்கள் எல்லாம் ஏற்கெனவே செய்து கொண்டிருக்கிறார்கள். ஆகவே, அதிலும் இதைப் பயன்படுத்திக் கொள்ளலாம் என்றுதான் நான் சொல்லியிருக்கிறேன். சுரங்க வேலை தொடங்கிய பிறகுதான் இதைப் பயன்படுத்துவதைப் பற்றி யோசிக்க முடியும்.

**திரு. டி. ஆர். வேங்கடரமணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது ஒரு அரிய பொருள் என்றும் பல உபயோகங்கள் உடையது என்றும் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்கள். ஏற்கெனவே, அந்தப் பகுதியிலே பல கனிமங்கள் இருக்கின்றன. அது ஒரு அரிய பொருள் என்ற காரணத்தாலே, அதை ப்ராசஸ் செய்து, அதிலே மேல்நடவடிக்கை எடுப்பதற்கான டெக்னாலஜி நம்முடைய நாட்டிலேயே இருக்கிறதா அல்லது வெளிநாட்டு உதவி நமக்குத் தேவைப்படுகிறதா, அப்படியானால் கடந்த ஆண்டுகளிலே வெளி நாட்டு உதவியைப் பெற்று அதை வளர்ப்பதற்கான நடவடிக்கையை அரசு எடுத்திருக்கிறதா என்பதை நான் அறிய ஆசைப்படுகிறேன்.

**மாண்புமிகு திரு. க. இராசாராம்:** தலைவர் அவர்களே, தற்போது இந்தப் பீங்கான் பெயின்ட்ஸ் எல்லாம் செய்வதற்கு இந்தியாவிலே டெக்னிக்கல் நோஹவ் இருக்கிறது என்று நான் நம்புகிறேன். ஆகவே, அதற்கு வெளிநாட்டு அறிவு தேவைப் படும் என்ற எண்ணம் எனக்கு இல்லை. ஆனால் தமிழ்நாடு கனிம நிறுவனம் இதைப் பயன்படுத்துவதிலே தீவிர எண்ணம் கொண்டிருக்கிறது.

**திரு. டீ. தீர்த்தகிரி கவுண்டர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மூலக் கேள்விக்குச் சம்பந்தம் இல்லையானாலும் தர்மபுரி மாவட்டத்திலே அதிலும் குறிப்பாக மொரப்பூர் பகுதி யிலும் கல்லாவி பகுதியிலும் ஒரு கெமிக்கல் சம்பந்தப்பட்ட வெள்ளைக்கல் இருப்பதாக ஆராய்ச்சியாளர்கள் சொல்லியிருக் கிறார்கள். மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்குக்கூட அந்த இடங்கள் தெரியும். அந்த இடங்களில் எல்லாம் சுற்றியிருக் கிறார்கள். அந்த இடங்களில் அரசாங்கம் கெமிக்கல் தொழிற் சாலையை ஏற்படுத்துவதற்கும் வெள்ளைக்கல் சம்பந்தமாக ஒரு பெரிய ஆலையை நிறுவுவதற்கும் அரசு நடவடிக்கைகள் மேற்கொள்ளுமா?

**மாண்புமிகு திரு. க. இராசாராம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டிலே ஏகப்பட்ட கனிமங்கள் இருக்கின்றன. அவைகளையெல்லாம் ஜியாலஜிக்கல் டிபார்ட் மெண்ட் ஆராய்ச்சி செய்து கண்டுபிடித்து உள்ளது. எல்லா வற்றையும் பயன்படுத்த முடியாது. பொருளாதார அடிப் படையிலே இலாபகரமாக இருக்குமா என்பதைப் பார்க்க வேண்டியிருக்கிறது. அவற்றையெல்லாம் கனிம வள நிறுவனம் ஆராய்ந்து கொண்டிருக்கிறது. அந்த வகையிலே மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் எண்ணத்தையும் பரிசீலிக்கலாம். இலாபகர மாக இருந்தால் பரிசீலிக்கலாம் என்பதைத் தெரிவித்துக் கொள் கிறேன்.

**திரு. மு. ஜான் வின்சென்ட்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இங்கே கேட்கப்பட்டிருக்கிற மூலக் கேள்வியிலே மூலப் பொருள் கிடைக்குமிடம் நெல்லை மாவட்டத்தின் தென் பகுதியிலே உள்ள வள்ளியூர் சூட்டுப்பத்தை என்று சொல்லப் பட்டது. அந்த இடத்திலே இருந்து கல் எடுப்பதற்கு தாழை யூத்து சிமெண்ட் ஸ்தாபனத்திற்கு 60 ஆண்டு ஒப்பந்தம் கொடுக்கப்



பட்டிருக்கிறதாக அறிகிறோம். அது உண்மையா? அப்படிக் கண்டு பிடிக்கப்பட்டது உண்மையாக இருந்தால் அரசு மேல் நடவடிக்கை எடுக்குமா?

**மாண்புமிகு திரு. க. இராசாராம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்த இடம் நாங்குநேரி வட்டம் கள்ளி குளம் கிராமத்திலுள்ள பிரண்டமலை பகுதி. அந்த இடம் யாருக்கும் இதுவரையில் குத்தகைக்கு விடப்படவில்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. குமரி அனந்தன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதேபோன்ற கல் ராதாபுரம் பகுதியிலேகூட கிடைப் பதாக சொல்கிறார்கள். அந்தச் சுண்ணாம்புக் கல்லை எடுத்து சிமெண்ட் தொழிற்சாலைக்கு அதிகமாக ஏற்றுமதி செய்து கொண் டிருக்கிற காரணத்தினாலே அந்த அரிய கனிமப் பொருளும் அதோடு சேர்ந்து போய்விடுமோ என்ற அச்சம் இருக்கிற காரணத்தினாலே அமைச்சர் பெருமகனார் அவர்கள் அதை ஆராய்ந்து அந்தக் கல்லை எடுத்துச் செல்வதற்கான தடையை ராதாபுரம் தொகுதியிலே விதிப்பார்களா என்று அறிய விரும்பு கிறேன்.

**மாண்புமிகு திரு. க. இராசாராம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ராதாபுரம் தொகுதியிலே உள்ளது பற்றிய தகவல் என்னிடத்தில் இல்லை. தனிக் கேள்வி போட்டால் பதில் சொல்லலாம்.

**திரு. மா. சின்னராசு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கனிம வளத்தைப் பயன்படுத்த அரசுத் துறையில் தொழிற்சாலை அமைப்பதற்குப் பொருளாதார அடிப்படையில் சாத்தியக் கூறுகள் இல்லையென்கிறபோது தனியார் துறையிலே முன்வந்தால் தொழில் துவங்க அந்தக் கனிம வளத்தைப் பயன் படுத்த அனுமதியளிக்கப்படுமா? இந்தியன் பீரோ ஆப் மைன்ஸ் என்பது அரசு நிறுவனமா அல்லது தனியார் நிறுவனமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. க. இராசாராம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதையெல்லாம் கண்டு பிடிக்கக்கூடிய அந்த நிறுவனம் மத்திய சர்க்காருக்குச் சொந்தமான நிறுவனம். ஆனால் தற்போது தமிழ்நாடு கனிம வள நிறுவனம் தான்,

டாமின்தான் அதையெல்லாம் ஆராய்ந்து கொண்டிருக்கிறது. இதிலே தொழிற்சாலைகள் போன்றவற்றை ஆரம்பிப்பதற்கு எண்ணத்தை வைத்திருக்கிறது.

**திரு. ஆர். ஈஸ்வரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய தொகுதியாகிய வாசுதேவ நல்லூர் கீழ் பகுதியில் சுண்ணாம்புக் கல் பூமிக்கடியில் இருந்து தனியார்களால் எடுக்கப்பட்டு ராஜபாளையத்திலே அதைப் பவுடராக்கி வெளிமா நிலங்களுக்கு ஏற்றுமதி செய்கிறார்கள். ஆகவே அங்கே ஒரு தொழிற்சாலையை ஏற்படுத்த அரசு முன்வருமா? பெருவாரியாக சுண்ணாம்புக்கல் பூமிக்கடியிலிருந்து கிடைக்கிறது. ஆகவே அங்கே ஒரு தொழிற்சாலையை ஆரம்பிப்பதற்கு அரசு முன்வருமா?

**மாண்புமிகு திரு. க. இராசாராம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்திலே இருக்கிற தொழிற்சாலைகளுக்கெல்லாம் சுண்ணாம்புக் கல் தேவைப்படுகிறது. ஆகவே ஆங்காங்கே அந்தத் தொழிற்சாலைகளை அமைப்பது என்பது இயலாது.

**திரு. எஸ். என். இராமசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சாத்தான்குளம், நாங்குநேரி, ராதாபுரம் ஆகிய பகுதிகளிலே உள்ள பல இடங்களிலே வெள்ளைக் கல் அதிகமாக இருக்கிறது. அந்தப் பகுதிகளில் ஏற்பட்டிருக்கிற வறட்சியின் காரணமாக அந்தப் பகுதிகளிலுள்ள மக்களுக்கு வேலைவாய்ப்பு வழங்கக்கூடிய முறையிலே இந்தத் தொழிற்சாலைகளை அங்கே ஏற்படுத்துவதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முயற்சி செய்வார்களா?

**மாண்புமிகு திரு. க. இராசாராம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அநேகமாக வறட்சியான பகுதிகளிலேதான் இந்த கனிமப் பொருள்கள் அதிகமாகக் கிடைத்துக் கொண்டிருக்கின்றன. ஆகவே ஒவ்வொன்றாகத்தான் செய்ய வேண்டும். மாண்புமிகு உறுப்பினர் வெள்ளைக்கல் என்று சொல்கிறார்கள். வெள்ளைக் கல் என்றால் என்ன கல் என்று ஆராய்ந்துதான் கண்டு பிடிக்க வேண்டும். இதையெல்லாம் ஆராய்வதற்காகத்தான் அந்தத் துறை இருக்கிறது. எதற்குப் பயன்படும் என்று பார்க்க வேண்டும். அவர்கள் அதையெல்லாம் பார்த்துக் கொண்டிருக்கிறார்கள். அதையெல்லாம் பாதுகாத்து வைப்பது தான் தற்போது உள்ள கொள்கையாகும்.

1987 ஏப்ரல் 11]

திரு. கூடலூர் இ. வி. வேலு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொல்கிற போது ஆங்காங்கே சிமென்ட் பேக்டரிகளை உருவாக்குவது சாத்தியமல்ல என்று சொன்னார்கள். தூரமாக இருக்கிற பேக்டரிகளுக்கு சுண்ணாம்புக் கல்லை எடுத்துச் சென்றால் லாரிகளின் வாடகையே அதைச் சாப்பிட்டு விடும். எனவே, அந்த வகையில் அரூருக்கும் தண்டராம்பட்டுக்கும் மத்தியிலே மாட்டுப்பல் என்ற பகுதியில் 100 ஏக்கர்களுக்குச் சுண்ணாம்பு இருக்கிறது. அது அமைச்சர் அவர்களுக்குத தெரியும். காரணம் அந்த அரூர் பகுதியிலே அவர்கள் சுற்றுப்பயணம் செய்திருக்கிறார்கள். எனவே, மினி சிமென்ட் பேக்டரி என்ற அடிப்படையில், ஆங்காங்கு சுண்ணாம்புக் கல் இருக்கிற பகுதிகளில் மினி சுண்ணாம்பு ஆலை அமைக்கிற திட்டம் அரசின் பரிசீலனையில் இருக்கிறதா? இனிமேலாவது முயற்சி எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

(முற்பகல் 10-10)

மாண்புமிகு திரு. க. இராசாராம்: தலைவர் அவர்களே, தற்போது அப்படித் திட்டம் இல்லை.

**உசிலம்பட்டி தொகுதியில் குடிநீர் வழங்கல்.**

388—(* வினா எண் 8693) திரு. பி. கே. எம். முத்துராமலிங்கம்: மாண்புமிகு தொழில் மற்றும் வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

உசிலம்பட்டி தொகுதியில் நிலவி வரும் வறட்சியின் காரணமாக குடிநீர் வழங்கலை அதிகரிக்க அரசு ஏதும் திட்டமிட்டுள்ளதா?

மாண்புமிகு திரு. க. இராசாராம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு விவர அறிக்கை* அவை முன் வைக்கப்படுகிறது.

திரு. என். எஸ். வி. சித்தன்: மாண்புமிகு அவைத் தலைவர் அவர்களே, கொடுக்கப்பட்டிருக்கிற விவர அறிக்கையிலே "செல்லம்பட்டி ஒன்றியத்தில் உள்ள 8 குடியிருப்புகளிலும் நடப்பாண்டில் கைபிறைப்பான்கள் அமைக்கப்பட உள்ளன. இவை தவிர,

* 548-ஆம் பக்கத்தில் இணைப்பு I-ஆக அச்சிடப்பெற்றுள்ளது.

உசிலம்பட்டி ஒன்றியத்தில் 14 குடியிருப்புகளிலும் செல்லம்பட்டி ஒன்றியத்தில் 8 குடியிருப்புகளிலும் பொய்த்துப்போன கிணறுகளுக்குப் பதிலாக மாற்று ஆழ்துளைக் கிணறுகள் அமைக்கப் பெற உள்ளன. உசிலம்பட்டி ஒன்றியத்தில் 5 கிராமங்களிலும் செல்லம்பட்டி ஒன்றியத்தில் 2 குடியிருப்புகளிலும் நீராதாரங்களைக் கண்டறியும் பணி முடிவுற்றதும், கையிறைப்பான்கள் அமைக்கும் பணி மேற்கொள்ளப்படும்" என்று இனி எடுத்துக் கொள்ளப்பட இருக்கிற பணிகளைப் பற்றிய விவரங்கள்தான் இருக்கின்றன. நான் உங்கள் மூலமாகத் தெரிந்துகொள்ள விரும்புவது, மதுரை மாவட்டத்திலே, திருமங்கலம், சேடப்பட்டி உசிலம்பட்டி ஆகிய தொகுதிகள் வறட்சியால் மிகவும் பாதிக்கப் பட்டிருக்கின்ற காரணத்தாலே, அந்த வேலைகளை இன்னும் போர்க்கால அடிப்படையிலே முடுக்கிவிட்டு அதிகமான கையிறைப்பான்களை போட இந்த அரசு முன்வருமா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. க. இராசாராம்**: தலைவர் அவர்களே, தற்போது போர்க்கால நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது.

**திரு. எல்ல. இராசமாணிக்கம்**: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தாம்பரம் தொகுதிக்குத் தண்ணீர் தருகின்ற வில்லியம்பாக்கம் பகுதியிலே கடந்த 10 நாட்களாக மின் அழுத்தம் காரணமாக, தாம்பரத்திற்குத் தண்ணீர் வருவதில்லை. அதேபோல ஆலந்தூர், பல்லவபுரம் நகரங்களுக்குத் திடீரென்று ஏற்பட்ட மின் அழுத்தம் காரணமாக தண்ணீர் வராத காரணத்தால், தயவுசெய்து அமைச்சர் அவர்கள் உடனடியாக அந்த இடங்களுக்கு ஜெனரேட்டர் கொடுப்பதற்கு, பொதுவான கருத்தாக தமிழகம் பூராவும் வைக்க முன்வருவார்களா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. க. இராசாராம்**: தலைவர் அவர்களே, தமிழகம் பூராவும் ஜெனரேட்டர் பொருத்துவது என்பது இயலாத காரியம். நேற்றுகூட சென்னையிலே மின் அழுத்தத்தின் காரணமாக ஒரு பகுதிக்குத் தண்ணீர் போக முடியாத சூழ்நிலை ஏற்பட்டு அதற்குப் பிறகு ஜெனரேட்டர் எல்லாம் கொண்டு போய் போட்டு தண்ணீரைத் தந்திருக்கிறார்கள். எல்லாப் பகுதிகளிலும் ஜெனரேட்டர் பொருத்துவது என்பது தற்போது இயலாத காரியம்.





*திருப்பத்தூர் தொகுதியில் சிப்காட் தொழிற்பேட்டை.*

389—(*வினா எண் 9624) **திரு. எஸ். பி. மணவாளன்**: மாண்புமிகு தொழில் மற்றும் வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருப்பத்தூர் தொகுதியில் சிப்காட் தொழிற்பேட்டை நிறுவ ஆய்வு ஏதும் செய்யப்பட்டதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விபரம் என்ன?

**மாண்புமிகு திரு. க. இராசாராம்**: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) மற்றும் (ஆ) திருப்பத்தூர் வட்டத்தில் தொழில் இணையம் அமைக்கும் திட்டம் ஒன்று பரிசீலனையில் உள்ளது. அதற்கான இடம் தேர்ந்தெடுக்கும் பணி தொடரப் பட்டது.

**திரு. எஸ். பி. மணவாளன்**: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருப்பத்தூர் பகுதியிலே சிப்காட் தொழிற்பேட்டை அமைக்கும் பணி தொடரப்பட்டது என்று அமைச்சர் அவர்கள் கூறினார்கள். அந்த ஆய்வுப் பணி எப்பொழுது முடிவடையும்? அங்கு எப்பொழுது தொழிற்பேட்டை துவங்கப்படும் என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. க. இராசாராம்**: தலைவர் அவர்களே, வட ஆற்காடு மாவட்டம், திருப்பத்தூர் வட்டம், மணல்வாடி, சின்னமேட்டூர் ஆகிய கிராமங்களில் சிப்காட் தொழிற்பேட்டை அமைப்பதற்கான இடம் பார்வையிடப்பட்டது. ஆனால், ஆய்வு அறிக்கை இதுவரையிலே தயாரிக்கப்படவில்லை.

**திரு. எஸ். பி. மணவாளன்**: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 7-வது ஐந்தாண்டுத் திட்டத்திலே தமிழகத்திலே 11 தொழிற்பேட்டைகள் அமைய இருக்கின்றன என்றும் அதிலே ஒன்று வட ஆற்காடு மாவட்டம் என்றும் 1984 ஆம் ஆண்டு தொழில் துறையினுடைய அரசாணையிலே குறிப்பிடப்பட்டது. அது தவிர, திருப்பத்தூர் பகுதியில் சில ஆண்டுகளுக்கு முன்பாக வேலையில்லாத் திண்டாட்டத்தின் காரணமாக, நக்சலைட்ஸ் என்ற பெயரால் சில அருவருக்கத்தக்க நிகழ்ச்சிகள் நடை பெற்றன. முக்கியமாக, அப்பொழுதிருந்த மாவட்ட ஆட்சித் தலைவர் திரு. நாராயணன் அவர்களும், டி.ஐ.ஜி. திரு. தேவாரம் அவர்களும் அங்கே தொழில் வாய்ப்பு ஏற்படுத்த வேண்டுமென்ற முக்கியத்துவத்தைக் கருதி, மண்டல்வாடி, சின்னமேட்டூர்

பகுதியிலே ஆய்வு செய்து அறிக்கை அனுப்பினார்கள். அதன் முக்கியத்துவத்தைக் கருதி உடனடியாக அங்கே தொழிற்பேட்டை அமைக்க அமைச்சர் முன்வருவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. க. இராசாராம்:** தலைவர் அவர்களே, அந்த எண்ணம் அரசுக்கு இருக்கிறது. ஆனால், அதற்கான ஆய்வுகள் இன்னும் தொடங்கப்படவில்லை; தொடங்க ஆலோசிக்கலாம்.

**திரு. தி. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சிப்காட் தொழிற்பேட்டை அமைப்பதற்கு மைய அரசு என்ன விதிமுறைகள் வைத்திருக்கிறது; ஒரு மாவட்டத்திற்கு 2 சிப்காட் தொழிற்பேட்டை அமைப்பதற்குத் தடை இருக்கிறதா? வட ஆற்காடு மாவட்டத்திலே திருப்பத்தூர் வட்டத்திலே அதை அமைக்க அரசு ஏற்பாடு செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. க. இராசாராம்:** மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, ஏற்கெனவே வட ஆற்காட்டில் இராணிப்பேட்டையில் நல்லபடி வளர்ந்திருக்கிற சிப்காட் மையமாக இருக்கிறது. மேலும் ஒன்று திருப்பத்தூரில் உருவாக்க வேண்டுமென்ற எண்ணம் அரசுக்கு இருக்கிறது, தற்போது ஆய்வு அறிக்கை தயாராக இல்லை. ஆய்வு அறிக்கை தயாரிக்கப்பட்ட பிறகு அது பற்றி ஆலோசிக்கலாம்.

**டாக்டர் ந. மாசிலாமணி:** பேரவைத் தலைவரவர்களே, மாண்புமிகு தொழிற் துறை அமைச்சரவர்களுக்கு திருப்பத்தூரிலும், வாணியம்பாடியிலும் நீண்டகால உறவு இருப்பதால், அந்தப் பகுதியில் தனிக் கவனம் செலுத்தி தொழிற்பேட்டை அமைக்க ஆவன செய்வார்களா?

**மாண்புமிகு திரு. க. இராசாராம்:** மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, தமிழ் நாட்டில் எனக்கு உறவு இல்லாத ஊரே கிடையாது.

**திரு. கே. பாலாஜி:** மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, 1968-69 ஆம் ஆண்டு பேரறிஞர் அண்ணா அவர்கள் முதலமைச்சராக இருந்த நேரத்தில் காஞ்சிபுரம் பகுதியில் சிப்காட் தொழிற்பேட்டையைக் கொண்டுவர ஏற்பாடுகள் செய்யப்பட்டு,



ஓரிக்கை கிராமத்திலும், பொன்னேரிக்கு அருகாமையிலும் ஏராளமான நிலங்கள் கையகப்படுத்தப்பட்டன. பேரறிஞர் அண்ணா அவர்கள் மறைந்த பிறகு அந்தத் தொழிற்பேட்டை இராணிப்பேட்டைக்குச் சென்றுவிட்டது. அந்தத் தொழிற்பேட்டை அங்கே இருப்பதைப் பாராட்டுகிறோம். மேலும் ஒரு தொழிற்பேட்டையை அண்ணாவின் நினைவாக காஞ்சியில் அமைக்க வேண்டுமென்று அன்புடன் கேட்டுக்கொள்கிறேன். அதை மாண்புமிகு அமைச்சரவர்கள் செய்வார்களா?

**மாண்புமிகு திரு. க. இராசாராம்:** மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னது போல ஏற்கெனவே பொன்னேரியைத் தேர்ந்தெடுத்திருக்கிறார்கள். இப்போது பொன்னேரிக்குப் பக்கத்தில் கும்மிடிப்பூண்டியில் இருக்கிறது. கும்மிடிப்பூண்டியும் அவருடைய மாவட்டத்தில்தான் இருக்கிறது. எனவே அவர்கள் மகிழ்ச்சி அடையலாம்.

**நீலகிரி மாவட்டம், கூடலூர் பேரூராட்சியில் 'ஹெல்லன் குடிநீர்த் திட்டம்'.**

390—(*வினா எண் 11160) **திரு. கு. ரமணி:** மாண்புமிகு தொழில் மற்றும் வேளாண்மைத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நீலகிரி மாவட்டம், கூடலூர் பேரூராட்சிக்கு உட்பட்ட பகுதிகளில் 'ஹெல்லன் குடிநீர் திட்டத்தை' செயல்படுத்துவதில் சிக்கல் ஏற்பட்டுள்ளது உண்மையா?

(ஆ) ஆம் எனில், திட்டத்தை உடன் நிறைவேற்ற அரசு என்ன நடவடிக்கை எடுத்துள்ளது?

**மாண்புமிகு திரு. க. இராசாராம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

**திரு. கு. ரமணி:** மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, நீலகிரி மாவட்டம் கூடலூர் ஹெல்லன் குடிநீர்த் திட்டம் என்ற ஒரு திட்டமே இல்லையென்று அமைச்சரவர்கள் சொல்லுகிறார்களா என்று புரியவில்லை. அந்தத் திட்டம் இருக்கிறது. அந்தத் திட்டத்தை நிறைவேற்றுவதற்குப் புறப்பட்டபோது, பிர்லா போன்ற முதலாளிகளின் தோட்டத்தின் வழியாக பைப்பை புதைக்க வேண்டுமென்ற காரணத்தால், சர்வே பண்ணக்கூட

அனுமதிக்கவில்லை. இப்போது கலெக்டர் புதிதாக அங்கே பைப் போட திட்டம் போட்டிருக்கிறார். அந்தக் குடிநீர் திட்டம் வந்தால், கூடலூர் தாலுக்காவில் அனேகமாக எல்லா இடங்களுக்கும் குறைந்த செலவில் குடிநீர் கிடைத்துவிடும். அந்தத் திட்டத்தைச் செயற்படுத்த ஏதாவது முயற்சியை அரசு எடுத்துள்ளதா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. க. இராசாராம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே அங்கே இயங்கி வருகிற திட்டம், 7 திறந்தவெளிக் கிணறுகள் மூலமாக குடிநீர்த் தேவையை அந்தப் பகுதிகள் பூர்த்தி செய்து கொள்கின்றன. அந்தத் தண்ணீர் சுத்திகரிக்கப்படாத குடிநீராக இருக்கிறது. ஆகவே புதிய குடிநீர் திட்டம் ஒன்று உலக வங்கி உதவியோடு கூடலூருக்கும் மற்றும் 18 குடியிருப்புகளுக்கும் பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்க திட்டமிடப்பட்டிருக்கிறது. அந்தத் திட்டத்தின்படி கூடலூர் பேரூராட்சிக்கு அருகாமையிலும் வறட்சிக் காலத்தில் நம்பத் தகுந்ததுமான பாண்டியாற்றிலிருந்து தண்ணீர் எடுக்கப்படுமென்று அறிவிக்கப்பட்டிருக்கிறது. அவ்வாறு எடுக்கப்படும் நீர் முழுமையாகச் சுத்திகரிக்கப்பட்டு குழாய்கள் மூலமாக கூடலூருக்குக் கொண்டுச் செல்லப்படும்.

**திரு. கு. ரமணி:** மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, நமது அமைச்சரவர்கள் கொடுத்திருக்கும்படியான விவரங்கள் நான் கேட்கக்கூடிய கேள்விக்கான விவரங்கள் அல்ல. கூடலூரில் மிகக் கடுமையான குடிநீர் பஞ்சம் இருப்பதால், சுற்றிலும் பல கிணறுகளை ஆழப்படுத்தி தண்ணீர் எடுக்கும்படியான வேலை போன வருஷம் நடந்திருக்கிறது. இப்போதும் நடந்திருக்கிறது. இந்தத் திட்டம் இயற்கையான பவானி ஆற்றோடு சம்பந்தப்பட்டுள்ள குடிநீர் திட்டமாகும். இந்தத் திட்டத்திற்கு 1¼ கோடி செலவாகும். இந்தத் திட்டம் நிறைவேற்றப்பட்டால் நிரந்தரமாக 1,500, 2,000 அடி உயரத்திலிருந்து வரக்கூடிய நீரானதால், வெகு சுலபமாக எல்லா இடங்களிலும் மேல்நிலைத் தொட்டி கட்டி கூடலூர் நகரப் பஞ்சாயத்து மற்றும் அதைச் சுற்றியுள்ள வட்டார மக்களுக்கு குடிநீர் கொடுக்க முடியும். அந்த விவரங்கள் இப்போது இல்லை என்றாலும் அதைக் கேட்டு வாங்கி எங்களுக்குத் தர அமைச்சரவர்கள் முயற்சி எடுப்பார்களா?

**மாண்புமிகு திரு. க. இராசாராம்:** மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, நான் ஏற்கெனவே சொன்னதுபோல புதிய குடிநீர்த் திட்டம் போடப்பட்டிருக்கிறது. அதற்கு பாண்டியாறு



ஆற்றிலிருந்து தண்ணீர் எடுக்கப்பட இருக்கிறது. இப்போது அங்கே இருக்கிற மக்கள் தொகை 24,985. 2011 ஆம் ஆண்டு கூடலூர் மக்கள் தொகை 39,000 ஆகுமென்று கணக்கிடப்பட்டிருக்கிறது. நாள் ஒன்றுக்கு 70 லிட்டர் வீட்டு இணைப்புக் குழாய்கள் மூலமாகவும், 25 லிட்டர் பொதுக் குழாய்கள் மூலமாகவும் வழங்க இந்தத் திட்டம் வழிவகை செய்கிறது. அரசு, நிர்வாக ஒப்புதலுடன், உலக வங்கி உதவியுடன் இந்தத் திட்டம் 1989 ஆம் ஆண்டுக்குள் நிறைவேற்றப்படும்.

(முற்பகல் 10-20)

**திரு. கே. உச்சி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த 'ஹெல்லன் குடிநீர் திட்டம்' என்பது அது ஹெல்லன் வளை என்ற பகுதியிலே உள்ள தண்ணீர் ஏராளமாக, பெரிய ஆறாக ஓடுகிறது. அந்தத் திட்டத்தை கடந்த ஆண்டில் ஓராண்டுக்குள்ளாக நிறைவேற்றித் தரமுடியும், நிறைவேற்றப்படும் என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிவித்திருக்கின்றார்கள். ஆனால் அந்தத் திட்டம் உடனடியாகச் செயல்படுத்தப்படவில்லை என்பதற்கு காரணம் என்னவென்று தெரியவில்லை. அங்கு ஏராளமான தண்ணீர் இருக்கின்றது. மாண்புமிகு உறுப்பினர் திரு. ரமணி அவர்கள் சொல்வதுபோல, அந்தத் தண்ணீரை பிர்லா கம்பெனியைச் சேர்ந்த ஒருவர் தன்னுடைய தோட்டத்திற்குப் பாய்ச்சிக் கொண்டிருப்பதாகத் தெரிகிறது. உடனடியாக அந்தத் தண்ணீரை வறட்சியாலும், குடிநீர் இல்லாமல் கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கும் மக்களுக்கு இந்த ஆண்டு ஸ்பைரல் ஸ்கீம் மூலமாகவாவது பயன்படுத்திக் கொள்ள முடியுமா என்பதைப் பற்றி அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. க. இராசாராம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தனியார் ஒருவர் அவருடைய தோட்டத்திற்குத் தண்ணீர் பாய்ச்சிக் கொண்டிருப்பதாகத் தகவல் தருகிறார்கள். அதைப்பற்றி விசாரிக்கிறேன். விவசாயத்திற்குப் பயன்படுத்துகின்ற தண்ணீரா என்பதுபற்றி எனக்குத் தெரியாது. ஏற்கெனவே திட்டம் போடப்பட்டிருக்கிறது. 1989 ஆம் ஆண்டில் நிறைவேறும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. 39 ஆயிரம் பேர்களுக்காக என்று திட்டம் தீட்டப்பட்டிருக்கிறது. அந்தப் பகுதியை ஒட்டியிருக்கின்ற 18 பகுதிகளுக்குப் பாதுகாப்புத் தண்ணீர் அளிக்கத் திட்டம் தீட்டப்பட்டிருக்கிறது. இந்தத் திட்டங்கள் எல்லாம் முடிய 1989 ஆம் ஆண்டு ஆகும் என்று குடிநீர்

[1987 ஏப்ரல் 11

வாரியம் கருதுகிறது. தற்போது இருக்கின்ற நிலைமைகளைச் சமாளிக்கின்ற வகையில் குடிநீர் வடிகால் வாரியம் நடவடிக்கைகளை எடுத்து வருகிறது.

**திரு. கோ. வீரய்யன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய மாண்புமிகு அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டபோது ஒரு கூட்டுக் குடிநீர் திட்டம் கூட ஊர் பகுதியிலே அமல்படுத்தப் போவதாக சொன்னார்கள். அதற்குத் தடையாக பெரும் தேயிலை தோட்டத்திற்கு அதிபதியாக இருக்கக்கூடிய பிர்லா நிறுவன தேயிலை தோட்டம் வழியாக குடிநீர்க் குழாய்களை கொண்டு போகக்கூடாது என்று தடை வாங்கியிருப்பதாகச் சொல்கின்றார்கள். அது அரசுக்குத் தெரியுமா? அந்தத் தடையை நீக்கி அந்தப் பகுதி வாழ் மக்களுடைய குடிநீர் பிரச்சினையைத் தீர்க்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

**மாண்புமிகு திரு. க. இராசாராம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குடிநீர் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு அரசு துரித நடவடிக்கை எடுக்கும். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்வதுபோல், தடுக்கப்பட்டிருக்கின்ற விவரங்கள் தற்போது என்னிடம் இல்லை. •

## செங்கோட்டை நகருக்கு ஹரிஹரா நதி படுகையிலிருந்து தண்ணீர்.

391—(* வினா எண் 11898) **திரு. டி. ஆர். வேங்கடரமணன்:** மாண்புமிகு தொழில் மற்றும் வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) செங்கோட்டை நகர் தண்ணீர் திட்டத்திற்கு ஹரிஹரா நதி படுகையிலிருந்து நீர் எடுக்க அரசுக்கு கோரிக்கை வந்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், என்ன நடவடிக்கை அரசு எடுத்துள்ளது?

**மாண்புமிகு திரு. க. இராசாராம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) மற்றும் (ஆ) ஆம். ஹரிஹரா நதி அருகில் இருந்து செங்கோட்டை குடிநீர் திட்டத்திற்கு நீர் எடுப்பதற்கான ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. ஆனால், இந்நதி, திட்டத்திற்கான தலைப்பிடம் அமைப்பதற்கு ஏற்றதாக இல்லாத காரணத்தால் மாற்று தலைப்பிடம் தேர்வு செய்யப்பட்டு ஆய்வு மேற்கொள்ளப்பட்டு வருகிறது.



1987 ஏப்ரல் 11]

**திரு. டி. ஆர். வேங்கடரமணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பாலாற்றை போல இந்த ஹரிஹரா நதி படுகையிலே 'அண்டர் கிரவுண்ட் வாட்டர்' என்று சொல்லப்படுகிற நிலத்தடி நீர் மிக அதிகமாக, அபரிமிதமாக இருக்கிறது. செங்கோட்டையிலும் அதற்குப் பக்கத்திலுள்ள தென்காசியிலேயும் குடிநீர்ப் பஞ்சம் இருக்கின்றது. ஆகவே நிலத்தடி நீரை உடனடியாக எடுப்பதில் ஏதோ பிராப்ளம் இருப்பதாகச் சொல்கிறார்கள். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்ன பதிலிலிருந்து நிலத்தடி நீரை எடுப்பதிலே அரசுக்கு மாற்றுக் கருத்து இருப்பதாகத் தெரியவில்லை. அந்த ஹெட் ஒர்க்ஸ் அமைப்பதிலே ஏன் காலதாமதம் ஏற்படுகிறது? அதை உடனடியாக செய்து அந்தப் பகுதியிலே தட்டுப்பாடு மொத்தத்தையும் நீக்குவதற்கு அரசு என்ன நடவடிக்கை எடுத்து வருகிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. க. இராசாராம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, செங்கோட்டை கடந்த சில மாதங்களாகவே வறட்சியாலே பாதிக்கப்பட்டு வருகிற ஒரு நகரம். அது நகராட்சியாக இருந்தாலும் அங்கே இருக்கின்ற ஹரிஹரா நதி ஜீவ நதி கூட அல்ல. அது குறுகலானதாக பெரும்பாறைகள் நிறைந்த இடத்தில் இருக்கின்றது. அந்த நதியிலே கலங்காத கண்டி அணைக்கட்டிலே 195 அடி நீளத்திற்கு சோதனை போட்டபோது மணல் தான் அதிகமாக இருக்கிறது. தண்ணீர் கிடைக்கவில்லை. மேலும் சில ஆராய்ச்சிகளைச் செய்ததில் களிமண் அதிகமாக இருப்பதாகத் தெரிய வருகிறது. ஆகவே, இப்போது புதிய வழியைத்தான் கண்டுபிடிக்க வேண்டியதாக இருக்கிறது. செங்கோட்டை, தென்காசி மற்றும் வழியோரக் கிராமங்களுக்கு கூட்டுக் குடிநீர் திட்டத்தை அமல் நடத்தும் அளவுக்கு பணிகள் நடந்து வருகின்றன.

**திரு. டி. ஆர். வேங்கடரமணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இப்போது கொடுக்கிற தகவலில் மணலும் களிமண்ணும் இருப்பது போன்ற கருத்தைச் சொன்னார்கள். ஆனால் அந்த ஹரிஹரா நதி படுகையிலே இருந்துதான் செங்கோட்டை ரயில்வே நிலையத்திற்கும், இப்போது புதிதாக வந்துள்ள திருவள்ளுவர் போக்குவரத்துக் கழகத்தினுடைய புதிய பணிமனைக்கும் தண்ணீரைப் பயன்படுத்துகின்றார்கள். அது ஜீவ நதியல்ல. அதிலே

தண்ணீர் இல்லை என்பதை ஒப்புக் கொள்கிறேன். ஆனால் அந்த ஆற்றுப் படுகையிலே அபரிமிதமான, அதிகமான தண்ணீர் இருக்கிறது. அந்த ரெயில்வே ஸ்டேஷனிலும், அதற்குப் பக்கத்தில் கிருஷ்ணாபுரம் போன்ற இடங்களிலும் அந்த ரெயில்வே ஸ்டேஷனில் வரும் தண்ணீரை, அந்த ஆற்றுப் படுகையிலிருந்து அங்கு வரும் தண்ணீரைத்தான் மக்கள் உபயோகப்படுத்திக் கொண்டிருக்கின்றார்கள். ஆகவே அதிலே தவறு இருந்தாலும்கூட, அந்தத் தவறுகளைத் திருத்திக் கொள்ளலாம். அங்கே ஏற்கெனவே அந்தத் தண்ணீரை எடுத்துக் கொண்டு இருக்கின்றார்கள். அங்கே நாம் புதிதாக ஏற்படுத்த வேண்டுமென்பதில்லை. அதிலே மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தனிப்பட்ட கவனத்தைச் செலுத்தி அதிகாரிகளுக்கு அறிவுறுத்தி அந்த இடத்தை மீண்டும் பரிசோதனை செய்து அங்கே கிடைக்கின்ற தண்ணீரை செங்கோட்டை நகராட்சிக்கு வழங்குவார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. க. இராசாராம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, செங்கோட்டை நகர மன்றத் தலைவர் அவர்கள் இதுபற்றி பலமுறை என்னை சந்தித்துப் பேசியிருக்கிறார்கள். இதற்காக தனியாக முயற்சி எடுத்து எப்படியும் அதிக தண்ணீர் தரவேண்டுமென்று ஆணை பிறப்பித்திருக்கிறேன். இருந்தாலும் இப்போது இருக்கின்ற நிலைமையில் 300 அடி உயரம் கொண்ட மேல்நிலை நீர்த் தேக்கத் தொட்டிக்கு கீழ் நீர் ஊற்று படுகையிலிருந்து எடுத்துச் சென்று தண்ணீர் வழங்கப்படுகிறது. இதன் மூலம் 10 லட்சம் லிட்டர் தண்ணீர் தரப்படுவதாகத் தெரிகிறது. ஆக நபர் ஒன்றுக்கு 32 லிட்டர் தண்ணீர்தான் வழங்கப்படுகிறது. எந்த வகையிலாவது அதிக தண்ணீர் கொடுப்பதற்கான வேலையை மேற்கொள்ள வேண்டுமென்று தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்திற்கு ஆணை பிறப்பிக்கப்பட்டிருக்கிறது.

### காற்றாலை மூலம் மின் உற்பத்தி

392—(*வினா எண் 12111) **திரு. வே. இரா. ஜெயராமன்:** மாண்புமிகு தொழில் மற்றும் வேளாண்மைத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

காற்றாலை கொண்டு தனியார் மின் உற்பத்தி செய்துகொள்ள முன்வந்தால் அரசு தரும் மானியம் ஏதாவது உண்டா?

**மாண்புமிகு திரு. க. இராசாராம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. இல்லை.





**திரு. வே. இரா. ஜெயராமன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மின்சாரத்தை போர்க்கால அடிப்படையில் மாநிலங்கள் உற்பத்தி செய்ய வேண்டுமென்று மத்திய அரசு தாக்கீது அனுப்பியிருக்கிறது. இன்றைக்கு அந்தத் தாக்கீதுக்கு ஏற்ப நிதி ஒதுக்கீடுகள் கூட செய்யப்படுகின்றன. இன்றையதினம் மின்சாரத்தை காற்றாலை கொண்டு உற்பத்தி செய்கின்ற காற்றாலைகளை நாகப்பட்டினத்திலிருந்து தூத்துக்குடி வரை ஏற்படுத்த தனியார் துறையிலேயிருந்து யாராவது முன்வந்தால் அவர்களுக்கு உதவ இந்த அரசு தயாராக இருக்கிறதா? அத்துடன் அப்படி முன்வருபவர்களுக்கு நிதி ஒதுக்கீடுகளும், புதிதாக தொழில் துவங்க முன்வருபவர்களுக்கு சலுகைகள் வழங்குகிறோமே, அதுபோல் சலுகைகளும் வழங்கப்படுமா?

**மாண்புமிகு திரு. க. இராசாராம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அப்படி தனியார் யாரும் இதுவரை உரிமங்கள் கேட்டு வரவில்லை. ஆகவே, அதைப்பற்றி அரசு ஆலோசித்துதான் பதில் அளிக்க முடியும். மற்றபடி காற்றாலைகளை தூத்துக்குடி வட்டாரத்தில் நிறுவியுள்ளோம். இப்பொழுது 10 காற்றாலை இயந்திரங்கள் மூலம் மின்சாரம் உற்பத்தி செய்யப்படுகிறது. அந்த வகையில் இதுவரை 7 லட்சம் யூனிட் மின்சாரம் உற்பத்தி செய்யப்பட்டிருக்கிறது.

**திரு. குமரி அனந்தன்:** மாண்புமிகு சபாநாயகர் அவர்களே. மின்சாரப் பற்றாக்குறை நமது தமிழகத்தில் இருக்கிறது. குஜராத் மாநிலத்தில் Wind Mill Development Corporation' ஒன்றை அமைத்திருக்கிறார்கள். அதன் மூலம் மின்சாரத்தை உற்பத்தி செய்ய வேண்டியது அவர்களுடைய பொறுப்பு. அப்படி உற்பத்தி செய்யப்படுகிற மின்சாரத்தை அவர்கள் ஸ்டேட் எலெக்ட்ரிசிட்டி போர்டுக்கு கொடுத்துவிட வேண்டும். அப்படி கொடுத்ததில், இன்றைக்கு அவர்கள் 2 வருடத்தில், லாபம் சம்பாதித்திருக்கிறார்கள். அதனால் தமிழகத்திலும் விண்ட்மில் டெவலப்மென்ட் கார்ப்பரேஷன் ஒன்று ஏற்படுத்தப்படுமா? அப்படி மின்சாரத்தை உற்பத்தி செய்கின்றபோது, குறைந்த விசைத் திறனுள்ள காற்றாலை இயந்திரத்தின் மூலம் மின்சாரம் தயாரிக்கின்ற காற்றாலைகளை நெதர்லாந்து நாடு கண்டு பிடித்திருக்கிறதே. அந்த காற்றாலை இயந்திரங்கள் இங்கும் பயன்படுத்தப்படுமா?

**மாண்புமிகு திரு. க. இராசாராம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தியாவிலே, மத்திய அரசின் கீழே உள்ள வாரியம் ஒன்று இந்த இயந்திரங்களை உருவாக்க உதவி களைச் செய்கிறது. இந்த இயந்திரங்களை அவர்கள் உருவாக்கி, நிறுவி, நாட்டுக்கு வழங்குகின்ற பணியைச் செய்கிறார்கள். நான் சென்ற முறை ஜெர்மன் நாட்டுக்குப் போயிருந்தபோது 'Breman' துறைமுகத்தில் 3 மெகாவாட் மின்சாரத்தை அவர்களே தயாரிப் பதைப் பார்த்து அதுபற்றி மத்திய அரசுக்கும் சொல்லியிருக் கிறேன். மேலும் பல தொழில் அதிபர்களிடமும் அதுபற்றி சொல்லியிருக்கிறேன். அவர்கள் எல்லாம் அதுபற்றி ஆலோசித்து வருகிறார்கள். நேற்றுகூட கோவையிலே இருக்கிற தொழில் அதிபர் திரு. ஜி.டி. கோபால் அவர்கள் இங்கே வந்திருந்தார்கள். அவர்கள் காற்றாலை மூலம் மின்சாரம் உருவாக்க முடியுமா என்று கேட்டார்கள். அதுபற்றிய 'டெக்னிக்கல் நோ ஹவ்' கொண்டு வாருங்கள், அரசு அதுபற்றி ஆய்ந்து பரிசீலிக்கும் என்று சொல்லியிருக்கிறேன்.

**திரு. வே. இரா. ஜெயராமன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவசாயப் பணிகளுக்காக நீர் ஏற்ற இந்த காற்றாலை இப்போது பயன்படுத்தப்படுகிறது. அந்த வகையில் தனியார் காற்றாலை அமைக்க முன் வந்தால் அவர்களுக்கு மானியம் கொடுக்கின்ற செயற்குறிப்பு இந்த அரசிடம் உள்ளதா? அப்படி இதுவரை இல்லையென்றால், இனிமேலாவது அரசு மானியம் அளிக்க முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. க. இராசாராம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தனிக் கேள்வி கேட்டால் அதற்கான பதிலைத் தருகிறேன். தற்போது அதற்குரிய பதிலை அளிப்பதற் குரிய குறிப்புகள் என்னிடத்தில் இல்லை.

(முற்பகல் 10-30)

**டாக்டர் கே. சமரசம்:** பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ் நாடு மின்சார வாரியம் ஆண்டுதோறும் கோடிக்கணக்கான ரூபாய் நஷ்டத்தில் இயங்கிக் கொண்டிருக்கிறது. இப்படிப்பட்ட சூழ்நிலையில் இந்த மின் துறையை இந்த விபத்திலிருந்து விடு விக்கவும், சுயமாக உற்பத்தி செய்யக்கூடியவர்களுக்கு மானியம் அந்து வழங்குவிப்பது இன்றியமையாத கடமையாகும். ஆகவே





இதையும் மனதிற்கொண்டு மறுபரிசீலனை செய்து, சுயமாக மின் உற்பத்தி செய்யக்கூடியவர்களுக்குச் சலுகை அளிக்க, மானியம் அளிக்க அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. க. இராசாராம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நல்ல ஆலோசனை. ஆலோசிக்கலாம்.

### சேலம் மாவட்டம் ஓசூர் வட்டம், அமகருந்தியில் உயர்நிலைப் பள்ளி ஆரம்பித்தல்

393—(*வினா எண் 175) **திரு. செ. செம்மலை:** மாண்புமிகு கல்வி மற்றும் சட்டத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம், ஓசூர் வட்டம் அமகருந்தி என் னும் இடத்தில் உயர்நிலைப்பள்ளி ஆரம்பிக்க செயற்குறிப்பு உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது உயர்நிலைப் பள்ளி துவக்கப் படும்?

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) மற்றும் (ஆ) 1986-87 ஆம் கல்வி ஆண் டில் சேலம் மாவட்டம் அமகருந்தி என்னுமிடத்திலுள்ள நடுநிலைப் பள்ளியை அரசு உயர்நிலைப் பள்ளியாக உயர்த்தி ஆணைகள் வெளியிடப்பட்டுள்ளன.

**திரு. செ. செம்மலை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர் களே, கோரிக்கையை மீண்டும் வலியுறுத்தாத அளவிற்கு அதை உடனடியாக ஏற்று உத்தரவு இட்டதற்கு மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவர் அவர்களுக்கும், மாண்புமிகு கல்வி யமைச்சரவர்களுக்கும் என்னுடைய நன்றியைத் தங்கள் மூலமாக, துணைக் கேள்வியைத் தவிர்த்து, தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. க. சிவராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வருகின்ற கல்வியாண்டிலே தமிழகத்திலே புதிதாக எத்தனை உயர்நிலைப்பள்ளிகள் தொடங்கப்பட இருக்கின்றன என்பதையும், உயர்நிலைப்பள்ளியை மேல்நிலைப் பள்ளியாக ஆக்குவதில் எத்தனை பள்ளிகள் சேர இருக்கின்றன என்ற விப ரத்தையும் அமைச்சரவர்கள் அறிவிப்பார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எங்கெங்கே நடுநிலைப் பள்ளியை உயர்நிலைப்

[1987 ஏப்ரல் 11

பள்ளியாக அமைப்பது, உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாக அமைப்பது என்பது குறித்து அந்தந்தப் பகுதியினுடைய தேவை, எவ்வளவு தொலைதூரம் குழந்தைகள் நடந்து செல்ல வேண்டியிருக்கிறது என்ற தூரத்தினுடைய தன்மை ஆகியவற்றையெல்லாம் ஆய்ந்து, ஒவ்வொரு மாவட்டத்தின் தேவையின் அடிப்படையில், உயர்நிலைப்பள்ளிகள், மேல்நிலைப் பள்ளிகளை தர வேண்டுமென்று அரசு முடிவெடுத்திருக்கிறது. அதற்கான ஒரு ஆய்வினை நடாத்தி விரைவிலே அறிக்கை தரச் சொல்லி பள்ளிக் கல்வி இயக்குநர் பணிக்கப்பட்டிருக்கிறார்கள். அது வந்த பிறகு அதன் அடிப்படையில் நடவடிக்கை எடுக்கப்படும்.

**திரு. எச். ஜி. ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சரவர்கள் எந்தெந்த இடத்திலே மேல்நிலைப் பள்ளிகள், உயர்நிலைப் பள்ளிகள் எல்லாம் அமைப்பது என்பது பற்றிச் சொன்னார்கள். பென்னாகரம் தொகுதியிலே இன்றைக்கு பன்றஹள்ளி கிராமத்திலும், ஏரியூர் கிராமத்திலும் உயர்நிலைப் பள்ளியாக இருக்கின்ற அந்தப் பள்ளிகளை மேல்நிலைப் பள்ளிகளாக ஆக்கும் திட்டமிட்டுள்ளது. அதற்கு உண்டான பணத்தையும் கட்டிவிட்டார்கள். இந்த ஆண்டு அந்த இரண்டு ஊர்களிலும் மேல்நிலைப் பள்ளிகளை ஏற்படுத்தித் தர அரசு முன்வருமா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, நான் ஏற்கெனவே சொன்னதைப்போல, தேவையின் அடிப்படையில் உயர்நிலைப்பள்ளிகள் மேல்நிலைப் பள்ளிகளாக உயர்த்தப்படும். குழந்தைகள் நெடுந்தூரம் செல்லக்கூடாது என்ற அடிப்படையில் இந்த முடிவை அரசு எடுத்திருக்கிறது. கிராமப்புறத்திற்கு அதிகமாக உயர்நிலைப் பள்ளிகளைத் தர வேண்டுமென்று முடிவெடுத்திருக்கிறது. பள்ளிக் கல்வி இயக்குநருடைய அறிக்கையைப் பெற்றவுடன் இது பரிசீலிக்கப்படும். விரைவிலே நடவடிக்கை எடுக்கப்படும். மாண்புமிகு உறுப்பினரவர்களுடைய கோரிக்கை அனுப்பப்பட்டு வந்தால் ஆங்கு அது பரிசீலிக்கப்படும்.

**திருமதி தா. இராசாம்பாள்:** மாண்புமிகு தலைவர் அவர்களே, மலைவாழ் மக்கள் வாழ்கின்ற பகுதியான கடம்பூரில் சென்ற ஆண்டு பணம் கட்டியும் ஐந்து ஏக்கர் தருவதாகச் சொல்லியும் அரசு என்னென்ன குறியீட்டைச் செய்யவேண்டுமென்று சொல்கிறதோ அதன்படி நடந்தும் ஓராண்டுக் காலமாக உயர்நிலைப் பள்ளி கொடுக்கப்படவில்லை. இந்த ஆண்டு அந்த



1987 ஏப்ரல் 11]

நடுநிலைப் பள்ளியை உயர்நிலைப் பள்ளியாக உயர்த்த அரசு முன்வருமா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, நடுநிலைப் பள்ளியை உயர்நிலைப் பள்ளியாக்குவதாக இருந்தாலும் சரி, உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப்பள்ளியாக ஆக்குவதாக இருந்தாலும் சரி, மக்களின் தேவை, எவ்வளவு தூரம் அவர்களுடைய குழந்தைகள் நடக்க வேண்டியிருக்கிறது என்ற அடிப்படைக் கருத்தைக்கொண்டுதான் அதை முடிவு செய்ய வேண்டும் என்று முடிவு செய்யப்பட்டிருக்கிறது. ஆய்வு அறிக்கையைப் பள்ளிக் கல்வி இயக்குநர் அனுப்பவிருக்கிறார். அது வந்தபிறகு உடனே முடிவெடுக்கப்படும்.

**திரு. டி. தீர்த்தகிரி கவுண்டர்:** மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, தர்மபுரி மாவட்டம் மொரப்பூர் என்னுடைய தொகுதி. அந்தத் தொகுதியிலே தொங்கனூர் என்ற ஒரு கிராமத்திலே மூன்றாண்டுகளுக்கு முன்னால் அரசாங்க விதிமுறைப்படி ஐந்து ஏக்கர் நிலம், 25,000 ரூபாய் பணம் டெபாசிட், 25,000 ரூபாய்க்குக் கட்டிடம் ஒன்று கட்டி உயர்நிலைப்பள்ளி வேண்டுமென்று மனு செய்திருக்கிறார்கள். ஆனால் அதற்கு இன்னும் அனுமதி கிடைக்கவில்லை. அமைச்சரவர்கள் குறிப்பிட்டதைப்போன்று டிஸ்டன்ஸ் மிகக் குறைவாக இருக்கிறது என்ற ஒரு காரணத்தைக்காட்டி, அதற்கு அனுமதி கொடுப்பதற்குச் சில விதிமுறைகளிலே கொஞ்சம் இடையூறுகள் இருப்பதால், அதற்கு தடங்கல் இருக்கிறது. கல்வியறிவு இல்லாத ஏழை மக்கள் இருக்கின்ற அந்தப் பகுதியிலே, அவர்கள் பணம் செலுத்தி, நிலம் ஐந்து ஏக்கரும் மாவட்டக் கல்வி அதிகாரி மூலமாக அடைமானம் செய்யப்பட்டு, கல்வி இலாக்கா விதிமுறைகளுக்கு உட்பட்டு பணமும் டெபாசிட் கட்டி, கட்டிடமும் அங்கே கட்டிக் கொடுத்திருக்கிறார்கள். அந்த விதிமுறைகளுக்கு உட்பட்டு அந்தக் கட்டிடம் கொடுத்திருக்கிறார்கள். அப்படிப்பட்ட இடங்களிலே அரசு கருணைகாட்ட, கல்வியறிவு மிகவும் குறைந்த இடமாக இருக்கக்கூடிய, பிற்பட்ட பகுதிக்கு ஒரு கருணை காட்டி கல்வியமைச்சரவர்களும், மாண்புமிகு முதல்வரவர்களும் அதற்கு ஆணை பிறப்பிப்பார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** தலைவரவர்களே, பொதுவான அடிப்படையில் தூரம் எவ்வளவு என்பது குறித்து ஆய்வு நடத்தச் சொல்லியிருக்கிறோம். ஆனால் பெண்கள் படிக்

கின்ற பள்ளியாக இருந்தால், நடுநிலைப் பள்ளியாக இருந்தால் உயர்நிலைப் பள்ளியாகவும், உயர்நிலைப் பள்ளியாக இருந்தால் மேல்நிலைப் பள்ளியாகவும் உயர்த்துவதற்கு தூரத்தைக்கூட கணக்கில் எடுக்க வேண்டியதில்லை என்றும், கிட்டத்தட்ட எல்லா பெண்கள் பள்ளிகளையும் தரம் உயர்த்தலாம் என்றும் அரசு முடிவு செய்திருக்கிறது. மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள் ஆணையிட்டிருக்கிறார்கள். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிடுவது பெண்கள் பள்ளியாக இருந்தால் நடப்பாண்டிலேயே நிச்சயமாக நடவடிக்கை எடுக்கப்படும்.

### பாடநூல் நிறுவன அச்சகம்.

394—(*வினா எண் 7125) **திரு. இரா. தாமரைக்கனி:** மாண்புமிகு கல்வி மற்றும் சட்டத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பாடநூல் நிறுவனத்திற்காக அச்சகம் உருவாக்குவது பற்றி அரசு பரிசீலித்து வருகிறதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் யாது?

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** தலைவரவர்களே, (அ) ஆம்.

(ஆ) புதிதாக அச்சகம் அமைக்க 3 ஏக்கர் நிலம் ஒதுக்கீடு செய்ய வேண்டுமென தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவனம் கேட்டுள்ள கருத்துரு அரசால் பரிசீலிக்கப்பட்டு தரமணியில அந்நிறுவன வட்டார கிடங்கின் அருகாமையில் உள்ள 3 ஏக்கர் நிலம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. அந்த நிலத்தை 31—1—1986 அன்று தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவனம் தொழில்நுட்ப கல்வி இயக்ககத்திலிருந்து பெற்றுக் கொண்டுள்ளது. அச்சக இயந்திரங்கள் வாங்குவது சம்பந்தமாக பாடநூல் நிறுவனம் மேல் நடவடிக்கை எடுத்து வருகிறது.

**திரு. இரா. தாமரைக்கனி:** தலைவரவர்களே, தமிழ்நாடு பாட நூல் நிறுவனத்திற்கு எவ்வளவு ரூபாய்ச் செலவில் அச்சகம் வாங்கப்படும்? எப்போது அந்த அச்சகம் வாங்கப்படும்? பாடநூல் நிறுவனமே சொந்தமாக அச்சகம் வைத்து, அச்சடித்து, பாட நூல்களை வழங்கும்போது விலை குறையுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** தலைவரவர்களே, அதை அரசு ஆராய்ந்து உரிய நடவடிக்கை எடுக்கும்.





**திரு. இரா. தாமரைக்கனி:** தலைவரவர்களே, இப்போது தனியார் அச்சகத்திற்கு பாடநூல் நிறுவனம் மூலமாக புத்தகம் அச்சடிக்கக் கொடுக்கப்படுகிறது. எந்த அடிப்படையில் எத்தனை தனியார் அச்சகங்களுக்கு கொடுக்கப்பட்டிருக்கிறது? சில நேரங்களில் அவர்கள் புத்தகங்களை அச்சடித்துக் கொடுப்பதில் கால தாமதம் ஏற்படுகிறதே, இதைத் தவிர்க்க நடவடிக்கை எடுக்கப்படுமா?

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** தலைவரவர்களே, எந்த அடிப்படையில் தனியார் அச்சகத்திற்குத் தரப்படுகிறது என்ற தகவல் தற்போது என்னிடம் இல்லை. அதனால்தான் எதிர்காலத்தில் பாடநூல் நிறுவனமே சொந்த அச்சகத்தின் மூலம் பாடநூல்களை அச்சிட்டுத் தரவேண்டுமென்று அரசு முடிவு செய்து, அச்சு இயந்திரமும் வாங்க இருக்கிறோம்.

**திரு. சைதை சா. துரைசாமி:** தலைவரவர்களே, தமிழ்நாட்டின் நாயகர் டாக்டர் புரட்சித் தலைவர் அவர்களால் அறிவிக்கப்பட்டுள்ள இலவசப் பாடப் புத்தகங்கள் வழங்கும் திட்டத்திற்கு பாடநூல் நிறுவனம் எவ்வளவு புத்தகங்களை வழங்குகிறது? அதற்கு உண்டான தொகை எவ்வளவு? அதனால் அரசுக்கு ஏற்படுகிற இழப்பு எவ்வளவு என்ற விவரங்களை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** தலைவரவர்களே, சுமார் 8 கோடி ரூபாய்ச் செலவிலே இலவசப் பாட நூல்கள் வழங்கும் திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது.

**திரு. ஹி. கே. ஜெ. பாரதி:** மாண்புமிகு தலைநாயகர் அவர்களே, தமிழ்நாடு பாடநூல் நிறுவனத்தின் மூலமாக தனியார் அச்சகத்திற்குக் கொடுத்து நூல்களை அச்சிட்டுக் கொடுக்கும் வாய்ப்பு இருப்பதாகச் சொன்னார்கள். இதனால் தனியார் செழிப்படைகிறார்கள். சிறப்பான அரசு தனியாரைச் செழிப்படையச் செய்யலாமா? அரசு அச்சகம் இருக்கும்போது, பாடநூல் நிறுவனம் அரசு அச்சகத்தில் கொடுத்தால் அங்கே இன்னும் அதிகமான பணியாளர்களை அமர்த்தி அச்சடித்துக் கொடுக்க வாய்ப்பு ஏற்படும். அதிகமான வேலை வாய்ப்பை ஏற்படுத்தியதாகவும் அமையும். இனிமேலாவது தனியாரிடம் கொடுப்பதை தவிர்த்து, அரசு அச்சகத்தில் கொடுக்க ஆவன செய்யப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

[1987 ஏப்ரல் 11

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** தலைவரவர்களே, சில தனியார் அச்சகங்களில் அச்சிட்டுக் கொடுப்பது அரசு அச்சகத்தில் அச்சிட்டுக் கொடுப்பதைவிட செலவு குறைவாக இருக்கிறது. ஆய்வு அறிக்கை இந்த விவரத்தைத் தெரிவிக்கிறது. பாடநூல் நிறுவனத்தின் மூலம் எல்லாவற்றையும் அச்சிட்டு வழங்க முடியாத காரணத்தால் சில தனியார் அச்சகங்களிலும் அச்சிடும் நிலைமை இருக்கிறது. பாட நூல் நிறுவனத்திலேயே எல்லாவற்றையும் அச்சடிக்க வேண்டும் என்பதற்காக, இப்போது இருக்கிற இயந்திரம் போதாமல் இருப்பதால், புதிதாக அச்சு இயந்திரம் வாங்க வேண்டுமென்று முடிவு செய்திருக்கிறோம்.

**திரு. கே. பாலாஜி:** தலைவரவர்களே, ஒவ்வொரு மாவட்டத்திலும் கூட்டுறவு அச்சகம் இருப்பதாலும் அந்த அச்சகங்களுக்கு முழுமையான பணி கிடைக்காத காரணத்தாலும், தனியாருக்குக் கொடுப்பதைத் தவிர்த்து, எதிர்காலத்தில் தேவையான புத்தகங்களைக் கூட்டுறவு அச்சகத்தில் கொடுத்து அச்சிட ஏற்பாடு செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** தலைவரவர்களே, இதுகுறித்தும் அரசு ஆராய்ந்து பார்த்தது. கூட்டுறவு அச்சகங்களைப் பொறுத்தவரையில் நவீன முறையில் அச்சடிக்கின்ற இயந்திரங்கள் இல்லாத காரணத்தால், அவர்களால் அச்சிட்டுக் கொடுக்க இயலாது என்று கருதப்படுகிறது. எல்லாவற்றையும் பரிசீலனை செய்து பார்த்த பிறகுதான், பாடநூல் நிறுவனத்திற்கு புதிதாக நவீன அச்சு இயந்திரம் வாங்க அரசு உத்தேசித்திருக்கிறது.

**திரு. டி. எம். வெங்கடாசலம்:** தலைவரவர்களே, மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்களுடைய ஆட்சியிலே இலவசப் பாட நூல்கள் வழங்கும் திட்டத்திற்கு பாட நூல் நிறுவனம் புத்தகங்களை வழங்குகிறது. ஆனால் பள்ளி ஆரம்பித்து, 2, 3 மாதங்கள் கழிந்துதான் புத்தகங்கள் கொடுக்கப்படுகின்றன. பள்ளிக்கூடம் ஆரம்பிக்கும்போதே புத்தகங்களைக் கொடுத்து, பிள்ளைகள் நல்ல முறையில் படிக்கின்ற வாய்ப்பை ஏற்படுத்தித் தருவார்களா என்று அறிய விரும்புகிறேன்.



1987 ஏப்ரல் 11]

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அத்தகைய காலதாமதம் ஏற்பட்டது உண்மைதான். ஆனால் அதற்குக் காரணம் அப்படிப்பட்ட நூல்களை அச்சடிக்கத் தேவையான காகிதத் தாள்களை மத்திய அரசின் ஆணைப்படி சில தனியார் காகிதத் தொழிற்சாலைகள் ஒதுக்க வேண்டி இருந்தன. அந்தக் காகிதத் தொழிற்சாலைகள் மத்திய அரசினுடைய ஆணையை ஏற்று காலத்தில் ஒதுக்கத் தவறிவிட்டன. எனவேதான் இந்தக் காலதாமதம் ஏற்பட்டது. நடப்பாண்டில் அதைத் தவிர்க்க மத்திய அரசின் உதவியோடு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது.

(முற்பகல் 10-40)

**டாக்டர் கே. பி. இராமலிங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பாடநூல் நிறுவனத்தின் மூலமாக விற்கப்படுகிற, எழுதுவதற்குப் பயன்படுத்தப்படுகிற ஒரு குயர், இரண்டு குயர் நோட்டுகளைப் பொறுத்தவரையில் தனியார் மூலமாக விற்கப்படுகிற நோட்டுகளின் விலையை விட அதிகமாக இருப்பது அரசுக்குத் தெரியுமா? அதற்குக் காரணம் பாடநூல் நிறுவனம் தனியார் துறையினரிடத்திலிருந்து அச்சடித்து வாங்கி திரும்ப விற்கிறார்கள். தனியார் தானாகவே அச்சடித்து விற்கிறார்கள். இக்காரணத்தால்தான் பாடநூல் நிறுவனத்தின் மூலம் விற்கப்படுகிற நோட்டு புத்தகங்களைக் காட்டிலும் தனியார் மூலம் விற்கப்படுகின்ற நோட்டுப் புத்தகங்கள் விலை குறைவாக இருக்கின்றன. இதுகுறித்து அரசு என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறது?

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** பேரவைத் தலைவர் அவர்களே, அரசின் பாடநூல் நிறுவனத்தின் மூலமாக விற்பனை செய்யப்படுகின்ற நோட்டுப் புத்தகங்களைப் பொறுத்தவரையில் 3 ரூபாய் என்ற அளவுக்கு உச்சகட்டமாக விலை மதிப்பிடப்பட்டு இருக்கிறது. அதனால் தனியார் துறையில் வெளியே விற்கப்படுகிற நோட்டுப் புத்தகங்களைப் பொறுத்தவரையில் 2 ரூபாய் 75 காசுக்குத் தரப்படுவதாகத் தகவல்கள் வந்திருப்பது உண்மைதான். அதற்குக் காரணம் நான் ஏற்கெனவே சொன்னதுபோல் மத்திய அரசினுடைய ஆணைக்குட்பட்டு அவர்கள் சொல்கிற ஆலைகளில் வாங்குகிற காரணத்தால் காகிதத்தின் விலை சற்று அதிகமாக இருந்தது. தற்போது மத்திய அரசினுடைய கவனத்திற்கு இது கொண்டு செல்லப்பட்டிருக்கிறது. இந்தக் குறை

களைத் தவிர்க்க மத்திய அரசு அந்தக் காகித ஆலைகளுக்குத் தாக்கீது அனுப்பி இருக்கிறது. இந்த ஆண்டு அரசு அதற்கு நடவடிக்கை எடுக்கிறது.

**சென்னை உயர்நீதிமன்றத்தின் பெயரை தமிழ்நாடு உயர்நீதி மன்றம் என பெயர் மாற்றல்.**

395—(*வினா எண் 10030) **திரு. மு. மாரிமுத்து மற்றும் மாண்புமிகு திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன் (பேரவைத் துணைத் தலைவர்):** மாண்புமிகு கல்வி மற்றும் சட்டத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னை உயர்நீதிமன்றத்திற்கு தமிழ்நாடு உயர்நீதி மன்றம் என்று பெயர் மாற்றம் செய்திட மத்திய அரசை வலியுறுத்தும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், எப்போது பெயர் மாற்றம் நடைமுறைக்கு வரும்?

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன் :** (அ) மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆம்.

(ஆ) இதுகுறித்து அரசு, மைய அரசைக் கலந்தாலோசித்து வருகிறது.

**திரு. மு. மாரிமுத்து:** தலைவர் அவர்களே, சென்னை மாநில அரசினுடைய பெயர் தமிழ்நாடு அரசு என்று மாற்றப்பட்டு ஏறத்தாழ 15 ஆண்டுகளுக்கு மேலாகிவிட்டன. எனவே இன்னும் ஹைக்கோர்ட்டினுடைய பெயர் சென்னை உயர்நீதி மன்றம் என்றே இருக்கின்ற நிலைமையை மாற்றி, தமிழ்நாடு உயர்நீதி மன்றம் என்று மாற்றுவதற்கு அரசு மிக விரைவாக நடவடிக்கை எடுக்க முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

அடுத்து, மற்ற மாநிலங்களிலிருந்து நியமிக்கப்படுகிற உயர்நீதிமன்றத்தினுடைய தலைமை நீதிபதிகள் நியமிக்கப்படக்கூடிய மாநிலத்தின் தாய்மொழியிலே பயிற்சி பெற்றவராகத்தான் இருந்தாக வேண்டுமென்று மத்திய அரசை நமது மாநில அரசு வற்புறுத்துகிறதா ? அதன்மீது மாநில அரசு எடுத்துள்ள மேல் நடவடிக்கை என்ன என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்னை உயர்நீதிமன்றத்தின் பெயரை தமிழ்நாடு உயர்நீதி மன்றம் என்று பெயர் மாற்றம் செய்ய





வேண்டுமென்று மத்திய அரசுக்கு மாண்புமிகு முதல்வர் அவர்கள் எழுதிக் கேட்டிருக்கிறார்கள். அவர்கள் அதற்கு சில தகவல்களைக் கேட்டார்கள். அதாவது சென்னை என்று உரிமைப் பட்டயம் எப்போது பெறப்பட்டது என்றும், அதனுடைய நகல் வேண்டுமென்றும் 1985-லே கேட்டார்கள். அதையும் நாம் அனுப்பி இருக்கிறோம். மாண்புமிகு முதல்வர் அவர்கள் இதுகுறித்து மீண்டும் மத்திய அரசுக்கு நினைவுபடுத்தி வலியுறுத்தி இருக்கிறார்கள். மத்திய அரசும் விரைவில் இதற்கு ஒப்புதல் அளிக்கும் என்று நம்பப்படுகிறது. உயர்நீதிமன்றங்களின் தலைமை நீதிபதிகளைப் பொறுத்தவரைக்கும் நமது அரசினுடைய கொள்கை தெளிவாக்கப்பட்டிருக்கிறது. மாண்புமிகு முதல்வர் அவர்கள் மத்திய அரசுக்கும், பாரதப் பிரதமருக்கும் எழுதியிருக்கிறார்கள். தமிழகத்தில் இருக்கிற உயர்நீதிமன்றத்தினுடைய தலைமை நீதிபதி தமிழ்மொழி தெரிந்தவராகத்தான் இருக்க வேண்டுமென்று வலியுறுத்தி மத்திய அரசை நாம் கேட்டிருக்கிறோம்.

**மாண்புமிகு திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன் (பேரவைத் துணைத் தலைவர்):** பேரவைத் தலைவர் அவர்களே, சென்னை உயர்நீதிமன்றத்தினுடைய பெயரை தமிழ்நாடு உயர்நீதிமன்றம் என்று மாற்ற வேண்டுமென்ற கோரிக்கையை இந்த அரசு நீண்ட நாட்களாக மத்திய அரசுக்கு வைத்து, அதன் பின்னர் இப்படி பெயர் மாற்றம் செய்வதற்கு அரசியல் சட்டத்திலே திருத்தம் செய்ய வேண்டுமென்று மத்திய அரசு கருதுகிறது என்ற விவரங்களை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கடந்த ஆண்டு பதிலளிக்கும்போது சொன்னார்கள்.

பேரறிஞர் அண்ணா அவர்கள் இந்த மாநிலத்தின் பெயரை மாற்றுகிறபோது இந்த மன்றத்தின் தீர்மானத்தின் மூலம் அரசியல் அமைப்புச் சட்டத்தில் திருத்தத்தை மத்திய அரசு கொண்டுவர வேண்டும் என்று வற்புறுத்தி மிக விரைவாக அது முடிந்தது. அதேபோல் சென்னை உயர்நீதிமன்றத்தினுடைய பெயரை தமிழ்நாடு உயர்நீதிமன்றம் என்று மாற்றுவதற்காக அரசியல் அமைப்புச் சட்டத்தைத் திருத்தி மத்திய அரசு கொண்டு வரவேண்டுமென்று வலியுறுத்துகிற வகையில் அவையிலே இந்தக் கூட்டத் தொடரிலேயே தீர்மானம் கொண்டு வந்து அரசு நிறைவேற்றுமா என்ற விவரங்களை நான் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1882 ஆம் ஆண்டு “Letter of Patent”

[1987 ஏப்ரல் 11

சட்டத்தையும், 1881 ஆம் ஆண்டு "Charter Act" சட்டத்தையும் திருத்த வேண்டி இருக்கிறது. மத்திய அரசு இது குறித்து தக்க நடவடிக்கை எடுக்கும் என்ற நம்பிக்கை நமக்கு இருக்கிறது. அதன் காரணமாக மாண்புமிகு முதல்வர் அவர்களுடைய கோரிக்கையை அவர்கள் ஏற்று 1881 ஆம் ஆண்டு "Charter Act" உரிமைப் பட்டய சட்டத்தின் நகல் கேட்டிருக்கிறார்கள். மத்திய அரசு இதுகுறித்து நடவடிக்கை எடுக்கும் என்று நாம் நம்புகிறோம்.

**திரு. டி. ஆர். வேங்கடரமணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உங்கள் மூலமாக மாண்புமிகு அமைச்சரிடத்தில் ஒரு விளக்கத்தை அறிய நான் ஆசைப்படுகிறேன். நான் அறிந்தவரையில் இந்தியாவில் இருக்கிற உயர்நீதிமன்றங்கள் எல்லாம், அவை தங்கும் இடம் கருதி, அதாவது பிளேஸ் ஆப் ஸ்டேட் என்ற நிலையில் பாம்பே ஹைக்கோர்ட், கல்கத்தா ஹைக்கோர்ட் என்றெல்லாம் பெயர் வைக்கப்பட்டிருக்கிறது. இன்றைக்கு தமிழ்நாடு ஹைக்கோர்ட் என்று மாற்றுவோமே யானால் பாண்டிச்சேரி என்ற யூனியன் டெரிடரிக்கு சென்னை உயர்நீதி மன்றம்தான் ஜூரிஸ்டிக்ஷன் இருக்கிற காரணத்தாலே பாண்டிச்சேரி பகுதியில் இருந்து எதிர்ப்பு வராதா? அதை தமிழ்நாடு என்று மாற்றிவிட்டால் பாண்டிச்சேரி ஜூரிஸ்டிக்ஷன் நம்மை விட்டு போய்விடாதா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** தலைவரவர்களே, தமிழர்கள் வாழ்கின்ற பாண்டிச்சேரி பகுதியில் இருந்து அதற்கு எதிர்ப்பு வராது என்று இந்த அரசு நம்புகிறது.

**மாண்புமிகு திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன் (பேரவைத் துணைத் தலைவர்):** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் வேங்கடரமணன் போல் சிலர் பேசுவதால் இதற்கு காலதாமதம் செய்யப்படுகிறது. லட்சத்தீவு என்ற யூனியன் டெரிடெரிக்கு கேரளாவில் ஜூரிஸ்டிக்ஷன் இருந்தாலும் கேரளா ஹைக்கோர்ட் என்ற பெயர் வைத்திருக்கிறார்கள். இப்படிப்பட்ட இடையூறுகளால் தாமதம் ஆகாமல் தமிழ்நாடு உயர்நீதி மன்றம் என்று பெயர் மாற்றம் செய்ய விரைவில் ஏற்பாடு செய்யப்படுமா?

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** தலைவர் அவர்களே, இப்படிப்பட்ட சாக்கு போக்குகளை மத்திய அரசு சொல்லாது என்று நாம் உறுதியாக நம்புகிறோம்.



1987 ஏப்ரல் 11]

**திரு. இரா. தாமரைக்கனி:** பேரவைத் தலைவர் அவர்களே,

* *

*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இக்கேள்வி நீக்கப்படுகிறது.

**அருப்புக்கோட்டை தொகுதி, நரிக்குடியில் மருதுபாண்டியர் பாலிடெக்னிக்**

**396—(* வினா எண் 12440) திரு. வி. எஸ். பஞ்சவர்ணம்:** மாண்புமிகு கல்வி மற்றும் சட்டத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அருப்புக்கோட்டை தொகுதி, நரிக்குடியில் மருது பாண்டியர் பெயரால் அரசு பாலிடெக்னிக் ஏற்படுத்தப்படுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது ஏற்படுத்தப்படும்?

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

**திரு. வி. எஸ். பஞ்சவர்ணம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தினுடைய இதய தெய்வம் நம்முடைய முதல்வர் அவர்கள் 17—7—1984 ஆம் தேதியன்று சிவகங்கையில் நடைபெற்ற புதிய மாவட்ட துவக்க விழாவில் லட்சக் கணக்கான மக்கள் மத்தியில், மருது பாண்டியர் பிறந்த மண்ணான நரிக்குடியில், அவர்கள் பெயராலே அரசு பாலிடெக்னிக் ஒன்று திறக்கப்படும் என்று அறிவித்தார்கள். அதை ஏற்று விரைவில் மருது பாண்டியர் பிறந்த நரிக்குடி மண்ணில் இந்த ஆண்டாவது ஒரு பாலிடெக்னிக் நிறுவிக் கொடுக்க அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** தலைவர் அவர்களே, இராமநாதபுரத்தில் ஏற்கெனவே 4 இடங்களில் காரைக்குடி, செட்டிநாடு, மானாமதுரை, சிவகங்கை போன்ற பகுதிகளில் பாலிடெக்னிக்குகள் இயங்கி வருகின்றன. நரிக்குடி பகுதியில்

**மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப் பெற்றது.

[1987 ஏப்ரல் 11

இன்னொரு பாலிடெக்னிக் நிறுவுகின்ற காரணத்தால் அங்கே போதிய அளவு மாணவர்கள் கிடைப்பார்களா என்பது ஐயமாக இருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அதற்குத் தேவை இருக்கிறது என்று அறிந்து வந்து தெரிவிப்பார்களானால் அரசு அதைப்பற்றி ஆயும்.

**திரு. வி. எஸ். பஞ்சவர்ணம் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இராமநாதபுரம் மாவட்டம் முழுவதுமாக இருந்த போது அங்கிருந்த நரிக்குடி இப்போது பிரிக்கப்பட்டு காமராசர் மாவட்டத்தில் இருக்கிறது. காமராசர் மாவட்டமாக இருந்தாலும் சரி, இராமநாதபுரம் மாவட்டமாக இருந்தாலும் சரி பிற்பட்ட பகுதியாக இருக்கிற நரிக்குடியில் ஆய்வு செய்து அதை நிறைவேற்றித் தருவார்களா என்று உங்கள் மூலமாக கேட்க விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** அரசு அது பற்றி ஆயும்.

**திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மேல்நிலைப் பள்ளியில் படித்து விட்டு, அதாவது பிளஸ் 2 படித்துவிட்டு வரும் மாணவர்கள், மாணவியர்கள் ஆர்ட்ஸ் காலேஜில் கூட சேர முடியவில்லை. ஏனென்றால் அரசு புதியதாக கலைக் கல்லூரி திறக்கப்படக் கூடாது என்று கொள்கை ரீதியாக முடிவெடுத்திருக்கிறது. அப்படி இருக்கும்போது பிற்பட்ட பகுதிகள் எங்கெல்லாம் இருக்கிறதோ, குறிப்பாக நிலக்கோட்டை தொகுதி போன்ற இடங்களில் எல்லாம் பாலிடெக்னிக் அமைத்துக் கொடுக்க வழி வகை செய்யுமா? மீண்டும் இது குறித்து ஆராய்ந்து அதை உடனடியாக கொண்டு வர ஏற்பாடு செய்யப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கலைக்கல்லூரி அவ்வளவாக பலன் அளிக்காத காரணத்தால், பெரும்பாலும் வேலை இல்லாத் திண்டாட்டத்தை அதிகமாக்குகிற காரணத்தால், எப்படி இந்தக் கலைக் கல்லூரிகளை நடத்துவது என்பதை அரசு ஆய்ந்து கொண்டிருக்கிறது. டாக்டர் மால்கம் ஆதிசேஷய்யா தலைமையில் ஒரு குழு போடப்பட்டிருக்கிறது. அந்தக்



1987 ஏப்ரல் 11]

குழுவினர் 3 மாதத்தில் அறிக்கை தர இருக்கிறார்கள். அதை அடுத்து கலைக் கல்லூரிகளை எல்லாம் எப்படி தரம் உள்ள அறிவியல் கல்லூரிகளாக மாற்றுவது போன்ற திட்டங்களை கொண்டு வர வேண்டும் என்று இந்த அரசு ஆய்ந்து வருகிறது.

(முற்பகல் 10-50)

**திரு. பொன் முத்துராமலிங்கம் :** தலைவர் அவர்களே, மாமன்னர் மருது பாண்டியர் பெயரால் ஒரு அறக்கட்டளை இருக்கிறது. அதற்கு மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் தலைவராக இருக்கிறார்கள். பல லட்சக்கணக்கான ரூபாய் இன்னும் அந்த அறக்கட்டளையில் இருந்தாலும் பாலிடெக்னிக் ஆரம்பிப்பதற்கு சாத்தியக்கூறு இல்லையென்றால் ஒரு பொறியியல் கல்லூரியோ அல்லது மருத்துவக் கல்லூரியோ அந்தப் பணத்திலிருந்து ஆரம்பிப்பதற்கு அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** தலைவர் அவர்களே, அரசு அதுகுறித்து ஆராயும்.

**திரு. க. பாரமலை:** தலைவர் அவர்களே, நம்முடைய மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அதற்குரிய ஸ்ட்ரெங்க்த் வருவதற்கு வாய்ப்பு இருந்தால் ஆரம்பிக்கப்படுமென்று தெரிவித்தார்கள். நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்களின் தொகுதியில் இருந்த இடம்தான் அந்த நரிக்குடி. ஏற்கனவே நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் பஞ்சவர்ணம் அவர்கள் குறிப்பிட்டதைப் போல மாண்புமிகு முதல்வர் அவர்கள் அறிவித்து இருக்கிறார்கள். நான் கேட்டுக் கொள்வது மருது பாண்டியர் போக்குவரத்துக் கழகம் ஒர்க்ஷாப் ஒன்றை மானாமதுரையில் துவக்கவிருக்கிறது. அதற்கு அருகிலே இருக்கிற காரணத்தால் போக்குவரத்துக் கழகத்தின் மூலமாவது நரிக்குடியில் பாலிடெக்னிக்கை துவக்குவதற்கு அரசு முயற்சிக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** தலைவர் அவர்களே, போக்குவரத்துக் கழகத்தின் மூலமாவது அல்லது அரசின் மூலமாவது இதை எப்படி செய்யலாம் என்று அரசு ஆராயும்.

[1987 ஏப்ரல் 11

**திரு. எல்ல. இராசமாணிக்கம்:** தலைவர் அவர்களே, என்னுடைய தொகுதியில் ஒக்கியம் துரைப்பாக்கத்தில் மகளிருக்காக பொறியியல் கல்லூரி ஒன்று துவக்குவதற்கு அரசின் பரிசீலனையில் இருக்கிறதென்று சென்ற ஆண்டு குறிப்பிட்டார்கள். அது எந்த நிலையில் இருக்கிறது? அந்தப் பொறியியல் கல்லூரி எப்போது துவக்கப்படுமென்று அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்களா?

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன் :** தலைவர் அவர்களே, பொறியியல் கல்லூரி தனியாக மகளிருக்காக ஆரம்பிக்க வேண்டுமென்ற செயற்குறிப்பு தற்போது அரசிடம் இல்லை. மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கையைத் தனியாக பரிசீலனை செய்ய அரசு யோசனை செய்யும்.

**திரு. சோ. கலிதீர்த்தான் :** தலைவர் அவர்களே, என்னுடைய தொகுதியில் கல்ராயன் மலைப்பகுதியில் மலைவாழ் மாணவர்களுடைய நலனைக் கருதி இவ்வினாவினைக் கேட்கிறேன். தென்னாற்காடு மாவட்டத்தில் கோமுகி அணைப்பகுதியில் இருக்கிற உயர்நிலைப் பள்ளியில் மாணவர்கள் நல்லமுறையில் படித்து மாவட்டத்திலேயே முதலிடம் வகிக்கிறார்கள். அவர்கள் படிப்பு முடிந்து பொறியியல் கல்லூரிக்குச் செல்ல வசதியில்லாமல் பாதியிலேயே படிப்பை நிறுத்தி விடுகிறார்கள். எனவே அந்த மலைவாழ் மாணவர்களின் நலனைக் கருதி கல்ராயன் பகுதியில் ஒரு பொறியியல் கல்லூரியைத் துவக்குவதற்கு அரசு முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** தலைவர் அவர்களே, அந்தப் பகுதிக்காக தனியாக பொறியியல் கல்லூரி துவக்குவது என்பது சாத்தியமாக அமையாது. தென்னார்காடு மாவட்டத்தில் கள்ளக்குறிச்சி, உளுந்தூர்பேட்டை போன்ற பகுதிகளுக்காக ஒரு பாலிடெக்னிக் அல்லது என்ஜினியரிங் காலேஜ் ஏற்படுத்துவது குறித்து அரசு தனியாக ஆராயும்.

**திரு. கே. பாலாஜி:** தலைவர் அவர்களே காஞ்சிபுரத்தின் அருகில் ஒரு பொறியியல் கல்லூரியை அமைக்க மறைந்த முன்னாள் முதல்வர் பெரியவர் பக்தவத்சலம் முதலியார் அவர்களுடைய பெயரால் இருக்கிற அறக்கட்டளையினர் அரசிடம்



1987 ஏப்ரல் 11]

அனுமதி கேட்டிருக்கிறார்கள். அந்த அனுமதியை இந்த ஆண்டிலாவது மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்களிடம் கேட்டு மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் அளிப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன் :** தலைவர் அவர்களே, மறைந்த பெரியவர் திரு. பக்தவத்சலம் அந்த கோரிக்கையை மாண்புமிகு முதல்வர் அவர்களிடத்தில் கொடுத்திருக்கிறார்கள். அதை ஆய்ந்து விரைவில் நடவடிக்கையெடுக்க மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஆணையிட்டு இருக்கிறார்கள்.

**திரு. கே. ஆர். கணபதி :** தலைவர் அவர்களே, சிதம்பரம் பகுதியில் முட்லூரில் ஒரு ஆர்ட்ஸ் கல்லூரியை துவக்கவிருக்கிறோம். அதைப்போல சிதம்பரம் புவனகிரி பகுதிகளில் மேல்நிலைப் பள்ளிகள் அதிகமாக இருக்கிற காரணத்தாலும், அண்ணாமலை சர்வகலாசாலையில் முத்தையா பாலிடெக்னிக்கில் ஆண்களே சேர்க்கப்படுகிற காரணத்தாலும், பெண்களுக்கென்று தனியாக தொழில் கல்லூரியைத் துவக்க அரசுக்கு உத்தேசம் இருக்கிறதா? அப்படி இருக்குமானால், அது எப்போது துவக்கப்படும் என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்களா ?

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** தலைவர் அவர்களே, சிதம்பரம் பகுதிக்கு தனியாக பெண்கள் கலைக்கல்லூரி துவங்க வேண்டுமென்ற கோரிக்கை அரசுக்கு வந்திருக்கிறது. கலைக்கல்லூரி பயனுள்ள கல்வியைத் தராத காரணத்தால் வேண்டாமென்ற கொள்கைமுடிவின் அடிப்படையில் அரசு அதை நிராகரித்து விட்டது. மாறாக பெண்களுக்குப் பயனளிக்கக்கூடிய அறிவியல் கல்லூரி ஒன்றைத் துவக்க அரசு ஆராய்ந்து வருகிறது. அது சம்பந்தமான குறிப்புகளை சம்பந்தப்பட்ட துறைக்கு அனுப்பி அறிக்கை பெறவிருக்கிறது.

**திரு. எச். ஜி. ஆறுமுகம்:** தலைவர் அவர்களே, தர்மபுரி மாவட்டம் ஒரு பின்தங்கிய மாவட்டம். அங்கு ஓரே ஒரு பாலிடெக்னிக் கிருஷ்ணகிரியில் இருக்கிறது. ஹரூர் பகுதியிலிருந்து செல்ல வேண்டுமென்றால் கிருஷ்ணகிரி 80 கி.மீ. தூரத்தில் இருக்கிறது. ஆகவே ஹரூர் பகுதிக்கு ஒரு பாலிடெக்னிக் ஏற்படுத்திக் கொடுக்க அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

[1987 ஏப்ரல் 11

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** பேரவைத் தலைவர் அவர்களே, நவீன விஞ்ஞான அறிவியல் அடிப்படையில் ஒரு புதிய பொறியியல் கல்லூரியை தர்மபுரிக்குத் தர மாண்புமிகு முதல்வர் அவர்கள் ஆணையிட்டு இருக்கின்றார்கள். அரசு அதை ஆய்ந்து வருகிறது.

**திரு. கே. உச்சி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நீலகிரி மாவட்டம் கல்வியில் மிகவும் பின்னணியில் இருக்கிறது. குறிப்பாக என்னுடைய கூடலூர் தொகுதியில் உள்ள மாணவர்கள் ஏறத்தாழ 100 கிலோ மீட்டர் தொலைவு வந்து ஊட்டியில் உள்ள கலைக் கல்லூரியில் படிக்கவேண்டிய நிலை இருக்கிறது. ஆகவே கூடலூருக்கு என்று ஒரு கலைக் கல்லூரியையோ அல்லது அரசு பாலிடெக்னிக்கையோ துவக்க அரசு முன்வருமா?

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** தலைவர் அவர்களே, கொள்கை ரீதியாக கலைக் கல்லூரிகளைத் துவக்க அரசு இனி அனுமதி தராது. ஆனால் பாலிடெக்னிக்கைப் பொறுத்த வரையில் அரசு தேவையின் அடிப்படையிலே பரிசீலனை செய்யும்.

**தாய்மார்கள் நலன் மற்றும் குழந்தைகளின் வளர்ச்சிக்கு தமிழகத்தில் மத்திய அரசின் திட்டங்கள்.**

897—(*வினா எண். 1197) **திரு. மா. மணிமாறன்:** மாண்புமிகு சத்துணவு, சமூகநலம் மற்றும் கதர்த்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கிராமங்களில் உள்ள தாய்மார்களின் நலனைப் பேணவும், குழந்தைகளின் வளர்ச்சிக்காகவும், மத்திய அரசின் திட்டங்கள் எவையேனும், மாநில அரசால் செயல்படுத்தப் படுகிறதா?

(ஆ) ஆம் எனில், அவைகளின் விவரம் என்ன?

**மாண்புமிகு திரு. ஆர். சௌந்திரராஜன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) ஆம்.

(ஆ) சமுதாயத்தில் நலிவுற்ற வகுப்பினைச் சார்ந்த குழந்தைகளுக்கும், கருவுற்ற மற்றும் பாலூட்டும் தாய்மார்களுக்கும் செறிவுமிகுந்த பணிகள் ஒருங்கிணைந்த வடிவில் வழங்குகின்ற அளவில் மத்திய அரசின் ஒருங்கிணைந்த



1987 ஏப்ரல் 11]

குழந்தை வளர்ச்சிப் பணிகள் திட்டம் உருவாக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தின்கீழ் மேற்கொள்ளப்படும் பணிகள் பின்வருமாறு அமையும்:

1. துணை ஊட்டச்சத்து.
2. முன் பருவக் கல்வி.
3. மருத்துவ சோதனை.
4. நோய் தடுப்பு.
5. மேல் மருத்துவ சோதனை.
6. சமுதாயத்தில் ஊட்டச்சத்து மற்றும் சுகாதாரக் கல்வி.

**திருமதி பா. வளர்மதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கிராமத்தில் உள்ள தாய்மார்களுக்கு நடத்துகின்ற எம். என். சி. சென்டர் தற்போது நிறுத்தி வைக்கப்பட்டுள்ளதாகத் தெரிகிறது. அது உண்மையா? மறுபடியும் தொடர்வதற்கு அரசு ஆலோசிக்குமா என்று அறிவதோடு இந்தத் திட்டத்தின்கீழ் எத்தனை மையங்கள் உள்ளன? 2 வயதுக்கு உட்பட்ட குழந்தைகள் எத்தனை பேர்கள் பயன் பெறுகிறார்கள் என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆர். சௌந்திரராஜன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தத் திட்டம் நிறுத்தப்படவில்லை. தொடர்ந்து நம்முடைய தமிழகத்தின் முதல்வருடைய ஆசியோடு இன்றைக்கு நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. இந்தத் திட்டத்தின் கீழ் தமிழகத்தினுடைய நகரப் பகுதிகளில் 37 திட்டப் பிரிவுகளும், ஊராட்சி ஒன்றியப் பகுதிகளில் 15 திட்டப் பிரிவுகளும், ஆக மொத்தம் 52 திட்டப் பிரிவுகள் செயல்படுகின்றன. இதிலே குழந்தைகள் 70,785 பேர்கள் பயன் பெறுகிறார்கள்.

[1987 ஏப்ரல் 11

## பெரியகுளம் சோத்துப்பாறை நீர்த்தேக்கம்.

398—(*வினா எண். 10173) டாக்டர் த. முகம்மது சலீம்: மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பெரியகுளம் சோத்துப்பாறை நீர்த்தேக்க வேலை எப்போது முடியும்?

(ஆ) அதன் மதிப்பீடு எவ்வளவு?

**மாண்புமிகு திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) வேலை 1989-90-ல் முடிவடையும் என மதிப்பிடப்பட்டுள்ளது.

(ஆ) ரூ. 1,626 இலட்சங்கள்.

## காவிரியில் அணைகள் கட்டுதல்.

399—(*வினா எண். 11071) திரு. கே. உச்சி: மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

வெள்ளக் காலத்தில் காவிரியிலும் அதன் உப நதிகளிலும் பெருக்கெடுத்தபடி கடலில் விழுந்து வீணாகும் ஆற்று நீரை சேமிக்க காவிரியில் இரண்டு இடங்களில் சிறிய அணைக்கட்டுகளை கட்ட அரசு முன்வருமா?

**மாண்புமிகு திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காவிரி நதியில் பல இடங்களிலும் அதன் உப நதிகளான அமராவதி மற்றும் நொய்யல் மற்றும் அரியார், உப்பாறு, தொப்பையாறு, சின்னாறு போன்ற பெரிய, சிறிய உபநதிகளிலும் அங்கங்கே வாய்ப்புள்ள இடங்களில் பெரிய அல்லது சிறிய நீர்த்தேக்கங்கள் முன்பே கட்டப்பட்டுவிட்டன. எனவே காவிரி நதியில் வெள்ளம் வரும் சாத்தியக் கூறுகள் அநேகமாக இல்லை என்று கூறலாம்.

காவிரி டெல்டாப்பகுதியில் பலத்த மழையினால் சில சமயங்களில் வெள்ளப்பெருக்கு ஏற்படுகிறது. டெல்டாப்பகுதி தாழ்வான சமவெளிப்பகுதியானதால் வெள்ளம் சீராக வடிவ



1987 ஏப்ரல் 11]

தில்லை. இதே காரணத்தால் இப்பகுதியில் அணைகள் கட்டுவதற்கான சாத்தியக்கூறுகளும் இல்லை. ஆனால், வெள்ளத் தண்ணீரைத் திருப்பிவிட்டு இப்பகுதியின் பாசனத்திட்டங்களை மேன்மைப்படுத்துவதற்கான திட்டங்கள் தீட்டப்பட்டுள்ளன.

**திரு. கே. உச்சி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காவிரி நதிப் படுகைகளில் புதிதாக கட்டுவதற்கு இடமில்லை என்ற பொருள்பட அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். என்றாலும் கூட நான் நீலகிரி மாவட்டத்தைப் பற்றி கோடிட்டுக் காட்டவேண்டும். அங்கே பல்வேறு ஆறுகளில் தண்ணீர் ஏராளமாக ஓடுகின்றது. அதுவும் மழைக் காலங்களில் மிக அதிகமாக ஓடி அந்த தண்ணீர் எல்லாம் வீணாகிவிடுகிறது. எனவே அதிகமாக தண்ணீர் ஓடுகின்ற அந்த நதிகளில் உள்ள நீரைத் தேக்கி வைக்க, நீர்த் தேக்கங்கள் கட்டி, வெய்யில் காலத்தில் பயன்படுத்தி, மக்களுக்குச் சேவை செய்ய அரசு முன்வருமா?

**மாண்புமிகு திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர், அவருடைய மாவட்டத்தைப் பற்றிச் சொல்கிறார்கள். எந்தெந்த நதிகளில் அப்படித் தண்ணீர் அதிகமாக வருகிறது என்று சொன்னால், அங்கே நம்முடைய அதிகாரிகளை அனுப்பி, அவைகள் சரியாக இருக்கும் என்று சொன்னால், அங்கே புதிதாக அணைகளை கட்டுவதற்கு அரசாங்கம் முயற்சிகளை மேற்கொள்ளும்.

**திரு. கே. உச்சி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நீலகிரி மாவட்டத்தில் பல நதிகள் ஓடுகின்றன என்று சொன்னேன். ஆகவே மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அதிகாரிகளை அனுப்பினால், நானே ஒவ்வொரு இடத்திற்கும் அவர்களை அழைத்துச்சென்று, நதிகளில் வீணாகக்கூடிய தண்ணீரை எப்படிப் பயன்படுத்த முடியும் என்பதை முடிவு செய்ய அதிகாரிகளுக்கு ஒத்துழைப்புக் கொடுப்பேன் என்பதை அமைச்சர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசாங்கம் வேண்டிய முயற்சிகளை மேற்கொள்ளும்.

[1987 ஏப்ரல் 11

(முற்பகல் 11-00)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவையின் அனுமதியுடன் வினாக்கள்-விடைகள் நேரம் நீட்டிக்கப்பெறுகிறது.

**திரு. பெ. உத்திராபதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காவிரியில் வரக்கூடிய தண்ணீர் கடைமடை பகுதியில், தஞ்சாவூர் மாவட்டத்தில் கடலில் சென்று கலந்து விடுகிறது. மழைக் காலங்களில் வருகின்ற தண்ணீரைத் தேக்கி வைக்காமல் அதுவும் கடலுக்குப் போய்விடுகிறது. சென்ற ஆண்டு சட்டமன்றத்தில் முன்னாள் பொதுப்பணித் துறை அமைச்சர் அவர்கள், தஞ்சைக்கு அருகிலே, செங்கிப்பட்டிக்கு அருகாமையில் முத்து முதலைவாரித் திட்டம், சோழன்வாரி திட்டம் ஆகிய திட்டங்களை 125 லட்சம் ரூபாயில் அமைக்கப் போவதாக அறிவித்தார்கள். அந்தத் திட்டம் எதிர்காலத்தில் நிறைவேற்றப்பட்டால், கடைமடைப் பகுதியில் கடலில் விழும் நீரை தேக்கி வைத்தால் வறட்சி வந்தாலும், வெள்ளம் வந்தாலும் பாதுகாக்க முடியும். இந்தத் திட்டம் எதிர்காலத்தில் நடைமுறைக்குக் கொண்டுவரப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் சொல்லிய திட்டங்கள் அரசாங்கத்தினுடைய கவனத்திலே இருந்துகொண்டிருக்கின்றன. இதிலே டி.சி. ரேஷியோ சரியாக இல்லை. மிகவும் குறைவாக இருக்கிறது. இருந்தாலும் இந்த அணையைக் கட்டுவதன் மூலமாக வெள்ளக் காலங்களிலே தண்ணீரைத் தேக்கி பயன்படுத்த முடியுமா என்று அதிகாரிகளை மறு ஆய்வு செய்யுமாறு சொல்லி இருக்கிறோம். சரியான சாத்தியக்கூறுகள் இருக்கும் என்று சொன்னால் வேண்டிய முயற்சிகளை மேற்கொள்ளலாம்.

**திரு. கே. பாண்டுரங்கன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எங்கள் பகுதியில், திருப்பத்தூர், வாணியம்பாடி, வேலூர், ஆற்காடு, காஞ்சீபுரம் வழியாகச் செல்லும் பாலாற்று நீர் செங்கற்பட்டுக்கு அருகாமையிலுள்ள மகாபலிபுரத்திற்கு அருகிலே கடலில் கலந்து விடுகின்றது. பாலாற்று நீரை தேக்கி வைப்பதற்கு ஆங்காங்கே 3 அடி உயரத்திற்கு தடுப்புச் சுவர்களைக் கட்டி 3, 4 ஆண்டுகளுக்கு ஒரு முறை வருகின்ற



1987 ஏப்ரல் 11]

தண்ணீரைத் தேக்கி, நிலத்தடி நீரை உருவாக்குவதற்காக—நான் மாண்புமிகு அமைச்சர் அவர்களை பலமுறை கேட்டு இருக்கிறேன் இந்த ஆண்டிலாவது 3 அடி உயரத்திற்கு தடுப்புச் சுவர்களை அந்த ஆற்றிலே கட்டி குடி தண்ணீருக்காகவும், நிலத்தடி நீருக்காகவும் ஏற்பாடு செய்வார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதை ஆராய்ந்து பார்த்து செய்ய வேண்டும். ஆகவே, சம்பந்தப்பட்ட அதிகாரிகளை அனுப்பி, ஆராய்ந்து பார்த்து, அது சரியாக இருந்தால் வேண்டிய நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

**திரு. வி. பால்கிருஷ்ணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மழைக்காலங்களில் மேட்டூரிலிருந்து காவிரி தண்ணீரைத் திறந்து விடுகின்றபோது கடலிலே சென்று கலந்து விடுகிறது. அதை உத்தேசித்து புதுக்கோட்டை, இராமநாதபுரம் மாவட்டங்களில் ஏற்கெனவே அந்தத் தண்ணீரை அங்கே கொண்டு செல்வதற்காக ஆய்வு செய்யப்பட்டு நிறுத்தப்பட்டிருக்கிறது. மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் அவர்கள் அதை கவனத்திலே கொண்டு புதுக்கோட்டை, இராமநாதபுரம் மாவட்டங்களுக்கு மழைக்காலங்களில் வீணாகின்ற நீரை திருப்பி விடுவதற்கு அரசு ஆவன செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முன்பு இதுபோன்ற ஒரு திட்டத்தை ஆய்வு செய்திருக்கிறார்கள். அப்படி செய்கின்றபோது நிறைய பணம் ஆகும் என்று சொல்லி அந்தத் திட்டத்தை அப்போது நிறுத்தி வைத்திருக்கிறார்கள். மறுபடியும் ஆய்வு செய்து நீர் நிறைய கிடைக்கும் என்று சொன்னால், அதற்கு வேண்டிய முயற்சிகளை மேற்கொள்ளலாம்.

**திரு. இரா. சண்முகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தக்கோலம் அருகில் கூவம் ஆற்றுக்குக் குறுக்காக கேசாவரம் என்ற இடத்தில் ஒரு அணை கட்டுவதற்காக சுமார் ஒரு பெரிய காலம் ஆய்வு நடத்தி, 1982-ஆம் ஆண்டு ஆய்வு செய்து

நிறுத்தி வைக்கப்பட்டிருக்கிறது. சென்னைக்கு குடிநீர் வருகின்ற காரணத்தால் அதை ஆய்வு செய்தும் இதுநாள் வரையிலும் அது நிறுத்திவைக்கப்பட்டிருப்பதாகச் சொல்கிறார்கள். இப்போது கிருஷ்ணா நதி தண்ணீர் வருவதற்கு எல்லா ஏற்பாடுகளும் செய்யப்படுகின்ற இந்த நேரத்தில், கடலிலே வீணாகக் கலக்கின்ற தண்ணீரை அங்கே தேக்கி வைக்க கேசாவரத்தில் ஒரு அணையை கட்டுவோமானால், அங்கே 10 ஆயிரம் ஏக்கர் நிலம் பயிர் செய்வதற்கான ஒரு வாய்ப்பும், வறட்சி நேரத்தில் குடிதண்ணீருக்காகப் பயன்படுகிற வாய்ப்பும் இருக்கிறது. மீண்டும் கேசாவரத்தில் அணையைக் கட்டுவதற்கு அரசு வாய்ப்பை உருவாக்கித் தருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது மூலக் கேள்விக்கு சம்பந்தமில்லாத கேள்வி. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தனியாக கேள்வி போடுவார்களேயானால் சரியான பதில் தரப்படும்.

**திரு. கோ. வீரய்யன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டபோது, இப்போது காவிரியில் வெள்ளம் வரக்கூடிய அபாயம் இல்லை, ஆனால் மழைக் காலங்களிலே வரக்கூடிய தண்ணீர் சமவெளிப் பகுதியாக இருக்கக்கூடிய தஞ்சை மாவட்டத்தை பாதிக்கிற படியால் அதை திருப்பி பாசனத்திற்காக பயன்படுத்தும் திட்டம் இருப்பதாகச் சொன்னார்கள். அது எப்படிப்பட்ட ஆய்வில் இருக்கிறது? மழை, வெள்ளக்காலங்களில் அந்த சமவெளிப் பகுதி பாதிக்கப்படுவதைத் தடுப்பதற்கான முறையில் அரசு நடவடிக்கை எடுக்குமா? எப்படிப்பட்ட திட்டத்தை அரசு பரிசீலித்துக்கொண்டிருக்கிறது என்பதை அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முன்னாலே மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னதைப்போல முக்தாமுகலைவாரித் திட்டம் போன்ற சிறுசிறு திட்டங்களாக, தஞ்சையிலே வறண்டு கிடக்கின்ற பகுதிகளில் அது கட்ட முடியுமா என்று பார்க்கிறோம். இருந்தாலும் அரசிற்கு மிகச் சிக்கனமாக, எவ்வளவு தண்ணீர் கிடைத்தாலும் எல்லாக்



காலங்களிலும் பயன்படுத்த முடியுமா என்பதை நாங்கள் பார்த்துக் கொண்டிருக்கிறோம். அதிகாரிகள் சொல்வதெல்லாம், அது சமவெளிப் பிரதேசமாக இருக்கின்ற காரணத்தால் வெள்ளம் வருகின்ற காலத்திலே தண்ணீரை கடலுக்குத்தான் திருப்பிவிடவேண்டி இருக்கிறது என்கிறார்கள். மழைக்காலங்களிலே கடலே அந்தத் தண்ணீரை வாங்கிக் கொள்ளாமல், தேங்கக்கூடிய சூழ்நிலை இருக்கிறது என்பதையெல்லாம் அதிகாரிகள் சொல்லியிருக்கிறார்கள். ஆனால் அங்கே கிடைக்கின்ற தண்ணீரை எப்படியாவது பயன்படுத்த முடியுமா என்று சொல்லி மறுபடியும் மறுபடியும் அதிகாரிகளை ஆய்வு செய்யச் சொல்லி அரசாங்கம் உத்தரவிட்டுக்கொண்டிருக்கிறது.

**திரு. டி. எம். வெங்கடாசலம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காவிரியில் வெள்ளம் அதிகமாக வருவதைப் போல எங்கள் மாவட்டத்திலேயும்—கர்நாடகம், ஆந்திரம் எல்லையில் இருப்பதால்—நம்முடைய மாநிலத்தில் வறட்சி இருக்கின்றபோது அங்கேமழை பெய்து கிருஷ்ணகிரி அணைக்கு அதிகமாக சில நேரங்களில் தண்ணீர் வருகிறது. அப்படி அதிகமாக வருகின்ற நேரத்தில் அதை திறந்து ஆற்றில் விட்டு விடுகிறார்கள். அது கடலில் போய் சேருகிறது. ஆகவே எங்கள் தொகுதியில் இருக்கின்ற சந்தூர் பகுதியில் இருக்கின்ற ஏரிகள் மற்றும் சிறிய சிறிய ஏரிகளுக்கு எல்லாம் அந்த உபரி நீரை ஒதுக்கிக் கொடுக்கின்ற ஒரு நிலையை ஏற்படுத்திக் தருவீர்களா என அறிய விரும்புகிறேன். அதிகாரிகளை கேட்கின்ற நேரத்தில் இப்படி வாய்ப்பு இல்லை என்று ஒட்டு மொத்தமாக சொல்லிவிடுகிறார்கள். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நேரடியாக பார்வையிட்டு அதற்கு வாய்ப்பை ஏற்படுத்தித் தருவார்களா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடலில் போய் வீணாவதாக மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னார்கள். ஆனால் இந்தியாவிலேயே வருகின்ற ஆற்று நீரை எல்லாம் ஏறத்தாழ 99 சதவீதத்தை பயன்படுத்தக்கூடிய ஒரே ஒரு மாநிலம் தமிழகம்தான். காரணம் நம்முடைய மாநிலம் பற்றாக் குறை மாநிலமாக இருக்கிறது. ஆகவே புதிதாக அணைகள் கட்டுவதற்கோ அல்லது அதை மாற்றி ஏரிகளில் விடுவதற்கோ

சாத்தியக்கூறு இல்லை என்று அதிகாரிகள் சொல்லியிருக்கிறார்கள். இருந்தாலும் மாண்புமிகு உறுப்பினர் சொன்ன கோரிக்கையை மறுபடியும் ஆய்வு செய்து பார்க்கலாம்.

**திரு. ஆ. சிவக்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தக் கேள்வி மூலக் கேள்விக்கு சம்பந்தம் இல்லை என்று சொன்னாலும், மதுரை மாவட்டத்தினுடைய குடிநீர் பிரச்சினையை கருத்தில் கொண்டு மேலக்கால் பகுதியில் இருந்து தான் அதிகமாக நாம் ஒவ்வொரு முறையும் தண்ணீரை எடுத்துக் கொண்டிருக்கிறோம். ஆகவே வைகையிலிருந்து திருப்பி விடுகின்ற தண்ணீரை மேலக்காலிலே ஒதுக்கக்கூடிய சூழ்நிலையில் அங்கே சிறிய அணை கட்டப்படுமா என அமைச்சர் அவர்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வைகையில் தண்ணீர் இல்லை என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரியும். இப்போது மதுரையை தாண்டி தண்ணீர் இராமநாதபுரம் மாவட்டப் பகுதிகளுக்கு போவதாக எனக்குத் தெரியவில்லை. ஆகவே புதிய அணைக்கட்டுகள் கட்டுகின்ற திட்டம் அரசின் பரிசீலனையில் இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உடுக்குறியிட்ட வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

### (ஆ) உடுக்குறியிடாத வினாக்கள்.

### *Representation from the public about the functioning of the Thanjavur Medical College.*

1.—*Q. No.* 1846—THIRU DURAI KRISHNAMURTHY: Will the Hon. the Minister for Health be pleased to state—

(*a*) Whether any representation has been received from the public of Thanjavur during the month of March 1985 regarding the functioning of the Thanjavur Medical College, Thanjavur;

(*b*) if so, the nature of the representation; and

(*c*) the action proposed to be taken in the matter?

**விடை—**

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

(இ) இக்கேள்விக்கு இடமில்லை.



### வீர விளையாட்டுகளை அகில இந்திய அளவில் பரப்பும் திட்டம்.

2—வினா 3094—திரு. இரா. தாமரைக்கனி: மாண்புமிகு கல்வி மற்றும் சட்டத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழர்களின் வீரவிளையாட்டுகளான சிலம்பம், ஜல்லிக்கட்டு போன்ற விளையாட்டுக்களை அகில இந்திய அளவில் பரப்புவதற்கு அரசு திட்டமிட்டுள்ளதா?

(ஆ) ஆம் எனில், அது பற்றிய விவரம் யாது?

**விடை—**

(அ) மற்றும் (ஆ) இல்லை. ஆனால் சிலம்பம் என்ற விளையாட்டின் முழு தகவல் ஒன்று இந்திய விளையாட்டு கழகத்திற்கு அனுப்பப்பட்டுள்ளது.

### சேரன்மாதேவி தொகுதியில் பஞ்சாயத்து சாலைகள் சீரமைப்புப் பணி.

3—வினா 3298—**மாண்புமிகு திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன் (பேரவைத் துணைத் தலைவர்):** மாண்புமிகு உணவுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருநெல்வேலி மாவட்டம், சேரன்மாதேவி தொகுதி, கல்லிடைக்குறிச்சி, நகர பஞ்சாயத்து பகுதிவாழ் பொது மக்களிடமிருந்து பஞ்சாயத்து ரோடுகளை சீரமைக்க வேண்டி மனுக்கள் ஏதேனும் வந்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை என்ன?

**விடை—**

(அ) திருநெல்வேலி மாவட்டம், சேரன்மாதேவி தொகுதி, கல்லிடைக்குறிச்சி நகர பஞ்சாயத்து பகுதிவாழ் பொது மக்களிடமிருந்து சாலைகளை சீரமைக்க வேண்டி மனுக்கள் ஏதும் வரவில்லை.

(ஆ) கேள்வி எழவில்லை.

[1987 ஏப்ரல் 11

**1985-ஆம் ஆண்டு இளைஞர் ஆண்டாக அறிவித்துள்ளதால் தூக்கு மற்றும் ஆயுள் தண்டனைபெற்ற இளைஞர்களுக்கு தண்டனை குறைப்பு.**

4—வினா 42[illegible]—**திருமதி பா. வளர்மதி:** மாண்புமிகு கல்வி மற்றும் சட்டத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

இளைஞர் ஆண்டாக 1985 ஆம் ஆண்டை அறிவித்துள்ளபடியால் தூக்கு மற்றும் ஆயுள் தண்டனை பெற்ற இளைஞர்களுக்கு தண்டனை குறைப்புச் செய்ய அரசு நடவடிக்கை ஏதும் எடுத்துள்ளதா ?

**விடை—**

இல்லை.

**மாதாகோயில் காரியந்தல் கிராமத்தில் துணைப்பதிவாளர் அலுவலகம் துவங்குதல்.**

5—வினா 4285—**திரு. மு. பாண்டுரங்கன்:** மாண்புமிகு சுற்றுலா, மதுவிலக்கு மற்றும் மின்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கலசபாக்கம் தொகுதி தம்பியந்தல் என்கிற மாதாகோயில் காரியந்தல் கிராமத்தில் துணைப் பதிவாளர் அலுவலகம் துவங்கும் செயற்குறிப்புள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது துவங்கப்படும்?

**விடை—**

(அ) மற்றும் (ஆ) எழவில்லை.

**பாகசாலையில் ரெகுலேட்டர் கட்டும் திட்டம்.**

6—வினா 4568—**திரு. மா. மணிமாறன்:** மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருமலைராசன் ஆற்றில் பாகசாலை என்ற இடத்தில் ரெகுலேட்டர் கட்டும் திட்டம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

**விடை—**

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.



1987 ஏப்ரல் 11]

**கணவாய்புதூர் ஊராட்சி பெரும்பள்ளத்தில் நீர்த்தேக்கம் அமைத்தல்.**

7—வினா 4724—**திரு. கே. அன்பழகன்:** மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

சேலம் மாவட்டம், ஓமலூர் வட்டம், காடையாம்பட்டி ஊராட்சி ஒன்றியம் கணவாய்புதூர் ஊராட்சியில் பெரும்பள்ளம் என்னுமிடத்தில் நீர்த்தேக்கம் அமைப்பது குறித்து செயற் குறிப்பு ஏதேனும் உள்ளதா ?

**விடை—**

மேற்படி திட்டம் விரிவான ஆய்வில் உள்ளது.

**வெள்ளார் அரசு உயர்நிலைப் பள்ளிக்குச் சொந்தக் கட்டிடம் கட்டும் திட்டம்.**

8—வினா 5160—**திரு. செ. செம்மலை:** மாண்புமிகு கல்வி மற்றும் சட்டத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம் மேச்சேரி ஒன்றியம் வெள்ளார் அரசு உயர்நிலைப் பள்ளிக்குச் சொந்தக் கட்டிடம் கட்டும் திட்டம் அரசிடம் உள்ளதா ?

(ஆ) எப்போது கட்டப்படும்?

**விடை—**

(அ) இல்லை.

(ஆ) இவ்வினாவிற்கு இடமில்லை.

**கோயில்களுக்கு சொந்தமான 2-சி பட்டா உள்ள புளியமரங்கள் எண்ணிக்கை.**

9—வினா 5220—**திரு. க. சோலைராசு:** மாண்புமிகு சுற்றுலா, மதுவிலக்கு மற்றும் மின்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

கோயில்களுக்குச் சொந்தமான 2-சி பட்டா உள்ள புளிய மரங்கள் எவ்வளவு ?

[1987 ஏப்ரல் 11

விடை—

தமிழகத்திலுள்ள திருக்கோயில்களுக்குச் சொந்தமாக, 2-சிட்டர் உள்ள புளியமரங்களின் மொத்த எண்ணிக்கை 1,995 ஆகும்.

### கும்பகோணம்-மாத்தூர் வழித்தடத்தில் சோழன் போக்குவரத்துக்கழக நகரப்பேருந்து விடல்.

10—வினா 5501—திரு. எஸ். இராசாராமன்: மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கும்பகோணம்-மாத்தூர் (வழி பாபநாசம், ராஜகிரி, அய்யம்பேட்டை) வழித்தடத்தில் சோழன் போக்குவரத்துக்கழக நகரப்பேருந்து விடும் செயற்குறிப்பு உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் மீது அரசு எடுத்துள்ள நடவடிக்கை யாது?

விடை—

(அ) மற்றும் (ஆ) இத்தடத்தில் சோழன் போக்குவரத்துக் கழக நகரப் பேருந்து ஒன்று 28—5—1986 முதல் இயக்கப் படுகிறது.

### சித்தர்கள் நத்தம் கிராமத்திற்கு வெள்ளத் தடுப்புச் சுவர் கட்டுதல்.

11—வினா 6495—திரு. அ. பாலுசாமி: மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நிலக்கோட்டை தொகுதி, நிலக்கோட்டை ஒன்றியத்தில் சித்தர்கள் நத்தம் என்ற கிராமத்திற்கு வெள்ளத் தடுப்புச் சுவர் கட்ட அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், அதன் விபரம் என்ன?

விடை—

(அ) மற்றும் (ஆ) அண்ணா மாவட்டம், நிலக்கோட்டை வட்டம் சித்தர்கள் நத்தம் கிராமத்திற்கு 1,500 மீட்டர் நீளமுள்ள வெள்ளத் தடுப்புச் சுவர் கட்டும் திட்டம் தலைமைப் பொறியாளர் (பாசனம்) அவர்களின் ஆய்வில் உள்ளது.



1987 ஏப்ரல் 11]

### விளாத்திகுளம் அரசு மேல்நிலைப் பள்ளியில் புதிய கட்டிடம் கட்டுதல்.

12—வினா 7854—திரு. ச. குமரகுருபர ராமநாதன்: மாண்புமிகு கல்வி மற்றும் சட்டத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

விளாத்திகுளம் அரசு மேல்நிலைப் பள்ளியில் புதிய கட்டிடங்கள் கட்டுவதற்கு ஏதேனும் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

இல்லை.

### பழனி தொகுதியில் அமராவதி ஆற்றின் குறுக்கே பாலம் கட்டுதல்.

13—வினா 8010—திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள்: மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அண்ணா மாவட்டம் பழனி தொகுதி, ராஜாக்கப்பட்டி அத்திமரத்து வலசு, முருகன்வலசு, பழனி கவுண்டன்புதூர் ஆகிய கிராம மக்களின் சார்பில் அமராவதி ஆற்றின் குறுக்கே பாலம் கட்டவேண்டுமென்ற கோரிக்கை வந்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை என்ன?

விடை—

(அ) மற்றும் (ஆ) ஒரு மூழ்கு பாலம் கட்டுவதற்கு சுமார் ரூ. 20.00 லட்சம் தேவைப்படும். அரசின் குறுகிய நிதிவசதி காரணத்தால் இப்பணி உடன் எடுத்து செய்ய இயலாது.

[1987 ஏப்ரல் 11

**வடகாட்டில் கால்நடை மருந்தகம் அமைக்கும் திட்டம்.**

14—வினா 8150—**திரு. அ. வெங்கடாசலம்:** மாண்புமிகு சுற்றுலா, மதுவிலக்கு மற்றும் மின்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) புதுக்கோட்டை மாவட்டம், ஆலங்குடி தொகுதி, வடகாட்டில் கால்நடை மருந்தகம் அமைக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், எப்போது அமைக்கப்படும்.?

**விடை—**

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

**மதுக்கூர் அரசினர் பெண்கள் உயர்நிலைப்பள்ளி.**

15—வினா 8645—**திரு. ப. ந. இராமச்சந்திரன்:** மாண்புமிகு கல்வி மற்றும் சட்டத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பட்டுக்கோட்டை தொகுதி, மதுக்கூர் அரசினர் பெண்கள் உயர்நிலைப் பள்ளியை மதுக்கூர் வடக்கு பஞ்சாயத்திற்கு இடவசதி கருதி மாற்றும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், விபரம் என்ன ?

**விடை—**

(அ) மற்றும் (ஆ) இதுபற்றிய கருத்துரு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

**சிறை சீர்திருத்த அனைத்திந்திய குழுத் தலைவரின் பரிந்துரைகள்.**

16—வினா 8668—**திருமதி பா. வளர்மதி:** மாண்புமிகு கல்வி மற்றும் சட்டத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

சிறை சீர்திருத்த அனைத்திந்திய குழுவின் தலைவர் திரு. ஏ. என். மூல்லா அவர்களின் பரிந்துரைகளின் மீது அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன ?



1987 ஏப்ரல் 11]

**விடை—**

நீதிபதி திரு. ஏ. என். மூல்லா தலைமையில் இந்திய அரசினால் அமைக்கப்பட்ட குழுவின் அறிக்கையில், மொத்தம் 658 பரிந்துரைகளில் 312 பரிந்துரைகளின் பேரில் மாநில அரசின் குறிப்புரைகள் மத்திய அரசிற்கு அனுப்பப்பட்டுள்ளன. ஏனையவை மாநில அரசின் பரிசீலனையில் உள்ளது.

**பழைய சீவரம்—திருமுக்கூடல் இடையேயுள்ள பாலாற்று தரைப் பாலத்தை உயர்த்தி கட்டும் திட்டம்.**

17—வினா 9025—**திரு. க. நரசிம்மபல்லவன்:** மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பழைய சீவரம்—திருமுக்கூடல் இடையேயுள்ள பாலாற்று தரைப்பாலத்தை உயர்த்தி கட்டும் திட்டம் அரசிடம் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், எப்போது ?

**விடை—**

(அ) மற்றும் (ஆ) குறிப்பிட்டுள்ள குழாய் தாம்போகியை மூழ்கு பாலமாக உயர்த்திக்கட்ட செயற்குறிப்பு இல்லை. இப்பணிக்கு உத்தேசமாக ரூ. 430.00 இலட்சம் தேவைப்படும். அரசின் குறுகிய நிதி ஒதுக்கீட்டின் காரணமாக, பெருந்தொகை தேவைப்படும் இப்பணியினை உடனடியாக எடுத்துச் செய்ய இயலாது.

**புன்செய் புளியம்பட்டி பேருந்து நிலையத்தை விரிவாக்கும் திட்டம்.**

18—வினா 9161—**திரு. வே. கு. சின்னசாமி:** மாண்புமிகு உணவுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பெரியார் மாவட்டம் புன்செய் புளியம்பட்டி பேருந்து நிலையத்தை விரிவாக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது நிறைவேற்றப்படும் ?

[1987 ஏப்ரல் 11

**விடை—**

(அ) மற்றும் (ஆ) பேருந்து நிலையத்தை விரிவாக்கும் திட்டம் ஏதும் அரசின் பரிசீலனைக்கு வரப்பெறவில்லை. ரூபாய் 3.00 இலட்சம் செலவில் பேரூராட்சி நிதியிலிருந்தே பேருந்து நிலையத்தில் பேருந்து சாவடி கட்டுவதற்கு, பேரூராட்சி தீர்மானித்துள்ளது. மதிப்பீடு தயாரித்து, உரிய அனுமதி பெற்று வேலை இவ்வாண்டில் செய்யப்படும் எனவும் பெரியார் மாவட்ட ஆட்சியர் தெரிவித்துள்ளார்.

### ஆரணி துணை நீதிமன்றத்திற்குப் புதிய கட்டிடம் கட்டும் திட்டம்.

19—வினா 9171—**திரு. மு. சின்னக்குழந்தை:** மாண்புமிகு கல்வி மற்றும் சட்டத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஆரணி சப்-கோர்ட்டிற்கு புதிய கட்டிடம் கட்டும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

**விடை—**

(அ) இத்திட்டம் உயர்நீதிமன்றத்தின் பரிசீலனையில் உள்ளது.

(ஆ) ஆரணி சப்-கோர்ட்டிற்குப் புதிய கட்டிடம் கட்டுவதற்கான திட்ட மதிப்பீட்டினை அனுப்பி வைக்கும்படி வட ஆற்காடு மாவட்ட நீதிபதி, சென்னை உயர்நீதிமன்றப் பதிவாளரால் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளார்.

### அச்சன்புதூர் பேரூராட்சி பகுதியில் கால்நடை மருத்துவமனை அமைத்தல்.

20—வினா 9187—**திரு. தெ. பெருமாள்:** மாண்புமிகு சுற்றுலா, மதுவிலக்கு மற்றும் மின்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நெல்லை மாவட்டம் செங்கோட்டை ஒன்றியம் அச்சன்புதூர் பேரூராட்சி பகுதியில் கால்நடை மருத்துவமனை அமைக்கும் உத்தேசம் உள்ளதா?



1987 ஏப்ரல் 11]

(ஆ) ஆம் எனில், அதற்கான பணிகள் எப்பொழுது துவக்கப்படும்?

**விடை—**

(அ) செயற்குறிப்பு ஏதும் பரிசீலனையில் இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

### தலைஞாயிறில் புயல் எச்சரிக்கை நிலையம் நிறுவுதல்.

21—வினா 9409—**திரு. மா. மீனாட்சிசுந்தரம்:** மாண்புமிகு நிதி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தலைஞாயிறில் 'புயல் எச்சரிக்கை நிலையம்' (Radar Station) ஒன்று நிறுவும் எண்ணம் அரசிடம் உள்ளதா?

(ஆ) இது குறித்து மத்திய அரசுக்கு பரிந்துரை ஏதும் செய்துள்ளதா?

(இ) விவரமென்ன?

**விடை—**

(அ) இல்லை.

(ஆ) மற்றும் (இ) இக்கேள்விகளுக்கு இடமில்லை.

### தலைஞாயிறில் புயல் பாதுகாப்பு இல்லம் கட்டுதல்.

22—வினா 9410—**திரு. மா. மீனாட்சிசுந்தரம்:** மாண்புமிகு நிதி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தலைஞாயிறில் ஒரு புயல் பாதுகாப்பு இல்லம் கட்டும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) விவரமென்ன?

**விடை—**

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

[1987 ஏப்ரல் 11

**1985-86 ஆம் ஆண்டில் மதுவிலக்குப் பிரச்சாரத்திற்காக செலவிடப்பட்ட தொகை.**

23—வினா 9447—**டாக்டர் ந. மாசிலாமணி:** மாண்புமிகு சுற்றுலா, மதுவிலக்கு மற்றும் மின்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

1985-86 ஆம் நிதியாண்டில் மதுவிலக்குப் பிரச்சாரத்திற்காக அரசு செலவிட்ட தொகை எவ்வளவு?

**விடை—**

1985-86 நிதியாண்டில் மதுவிலக்குப் பிரச்சாரத்திற்காக அரசு நிதி ஒதுக்கீடு எதுவும் செய்யவில்லை. எனவே எந்தவித செலவும் செய்யப்படவில்லை.

**உசிலம்பட்டி உட்கோட்ட நீதிமன்றங்களுக்கு மேஜை, நாற்காலி வாங்குவதற்கு நிதி ஒதுக்கீடு.**

24—வினா 9506—**திரு. பி. கே. எம். முத்துராமலிங்கம்:** மாண்புமிகு கல்வி மற்றும் சட்டத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) உசிலம்பட்டி உட்கோட்ட நீதித்துறை நடுவர் நீதி மன்றம், நீதித்துறை 2-வது நடுவர் நீதிமன்றம், முதல்வகுப்பு நடுவர் நீதிமன்றம் (மதுவிலக்கு) ஆகிய மூன்று நீதிமன்றங்களில் மேஜை, நாற்காலி போன்ற அடிப்படைத் தேவைகளின் பற்றாக் குறை நீக்கப்பட உத்தேசம் ஏதும் உண்டா?

(ஆ) ஆம் எனில், எப்போது எவ்வளவு நிதி ஒதுக்கீடு செய்யப்பட உள்ளது?

**விடை—**

(அ) மற்றும் (ஆ) இதுபற்றிய செயற்குறிப்பு எதுவும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.



1987 ஏப்ரல் 11]

**சென்னை-ஒகேனக்கல்லுக்கு விரைவு பேருந்து விடும் திட்டம்.**

25—வினா 9641—**திரு. எச். ஜி. ஆறுமுகம்:** மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னையில் இருந்து ஒகேனக்கல் விரைவு பேருந்து விடும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது விடப்படும்?

**விடை—**

(அ) ஆம்.

(ஆ) இத்தடத்தில் விரைவில் திருவள்ளுவர் போக்கு வரத்துக் கழகத்தினால் பேருந்து இயக்கப்படும்.

**நகரப்பட்டி அரசு உயர்நிலைப் பள்ளிக்கு புதிய கட்டிடம்.**

26—வினா 9811—**திரு. த. புஷ்பராசு:** மாண்புமிகு கல்வி மற்றும் சட்டத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) புதுக்கோட்டை மாவட்டம் நகரப்பட்டி அரசு உயர் நிலைப்பள்ளிக்கு புதிய கட்டிடம் கட்டப்பட உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

**விடை—**

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

**நீலகிரி மாவட்டத்திலுள்ள பள்ளிகளில் தேசிய மாணவர் படையில் அனுமதிக்கப்பெற்ற மாணவர்கள் எண்ணிக்கை.**

27—வினா 9912—**திரு. கே. உச்சி:** மாண்புமிகு கல்வி மற்றும் சட்டத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 1985-86 ஆம் ஆண்டில் நீலகிரி மாவட்டத்தின் அனைத்துப் பள்ளிகளிலும், தேசிய மாணவர் படையில் அனுமதிக்கப்பெற்ற மாணவர்களின் எண்ணிக்கை எவ்வளவு?

(ஆ) செலவிடப்பட்ட தொகை எவ்வளவு?

[1987 ஏப்ரல் 11

விடை—

(அ) 1,100.

(ஆ) ரூ. 54,750.

### மேலணிக்குழி அரசு உயர்நிலைப்பள்ளிக்கு புதிய கட்டிடம்.

28—வினா 9927—டாக்டர் ந. மாசிலாமணி: மாண்புமிகு கல்வி மற்றும் சட்டத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

ஜெயங்கொண்டம் தொகுதியில் உள்ள மேலணிக்குழி அரசு உயர்நிலைப் பள்ளிக்கு புதிய கட்டிடம் கட்டும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

விடை—

இல்லை.

### குணமங்கலம் அரசு உயர்நிலைப் பள்ளிக்கு புதிய கட்டிடம் கட்டும் திட்டம்.

29—வினா 9963—டாக்டர் ந. மாசிலாமணி: மாண்புமிகு கல்வி மற்றும் சட்டத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

ஜெயங்கொண்டம் தொகுதியில் உள்ள குணமங்கலம் அரசு உயர்நிலைப்பள்ளிக்கு புதிய கட்டிடம் கட்டும் திட்டம் அரசிடம் உள்ளதா?

விடை—

இல்லை.

### கருப்பங்கால் ஓடையை மேம்படுத்தும் திட்டம்.

30—வினா 9967—டாக்டர் ந. மாசிலாமணி: மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

ஜெயங்கொண்டம் தொகுதியில் உள்ள கருப்பங்கால் ஓடையை பாசனத்திற்காக மேம்படுத்தும் திட்டம் அரசிடம் உள்ளதா?



1987 ஏப்ரல் 11]

விடை—

ஜெயங்கொண்டம் தொகுதியில் உள்ள கருப்பங்கால் ஓடையைப் பாசனத்திற்காக மேம்படுத்தும் திட்டம் ஏதும் அரசிடம் இல்லை. இருந்தபோதிலும் திருச்சி மாவட்டத்தில் உடையார்பாளையம் வட்டத்தில் மேலூர் தாத்தனூர் கிராமத்தில் கருப்பங்கால் ஓடையின் குறுக்கே புதிய குளம் அமைக்கும் பணி அரசின் தீவிர ஆய்வில் உள்ளது.

### திருநகர் மற்றும் நாகமலைப் புதுக்கோட்டையில் பிற்படுத்தப் பட்ட மாணவர்களுக்கான விடுதிகள் ஏற்படுத்தல்.

31—வினா 10035—திரு. மு. மாரிமுத்து: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருப்பரங்குன்றம் தொகுதியைச் சேர்ந்த திருநகரிலும், நாகமலைப் புதுக்கோட்டையிலும் பிற்படுத்தப்பட்ட மாணவர்களுக்கான விடுதிகள் ஏற்படுத்தும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது தொடங்கப்பெறும்?

விடை—

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

### திருக்கோவிலூரில் தந்தை பெரியார் போக்குவரத்துக்கழக கிளை மூலம் இயங்கிவரும் நகரப்பேருந்துகள்.

32—வினா 10092—திரு. மு. சந்திரசேகர்: மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தென்னாற்காடு மாவட்டம் திருக்கோவிலூரில் தந்தை பெரியார் போக்குவரத்துக்கழக கிளையினால் இயக்கப்படும் டவுன் பஸ்களின் எண்ணிக்கை அதிகப்படுத்தப்படுமா?

(ஆ) ஆம் எனில், விவரமென்ன?

[1987 ஏப்ரல் 11

**விடை—**

(அ) ஆம்.

(ஆ) கீழ்க்காணும் வழித்தடங்களில் நகரப் பேருந்துகளை இயக்க தந்தை பெரியார் போக்குவரத்துக்கழகத்தால் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

திருக்கோவிலூர்—எம். குன்னத்தூர்.

திருக்கோவிலூர்—ரிஷிவந்தியம்.

**புதுக்கோட்டை ராணியார் மகளிர் மேல்நிலைப்பள்ளிக்கு கூடுதல் கட்டிடம்.**

33—வினா 10121—**திரு. ஜே. முகம்மது கனி :** மாண்புமிகு கல்வி மற்றும் சட்டத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) புதுக்கோட்டை ராணியார் மகளிர் மேல்நிலைப் பள்ளியில் கூடுதல் கட்டிடம் கட்டித் தரப்படுமா ?

(ஆ) ஆம் எனில், விவரம் யாது ?

**விடை—**

(அ) மற்றும் (ஆ) 1985-86 ஆம் ஆண்டின் நிதி யொதுக்கத்தில் இப்பள்ளிக்கு ரூ. 1.50 லட்சம் செலவில் 2 வகுப்பறைக் கட்டிடங்கள் கட்ட அனுமதிக்கப்பட்டு தொடர் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

**காஞ்சிபுரத்தில் சலவைத்துறை கட்டும் திட்டம்.**

34—வினா 10210—**திரு. ஆ. நடராசன் :** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) காஞ்சிபுரத்தில் சலவைத்துறை கட்டும் செயற்குறிப்பு உண்டா ?

(ஆ) ஆம் எனில், அதன் மதிப்பு என்ன ?

**விடை—**

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.



1987 ஏப்ரல் 11]

**தமிழகத்திலுள்ள வெள்ளாட்டுப் பால்பண்ணை.**

35—வினா 10253—**திரு. ஆ. நடராசன் :** மாண்புமிகு சுற்றுலா, மதுவிலக்கு மற்றும் மின்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழகத்தில் வெள்ளாட்டுப் பால்பண்ணை எத்தனை இயங்குகின்றன ?

(ஆ) மேலும் ஏற்படுத்தும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா ?

**விடை—**

(அ) மற்றும் (ஆ) இல்லை.

**புதுக்கோட்டை நகரில் பேருந்து செல்லும் நகராட்சி பராமரிப்பிலுள்ள சாலைகளை நெடுஞ்சாலைத்துறைக்கு ஒப்படைக்கும் திட்டம்.**

36—வினா 10373—**திரு. ஜே. முகம்மது கனி :** மாண்புமிகு உணவுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) புதுக்கோட்டை நகரில் பேருந்து செல்லும் நகராட்சி பராமரிப்பிலிருந்து வரும் சத்தியமூர்த்தி சாலை, மேலராஜ வீதி, பழைய பேருந்து நிலையத்தில் இருந்து ஆலங்குடி செல்லும் சாலை, அன்னவாசல் சாலையிலிருந்து துவங்கி திருச்சி செல்லும் கல்யாணபுரம் சாலை ஆகியவற்றை நெடுஞ்சாலைத் துறையினரிடம் அரசு ஒப்படைக்கும் திட்டம் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் யாது ?

**விடை—**

(அ) இல்லை.

(ஆ) இவ்வினாவிற்கு இடமில்லை.

### மேல்உழுவூரில் கால்நடை மருந்தகம் ஏற்படுத்துதல்.

37—வினா 10478—**திரு. ந. சிவஞானம்:** மாண்புமிகு சுற்றுலா, மதுவிலக்கு மற்றும் மின்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தஞ்சை மாவட்டம், மேல்உழுவூரில் கால்நடை மருந்தகம் ஏற்படுத்தும் செயற்குறிப்பு உள்ளதா?

**விடை**—

இல்லை.

### குருவிகுளத்தில் நூற்பு ஆலை நிறுவும் திட்டம்.

38—வினா 10487—**திரு. ஆர். ரெங்கசாமி:** மாண்புமிகு வீட்டுவசதி மற்றும் கைத்தறித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

திருநெல்வேலி மாவட்டம், சங்கரன்கோவில் தாலுகா, குருவிகுளத்தில் நூற்பு ஆலை நிறுவ திட்டம் உள்ளதா?

**விடை**—

இல்லை.

### முண்டந்துறை சரணாலயத்தில் இறந்த புலிகளின் எண்ணிக்கை.

39—வினா 10543—**திரு. எஸ். பாலசுப்பிரமணியன்:** மாண்புமிகு சுற்றுலா, மதுவிலக்கு மற்றும் மின்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) முண்டந்துறை புலி சரணாலயத்தில் கடந்த மூன்று ஆண்டுகளில் எத்தனை புலிகள் இறந்துள்ளன?

(ஆ) அதற்கான காரணம் என்ன?

**விடை**—

(அ) முண்டந்துறை சரணாலயத்தில் கடந்த மூன்று ஆண்டுகளில் புலிகள் ஏதும் இறக்கவில்லை.

(ஆ) இவ்வினாவிற்கு இடமில்லை.





### புதுக்கோட்டை திருக்கோயில்களுக்குச் சொந்தமான தங்க நகைகளை ஏலம் போடுதல்.

40—வினா 10631—**திரு. த. மாரிமுத்து:** மாண்புமிகு சுற்றுலா, மதுவிலக்கு மற்றும் மின்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) புதுக்கோட்டை மாவட்டத்தைச் சேர்ந்த அருள்மிகு திருக்கோயில்களைச் சேர்ந்த தங்க நகைகளை ஏலம் போட முடிவு செய்யப்பட்டதா?

(ஆ) அதன்பேரில் ஏலம் போடப்பட்டதா?

**விடை**—

(அ) மற்றும் (ஆ) புதுக்கோட்டை திருக்கோயில்களுக்குச் சொந்தமான தங்க நகைகள் எதுவும் பொது ஏலத்தில் விற்பனை செய்ய முடிவு செய்யப்படவில்லை.

---

### நீலகிரி மாவட்டத்தில் கட்டப்பட்டுள்ள சலவைத் துறைகள்.

41—வினா 10851—**திரு. கே. உச்சி:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நீலகிரி மாவட்டத்தில் கடந்த ஆண்டு ஏற்படுத்தப்பட்ட டோபிகானாக்கள் எத்தனை?

(ஆ) நடப்பாண்டில் ஏற்படுத்தப்படும் டோபிகானாக்கள் எத்தனை?

**விடை**—

(அ) நீலகிரி மாவட்டத்தில் கடந்த ஆண்டு சலவைத் துறைகள் ஏதும் கட்டப்படவில்லை.

(ஆ) நடப்பாண்டில் சலவைத்துறை கட்டுவதற்கு கருத்துருக்கள் வரப்பெற்றால் பரிசீலிக்கப்படும்.

[1987 ஏப்ரல் 11

**நீலகிரி மாவட்டத்தில் சுயவேலைவாய்ப்புத் திட்டத்தில் பயிற்சி பெற்றவர்கள் எண்ணிக்கை.**

42—வினா 10862—திரு. கே. உச்சி: மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 1985-86 ஆம் ஆண்டில் நீலகிரி மாவட்டத்தில் கிராமப்புற இளைஞர்களுக்கான சுயவேலைவாய்ப்புத் திட்டத்தில் பயிற்சி பெற்றவர்கள் எத்தனை பேர்?

(ஆ) அவர்களில் சொந்தத் தொழில் தொடங்கியவர்கள் எத்தனை பேர்?

(இ) ஊதிய அடிப்படையில் வேலை தேடிக்கொண்டவர்கள் வட்டவாரியாக எத்தனை பேர்?

**விடை—**

(அ) 1985-86 ஆம் ஆண்டில் நீலகிரி மாவட்டத்தில் கிராமப்புற இளைஞர்களுக்கான சுயவேலைவாய்ப்புத் திட்டத்தின்கீழ் பயிற்சி பெற்றவர்கள் 138 பேர்.

(ஆ) அவர்களில் சொந்தத் தொழில் தொடங்கியவர்கள் 8 பேர்.

(இ) ஊதிய அடிப்படையில் வேலை தேடிக்கொண்டவர்கள் ஒருவரும் இல்லை.

**நீலகிரி மாவட்டத்தில் ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டத்தின்கீழ் இயங்கும் கால்நடை மருத்துவமனை ஏற்படுத்தல்.**

43—வினா 10971—திரு. கே. உச்சி: மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டத்தின்கீழ் நீலகிரி மாவட்டத்தில் இயங்கும் கால்நடை மருத்துவமனை ஏற்படுத்தப்பட்டுள்ளதா?

(ஆ) ஆம் எனில், தற்போது இயங்கிக்கொண்டிருக்கும், இயங்கும் கால்நடை மருத்துவமனைகளின் எண்ணிக்கை என்ன?

**விடை—**

(அ) மற்றும் (ஆ) ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டத்தின் கீழ் நீலகிரி மாவட்டத்தில் உதகையில் இயங்கும் கால்நடை மருத்துவமனை ஒன்று உள்ளது.



1987 ஏப்ரல் 11]

**நீலகிரி மாவட்டத்தில் ஊரக வளர்ச்சித் திட்டத்தின் கீழ் உறைவிந்து நிலையங்கள் ஏற்படுத்தல்.**

44—வினா 10972—திரு. கே. உச்சி: மாண்புமிகு உணவுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டத்தின் கீழ் நீலகிரி மாவட்டத்தில், உறைவிந்து நிலையங்கள் ஏற்படுத்தப் பட்டுள்ளனவா?

(ஆ) ஆம் எனில், தற்போது இயங்கிக்கொண்டிருக்கும் உறைவிந்து நிலையங்களின் எண்ணிக்கை என்ன?

**விடை—**

(அ) மற்றும் (ஆ) ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டத்தின் கீழ் நீலகிரி மாவட்டத்தில் உறைவிந்து நிலையம் ஏற்படுத்தப்படவில்லை.

**நீலகிரி மாவட்டத்தில் சலவைத்துறைகள் கட்டுதல்.**

45—வினா 11054—திரு. கே. உச்சி: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழக அரசு நீலகிரி மாவட்டத்தில் சலவைத் தொழிலாளர்களுக்காக சலவைத்துறைகள் கட்டியுள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

**விடை—**

(அ) நீலகிரி மாவட்டத்தில் இதுவரை சலவைத் தொழிலாளர்களுக்காக சலவைத்துறை ஏதும் கட்டப்படவில்லை.

(ஆ) வினாவிற்கு இடமில்லை.

**குற்றாலம் நகருக்குள் வரும் வாகனங்களுக்கு கட்டணம் வசூலித்தல்.**

46—வினா 11169—**திரு. என். எஸ். வி. சித்தன் :** மாண்புமிகு உணவுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) குற்றாலம் நகருக்குள் நுழையும் வாகனங்களுக்கு கட்டணம் வசூலிக்கப்படுகிறதா?

(ஆ) ஆம் எனில், அதன் விபரம் என்ன?

விடை—

(அ) மற்றும் (ஆ) இல்லை.

**குற்றாலம் சிற்றருவியில் குளிக்க கட்டணம் வசூலித்தல்.**

47—வினா 11212—**திரு. என். எஸ். வி. சித்தன் :** மாண்புமிகு உணவுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) குற்றாலம் சிற்றருவியில் குளிக்க கட்டணம் வசூலிக்கப்படுகிறதா?

(ஆ) ஆம் எனில், அதன் விபரம் என்ன?

விடை—

(அ) ஆம்.

(ஆ) ஒவ்வொரு வருடமும் ஜூன் முதல் தேதி முதல் செப்டம்பர் 30 ஆம் தேதி முடியவுள்ள சீசன் Season காலத்தில் மட்டும் குற்றாலம் நகரிய சிற்றருவியில் குளிப்பதற்கு ஒரு நபருக்கு 30 பைசா வீதம் கட்டணம் வசூல் செய்யப்பட்டு வருகிறது.

**வேதாரண்யத்திலுள்ள நீதிமன்றங்களுக்குக் கட்டிடங்கள் கட்டுதல்.**

48—வினா 11905—**திரு. மா. மீனாட்சிசுந்தரம் :** மாண்புமிகு கல்வி மற்றும் சட்டத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வேதாரண்யத்தில் நீதிமன்றங்களுக்குக் கட்டிடங்கள் கட்ட செயற்குறிப்பு அரசின் ஆய்வில் உள்ளதா?





(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

விடை—

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

**பல்லடம் வட்டம் பாண்டியன் நகர் பகுதியிலுள்ள புறம்போக்கு நிலத்தில் குடியிருப்போருக்கு பட்டா வழங்கல்.**

49—வினா 11420—**திரு. கே. சுப்பராயன் :** மாண்புமிகு நிதி அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

திருப்பூர்—பெருமாநல்லூர் ரோட்டிலுள்ள பாண்டியன் நகர் பகுதியிலுள்ள புறம்போக்கு நிலத்தில் குடியிருப்போருக்கு எப்போது பட்டா வழங்கப்படும்?

விடை—

கோயம்புத்தூர் மாவட்டம், பல்லடம் வட்டம், பாண்டியன் நகர், நெருப்பெரிச்சல் கிராமத்தில் அரசு புறம்போக்கு நிலத்தில் மொத்தம் 604 ஆக்கிரமிப்புகள் உள்ளன. இவற்றில் இதுவரை 393 ஆக்கிரமிப்பாளர்களுக்கு வீட்டுமனை ஒப்படை வழங்கப்பட்டுள்ளது. மீதியுள்ள 211 ஆக்கிரமிப்பாளர்களுக்கு வீட்டுமனைப் பட்டா கொடுப்பதற்கு தக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

**நீலகிரி மாவட்டத்திலுள்ள தொழிலாளர் நல நிலையம்.**

50—வினா 11429—**திரு. கே. உச்சி:** மாண்புமிகு உணவுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

நீலகிரி மாவட்டத்தில் தொழிலாளர் நல நிலையம் செயல்பட்டு வருகிறதா?

விடை—

நீலகிரி மாவட்டத்தில் கூடலூர் மற்றும் கோத்தகிரி ஆகிய இரு இடங்களிலும் தொழிலாளர் நல வாரியத்தின் சார்பில் இரண்டு தையற் பயிற்சி நிலையங்கள் செயல்பட்டு வருகின்றன. தகுதியான இடம் கிடைத்ததும் தேவர் ஷோலா என்ற இடத்தில் வருங்காலத்தில் தையற் பயிற்சி நிலையம் ஆரம்பிக்கப்பட உள்ளது.

[1987 ஏப்ரல் 11

[குறிப்பு.—ஓர் உரையின் தொடக்கத்தில் (*) உடுக்குறியிடப் பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரி பார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]

## 2. தகவல் கோரல்.

### (அ) சங்கரன்கோவில் முனிசிபாலிட்டி பள்ளிக் கட்டிட உரிமையாளர் நடவடிக்கையால் மாணவர்கள் பாதிப்பு.

**திரு. டி. ஆர். வேங்கடரமணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மிகுந்த வேதனையோடு ஒரு முக்கியமான தகவலை இந்த மன்றத்தில் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். திருநெல்வேலி மாவட்டம், சங்கரன்கோவிலில் இருக்கின்ற சங்கரன்கோவில் முனிசிபாலிட்டிக்கு பாத்தியப்பட்ட (குறுக்கீடு) பாயின்ட் ஆப் கிளாரிபிகேஷன் நானும் கிளப்பிக்கொண்டு இருக்கிறேன்.

**திரு. கு. ரமணி:** பாயின்ட் ஆப் ஆர்டர் . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** என்னிடம் முதலிலேயே அனுமதி கேட்டார், அனுமதி கொடுத்து அவரைப் பேச அனுமதித்து இருக்கிறேன். நீங்கள் முதலிலேயே அனுமதி கேட்கவில்லை, ஆகவே உங்களுக்கு அனுமதி இல்லை. (கூச்சல்—குழப்பம்)

**திரு. டி. ஆர். வேங்கடரமணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சங்கரன்கோவில் முனிசிபாலிட்டிக்கு பாத்தியப்பட்ட ஒரு நடுநிலைப் பள்ளியில் சங்கரன்கோவில் முனிசிபாலிட்டி உறுப்பினர் ஒருவர் அந்தக் கட்டிடம் தனக்கு வேண்டும் என்பதற்காக இன்றைக்கு அரசுக்கு பாத்தியப்பட்ட அந்தக் கட்டிடத்தினுடைய கூரையைக் கிழித்து எறிந்து இருக்கிறார். அந்தக் கட்டிடத்தில் இருக்கின்ற 318 மாணவர்களும், 13 ஆசிரியர்களும் . . . (குறுக்கீடு, கூச்சல்—குழப்பம்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ஒரு உறுப்பினர் பேசுவதை இடைமறிக்காதீர்கள். அமருங்கள். (குறுக்கீடு) திரு. வேங்கடரமணன் அவர்களும் உறுப்பினர் தான். அவர் பேசி முடிக்கட்டும். ஆகவே எல்லோரும் அமருங்கள். (கூச்சல்—குழப்பம்)



1987 ஏப்ரல் 11]

**திரு. டி. ஆர். வேங்கடரமணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சங்கரன்கோவில் முனிசிபாலிட்டி பள்ளியில் அந்தப் பள்ளிக் கட்டிடத்தினுடைய உரிமையாளர் வாடகை மாதம் 220 ரூபாய் பெற்றுக் கொண்டும், அவரே அந்த நகரசபையின் உறுப்பினராக இருந்தாலும் கூட 318 மாணவர்கள், 13 ஆசிரியர்கள் வேலை பார்க்கின்ற அந்தக் கட்டிடத்தினுடைய கூரையை கிழித்து எறிந்து அந்த மாணவர்களை நடுத்தெருவுக்குக் கொண்டு வந்து 8-வது வகுப்புப் பரிட்சையை எல்லாம் கொளுத்தும் வெய்யிலில் அந்தக் கூரை இல்லாத கட்டிடத்தில் எழுதும்படி அவர் செய்து இருக்கிறார். ஆனால் அந்த முனிசிபாலிட்டி தலைவரும் அவர் தன்னுடைய கட்சியைச் சேர்ந்தவர் என்ற காரணத்தால் நடவடிக்கை எடுக்காமல் இன்றைக்கு அரசு அந்தப் பள்ளிக் கூடத்தை எடுத்துக்கொண்டு இருக்கிற காரணத்தால் உடனடியாக அரசு இந்தப் பிரச்சினையில் தலையிட்டு நடவடிக்கை எடுக்குமா என்று அறிய ஆவலாக இருக்கிறேன். இதற்கு எழுத்து மூலமாகவும் புகார் கொடுக்க நான் தயாராக இருக்கிறேன். மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் இதற்கு உடனடியாக நடவடிக்கை எடுத்து நீதியைப் பெற்றுத் தருவார்களா என்று நான் அறிய ஆவலாக இருக்கிறேன்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அது குறித்து தகவல் என்னிடம் இல்லை. அதைப்பற்றி விசாரித்து தக்க நடவடிக்கை எடுக்கப்படும் (குறுக்கீடு, கூச்சல்—குழப்பம்)

(முற்பகல் 11-10)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வேறு பாயின்ட் ஆப் ஆர்டர் இல்லை. ஏன் இவ்வளவு பேர்? உங்களிடம் ஏற்கனவே நான் சொல்லிவிட்டேன். (குறுக்கீடு, கூச்சல்) யாருக்கும் அனுமதி கிடையாது. (குறுக்கீடு) அனுமதி இல்லை. (குறுக்கீடு) இருக்கட்டும், எதுவாக இருந்தாலும் அனுமதி இல்லை. இன்றைக்கு அனுமதி கிடையாது. (குறுக்கீடு) யாருக்குமே அனுமதி கிடையாது, திரு. வேங்கடரமணனைத் தவிர.

## 3. கவன ஈர்ப்பு.

### (அ) தமிழ்நாடு கெமிக்கல் நிறுவனத்தைத் தனியாருக்கு விற்பதால் தொழிலாளர் பாதிப்பு.

**திரு. டி. ஆர். வேங்கடராமணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "சிறப்பாக இயங்கிவரும் தமிழ்நாடு கெமிக்கல் நிறுவனத்தை, அரசு தனியாருக்கு விற்பனை செய்வதாக வந்துள்ள தக்வல்களால் தொழிலாளர்களிடையே ஏற்பட்டுள்ள நிலை குறித்த" அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு தொழில் மற்றும் வேளாண்மைத் துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். (குறுக்கீடு, கூச்சல்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அனுமதியின்றிப் பேசுவது அவைக் குறிப்பில் ஏறாது. யாரும் என்னிடம் அனுமதி பெறவில்லை. (குறுக்கீடு) யாருக்கும் அனுமதி கிடையாது. மாண்புமிகு தொழில் மற்றும் வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. க. இராசாராம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பேரவைமுன் கீழ்க்கண்ட அறிக்கை ஒன்றை வைக்கிறேன்:

#### அறிக்கை.

தமிழ்நாட்டின் பல்வேறு பகுதிகளில் தொழிற்சாலைகளை நிறுவி இம்மாநிலத்தின் தொழில் வளர்ச்சியை துரிதப்படுத்துவதே தமிழ்நாடு தொழில் வளர்ச்சி நிறுவனத்தின் (டிட்கோ) நோக்கமாகும். அப்படி டிட்கோவால் நிறுவப்பட்ட நிறுவனங்கள் வளர்ந்து தானாகத் திறம்பட செயல்படக்கூடிய நிலையை அடைந்தவுடன் அந்நிறுவனங்களில் முதலீடு செய்துள்ள தனது பங்குகளை டிட்கோ விற்று, அதன்மூலம் கிடைக்கும் நிதியை மற்ற புதிய தொழிற்சாலைகள் நிறுவ பயன்படுத்துவது அதன் கொள்கையாகும்.







2. பசும்பொன் முத்துராமலிங்க மாவட்டம் காரைக்குடியில் [illegible] மற்றும் தூய கார்பன்டை-ஆக்ஸைடு உற்பத்தி செய்வதற்காக அமைக்கப்பட்ட தமிழ்நாடு கெமிக்கல் புராடக்ட்ஸ் லிமிடெட், தனது வணிக ரீதியிலான உற்பத்தியை 1970 ஆம் ஆண்டு அக்டோபர் திங்களில் தொடங்கி, இலாபத்தில் இயங்கி வருகிறது. எனவே, டிட்கோ மேற்குறித்த [illegible] கொள்கையின்படி தமிழ்நாடு கெமிக்கல் புராடக்ட்ஸ் நிறுவனத்தில் உள்ள தனது பங்குகளை விற்று, அந்நிதியைக் கொண்டு புதிய தொழிற்சாலைகள் துவங்க உத்தேசித்தது. இதற்காக வரப்பெற்ற விருப்பறிவிப்புகளில் (offers) குடியாத்தத்தைச் சேர்ந்த திருவாளர்கள் திருமகள் மில்ஸ் லிமிடெட் மற்றும் அதன் இயக்குநர்கள் குறிப்பிட்ட விலையே அதிகமானதும், அரசுக்கு ஆதாயம் கொடுக்கும் வகையிலும் இருந்தது. இந்நிறுவனம் ரூ. 10 மதிப்புள்ள ஒவ்வொரு தகைமை முறை பங்கினை (Equity Share) ரூ. 45.38-க்கு வாங்க விருப்பம் தெரிவித்திருந்தது. எனவே, டிட்கோ நிறுவனம் இந்நிறுவனத்தில் உள்ள தனது ரூ. 10 மதிப்புள்ள 10,33,003 தகைமை முறை பங்குகளை, ஒவ்வொரு ரூ. 10 மதிப்புள்ள தகைமை முறை பங்கினை ரூ. 45.38-க்கு விற்க, அரசு ஆணை நிலை எண் 957, தொழில், நாள் 5—9—1986-ல் ஆணை வெளியிடப்பட்டது. இந்திய தொழில் வளர்ச்சி வங்கி போன்ற நிதி நிறுவனங்களும் மேற்சொன்ன விலையை ஏற்று தங்களது பங்குகளையும் அதே விலைக்கு விற்க விருப்பம் தெரிவித்திருந்தன. அரசு ஏற்கெனவே வெளியிட்ட ஆணையின்படி, டிட்கோ, தமிழ்நாடு கெமிக்கல் புராடக்ட்ஸ் நிறுவனத்தை விற்பதற்கு முறைப்படியான நடவடிக்கைகள் எடுத்து வருகின்றது. இந்த ஏற்பாட்டில், நிறுவனத்தில் பணிபுரியும் தொழிலாளர்களின் பணி நலன்களும், பாதுகாப்பும் பொதுவாக அடங்கும்.

**திரு. டி. ஆர். வேங்கடராமணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசின் கையிலே உள்ள கம்பெனிகளை யெல்லாம் விற்பது என்று கொள்கை ரீதியாக அரசு ஏதாவது முடிவெடுத்து இருக்கிறதா? அப்படியென்றால், அரசு நிறுவனங்களை விற்கின்றபோது இதுபோல் இலாபம் ஈட்டுகின்ற கம்பெனிகளை விற்காமல் நஷ்டத்தில் இயங்குகின்ற கம்பெனிகளை விற்பதற்கு அரசு முன் வருமா என்பதை அறிய விரும்புகிறேன். (கூச்சல், குழப்பம், குறுக்கீடு)

[1987 ஏப்ரல் 11

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இப்படி வந்து, அவை நடவடிக்கையைத் தடுப்பது முறை அல்ல. திரு. ரமணியிடம் சொல்வேன். (குறுக்கீடு) நீங்கள் எல்லோரும் பேசுவது முறை அல்ல. யாருக்கும் அனுமதி கிடையாது. (குறுக்கீடு) ஏற்கெனவே சொல்லியிருக்கிறேன். யாருக்கும் அனுமதி கிடையாது. (குறுக்கீடு). மாண்புமிகு தொழில் மற்றும் வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. க. இராசாராம்:** தலைவர் அவர்களே, இலாபம் வந்தாலும் சில தொழில்களை உருவாக்கி, அது நல்ல நிலைக்கு வந்தவுடன், அதை விற்று அதிலே வருகிற இலாபத்தை மற்ற தொழில்களிலே ஈடுபடுத்துவது தான் டிட்கோவினுடைய கொள்கையாகும்.

**திரு. டி. ஆர். வேங்கடரமணன்:** தலைவர் அவர்களே, இது வரை டிட்கோவினுடைய கம்பெனிகள் எத்தனை விற்கப்பட்டிருக்கின்றன? அதிலே இலாபம் அடைந்த கம்பெனிகள் எத்தனை விற்கப்பட்டிருக்கின்றன? நஷ்டம் அடைந்த கம்பெனிகள் எத்தனை விற்கப்பட்டிருக்கின்றன என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. க. இராசாராம்:** தற்போது அது பற்றிய குறிப்புகள் என்னிடத்தில் இல்லை. தனியாகக் கேள்வி போட்டால் பதில் அளிக்கத் தயாராக இருக்கிறேன். (குறுக்கீடு, கூச்சல்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இது முறையல்ல, அழகல்ல. சட்டமன்ற உறுப்பினர்களுக்கு அழகல்ல. சபையின் கண்ணியத்தை நீங்கள் கெடுக்கின்றீர்கள். பாரம்பரியத்தை, மரபைக் கெடுக்கின்றீர்கள். அவ்வளவுதான் சொல்வேன். (குறுக்கீடு) மீண்டும், மீண்டும் சொல்வேன். நீங்கள் இப்படிச் செய்கிறீர்கள். நான் ஏதாவது செய்தால், அது பிரச்சினையாகிவிடுகிறது. ஆகவே, மரபைக் காப்பாற்றுங்கள். (குறுக்கீடு) மரபைக் காப்பாற்றுங்கள். இன்றைக்கு நீங்கள் எல்லாம் பேசுகின்ற காரணத்தால்தான், இந்த அவைக்கே சம்பந்தம் இல்லாதவர்கள் எல்லாம், இந்த அவையைப்பற்றி வெளியே விமர்சிக்கக் கூடிய அளவுக்கு நீங்கள் காரணமாக இருக்கிறீர்கள்.



1987 ஏப்ரல் 11] [பேரவைத் தலைவர்]

(குறுக்கீடு) இந்த அவையின் உறுப்பினராக வரத் தகுதி இல்லாதவர்கள் எல்லாம் (குறுக்கீடு) நீங்களே இந்த அவையின் பாரம்பரியத்தைப் பாதுகாக்கவேண்டும். கண்ணியத்தைப் பாதுகாக்கவேண்டும். முதலாவது, இந்த நிறுவனத்திற்கு நீங்கள் ஃபெயித்ஃபுல்லாக இருங்கள். உண்மையாக இந்த நிறுவனத்தைக் காப்பாற்றுங்கள். மக்களுக்காகப் பேசுங்கள். தனி மனிதருக்காகப் பேசாதீர்கள் (குறுக்கீடு) தனி மனிதருக்காகப் பேசாதீர்கள். மக்களுக்காக, நம்முடைய திரு. ரமணி இப்படி வேகப்பட்டது இல்லை. மக்களுக்காக வேகப்படவில்லை. (குறுக்கீடு) மக்களின் பிரச்சினைக்காக வேகப்படவில்லை. தனி மனிதருக்கு இந்த சட்டமன்றத்தில் இடம் கிடையாது. மக்களுடைய பிரச்சினைகளைப் பேச முடியும். யாருக்காகவும் இங்கே பேச முடியாது. யாருக்காகவும் இங்கே வக்காலத்து வாங்க முடியாது. இங்கே இருக்கக்கூடிய தமிழ் நாட்டு மக்களைப்பற்றிப் பேசுங்கள். சாதாரண மக்களைப் பற்றிப் பேசுங்கள். உங்களுடைய எண்ணம் புரிகிறது. உங்களுடைய பின்னணி புரிகிறது. (குறுக்கீடு) அரசியல் தெரிகிறது. அவ்வளவுதான்.

### (ஆ) திருத்தங்கலில் உள்ள பிற்பட்டோர் நல விடுதி பழுதடைந்திருத்தல்.

**திரு. வி. பாலகிருஷ்ணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, “காமராஜர் மாவட்டம், சிவகாசி தொகுதி திருத்தங்கல் பேரூராட்சியில் பிற்பட்டோர் நல விடுதி அமைந்துள்ள வாடகைக் கட்டிடம் இடிந்து விழும் நிலையிலிருப்பது குறித்த அவசரப் பொதுமுக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். (குறுக்கீடு, கூச்சல்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அவரவர் இருக்கையில் அமரவேண்டும். நல்லதல்ல. எல்லோரையும் பற்றி நாட்டுக்கே தெரியட்டும். பாரம்பரியத்தைக் காக்கத் தவறுகிறீர்கள். மரபை மீறிவிட்டீர்கள். (குறுக்கீடு) இந்த சட்டசபையின் மரபை நீங்கள்தான் இப்படி கெடுத்துக் கொண்டிருக்கிறீர்கள், சுயநலமிகளுக்காக, தனி மனிதருக்காக. நாட்டுக்காக அல்ல

என்பது நாட்டுக்குத் தெரியட்டும். இந்த நாட்டு மக்களுக்காகப் பேசவில்லை. அரசியலுக்காகப் பேசுகிறீர்கள். தனி மனிதருக்காகப் பேசுகிறீர்கள். (குறுக்கீடு, கூச்சல்) மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பேரவைமுன் கீழ்க்கண்ட அறிக்கை ஒன்றை வைக்கிறேன் :

**அறிக்கை**

பிற்படுத்தப்பட்டோர் நலத்துறையால் பிற்படுத்தப்பட்ட வகுப்பு மற்றும் சீர்மரபினர் மாணவ, மாணவியருக்காக நடத்தப்படும் 558 விடுதிகளில், 49 விடுதிகள் மட்டுமே அரசுக்குச் சொந்தமான கட்டிடங்களில் இயங்கி வருகின்றன. எஞ்சிய 509 விடுதிகள் தனியார் வாடகைக் கட்டிடங்களில் செயல்படுகின்றன.

2. அரசினர் மாணவர் விடுதிகளுக்கு அடிப்படை வசதிகளுடன் கூடிய தனியார் கட்டிடங்கள் கிடைப்பதில் மிகுந்த சிரமங்கள் உள்ளன. பொதுப்பணித் துறையால் நிர்ணயிக்கப்படும் வாடகை குறைவானதாகக் கருதப்படுவதால், கட்டிட உரிமையாளர்கள் விடுதிக்கு அளிக்க தயங்குகின்றனர். சிலர் கட்டிடத்தைக் காலி செய்து தர வற்புறுத்துவதுடன், விடுதியைக் காலி செய்ய நீதிமன்றத்தில் வழக்குத் தொடுக்கின்றனர். இம்மாதிரியான சூழ்நிலைகளில், வசதிக் குறைவான மற்றும் பழுதுகள் உள்ள கட்டிடத்தில் உள்ள விடுதிக்கு வேறு மாற்றுக் கட்டிடம் கிடைக்கும் வரை தொடர்ந்து இயங்கி வரும் நிலை ஏற்படுகிறது.

3. பிற்படுத்தப்பட்டோர் நலத்துறையால் நடத்தப்படும் அனைத்து விடுதிகளுக்கும் படிப்படியாக கட்டிடங்கள் கட்டித் தருவதற்காக பொதுப் பணித்துறைத் தலைமைக் கட்டிடக் கலை வல்லுநரால் தயாரிக்கப்பட்ட புதிய வடிவமைப்பு (Tyne Design) அரசால் அங்கீகரிக்கப்பட்டுள்ளது. 1986—87 ஆம் ஆண்டில் ரூ. 50.61 இலட்சம் செலவில் 11 விடுதிக் கட்டிடங்கள் கட்ட ஒப்பளிப்பு வழங்கப்பட்டுள்ளது. 1987—88 ஆம்



ஆண்டில் தலா ரூ. 5 இலட்சம் செலவில் இரண்டு விடுதிக் கட்டிடங்கள் கட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இதற்காக நடப்பு நிதியாண்டில் ரூ. 5 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

4. விடுதிக் கட்டிடம் கட்டத் தேவையான அரசு நிலங்கள் தயாராக உள்ள இடங்கள் முன்னுரிமை அடிப்படையில் தெரிவு செய்யப்பட்டு, விடுதிக் கட்டிடங்கள் கட்ட ஆணையிடப்படுகிறது. இது தொடர்பாக, விடுதிக் கட்டிடங்கள் கட்டுவதற்காக பொருத்தமான அரசு நிலங்களைத் தெரிவு செய்து, 1987—88 ஆம் ஆண்டில் இரண்டாம் பகுதித் திட்டத்தின்கீழ் இரண்டு விடுதிக் கட்டிடங்கள் கட்டுவதற்கான ஒருங்கிணைந்த செயற்குறிப்பினை அனுப்புமாறு பிற்படுத்தப்பட்டோர் நல இயக்குநர் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளார்.

5. காமராசர் மாவட்டம், திருத்தங்கலில் உள்ள பிற்படுத்தப்பட்டோர் நல மாணவர் விடுதி வாடகைக் கட்டிடத்தில் உள்ளது. இக்கட்டிடம் நல்ல நிலையில் இல்லாததால் இதனை வேறு கட்டிடத்திற்கு மாற்ற அரசே முன் வந்து முயற்சிகள் எடுத்துள்ளது. வேறு இடவசதி செய்து தர காமராசர் மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் நல அலுவலரால் தீவிர முயற்சிகள் எடுக்கப்பட்டன. திருத்தங்கல், சிறுதொழில்கள் பெருமளவு நிறைந்த ஊராக இருப்பதால், பிற்படுத்தப்பட்டோர் நல மாணவர் விடுதிக்கு தகுந்த கட்டிடம் கிடைக்கவில்லை. எனவே, காமராசர் மாவட்ட ஆட்சியாளரை மேற்படி விடுதியை வேறு கட்டிடத்திற்கு உடனடியாக மாற்ற ஆவன செய்யுமாறு கேட்டுக் கொள்ளப்பட்டது. இவ்விடுதிக்கு திருத்தங்கல் பேரூராட்சியிலுள்ள பாண்டியன் நகரில் ஒரு கட்டிடம் தேர்ந்தெடுக்கப்பட்டது. ஆனால் அக்கட்டிட உரிமையாளர்கள் அதை வாடகைக்கு விட சம்மதிக்காததால், விடுதியை வேறு கட்டிடத்திற்கு மாற்ற மாவட்ட ஆட்சியாளரால் தீவிர முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. (கூச்சல், குழப்பம்)

**திரு. வி. பாலகிருஷ்ணன்:** பேரவைத் தலைவர் அவர்களே, திருத்தங்கல் பேரூராட்சியில் இருக்கின்ற பிற்பட்டோர் நல விடுதி மிகவும் மோசமான வாடகைக் கட்டிடத்தில் இயங்கிக் கொண்டிருக்கிறது. எனவே அங்கே இருக்கின்ற மாணவர்கள்

[திரு. வி. பாலகிருஷ்ணன்] [1987 ஏப்ரல் 11

அந்த விடுதியிலே தங்குவதற்கு பீதி அடைந்திருக்கிறார்கள். அதை உடனே வேறு இடத்திற்கு மாற்றுவதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :** பேரவைத் தலைவர் அவர்களே, அரசு நடவடிக்கை எடுத்து வருகிறது. மேற்கொண்டும் எடுக்கும்.

**திரு. வி. பாலகிருஷ்ணன் :** பேரவைத் தலைவர் அவர்களே, நேற்றையதினம் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் 10 பிற்பட்டோர் நல விடுதிகள் கட்டுவதாக அவையிலே அறிவித்தார்கள். இதே நிலையில் நீடிக்கவிடாமல்—அங்கே அரசுக்குச் சொந்தமான நிலம் இருக்கிறது—அந்த இடத்திலே ஒரு விடுதியைக் கட்டுவதற்கு இந்த ஆண்டிலே மாண்புமிகு அமைச்சர் அவர்கள் உத்தரவு இடுவார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :** தலைவர் அவர்களே, அதைப்பற்றி அரசாங்கம் பரிசீலிக்கும்போது இதுவும் பரிசீலிக்கப்படும்.

**(இ) ஜெயங்கொண்டம் தொகுதியில் தாய்சேய் நல விடுதிக் கட்டிடங்கள் முடிவுறாமை.**

**டாக்டர் ந. மாசிலாமணி :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "ஜெயங்கொண்டம் தொகுதியில் வெண்மான்கொண்டான், கோடாலிகருப்பூர், மதனத்தூர் ஆகிய கிராமங்களில் தாய் சேய் நலவிடுதிக்காக துவக்கப்பட்ட புதிய கட்டிடங்கள் முடிவு பெறாமல் கடந்த சில வருடங்களாக பழுதடைந்து கிடப்பதால் அப்பகுதி மக்கள் படும் இன்னல் குறித்த" அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன் (குறுக்கீடுகள்).

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** ஒரு நிமிடம். விதி 36 (5) : "கொடுக்கப்பெறும் முன்னறிவிப்பினை பேரவைத் தலைவர் அனுமதித்து உறுப்பினர்களுக்கு அனுப்பாத வரை . . ." என்று இருக்கிறது. "அனுப்பாத வரை" என்று இருப்பதால் அதைப் பெறும் வரை அவ்வினா பற்றி வேறு எவரும் வெளியிடக்கூடாது. ஆனால் வெளியிட்டிருக்கிறீர்கள். பத்திரிகையிலே நீங்கள்



1987 ஏப்ரல் 11] [பேரவைத் தலைவர்]

வெளியிட்டிருக்கிறீர்கள். இதுதான் அரசியல். இந்த விதியை மீறி இருக்கிறீர்கள். (குறுக்கீடு, கூச்சல்—குழப்பம்) நான் சொல்லும்வரை இங்கே எழுப்ப முடியாது (குறுக்கீடு, கூச்சல்—குழப்பம்). மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பேரவைமுன் கீழ்க்கண்ட அறிக்கை ஒன்றை வைக்கிறேன் :

**அறிக்கை.**

ஜெயங்கொண்டம் தொகுதியைச் சேர்ந்த வெண்மான் கொண்டான் தாய்சேய் நல விடுதிக்கு தன்னிறைவுத் திட்டம் அறிமுகமாவதற்கு முன்பு 1981-82-ல் டி. பாலூர் ஊராட்சி ஒன்றியத்தால் கட்டிட வேலை தொடங்கப் பெற்று மேல் கூரை வரை முடிக்கப் பெற்றுள்ளது. ஆனால், கதவுகள், ஜன்னல்கள், முன் சுற்றுச் சுவர், பூச்சுவேலை, மின் இணைப்பு மற்றும் குடிநீர் வசதிகள் போன்றவை இன்னும் செய்யப்படவில்லை. மதனத்தூர் மற்றும் கோடாலிகருப்பூர் தாய்சேய் நல விடுதிகளும் தன்னிறைவுத் திட்டம் அறிமுகமாவதற்கு முன்பு 1981-82-ல் டி. பாலூர் ஊராட்சி ஒன்றியத்தால் கட்ட ஆரம்பிக்கப்பட்டன. மின் இணைப்பு மற்றும் குடிநீர் இணைப்பு இன்னும் கொடுக்கப் படவில்லை. மேற்கண்ட மூன்று கட்டிடங்களும் டி. பாலூர் ஊராட்சி ஒன்றியத்தின் பொறுப்பிலேயே இன்னும் இருந்து வருகின்றன.

2. ஊராட்சி ஒன்றிய தாய் சேய் நல விடுதிக் கட்டிடங்களை பொது சுகாதாரத்துறை எடுத்துக் கொள்வது பற்றிய பொதுப் பிரச்சினை அரசின் பரிசீலனையில் உள்ளது. தவிரவும், 29—9—1982 நாளிட்ட (சுகாதாரம் மற்றும் குடும்பநலத் துறை) அரசு ஆணை எண் 1936-ல் ஊராட்சி ஒன்றியங்களின்கீழ் பணி புரிந்து வந்த பணியாளர்களையும், பிற பொது சுகாதார ஊழியர் களையும் பல்நோக்குச் சுகாதாரத் திட்டத்தின்கீழ், அரசுப் பணி யாளர்களாக நியமித்து வெளியிடப்பட்ட ஆணையை—பல்வேறு பணியாளர் சங்கங்கள் தாக்கல் செய்த ரிட் முறையீட்டின் பேரில் (Writ Appeals) சென்னை உயர்நீதி மன்றம் மேற் கூறிய அரசு ஆணையை நடைமுறைக்குக் கொண்டு வருவதை,

நிறுத்தி வைத்துள்ளது. மேற்கூறிய சூழ்நிலையில், தாய் சேய் நல விடுதிகளின் கட்டிடங்கள் பொதுச் சுகாதாரத் துறையினரால் எடுத்துக் கொள்ளப்படவில்லை. இருப்பினும், மேற்கண்ட இடங்களில் பல நோக்கு பெண் சுகாதாரப் பணியாளர்கள் நியமிக்கப்பட்டு பல்நோக்கு சுகாதாரத் திட்டத்தின்கீழ் அளிக்க வேண்டிய பணிகள் அனைத்தும் மேற்கூறிய கிராமங்களில் வசிக்கும் பொது மக்களுக்கு நல்ல முறையில் வழங்கப்பட்டு வருகின்றன.

**டாக்டர் ந. மாசிலாமணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த ஜெயங்கொண்டம் தொகுதியைச் சேர்ந்த வெண்மான்கொண்டான் தாய்சேய் நல விடுதி புதிய கட்டிடங்கள் 1981-82-ல் துவக்கப்பட்டு இன்னும் அது உள்ளாட்சித் துறையின் கீழ் இருக்கிறது என்றும், மேலும் அதற்கு அடிப்படை வசதிகள் கொடுக்கப்படவில்லை என்றும் அந்தப் பகுதியில் பல்நோக்கு பெண் சுகாதாரப் பணியாளர்கள் பணி செய்து கொண்டிருக்கிறார்கள் என்றும் இந்த அறிக்கையிலே குறிப்பிடப்பட்டிருக்கிறது. (கூச்சல்—குழப்பம்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் எல்லாம் தனி மனிதருக்காகப் பேசுகிறீர்கள். இந்த அவையை தனி மனிதருக்காகப் பயன்படுத்தப் பார்க்கிறீர்கள். விடமாட்டேன். இது தனி மனிதருக்காக அல்ல. நாட்டு மக்களுக்காக. தொழிலாளிக்காக. அவ்வளவுதான். (குறுக்கீடு) நாட்டு மக்களுக்காக நீங்கள் இல்லை. அவ்வளவுதான். டாக்டர் மாசிலாமணி அவர்கள் தொடரலாம்.

**டாக்டர் ந. மாசிலாமணி:** தலைவர் அவர்களே, அதை இது வரையில் சுகாதாரத் துறைக்கு மாற்றாததினால் நமக்குத்தான் நட்டமாகி இருக்கிறது. நம்முடைய துறையைச் சேர்ந்த உள்ளாட்சித் துறையை அந்தக் கட்டிடங்களைச் சீர்படுத்தி நமக்குத் தரவேண்டும் என்று அரசு வற்புறுத்துமா?

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:** தலைவர் அவர்களே, உள்ளாட்சி மன்றத்தில் இருக்கின்ற காரணத்தால் பூர்த்தி செய்து கொடுத்ததற்குப் பிறகுதான் ஏற்றுக்கொள்ள முடியும். உள்ளாட்சி மன்றத்தை பூர்த்தி செய்யும்படி அரசு கேட்டுக்கொள்ளும்.



**டாக்டர் ந. மாசிலாமணி:** இந்த ஊராட்சிக்குக் கீழே பணி புரிகின்ற சுகாதாரப் பணியாளர்களை சுகாதாரத் துறைக்கு மாற்ற வேண்டும் என்று 29—9—1982 நாளிட்ட அரசு ஆணை பிறப்பித்தும் கூட அந்தப் பணியாளர்கள் சென்னை உயர்நீதி மன்றத்திற்குப் போய் ரிட் பெட்டிஷன் போட்டு தடையாணை வாங்கியிருப்பதாக இந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டிருக்கிறது. 5 ஆண்டுகளாகியும் இன்னும் அந்தக் கேஸ் டிஸ்போஸ் ஆகவில்லை. எனவே அரசுத் தரப்பிலே அட்வான்ஸ் பெட்டிஷன் போட்டு இந்தக் கேஸை விரைவிலே முடித்து . . . (குறுக்கீடு) அந்தக் கேஸ் நமக்கு சாதகமாக இருந்தாலும் பரவாயில்லை, பாதகமாக இருந்தாலும் பரவாயில்லை. அந்தக் கேஸை உடனடியாக முடித்து. . . (குறுக்கீடு)

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:** அதற்கான முயற்சியை அரசு எடுக்கும். (கூச்சல்—குழப்பம்)

(திராவிட முன்னேற்றக் கழக கட்சி உறுப்பினர்கள், இந்தியக் கம்யூனிஸ்ட் (மார்க்சிஸ்ட்) கட்சி உறுப்பினர்கள், இந்திய கம்யூனிஸ்ட் கட்சி உறுப்பினர்கள், ஜனதா கட்சி உறுப்பினர்கள் அவையிலிருந்து வெளியேறினர்.)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இதுபோன்ற நடவடிக்கைகள், எதிர்பாராத நடவடிக்கைகள், இப்பொழுது உறுப்பினர்கள் இப்படி நடந்துகொண்ட முறைகள், ஜனநாயகத்திற்கு நல்லதல்ல. மக்களுக்கு நல்லதல்ல. இதை நம்முடைய நாட்டு மக்களுக்கு புரிய வைக்க வேண்டும். நேற்றையதினம் இந்த நிறுவனத்தையே குறைத்து எழுதிய பத்திரிகைகள், இந்த சபாநாயகர் ஆசனத்தையே குறைத்து எழுதிய பத்திரிகைகள் பற்றி இங்கே இருக்கக்கூடிய உறுப்பினர்களுக்கு அக்கறை கிடையாது. அரசியல் செய்வதற்காக சட்டமன்றத்திற்குள் வருகின்றார்கள். இதை நாட்டு மக்கள் புரிந்துகொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். இந்த நிறுவனத்தை யும், இந்த ஆசனத்தையும் நேற்றையதினம் குறைத்து மதிப்பிட்டு பத்திரிகைகளில் பேட்டி கொடுத்த, இந்த அவைக்குச் சம்பந்தம் இல்லாதவர்கள், அவர்கள் எந்தத் துறையிலே இருந் தாலும் யாராக இருந்தாலும், அவர்களை வன்மையாகக் கண்டிக்

இறேன். அவர்களைப் பற்றி இனிமேல் நாட்டு மக்கள் புரிந்து கொள்வார்கள். ஜனங்களைப் பற்றி புரியாதவர்கள் ஜனநாயகத்தை வெளியிலே பேசிக் கொண்டிருக்கிறார்கள்.

(முற்பகல் 11-20)

**(ஈ) இரணியல் மின் வாரிய உதவிக் கோட்டத்தை குழித்துறை கோட்டத்தோடு இணைத்ததால் ஏற்பட்டுள்ள பாதிப்பு.**

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. எப். எம். இராசரத்தினம், "குமரி மாவட்டம், இரணியல் மின் வாரிய உதவிக் கோட்டம், தக்கலை மின்வாரிய கோட்டத்தில் இருந்து மாற்றி கேரள எல்லைக்கு அருகில் உள்ள குழித்துறை கோட்டத்தோடு இணைத்ததால் அப்பகுதி மக்கள் நிலை குறித்த" கவன ஈர்ப்புத் தீர்மானம் ஒன்றைக் கொடுத்துள்ளார். அவர் இருக்கையில் இல்லை. அதற்கான அறிக்கை ஒன்று அவை முன் வைக்கப்பெற்றுள்ளது.

அறிக்கை.

கன்னியாகுமரி மின் அமைப்பில் தக்கலை கோட்டத்தில் வேலைப்பளு அதிகமாக இருந்ததால் கூடுதலாக ஒரு புதிய கோட்டம் குழித்துறையில் உருவாக்கப்பட்டது. ஆகவே இரணியல் உட்கோட்டம் குழித்துறை கோட்டத்துடன் இணைக்கப்பட்டது.

இரணியல் உட்கோட்டத்தின் பிரிவுகள் (செக்ஷன்ஸ்) இரணியல் உட்கோட்டம் ஆகியவற்றின் தலைமையிடங்கள் எதுவுமே மாற்றப்படவில்லை. அதனால் மின் நுகர்வோர்களுக்கு எந்தவித பாதிப்பும் இல்லை.

**(உ) முதுமலை சரணாலயத்தில் யானைகள் சுட்டுக் கொல்லப் படுவது குறித்து.**

**திரு. கே. உச்சி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கடந்த ஒரு மாத காலத்திற்குள் உலகப் புகழ் பெற்ற சுற்றுலா ஸ்தலமான முதுமலை சரணாலயத்தில் 10-க்கும் மேற்பட்ட யானைகள் சுட்டுக் கொல்லப்பட்டதால் அப்பகுதியில் ஏற்பட்டுள்ள நிலை குறித்த" அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு சுற்றுலா, மதுவிலக்கு மற்றும் மின் துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.





**மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பேரவைமுன் கீழ்க்கண்ட அறிக்கை ஒன்றை வைக்கிறேன்:

அறிக்கை.

முதுமலை வனவிலங்கு சரணாலயத்தில், சென்ற மார்ச் மாதத்தில் இரண்டு யானைகள் மட்டுமே வேட்டைக்காரர்களால் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளன. பிப்ரவரி மாதத்தில் ஒரு யானையும் சுட்டுக் கொல்லப்படவில்லை. ஜனவரி மாதத்தில் ஒரே ஒரு யானை சுட்டுக் கொல்லப்பட்டுள்ளது. இந்த யானை வேட்டைக் குற்றங்கள் குறித்து தீவிர புலன் விசாரணை மேற்கொள்ளப் பட்டுள்ளது. இதுவரை கிடைத்த தகவல்களிலிருந்து, இக்குற்றங் களுக்கு இரண்டு யானை வேட்டைக் கூட்டங்கள்தான் பொறுப்பெனத் தெரிய வருகிறது. இக்கூட்டத்தில் ஒன்றை 17—3—1987 அன்று சிறப்புப் படையினர் பிடித்துவிட்டனர். மற்றொரு கூட்டம் தலைமறைவாகியுள்ளது. இதையும் பிடிக்க தீவிர நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

2. யானை வேட்டையைத் தடுக்க ரோந்து செய்யும் பணி தீவிரப்படுத்தப்பட்டுள்ளது. முதன்முறையாக இரவு நேரங்களிலும் வனத்துறையைச் சேர்ந்த பழகிய யானைகளைக் கொண்டு ரோந்துப் பணி செய்யப்படுகிறது. கூடலூர் நில ஆக்கிரமிப்பு தொடர்பாக அங்கே முகாம் செய்துள்ள தமிழ்நாடு சிறப்புக் காவற்படையினரும் ரோந்துப் பணியில் ஈடுபட்டுள்ளனர். காவல்துறையைச் சேர்ந்த வனக் குற்றப் புலனாய்வுப் பிரிவும் இதுகுறித்து தகுந்த நடவடிக்கை எடுத்து வருகிறது.

3. நீலகிரி மாவட்ட ஆட்சித் தலைவரின் பொறுப்பில் உள்ள புலனாய்வு பறக்கும் படைகளும் இதற்காக பயன்படுத்தப்பட வுள்ளன. மலைப்பகுதி மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் நிறுவப் பட்டுள்ள விரைவு செய்தித் தொடர்புத் திட்டம் (Wireless System) சென்ற மார்ச் முதல் செயல்படுகிறது. தெப்பக்காடு, கூடலூர், உதகை மற்றும் கூனூரில் உள்ள நிரந்தர நிலையங்களும் "வயர்லெஸ்" கருவிகள் பொருத்தப்பட்ட வாகனங்களும் பயன் படுத்தப்படுகின்றன.

4. **யானைகளை வேட்டையாடுவதைத் தொழிலாகக் கொண் டுள்ள குற்றவாளிகளைக் கைது செய்து குண்டர்கள் சட்டத்தின் கீழ் (Goundas Act) காவலில் வைக்கலாம் என்று அரசு**

மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கும், காவல்துறையினருக்கும் அறிவுரை வழங்கியுள்ளது. மேற்படி எடுக்கப்பட்டு வரும் தீவிர நடவடிக்கைகளின் காரணமாக யானை வேட்டைக் குற்றம் வெகுவாகக் கட்டுப்படுத்தப்பட்டுள்ளது.

**திரு. கே. உச்சி:** பேரவைத் தலைவர் அவர்களே, இந்த விவர அறிக்கையில், 17—3—1987 அன்று வேட்டையாடும் கூட்டங்களில் ஒரு கூட்டம் பிடிக்கப்பட்டுள்ளதாக சொல்லப்பட்டிருக்கிறது. அந்தக் கூட்டத்தில் எத்தனை பேர் கைது செய்யப்பட்டிருக்கிறார்கள்? அவர்களுக்கு தண்டனை ஏதாவது அளிக்கப்பட்டுள்ளதா? வேட்டையாடும் கூட்டத்தை நம்முடைய வனத்துறை அலுவலர்கள் நேரடியாக சந்திப்பதற்குப் பயப்படுகிறார்கள். அவர்களுக்கு, அந்த வேட்டையாடும் கூட்டத்தை சந்திக்க, அரசாங்கம் விலை உயர்ந்த, மதிப்பு வாய்ந்த துப்பாக்கிகளைக் கொடுப்பதற்கும், அந்தத் துப்பாக்கியால் அவர்களைச் சுடுவதற்கு அதிகாரம் கொடுப்பதற்கும் இந்த அரசு பரிசீலனை செய்து உடனடியாகக் கொடுக்குமா என்பதைத் தெரிந்து கொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன்:** பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்வதுபோல், முதுமலை வனவிலங்கு சரணாலயத்தில் 10 யானைகள் சுட்டுக் கொல்லப்பட்டன என்று சொல்வது உண்மையல்ல. ஓராண்டுக் காலத்தில் 6—6—1986 முதல் 26—8—1987 வரையில் 5 யானைகள் சுட்டுக்கொல்லப்பட்டதுதான் உண்மை என்று விவர அறிக்கையில் சொல்லப்பட்டிருக்கிறது. ஏற்கனவே பிடிக்கப்பட்ட முதல் கூட்டத்தில் 3 பேர் சம்பந்தப்பட்டிருக்கிறார்கள். சம்பந்தப்பட்டவர்கள் தொடர்ந்து குற்றம் புரிபவர்களாக இருந்தால், குண்டர்கள் சட்டத்தில் அவர்கள்மீது நடவடிக்கை எடுக்க ஏற்கனவே முதல்வர் அவர்கள் ஆணையிட்டு இருக்கிறார்கள். இப்படி யானைகளைக் கொன்று தந்தம் எடுக்கிற குற்றத்தைத் தடுப்பதற்காக, சம்பந்தப்பட்ட வன அலுவலர்களுக்கு நவீன மயமான துப்பாக்கிகள் மற்றும் தொலைபேசி, கம்பியில்லாக் கருவிகள் கொடுப்பதற்கு அரசு நடவடிக்கை எடுத்து வருகிறது.

**திரு. கே. உச்சி:** பேரவைத் தலைவர் அவர்களே, கிட்டத்தட்ட உங்களுக்கு என்னால் இதுபோன்ற கம்பியில்லாத் தந்தி போன்ற சாதனங்களை, 'வாக்கி டாக்கி' போன்ற பொருட்களை



அவர்களுக்குக் கொடுக்க வேண்டும் என்று இந்த மன்றத்தில் நானே கோரிக்கை விட்டேன். அதை உடனடியாகக் கொடுக்க வேண்டும். கொடுக்க முடியுமா என்பதை அறிய விரும்புகிறேன். மேலும், அங்கே உள்ள அதிகாரிகளில் சிலர் சில தவறான தகவல்களை உங்களுக்குத் தந்து இருக்கிறார்கள் என்று கருதுகிறேன். கிட்டத்தட்ட மார்ச் மாதம் 16-ஆம் தேதி வரையில் நானே 3 யானைகளின் பிணங்களை நேரடியாகப் பார்த்தேன். அங்கே உள்ள மக்கள் சொல்வது எல்லாம், 10-க்கு மேற்பட்ட யானைகள்—சில நேரங்களில் 15 கூட இருக்கலாம் என்று சொல்கிறார்கள். ஆகவே, அந்த அதிகாரிகள், அந்தப் பகுதியிலே, மசினக்குடி, தெப்பக்காடு, தொரப்பள்ளி, வாழைத்தோட்டம் ஆகிய பகுதி மக்களோடு ஒத்துழைக்க வேண்டும். அப்படி ஒத்துழைத்தால்தான் அந்த விஷமிகளைக் கண்டுபிடிக்க முடியும். அந்த ஒத்துழைப்பிற்குப் பதிலாக சில ஆதிவாசிகளுக்கு நம்முடைய வனத்துறை அதிகாரிகள் தொல்லை கொடுக்கிறார்கள். அதிலே ஒருவர்தான் பொன்னன் என்கிற ஆதிவாசி. அவர் மீது தொல்லை கொடுத்து, பயங்கரமாக அடிக்கப்பட்டிருக்கிறார். ஆகவே, அந்த அதிகாரிமீது ஏதாவது நடவடிக்கை எடுப்பீர்களா; மக்களோடு ஒத்துழைத்து விஷமிகளைக் கண்டுபிடிப்பதற்காக ஏதாவது திட்டங்களை அவர்களுக்கு அளிப்பீர்களா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன்:** பேரவைத் தலைவர் அவர்களே, புரட்சித் தலைவர் அவர்கள் அரசில், பொதுமக்கள் இதைப்போன்ற கடுமையான குற்றங்களைப் புரிவதைத் தடுப்பதற்கு அரசு அதிகாரிகளுக்கு உதவுவார்களானால், அதை நிச்சயம் வரவேற்பார்கள். அப்படி அத்துமீறி யாராவது துன்புறுத்தப்பட்டார்கள் என்ற தகவல் மாண்புமிகு உறுப்பினர் தேதி குறிப்பிட்டு, பெயர் குறிப்பிட்டு கொடுப்பாரானால், அதைப் பற்றி நிச்சயமாக நடவடிக்கை எடுப்போம். இந்த விவர அறிக்கையில் குறிப்பிட்டதற்கு மாறாக, அதிகமான யானைகள் கொல்லப்பட்டது உண்மை, அதற்குத் தகவல் இருக்கிறது என்று தகவல் கொடுத்தாலும், அதுபற்றியும் அரசு நடவடிக்கை எடுக்கும்.

[1987 ஏப்ரல் 11

(ஆ) பேரவை முன் வைக்கப்பெற்ற ஏடுகள் குழு.

**திரு. ஆ. சந்திரசேகரன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1986-87 ஆம் ஆண்டிற்கான பேரவை முன் வைக்கப் பெற்ற ஏடுகள் குழுவின் இரண்டாவது அறிக்கையை (எட்டாவது சட்டமன்றப் பேரவை) குழுத் தலைவரின் சார்பாக பேரவைக்கு அளிக்கிறேன்.

(முற்பகல் 11-30)

(இ) மதிப்பீட்டுக் குழு.

THIRU K. KUPPUSWAMI : Mr. Speaker Sir, I present the following Reports of the Estimates Committee :

Sixth Report on Co-operative Sugar Mills ;

Seventh Report on the action taken by the Government on the recommendations contained in its report on Animal Husbandry ;

Eighth Report on the action taken by the Government on the recommendations contained in its Report on Handlooms and Textiles Department.

As the Reports could not be printed for want of time, five copies of the above Reports are being kept In Legislature Library for reference of the Members. Printed copies of the Reports will be sent to the Members separately.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

**5. வரவு-செலவுத் திட்டம், 1987-88, வாக்கெடுப்பு—(தொடர்ச்சி) கோரிக்கை எண் 23—கூட்டுறவு.**

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் :

"மானியக் கோரிக்கை எண் 23—கூட்டுறவு என்ற தலைப்பின் கீழ் ரூ. 37,73,50,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப் பெற வேண்டும்."

**திரு. எஸ். என். இராமசாமி :** மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, பொத்தக்காரலன்விளை, அன்பின் நகரம். அடைக்கலாபுரம், கடாட்சபுரம், மூதலூர், சுப்பிரமணியபுரம், மூத்தகிருஷ்ணாபுரம் ஆகிய கிராமங்களில் பெண்கள் பாய்முடைவோர் கூட்டுறவு சங்கம் அமைக்க வேண்டிய அவசியம் குறித்து



1987 ஏப்ரல் 11] [திரு. எஸ். என். இராமசாமி]

விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன் :

"மானியக் கோரிக்கை எண் 23—கூட்டுறவு என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 37,73,50,000-இல் ரூ. 100 குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** மானியக் கோரிக்கையும், வெட்டுத் தீர்மானமும் பேரவை முன் விவாதத்திற்கு வைக்கப் பெறுகின்றன. மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் முன்னுரையாக ஏதாவது கூற விரும்பினால் கூறலாம்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** மாண்புமிகு அவையின் துணைத் தலைவர் அவர்களே, அவையின் முன் வைக்கப்பெற்றுள்ள கொள்கை விளக்கக் குறிப்பினை* நான் படித்ததாகக் குறிப்பேட்டில் ஏற்றுக்கொள்ள வேண்டும். மாண்புமிகு உறுப்பினர்கள் பேசியதற்குப் பிறகு விவாதத்திற்கு பதிலுரை சொல்லும்போது என்னுடைய கருத்துக்களை வழங்குகிறேன்.

**திரு. மு. இராசாங்கம் :** மாண்புமிகு பேரவையினுடைய துணைத் தலைவர் அவர்களே, கூட்டுறவு மானியக் கோரிக்கையின் மீது நான் சார்ந்திருக்கின்ற காங்கிரஸ் பேரியக்கத்தின் சார்பாக ஒரு சில கோரிக்கைகளை முன் வைக்க விரும்புகிறேன்.

இந்திய நாடு விடுதலை பெற்ற பின்னால் ஆசியாவின் ஜோதி, அமரர் பண்டித ஜவஹர்லால் நேரு அவர்களால் அறிமுகப் படுத்தப்பட்டது கூட்டுறவுத் துறையாகும். கிராமங்களிலே சுதந்திரம் மட்டும் போதுமானதல்ல, பொருளாதார வாய்ப்புகளும், வசதிகளும் பெற வேண்டும் என்ற நல்ல நோக்கத்தோடு கிராமங்களில் கிராம நாணயச் சங்கங்களை தோற்றுவித்தார்கள். அந்த கிராம நாணயச் சங்கங்கள்தான் இன்றைக்கு கூட்டுறவுச் சங்கங்களாக மலர்ந்து இந்தியாவினுடைய பின்தங்கிய ஏழை யெளிய மக்களுடைய அன்றாட வாழ்க்கையில் பின்னிப் பிணைந்திருக்கின்றன. அங்கு அடிப்படையிலே உள்ள கூட்டுறவுச் சங்கங்களுக்கு தமிழக அரசு சுமார் 15 ஆண்டுகளாக தேர்தலே நடக்காத காரணத்தால் தமிழகத்தில் உள்ள எல்லா கூட்டுறவுச்

* 549 முதல் 586 வரையுள்ள பக்கங்களில் இணைப்பு II ஆக அச்சிடப்பெற்றுள்ளது.

## 2. தகவல் கோரல்—(தொடர்ச்சி)

### (ஆ) உறுப்பினர்கள் கேள்விகளுக்கு துறைகள் பதில் தருவதில் தாமதம்.

**திரு. கு. தமிழரசன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு உரிமைப் பிரச்சினை பற்றி குறிப்பிட விரும்புகிறேன். சிதம்பரம் நந்தனார் கல்விக் கழகத்தின் நிர்வாகம் குறித்து மாண்புமிகு ஆதி திராவிடர் நலத்துறை அமைச்சர் அவர்களிடம் காட்டுமன்னார்கோயில் சட்டப் பேரவை உறுப்பினர் திரு. ஜெயச்சந்திரன் அவர்கள் கேட்டிருந்த ஒரு கேள்விக்கு, கடந்த ஓராண்டுக் காலமாக—இதுவரையிலும்—அந்தத் துறையின் செயலாளரிடமிருந்து அந்த வினாவுக்கு உரிய பதில் அறிக்கை மாண்புமிகு ஆதி திராவிடர் நலத்துறை அமைச்சருக்கு வராமல் இருக்கிறது. இது சட்டமன்றப் பேரவை உறுப்பினர்களை மிகவும் பாதிப்பதாக இருக்கிறது. ஒரு முக்கிய பிரச்சினை குறித்து எழுப்பப்பட்ட வினாவுக்கு ஓராண்டுக் காலமாக சம்பந்தப்பட்ட சமூக நலத்துறையிலிருந்து பதில் வராமல் இருப்பது உறுப்பினர்களின் உரிமையை மிகவும் பாதிக்கிறது. என்வே அந்தக் கேள்வி என்ன ஆனது என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. எ. அருணாசலம் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர்கள் கேள்விகளை எழுதிக் கொடுக்கிற நேரத்தில் அமைச்சர்கள் அனுமதி கொடுத்து, அந்தக் கேள்விகள் சம்பந்தப்பட்ட துறைச் செயலாளருக்கு அனுப்பப்படுகின்றன. இங்கே நந்தனார் கல்விக் கழகத்தைப் பற்றி சொன்னார்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜெயச்சந்திரன் அந்தக் கேள்வியைக் கொடுத்திருந்தார். அந்தக் கேள்வி ஆதி திராவிடர் நலத்துறையோடு ரெவின்யூ துறைக்கும் சம்பந்தப்பட்டிருக்கிறது. மேலும் சட்டப் பிரச்சினையாகவும் அது இருக்கிற காரணத்தால் கிட்டத்தட்ட காலதாமதம் ஏற்பட்டிருக்கிறது, ஆனாலும் கூடிய விரைவில் அந்தத் துறையின் செயலாளருக்கு நான் தாக்கீது அனுப்பி, உடனடியாக அந்தக் கேள்விக்கு பதில் பெறுவதோடு, விளக்கமாக இந்தப் பிரச்சினையைப் பற்றி உடனடியாக கோப்புகளையும் அனுப்புமாறு செயலாளருக்கு உத்தரவு போட இருக்கிறேன்.



**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** 1985 ஆம் ஆண்டு ஜூலை மாதம் கேட்கப்பட்ட கேள்வி 1987 பிப்ரவரி மாதம் 19 ஆம் தேதி கமர்ஷியல் டாக்ஸ் அண்டு ரிலிஜியஸ் என்டோமென்ட் துறையிலிருந்து இங்கு தகவல் வந்திருக்கிறது. இரண்டு ஆண்டுகளாகியிருக்கிறது. அமைச்சரின் கவனத்திற்கு துறைச் செயலாளர் இதைக் கொண்டு வந்தாரா என்று தெரிந்து கொள்ள விரும்புகிறேன். அதாவது உங்களுடைய கவனத்திற்கு உங்கள் துறைச் செயலாளர் கொண்டு வந்தாரா என்று நான் தெரிந்து கொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. எ. அருணாசலம் :** பேரவைத் தலைவர் அவர்களே, இதுவரைக்கும் கொண்டு வரவில்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** அப்படியானால் அந்தத் துறைச் செயலாளரை * உங்களிடம் 20 ஆம் தேதிக்குள் அந்தக் கோப்பைக் கொண்டு வந்து ஆணையைப் பெற உத்தர விடுகிறேன்.

இது மட்டுமல்ல. சுமார் 275 கேள்விகள் 1985 ஆம் ஆண்டில் கேட்கப்பட்டவை—பல்வேறு துறைகளில் நிலுவையில் இருக்கின்றன.

சுமார் 547 கேள்விகள்—1986 ஆம் ஆண்டு கேட்கப்பட்ட கேள்விகள் பல்வேறு துறைகளில் பதில் அளிக்கப்படாமல்—சட்டமன்றச் செயலகத்திற்கு பதில் அனுப்பப்படாமல் இருக்கின்றன. ஆகவே இவைகளைக் குறித்த பதில்களையெல்லாம் 20 ஆம் தேதிக்குள் சம்பந்தப்பட்ட துறையினர் சட்டமன்றச் செயலகத்திற்கு அனுப்ப வேண்டும் என்று நான் உத்தரவிடுகிறேன்.

## 4. அறிக்கைகள் அளித்தல்.

### (அ) சட்ட விதிகள் ஆய்வுக் குழு.

**மாண்புமிகு திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன் (பேரவைத் துணைத் தலைவர்) :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் சட்ட விதிகள் ஆய்வுக் குழுவின் ஐந்தாவது (எட்டாவது சட்டமன்றப் பேரவை) அறிக்கையைப் பேரவைக்கு அளிக்கிறேன்.

---

* மாண்புமிகு பேரவைத் தலைவரின் 11—5—1987 ஆம் தேதிய ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

[திரு. மு. இராசாங்கம்] [1987 ஏப்ரல் 11

தொன்மையைக் கருதி, பழமையைக் கருதி, அந்தப் பண்டகசாலைக்கு அரசு ஒரு கோடி ரூபாய் கடனாக நிதி உதவி அளித்தால், அந்தச் சங்கம் மீண்டும் புத்துயிர் பெற்று, வளர்வதற்கு வாய்ப்பாக இருக்கும்.

அந்தச் சங்கத்தில் பணியாற்றும் ஊழியர்கள் கடந்த பல வருடங்களாக 250, 300 ரூபாய் என்ற அளவுக்கு சம்பளம் பெற்றுக்கொண்டிருக்கிறார்கள். அவர்களுக்கு ஊதிய உயர்வு அளித்து, மற்ற சலுகைகளையும் அளித்தால் அவர்கள் அந்தச் சங்கத்தின் வளர்ச்சிக்கு உறுதுணையாக இருப்பார்கள் என்பதை இந்தச் சந்தர்ப்பத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்து கும்பகோணத்தில் இருக்கின்ற கிராமியக் கூட்டுறவு மின்சார சங்கம் பற்றி ஒரு சில கருத்துக்கள் கூற விரும்புகிறேன். தமிழ்நாட்டிலே இருக்கின்ற 3 கூட்டுறவு மின்சார சங்கங்கள் சிறப்பாகப் பணியாற்றும் சங்கங்களாகும். ஆனால் குடந்தை மின்சார சங்கம் தமிழ்நாடு மின்சார வாரியத்திற்கு மின் உபயோகிப்பாளர்களிடமிருந்து பல கோடி ரூபாய் பாக்கி இருக்கிறது என்று ஆண்டுதோறும் வழக்கமாக நோட்டீஸ் கொடுப்பதும், பொதுமக்கள் கட்டிவிட்டதாக வாய்மொழியில் கூறினாலே, அந்த நோட்டீஸ்களை பின் வாங்கிக்கொள்வதும் வாடிக்கையாக இருக்கிறது. பணம் கட்டாத மின் உபயோகிப்பாளர்களுக்கு முறையாக நோட்டீஸ் கொடுத்து, அவர்களிடமிருந்து பணத்தைப் பெற முயற்சி எடுக்க வேண்டுமே தவிர, எல்லோருக்கும் நோட்டீஸ் அனுப்புவது நல்லதல்ல என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

குடந்தைப் பகுதியிலே மின் வாரியத்திலே தண்ணீர் இறைக்கும் மின்சார மோட்டார்களுக்கு மின் இணைப்பு கோரி 1,000-க்கும் மேற்பட்ட மனுக்கள் தேங்கியிருக்கின்றன. அவற்றைப் பரிசீலித்து மின் இணைப்பு கொடுக்க அரசு உடனடியாக ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். மின் மோட்டார்களை வாங்கியவர்கள் வங்கிகளில் கடன் பெற்றிருக்கிறார்கள். ஒரு சில ஆண்டுகள் ஆகியும் மின் இணைப்பு பெறாததால் வங்கியிலே வட்டி கட்டும் நிலை இருக்கிறது. அதையும் கருத்திலே கொண்டு, பரிசீலிக்க வேண்டுமென்று இந்தச் சந்தர்ப்பத்தில் கேட்டுக்கொள்கிறேன்.



1987 ஏப்ரல் 11] [திரு. மு. இராசாங்கம்]

(முற்பகல் 11-40)

அடுத்ததாக மத்திய கூட்டுறவு வங்கியிலே ஏழை எளிய நடுத்தர மக்களுக்கு 4 சதவிகிதம் வட்டிக்கு கடன் கொடுப்பதாக அரசு அறிவித்திருக்கிறது. கும்பகோணத்தைப் பொறுத்த வரையில் குடந்தை கூட்டுறவுச் சங்கம் பற்றி சொல்லிக்கொள்கிறேன். அங்குள்ள மத்திய கூட்டுறவு சங்கத்திலே அப்பகுதி நடுத்தர மக்களுக்கும் ஏழையெளிய மக்களுக்கும் 4 சதவிகிதம் வட்டிக்கு கடன் வழங்கப்படுவதில்லை. அப்படி வழங்கப்படுவதாகக் கணக்கிட்டு இருந்தாலும்கூட அது அதிகாரிகள் தங்களைச் சார்ந்தவர்களுக்குக் கடன் கொடுத்து அரசுக்கு மொத்தக் குறியீடாக தெரிவித்திருக்கலாம். ஏழையெளியவர்களுக்குக் கடன் கொடுக்கக்கூடிய அளவிலே முயற்சிகளை எடுத்துக்கொள்ள வேண்டும் என்று இந்தச் சந்தர்ப்பத்திலே அரசுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்து தனியார் துறையை விட கூட்டுறவுத் துறைக்கு அரசு அதிக முக்கியத்துவம் கொடுக்கிறது. தஞ்சாவூரிலே அனுமதி கோரியிருக்கிற கூட்டுறவு சர்க்கரை ஆலைக்கு அனுமதி வழங்க வேண்டும். எல்லா நகரப் பஞ்சாயத்துகளிலும் கூட்டுறவு வீடு கட்டும் சங்கங்கள் அமைப்பதற்கு அனுமதிக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். குறிப்பாக எங்களுடைய பகுதியிலே ஆடுதுறையிலே ஒரு கூட்டுறவுச் சங்கம் இயங்காமல் இருக்கின்றது. அது இயங்குவதற்கான முயற்சிகளை எடுத்துக் கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். கும்பகோணம், நாச்சியார் கோயில், திருவோணம் ஆகிய கூட்டுறவு வீடு கட்டும் சங்கங்கள் ஒரு குறிப்பிட்ட எல்லைக்குள்ளே சிறப்பாக இயங்கிக்கொண்டிருக்கின்றன. அந்த வீடு கட்டும் சங்கத்திற்குரிய பகுதியை அதனுடைய பரப்பளவை அதிகப்படுத்தித் தரவேண்டும். அந்தச் சங்கம் நன்கு இயங்குவதற்கான அனுமதி அளிக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

எங்களுடைய தொகுதியிலே உள்ள காய்கறி உற்பத்திச் சங்கம் பெயரளவிலேதான் இருக்கின்றது. அந்தச் சங்கம் மக்களின் தேவைக்கேற்ப செயல்படவில்லை. அங்கே அவர்கள் மார்க்கெட்டிலே இருந்து கொள்முதல் செய்து விற்பனை செய்து [illegible] என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

[திரு. மு. இராசாங்கம்] [1987 ஏப்ரல் 11

சங்கங்களும் நிர்வாகச் சீர்கேடு அடைந்து நலிவடைந்து இன்று மூடிவிடுகிற நிலையிலே இருக்கின்றன. உதாரணத்திற்காக நான் ஆளுகிற தமிழக அரசுக்கு ஒன்றைக் கூற விரும்புகிறேன்.

கைத்தறி பட்டு நெசவாளர் சங்கங்களுக்கு தலைவர்களை நியமனம் செய்ய வேண்டும் என்ற முறையில் நியமிக்கப்பட்டுள்ள அந்தச் சங்கத்தின் தலைவருக்கும் அந்தத் தொழிலுக்கும் சம்பந்தம் இல்லாத காரணத்தால், அந்தத் தொழிலே தெரியாதவர்கள் அதன் தலைவராக இருக்கின்ற காரணத்தால் அவர்கள் பல்வேறு தவறுகளை செய்கிறார்கள். நிர்வாகத் திறமை இல்லாத காரணத்தால் அப்படிப்பட்ட நிலையில் உள்ள பல சங்கங்கள் மூடிவிடுகிற நிலையிலே இருக்கின்றன. அதோடு அரசு குறிப்பாக தங்களுடைய கட்சி உறுப்பினர்களாக இருக்கின்றவர்களுக்கு அங்கேயுள்ள சங்கத்தின் தலைவர் பொறுப்பைக் கொடுக்கின்ற காரணத்தால் அவர்கள் அரசுக்கோ அல்லது மேல் அதிகாரிகளுக்கோ பயந்து நிர்வாகத்தைச் செய்ய வேண்டிய நிலை இல்லாத காரணத்தால் பல்வேறு சங்கங்கள் இன்று மூடுகின்ற நிலையிலே இருக்கின்றன என்பதை நான் இந்தச் சந்தர்ப்பத்திலே கூறக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதோடு கூட கூட்டுறவு கிராமச் சங்கங்களிலே பணியாற்றுகின்றவர்களின் ஊதியத்திலே பல்வேறான வேறுபாடுகள் இருக்கின்றன. ஒரு கிராமத்திலே ஒரு ஊழியருக்கு 500 ரூபாய் என்றால் அடுத்த கிராமத்தில் உள்ளவர்களுக்கு 200 ரூபாய் என்று இருப்பதால் அவர்களுக்கும் ஏற்றத்தாழ்வற்ற ஊதியத்தை அரசு நிர்ணயிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். அவர்களுக்கு பணிப் பாதுகாப்பும், நிரந்தர வேலை வாய்ப்பும் கொடுக்க வேண்டும் என்று இந்தச் சந்தர்ப்பத்திலே அரசுக்கு நான் தெரிவித்துக்கொள்கிறேன். குறிப்பாக தென்னாற்காடு, கும்பகோணம், திருநெல்வேலி, தஞ்சாவூர், மதுரை, புதுக்கோட்டை போன்ற 9 கூட்டுறவு மத்திய வங்கிகளின் கட்டுப்பாட்டின்கீழ் உள்ள வங்கிகளிலே பணியாற்றுகின்ற — 31—12—1977-க்கு முன்னால் அட்ஹாக் கமிட்டியால் நியமனம் செய்யப்பட்ட— ஊழியர்களை மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கிகளின் ஊழியர்களாக நியமித்துக்கொள்ள அரசு கூட்டுறவுத் துறை கடிதம் எண்



1987 ஏப்ரல் 11] [திரு. மு. இராசாங்கம்]

72, நாள் 15—2—1982-ன்படி மாநில பதிவாளர் உத்தரவிட்டும் இதுநாள் வரை செயல்படுத்தப்படவில்லை என்பதை இந்த அரசுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மதுரை மாவட்டக் கூட்டுறவு வங்கியானது மேற்படி ஊழியர்களை வங்கியின் பணியாளர்களாக எடுத்துக்கொள்ள பதிவாளருக்கு 15—3—1987 ஆம் தேதியன்று அனுமதி கோரியுள்ளதாகத் தெரிகிறது. இந்தப் பிரச்சினையில் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பரிவோடு பரிசீலனை செய்து மேற்படி ஊழியர்களை மத்திய வங்கி ஊழியர்களாக நியமனம் செய்யும்படி இந்தச் சந்தர்ப்பத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

கடந்த 2 அல்லது 3 ஆண்டுகளுக்கு முன்னால் கூட்டுறவுச் சங்கங்களுக்கு சுமார் 900 தனி அலுவலர்கள் நியமிக்கப்பட்டார்கள். அவர்கள் இந்த ஆண்டு பணி நீக்கம் செய்யப்பட இருக்கிறார்கள் என்று தெரிகிறது. அவர்களுக்கு பணிப் பாதுகாப்பு அளிக்க தகுந்த நடவடிக்கைகளை அரசு எடுக்க வேண்டுமென்று இந்தச் சந்தர்ப்பத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, எங்கள் பகுதியிலே சுமார் 40 ஆண்டுகளுக்கு முன்னால், கும்பகோணத்தில் சந்திரசேகரபுரம் கூட்டுறவுப் பண்டகசாலை என்று தொடங்கப்பட்டு, சுமார் 40-க்கும் மேலான கிளைகளுடன் மக்களுடைய எல்லாத் தேவைகளையும் பூர்த்தி செய்யும் வகையிலே அந்தச் சங்கம் தமிழகத்திலே சிறப்பாகப் பணி புரிந்து கொண்டிருந்தது. ஆனால் 15 ஆண்டுகளாக அது தனி அதிகாரிகளின் நிர்வாகத்தின்கீழ் இருக்கிற காரணத்தால், அந்தச் சங்கங்கள் சீர்கேடு அடைந்து, இன்று கிராம மக்களுடைய நன்மதிப்பை இழந்து, அந்தச் சங்கத்திலே டிபாசிட் செய்தவர்கள் எல்லாம் அந்தத் தொகையைத் திரும்பப் பெற்றுக் கொண்டிருக்கிறார்கள். ஒருசில ஆண்டுகளுக்கு முன்னால் கிராமப்புறங்களில் கிராம வழக்கப்படி சாமான்கள் வாங்க வேண்டுமென்றால் சந்திரசேகரபுரம் ஸ்டோரில் 'வாங்குங்கள் என்று சொல்லும் நிலை மாறி, இன்று அந்த சந்திரசேகரபுரம் ஸ்டோரில் வாங்குவது நல்லதல்ல என்று சொல்லுமளவுக்கு நம்பிக்கைக் குறைவு ஏற்பட்டிருக்கிறது. நான் இந்த நேரத்தில் ஒன்று கூறிக்கொள்ள விரும்புகிறேன். அந்தச் சங்கத்தின்

அடுத்து கூட்டுறவைப் பொறுத்தவரையில் அது சிறப்பாக இயங்கிக்கொண்டிருக்கிறது. இந்த அரசு பல்வேறு கூட்டுறவுச் சங்கங்களின் தேர்தல்களை விரைவிலே நடத்த தேதி அறிவிக்க வேண்டும் என்று கேட்டுக்கொண்டு எனக்கு பேசுவதற்கு வாய்ப்பளித்த தலைவர் அவர்களுக்கு நன்றி கூறி அமைகிறேன். வணக்கம்.

**திரு. கூடலூர் இ. வி. வேலு:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அண்ணன் டாக்டர் நாவலர் அவர்கள் கொண்டு வந்திருக்கின்ற கூட்டுறவு மானியத்தை வரவேற்று ஒருசில கருத்துக்களை எடுத்து வைக்கலாம் என்று நான் கருதுகிறேன்.

இன்றைக்கு நாட்டிலே உணவுத் தட்டுப்பாடு இல்லாமல் இருக்கிறது என்று சொன்னால், அதற்கு அடிப்படைக் காரணம் இன்றைக்கு தமிழகத்திலே விவசாயம் நல்ல முறையிலே நடைபெறுகின்ற காரணத்தினால்தான். அதற்குக் காரணம் கூட்டுறவு என்கின்ற இந்த இயக்கம் விவசாயப் பெருங்குடி மக்களுக்கு உரிய நேரத்திலே உதவுகின்ற காரணத்தினால்தான். உரிய நேரத்தில் கடன் கொடுத்து, உரிய நேரத்தில் உரம் கொடுத்து வருகின்ற காரணத்தினாலேதான் இன்றைக்கு விவசாயம் நல்ல முறையிலே நடந்து வருகின்றது. தட்டுப்பாடு என்ற நிலை இன்றைக்கு நாட்டிலே இல்லாததற்குக் காரணம் கூட்டுறவு இயக்கங்கள் செம்மையாக நடப்பதுதான். தங்கம் செய்யாததை சங்கம் செய்யும் என்று சொல்வார்கள். அந்த வகையிலே இன்றைக்கு நாட்டினுடைய தலையாய உணவுப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு பேருதவியாக இருப்பது கூட்டுறவுச் சங்கம் என்று சொல்வதிலே நான் மகிழ்ச்சியடைகிறேன், பாராட்டுகிறேன். தமிழகத்தைப் பொறுத்த அளவுக்கு விவசாயப் பெருங்குடி மக்கள், தொழிலாளப் பெருங்குடி மக்கள் இவர்களுக்காக கடன் கூட்டுறவுச் சங்கம், விற்பனை கூட்டுறவுச் சங்கம், நுகர்வோர் கூட்டுறவுச் சங்கம், கல்வி ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிலையம், பழங்குடி மக்களுக்காக; அவர்களுடைய வளர்ச்சித் திட்டத்திற்காக கூட்டுறவுச் சங்கம், உணவு கிராமப்புற அங்காடிகள் கூட்டுறவுச் சங்கம்—இப்படி பல்வேறு சங்கங்களை





[illegible] அதன் மூலமாக நாட்டிலே இருக்கிற பல்வேறு பிரச்சினைகளை கூட்டுறவுச் சங்கம் மூலமாக இன்றைக்கு இந்த அரசு தீர்த்து வைக்கின்றது.

குறிப்பாகச் சொல்ல வேண்டுமென்றால், புரட்சித் தலைவர் அவர்கள் ஆட்சிப் பொறுப்பை ஏற்றதற்குப் பின்னால் கிராமப் புறத்திலே இருக்கின்ற ஏழை எளிய மக்கள் தங்களுக்குக் கடன் வேண்டுமென்று சென்றபோது, நகரத்திலே இருக்கின்ற, வடக்கே இருந்து வந்து கடன் கொடுக்கின்ற மார்வாரிகளிடத்திலே நகையை வைத்து பல ரூபாய்களை வட்டியாகக் கொடுத்து அவர்கள் குடும்பங்கள் அழிந்த வரலாறு கிராமப்புறத்திலே உண்டு. ஆனால் இதை எல்லாம் உணர்ந்து மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்களுடைய அரசு கூட்டுறவு இயக்கத்தின் மூலமாக கிராமப்புறங்களில் இருக்கிற விவசாயக் கூட்டுறவுச் சங்கத்தின் மூலமாக விவசாய பெருங்குடி மக்களுக்காக குறைந்த வட்டியிலே, 2 சதவிகித மாத வட்டியிலே அல்ல, 14 சதவிகித வட்டியிலே நகைக் கடன் வழங்குகின்ற திட்டத்தை உருவாக்கினார்கள். வடக்கேயிருந்து இங்கே வந்து அதிக வட்டி வாங்கி தொழில் நடத்திக்கொண்டிருந்த மார்வாடிகள் எல்லாம் அப்படி செய்ய முடியாத அளவிற்கு கிராமப்புறங்களில் எல்லாம் கூட நகைக்கு கடன் வழங்குகிற திட்டத்தையும் மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்களுடைய தலைமையின் கீழ் இயங்குகிற கூட்டுறவு துறை தான் செய்தது என்பதால் இந்தத் துறையை நான் பாராட்டுகிறேன்.

அடுத்து, கிராமப்புறங்களில் வாழ்கிற ஆதி திராவிட மக்கள் எல்லாம் முன்பு எல்லாம் கூட்டுறவுச் சங்கங்களிலே இடம் பெற முடியவில்லையே என்கிற குறை இருந்த காலம் ஒன்று இருந்தது. நிலம் வைத்திருப்பவர்கள், மிகப் பெரிய விவசாயிகள், நடுத்தர விவசாயிகள் இப்படிப்பட்டவர்கள் தான் கூட்டுறவுச் சங்கங்களில் உறுப்பினர்களாக இருந்து அரசாங்கத்தின் நன்மைகளை பெறுகிறார்கள் என்று ஆதி திராவிட மக்கள் எல்லாம் நினைத்த காலம் ஒன்று இருந்தது. ஆனால் மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்களுடைய ஆட்சிக் காலத்திலே தான். ஆதி திராவிட மக்கள் எல்லாம் கூட்டுறவுச் சங்கங்களிலே உறுப்பினர்களாக சேர்க்கப்பட்டிருக்கிறார்கள். அந்த வகையில் இன்றைய

[திரு. கூடலூர் இ. வி. வேலு] [1987 ஏப்ரல் 11

தினம் 20 ஆயிரத்திற்கும் மேற்பட்ட ஆதி திராவிட மக்கள் கூட்டுறவு இயக்கத்திலே உறுப்பினர்களாக சேர்ந்து இன்றைய தினம் அரசாங்கம் அறிவிக்கின்ற நன்மைகளைப் பெற்று வருகிறார்கள் என்பதை நான் இங்கே உறுதியாக கூறிக்கொள்ள முடியும்.

அடுத்து, கூட்டுறவு இயக்கத்தின் மூலமாக ஏழையெளிய விவசாயிகளாக இருந்தாலும் சரி, நடுத்தர விவசாயிகளாக இருந்தாலும் சரி, பொதுவாக விவசாய பெருங்குடி மக்கள் நல்லமுறையில் நன்மைகளை பெறுகிறார்கள். விவசாய கூட்டுறவுச் சங்கங்களில் இருப்பவர்கள் எல்லாம் கோரிக்கைகளை வைக்காமலேயே மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள் விவசாய பெருங்குடி மக்களுக்காக பல நன்மைகளை செய்து வருகிறார்கள். இன்றைக்கு கிணறு வெட்ட கடன் கொடுக்கிறார்கள், கிணறு பொய்த்து விட்டது, கிணறு பலன் அளிக்கவில்லை, பாறை வந்து விட்டது, தண்ணீர் கிடைக்க வில்லை என்கிற அடிப்படையில் இருக்கிற கிணறுகளைப் பொறுத்தவரையில் 2 ஆயிரத்திற்கு மேற்பட்ட அத்தகைய கிணறு களைப் பொறுத்தவரையில் விவசாய பெருங்குடி மக்களுக்காக, நன்மை செய்ய வேண்டும் என்பதற்காக அவர்களுடைய கடன் களை மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள் தள்ளுபடி செய் திருக்கிறார்கள் என்பதை நான் இங்கே தெரிவித்துக் கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன். கூட்டுறவு கடன்களைப் பொறுத்த வரையில், இந்தியாவிலேயே வேறு எந்த மாநிலத்திலும் இல்லாத அளவுக்கு அதிகமாக விவசாய பெருங்குடி மக்களுக்கு கடன் வழங்கியது மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்களுடைய ஆட்சி தான். அதேபோல இந்தியாவிலே வேறு எந்த மாநிலத்திலும் இல்லாத அளவுக்கு விவசாய பெருங்குடி மக்களுக்கு இருக்கிற கூட்டுறவு கடன்களைத் தள்ளுபடி செய்ததும் மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்களுடைய ஆட்சியில்தான். இந்த ஆண்டு மட்டும் அபராத வட்டி என்கிற வகையில் 200 கோடி ரூபாயை மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள் தள்ளுபடி செய்திருக் கிறார்கள். இந்த வகையில் இந்தியாவிலே ஒரே ஒரு ஒப்பற்ற தலைவராக, கூட்டுறவு இயக்கத்திற்காக தன்னை இரவு என்றும் பகல் என்றும் பாராது வருத்தி திட்டங்களைத் தீட்டி தமிழக மக்களுக்கு கூட்டுறவுத் துறையின் மூலமாக வழங்குகின்ற



1987 ஏப்ரல் 11] [திரு. கூடலூர் இ. வி. வேலு]

தலைவராக மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள் விளங்கிக் கொண்டிருக்கிறார்கள் என்பதை நான் இங்கே பெருமையோடு கூறிக்கொள்ள முடியும்.

சென்ற ஆண்டு குறுகிய கால கடனாக 124.43 கோடி ரூபாயும், மத்திய கால கடனாக 19.26 கோடி ரூபாயும், நீண்ட கால கடனாக 11.91 கோடி ரூபாயும், ஆக மொத்தத்தில் 175.21 கோடி ரூபாயை இந்த அரசு செலவு செய்திருக்கிறது. ஆனால் இந்த ஆண்டு மாண்புமிகு நிதியமைச்சர் அண்ணன் நாவலர் அவர்கள் 1987-88-ல், 227 கோடி ரூபாயை அனுமதித்திருப்பதாக இந்த கொள்கை குறிப்பிலே சொல்லியிருக்கிறார்கள். ஆக, சென்ற ஆண்டை விட இந்த ஆண்டு கிட்டத்தட்ட 50 கோடி ரூபாயை கூட்டுறவுத் துறைக்கு, செலவு செய்யப் போவதாக இந்த கொள்கை விளக்கக் குறிப்பிலே தெளிவாக சொல்லியிருக்கிறார்கள். இதிலிருந்து ஒன்று தெரிகிறது. சென்ற ஆண்டை விட இந்த ஆண்டு கூட்டுறவு இயக்கத்திற்கு இந்த அரசு எவ்வளவு தூரம் முக்கியத்துவம் தந்திருக்கிறது, ஏழை எளிய விவசாய பெருங்குடி மக்களுக்காக, கிராமப்புற மக்களுக்காக இந்த அரசு எந்த அளவிலே தன்னை ஈடுபடுத்திக்கொண்டிருக்கிறது என்பதை எல்லாம் நாம் புரிந்து கொள்ளலாம். இந்த கொள்கை விளக்கக் குறிப்பிலே அதைப்பற்றி எல்லாம் விளக்கமாக சொல்லியிருப் பதற்காக இந்த அரசை நான் பாராட்டுகிறேன்.

அடுத்து, மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர் களிடம் ஒன்றை கேட்டுக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன். இன்றைக்கு விவசாய பெருங்குடி மக்களுக்கு கிணறு வெட்டுவது போன்ற திட்டங்களுக்கு கடன் கொடுக்கிறார்களே, அவற்றை அவர்கள் முறைப்படி பெற முடிவதில்லை. அதை பெறுவதிலே கால தாமதம் ஏற்படுகிறது. விவசாய கூட்டுறவுச் சங்கங்கள் மூலமாக மத்திய கால கடனாக 5 ஆண்டு காலத்துக்கு நீட்டித்து அதனை கொடுத்தால் தான் கிராமப்புறங்களில் வாழ்கிற ஏழை யெளிய விவசாயிகளுக்கு வசதியாக இருக்கும். எனவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள், கிராமப்புறங்களிலே வாழ்கிற விவசாய பெருங்குடி மக்களுக்காக, விவசாய கூட்டுறவுச் சங்கங் களின் மூலம் கிணறுகளைத் தோண்ட, கிணறுகளை ஆழப்படுத்த, கிணறுகளை புதிதாக வெட்ட பணம் கொடுக்கும்போது கிராம

[திரு. கூடலூர் இ. வி. வேலு] [1987 ஏப்ரல் 11

கூட்டுறவு விவசாய சங்கத்தின் மூலமாக மத்திய கால கடன் தவணைகளாக, 5 ஆண்டுக் கால தவணைகளாக, கொடுக்க ஏற்பாடு செய்ய வேண்டுமென்று இந்த நேரத்தில் சொல்லிக் கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

(முற்பகல் 11-50)

அடுத்து, என்னுடைய தொகுதியிலுள்ள எடாலூரில் கிடங்கு வசதியில்லாத நிலை இருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். விவசாயக் கூட்டுறவு கிடங்கு இல்லை. அந்தக் கிடங்கு ஒன்றையும் நீங்கள் தர வேண்டுமென்று நான் இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

இங்கே அருமை சட்டப்பேரவை உறுப்பினர் திரு. இராசாங்கம் அவர்கள் ஒன்றைக் குறிப்பிட்டார்கள். அதைப் போன்று எங்களுடைய வடார்க்காடு மாவட்டத்திலே வந்தவாசி என்ற ஊர் இருக்கிறது. அந்த வந்தவாசியிலே மின்சாரக் கூட்டுறவுச் சங்கம் ஒன்று இருக்கிறது. இன்றைக்கு அது இலாபகரமாகச் செயல்பட்டுக் கொண்டிருக்கிறது. ஆகவே, பல இலட்சம் ரூபாய்களை இன்றைக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் மூலமாக—மின்சாரத் துறை என்று சொன்னாலே நஷ்டம் நஷ்டம் என்றுதான் கேள்விப்பட்டிருக்கிறோம்—ஆனால் அதே மின்சாரத்தைக் கூட்டுறவுச் சங்கத்தின் மூலமாகப் பெற்று, அதை ஏழை விவசாயிகளுக்கும், நடுத்தர விவசாயிகளுக்கும் அளிப்பதன் மூலம் அந்தச் சங்கத்திற்கு இலாபம் கிடைத்திருக்கிறது. இன்றைக்குத் தமிழகத்திலே கூட்டுறவு மின்சார சங்கம் என்பது மூன்றோ, நான்கோ தான் இருக்கின்றன. இதை அதிகமாக்கி எல்லாயிடங்களிலும் சீராக விவசாயப் பெருங்குடி மக்கள் மின்சாரத்தைப் பெற வேண்டும் என்று சொன்னால் இந்தக் கூட்டுறவு மின்சார சங்கத்தை அதிகமாக்க வேண்டுமென்று இந்த நேரத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

இதற்கு முன்னாலேயெல்லாம், பத்தாண்டுக் காலத்திற்கு முன்னாலெல்லாம் கிராமப்புறத்திலே ஒரு நல்ல பொருளை வாங்க முடியாது. சாப்பிடுவதற்கு மணிலா எண்ணெயை வாங்குகிறோம் என்று சொன்னால் அதில் கொழுப்புச் சத்து



1987 ஏப்ரல் 11] [திரு. கூடலூர் இ. வி. வேலு]

நிறைந்திருக்கும். தலையிலே தடவுவதற்குத் தேங்காயெண்ணெய் வாங்க வேண்டுமென்று சொன்னால், பத்தாண்டு காலத்திற்கு முன்னால் தேங்காயெண்ணெயிலே பாமாயிலோ அல்லது மல்லாக்கொட்டை என்று சொல்லப்படுகின்ற மணிலா எண்ணெயோ கலந்திருக்கும். ஆனால் இன்றைக்கு முறைப் படுத்தப்பட்டு, மிகவும் சுத்தமாக, நேர்மையாக, பாதுகாக்கப் பட்ட முறையில் வழங்க தமிழகத்திலே 17,000 கூட்டுறவு சிறப்பங்காடிகளை, திறக்கிற வகையில் புரட்சித் தலைவர் ஆட்சிதான் இந்தச் சீரிய திட்டத்தைக் கொண்டு வந்து, இன்றைக்குத் திறந்து வைத்திருக்கிறது என்று சொல்கிறபொழுது இந்த ஆட்சியை மனதார மக்கள் பாராட்டுகிறார்கள். மக்களின் சார்பாக நானும் இந்த நேரத்திலே நன்றியறிதலையும், பாராட்டையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதோடு மட்டுமல்ல, இந்தக் கூட்டுறவுச் சங்கத்தைப் பற்றி மாண்புமிகு அண்ணன் அவர்களுக்குக் குறிப்பிட்டேன். அண்ணன் கூட்டுறவுத் துறை அமைச்சரவர்கள் இதைத் தயவு செய்து கவனிக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன். கூட்டுறவுச் சங்கத்தைப் பொறுத்தவரைக்கும் பல கூட்டுறவுச் சங்கங்களை நாம் உருவாக்கி இருக்கிறோம். ஆனால் பத்திரிகை நண்பர்கள், சில பத்திரிகைகளிலே தொழில் புரிகிறார்கள். ஜெர்னலிசம் என்ற அடிப்படையிலே படித்து வருகிறார்கள். ஆனால் அவர்களுக்கு வேலை கிடைப்பதில்லை. சில பத்திரிகைகளில் அவர்கள் பத்தாண்டுக் காலம் பணியாற்றினால் ஏதோ லேபர் ஆக்ட் என்ற அடிப்படையில் வெளியேற்றப்படுகிறார்கள். அந்த நண்பர்கள் திண்டாடுகின்ற காட்சியை நாம் சென்னையிலே பார்க்கிறோம். சில மாணவர்கள் ஜெர்னலிசம் படித்து விட்டு, அவர்களுக்கு வேலை இல்லை என்கிற ஒரு நிலைமை இருக்கிறது. ஆனால் இந்த வேலையில் பத்தாண்டுக்காலம்—அதாவது ஒரு அங்கீகாரம் பெற்ற பத்திரிகையிலே பணிபுரிந்தவர்கள், ஜெர்னலிசம் என்று எம்.ஏ.வோ, பி.ஏ.வோ படித்து வெளிவந்திருக்கின்ற மாணவர்கள் ஆகிய இவர்களையெல்லாம் ஒன்றாகச் சேர்த்து, உறுப்பினர்களாகச் சேர்த்து பத்திரிகை கூட்டுறவுச் சங்கம் என்ற ஒரு சங்கத்தை உருவாக்கி, அதன் மூலமாகச் சென்னையிலே, தமிழகத்திலே, இந்த மாநிலம்தான்

பத்திரிகைக் கூட்டுறவுச் சங்கம் நடத்துகிறது என்கிற புரட்சியை, பல புரட்சிகளைச் செய்திருக்கின்ற இந்த மாநிலம் செய்யுமாக வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

வீடு கட்டும் சங்கத்தைப் பொறுத்தவரையில் பார்த்தால், ரூரல் ஹவுசிங் சொசைட்டி என்று இருக்கிறது. திருவண்ணாமலை பகுதியிலே இருக்கின்ற அந்த ஒரேயொரு சொசைட்டியைத் தவிர வேறு எங்கும் இல்லை. ஆனால் எப்பொழுது துவக்கப்பட்டது என்று சொன்னால், இருபது, இருபத்தைந்து ஆண்டுக் காலத்திற்கு முன்னால் துவக்கப்பட்டது என்று சொன்னார்கள். அந்த ரூரல் ஹவுசிங் சொசைட்டி மூலமாக ஒரு குறிப்பிட்ட ஏரியாவுக்கு மட்டும்தான் கடன் கொடுக்கிறார்கள். என்னுடைய தொகுதி என்று சொன்னால், தண்டராம்பட்டுக்குத்தான் திருவண்ணாமலையிலிருந்து கொடுக்கிறார்கள். இடைப்பட்ட பத்து கிராமங்களுக்கு அந்தக் கடன்களை அளிப்பதில்லை. என்வே, இந்த ரூரல் ஹவுசிங் சொசைட்டி என்று சொல்லப்படுகிற இந்த கூட்டுறவு வீடு கட்டும் சங்கத்தை இன்னும் தமிழகத்திலே பரவலாக ஆக்க வேண்டும். பத்து ஊர்களுக்கு ஒரு ரூரல் ஹவுசிங் சொசைட்டி என்றோ அல்லது இருபது ஊர்களுக்கு என்றோ அல்லது ஒன்றியத் தலைநகரங்களிலோ ஏற்படுத்த வேண்டும். தண்டராம்பட்டு ஒன்றியம், திருவண்ணாமலை ஒன்றியம், கலசப்பாக்கம் ஒன்றியம், பெரணமல்லூர் ஒன்றியம் ஆகிய ஒன்றியங்கள் இருக்கின்றன. அந்த ஒன்றியத் தலைநகரங்களில், இந்த ரூரல் ஹவுசிங் சொசைட்டி என்று சொல்லப்படுகின்ற, வீடு கட்டும் கூட்டுறவுச் சங்கங்களைத் துவக்க வேண்டுமென்று இந்த நேரத்திலே நான் கேட்டுக்கொள்கிறேன்.

நம்முடைய புரட்சித் தலைவரவர்களின் ஆட்சியில் பல்வேறு கடன்களைக் கூட்டுறவுச் சங்கத்தின் மூலமாகத் தருகிறார்கள். நாங்களெல்லாம் விவசாயப் பெருங்குடி மக்கள். நாங்கள் அங்கே அப்ளிகேஷன் போடுகிறோம். அது அங்கிருந்து வேலூரிலே—மாவட்டத்திலே இருக்கின்ற மைய வங்கிக்கு வந்து [illegible] செய்தால்தான் கடனைக் கொடுக்கின்ற நிலை [illegible] வேண்டும். இதனால் [illegible]



தாமதம் ஏற்படுகிறது. அங்கே இருக்கின்ற கிளை வங்கியிலே உள்ள மேனேஜர்களுக்கு அதிகாரத்தைக் கொடுத்து, கிளை வங்கிகளிலே உள்ள மேலாளர்களுக்கு அதிகாரத்தைக் கொடுத்து, அதன் மூலமாக உடனே விவசாயப் பெருங்குடிமக்கள் கடன் பெறுவதற்கான வழிவகைகளைச் செய்ய வேண்டுமென்று நான் இந்த நேரத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

மார்க்கெட்டிங் சொசைட்டிகளில் சூப்பர்வைசர் என்று சொல்லப்படுகின்ற மேற்பார்வையாளர்கள், எல்.டி. பேங்க—நிலவள வங்கி என்று சொல்லப்படுகின்ற அங்கே இருக்கின்ற சூப்பர்வைசர்கள் ஆகிய இந்த சூப்பர்வைசர்களெல்லாம் ஜமீன்தார்களாக ஆகிவிட்டார்கள். ஜமீன்தார்களைப்போல இன்றைக்கு அவர்களுடைய நடவடிக்கைகளெல்லாம் இருக்கின்றன. காரணம் அவர்கள் போர்டு அப்பாயின்ட்மெண்ட். ஒரு காலத்திலே எல்.டி. பேங்கிலே போர்டு அப்பாயின்ட்மெண்ட் பெற்றவர்கள். அவர்களை மாற்றுகின்ற அதிகாரம் அரசாங்கத்திற்கு இல்லை, ரெஜிஸ்தாருக்கு இல்லை, அமைச்சருக்கு இல்லை. போர்டு அப்பாயின்ட்மெண்ட்டாக இருப்பதால், அவர்கள் கிராமங்களுக்குச் சென்று, விவசாயப் பெருங்குடி மக்களிடத்திலே தாங்கள் ஒரு ஜமீன்தாரைப்போல நடந்து கொள்கிறார்கள். எனவே, அவர்களையெல்லாம் ஒன்றாகத்திரட்டி—மார்க்கெட்டிங் சொசைட்டியிலே இருக்கின்ற சூப்பர்வைசர்கள், எல்.டி. பேங்கிலே—நில உடைமை வங்கியிலே இருக்கின்ற சூப்பர்வைசர்கள் ஆகிய இவர்களையெல்லாம் ஒன்றாக இணைத்து, மாவட்ட அளவிலே ஜே.ஆர். என்று சொல்லப்படுகின்ற இணைப் பதிவாளரே மாற்றுகின்ற அதிகாரத்தை கொடுக்க இந்தச் சட்டமன்றத்திலே புதிதாக ஒரு சட்டத்தை நிறைவேற்ற வேண்டுமென்று இந்த நேரத்திலே நான் கேட்டுக்கொள்கிறேன்.

அதன் வாயிலாகத்தான் சூப்பர்வைசர்களுக்கு ஒரு அச்சம் ஏற்படும். இப்போது அதிகாரிகளிடத்திலும் அவர்களுக்கு அச்சமில்லை; ரெஜிஸ்திராரிடமும் பயம் இல்லை; அமைச்சரைக் கண்டும் அவர்களுக்கு பயம் இல்லை. சட்டம் இருந்தால் நிச்சயமாக பயம் வரும். சூப்பர்வைசர்கள் தவறு செய்யாமல் இருக்க வாய்ப்பு ஏற்படும். என்வே சூப்பர்வைசர்கள் எல்லாம் அதிகாரி

[திரு. கூடலூர் இ. வி. வேலு] [1987 ஏப்ரல் 11

களுக்குப் பயந்து, அமைச்சருக்குப் பயந்து பணியாற்றுகின்ற வகையில் சட்டம் ஒன்றைக் கொண்டுவந்து நிறைவேற்ற வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அது மட்டுமல்ல. சென்ற ஆண்டு கூட்டுறவுச் சங்கங்களைப் பொறுத்தமட்டில் கிராமக் கூட்டுறவுச் சங்கங்களுக்கு தனி அதிகாரிகளை நியமனம் செய்தார்கள். ஏறத்தாழ 900 பேர்களை நியமனம் செய்தார்கள். அவர்கள் பி.ஏ. படித்தவர்கள், கிராஜுவேட்ஸ். அதோடு கோவாப்பரேட்டிவ் ட்ரெயினிங்கும் பெற்றிருக்கிறார்கள். அவர்கள் தனி அதிகாரிகளாக நியமிக்கப்பட்ட தகுதியானவர்கள் என்று கருதிதான் நியமனம் செய்தார்கள். ஆனால் இன்றைக்கு 300 பேர்களை பணியிலிருந்து எடுக்கப்போவதாகச் சொல்லப்படுகிறது. அவர்கள் கிராஜுவேட்டாக, கூட்டுறவுத் துறையில் பயிற்சி பெற்றவர்களாக இருப்பதால், இந்தப் பதவிக்குத் தகுதி பெற்றிருப்பதால் அவர்களை பணியிலிருந்து எடுப்பது நியாயம் அல்ல. நீங்கள்தான் தேர்வு செய்தீர்கள். தேர்வு செய்து ஓராண்டு காலம் பணியாற்றியிருக்கிறார்கள். அவர்களுக்கு எல்லாவிதமான தகுதியும் இருக்கிறது. இப்போது தமிழ்நாடு அரசு தேர்வாணைக் கழகம் மூலமாகத்தான் நியமனம் செய்ய வேண்டும் என்று சொல்லி, அவர்களை பணியிலிருந்து எடுப்பது நியாயமில்லை.

கூட்டுறவுத் துறையிலே பல்வேறு பிரிவுகள் இருக்கின்றன. மில்கள் இருக்கின்றன; பால்பண்ணை இருக்கிறது; கைத்தறி இருக்கிறது. இப்படிப்பட்ட ஏதாவது ஒரு பிரிவுக்கு அவர்களை டெப்யூட் செய்யலாம். சர்க்கரை ஆலைகளிலே சூப்பர்வைசர்கள் பணியாற்றுகிறார்கள். அந்த இடத்திலே கூட இவர்களை நியமனம் செய்யலாம். எல்லாவிதமான தகுதிகளையும் பெற்று, ஓராண்டு காலம் கிராம வங்கிகளில், கூட்டுறவுச் சங்கங்களில் பணியாற்றிய பிறகு அவர்களைப் பணியிலிருந்து எடுப்பது எந்தவகையிலும் நியாயம் அல்ல; பணியிலிருந்து எடுப்பதற்குப் பதிலாக அவர்களை வேறு பிரிவுகளுக்கு மாற்றலாம். ஏழை எளிய மக்களின் வாழ்க்கையில் ஒளி ஏற்றிவைக்கின்ற நம்முடைய புரட்சித் தலைவர் அவர்களுடைய ஆட்சியில் அந்த 900 குடும்பங்கள் வாழ்க்கையிலும் ஒளி ஏற்றிவைக்கின்ற வகையில் அவர்களுக்கு வேலை கொடுக்க வேண்டும் என்று கேட்டுக்



1987 ஏப்ரல் 11] [திரு. கூடலூர் இ. வி. வேலு]

கொள்கிறேன். எந்தக் காரணத்தைக் கொண்டும் அவர்களைப் பணியிலிருந்து எடுக்கக்கூடாது என்று பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்களுடைய ஆட்சியில்தான் இன்றைக்கு கூட்டுறவுத் துறை செம்மையாக, சிறப்பாக நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. பேரறிஞர் அண்ணா அவர்கள் 1967-ல் ஆட்சிப் பொறுப்புக்கு வந்தார்கள். அப்போது அவர்கள் 'எங்கும் தமிழ், எதிலும் தமிழ்' என்ற முறையிலே ஆட்சி நடத்தினார்கள் 1969 வரையில். அதற்குப் பின்னாலே 1977 வரையில் தமிழ்நாட்டிலே ஒரு நிலைமை ஏற்பட்டது. "கறையான் புற்றெடுக்க கருநாகம் குடி புகுந்தது" என்று சொல்வார்கள். அதைப்போன்று கலைஞர் ஆட்சியிலே இந்தக் கூட்டுறவுத் துறையில் எங்கும் ஊழல், எதிலும் ஊழல் என்ற நிலை இருந்தது. யாருடைய ஆட்சியில்? கலைஞர் ஆட்சியில்.

ஆனால் இன்றைக்கு 'கறையான் புற்றெடுக்க, கருநாகம் குடி புகுந்தது' என்ற நிலையை அப்புறப்படுத்தி, நாட்டு மக்களுக்கு, ஏழை எளிய மக்களுக்கு, விவசாயப் பெருங்குடி மக்களுக்கு நன்மை அளிக்கின்ற வகையில் கூட்டுறவுத் துறை சீரோடும் சிறப்போடும் நடைபெற்று வருகிறது. இதய தெய்வம் மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்களுடைய ஆட்சியில் 'எங்கும் புரட்சி, எதிலும் புரட்சி' என்று கூறப்படுவதைப்போல் இந்தக் கூட்டுறவுத் துறையிலும் புரட்சி நடந்து கொண்டிருக்கிறது. ஆகவே, இந்த கூட்டுறவு மானியக் கோரிக்கையை வரவேற்று, நன்றி சொல்லி, அண்ணா நாமம் வாழ்க என்று கூறி, என்னுடைய உரையை முடிக்கிறேன். வணக்கம்.

*திரு. சி. சுப்புராயர்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்களால் கொண்டு வரப்பட்டிருக்கிற கூட்டுறவுத் துறை மானியக் கோரிக்கை மீதான விவாதத்தில் கலந்து கொண்டு உரையாற்றுமுன் இதய தெய்வம் மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக் கொண்டு, என்னுடைய உரையைத் தொடங்குகிறேன்.

தமிழ்நாட்டில்தான் கூட்டுறவுத் துறை சிறந்த முறையில் இயங்கி வருகிறது என்பதை பெருமையுடன் தெரிவித்துக்

[திரு. சி. சுப்புராயர்] [1987 ஏப்ரல் 11

கொள்கிறேன். "கூட்டுயர்வே நாட்டு உயர்வு" என்பதை உணர்ந்தும் வண்ணம் இதய தெய்வம் புரட்சித் தலைவரது அரசு கூட்டுறவுத் துறையில் ஏராளமான சாதனைகளைச் செய்துள்ளது. அதிலும் குறிப்பாகச் சொல்ல வேண்டுமென்றால் தமிழக விவசாயிகள் நலனைக் கருதியும், அவர்களின் கஷ்டநஷ்டங்களை உணர்ந்தும் அகில இந்திய அளவில் முதன் முதலாக கடந்த ஆண்டு 140 கோடி ரூபாய் வரை தள்ளுபடி செய்தது மாண்புமிகு புரட்சித் தலைவர் அரசுதான் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். இதனால் ஏராளமான விவசாயிகள் நன்மைகளை அடைந்துள்ளார்கள். குறிப்பாக எனது தொகுதியிலுள்ள அனைத்து விவசாயிகளும் இதனால் பயன் பெற்றுள்ளார்கள். 140 கோடி ரூபாய் வட்டி தள்ளுபடி செய்துள்ள இதய தெய்வம் புரட்சித் தலைவர் அவர்களுக்கு என் தொகுதி மக்களின் சார்பாக நன்றி தெரிவித்துக் கொள்கிறேன்.

சத்துணவு மையங்களுக்கு நல்ல தரமான காய்கறிகளைக் கொடுக்க வேண்டும் என்ற எண்ணத்தில் தமிழ் நாடு முழுவதும் ஏராளமான காய்கறி உற்பத்தியாளர்கள் கூட்டுறவுச் சங்கம் தொடங்கப்பட்டு அவை அனைத்தும் நல்ல முறையில் செயல்பட்டு வருகின்றன. இதனால் காய்கறி உற்பத்தி செய்யும் விவசாயிகளுக்கு தங்களுடைய விளைபொருள்களுக்கு நல்ல விலை கிடைக்கின்றது. என்னுடைய தொகுதியில் தொழிற்சாலைகள் எதுவும் கிடையாது; ஆனால் விவசாயம் செழித்து விளங்கும் பகுதியாகும். என்னுடைய தொகுதியில் சுமார் 80 சதவீதத்திற்கு மேற்பட்ட மக்கள் விவசாயத்தை நம்பித்தான் உள்ளார்கள். எனது தொகுதியில் காய்கறிகள் ஏராளமாக உற்பத்தி ஆகின்றன.

(நண்பகல் 12-00)

சத்துணவு மையங்களுக்கு விநியோகிக்கப்படும் காய்கறிகள் மிகவும் குறைந்த அளவே ஆகும். எனவே கம்பம் பகுதியிலுள்ள சந்தைகளுக்குச் சென்றுதான் காய்கறிகளை விற்க வேண்டும். ஏராளமாக காய்கறிகள் வந்துவிட்டால் மலிவான விலைக்குத்தான் விற்க வேண்டும். சந்தைகளும் எல்லா நாட்களிலும் கூடுவதில்லை. வாரத்தில் ஒரு சில குறிப்பிட்ட நாட்களில்தான் கூடும். அன்றாடம் உற்பத்தி ஆகும் காய்கறிகளை ஒன்று அல்லது இரண்டு நாட்களுக்குள் விற்றாக வேண்டிய சூழ்நிலையில் காய்கறி உற்பத்தியாளர்கள் இருக்கிறார்கள். எனவே அவர்கள் காய்கறிகளை விற்பதற்காக மதுரை மற்றும் திருச்சி ஆகிய



1987 ஏப்ரல் 11] [திரு. சி. சுப்புராயர்]

(மாண்புமிகு மாற்றுத் தலைவர் தலைமை)

வெளியூர்களுக்குத்தான் அனுப்புகிறார்கள். அப்படி அனுப்பும் பட்சத்தில் அவர்களுக்கு நல்ல விலை கிடைப்பதில்லை. மேலும் சில சமயங்களில் பணமும் கிடைப்பதில்லை. விவசாயிகளின் இந்தக் குறையைப் போக்குவதற்காக எனது தொகுதியில் உள்ள கம்பம், உத்தமபாளையம் ஆகிய இரு ஒன்றியங்களிலும் உள்ள காய்கறி உற்பத்தியாளர்கள் கூட்டுறவுச் சங்கங்கள் மூலம் விவசாயிகளிடம் இருந்து, உற்பத்தியான காய்கறிகளை வெளி மாவட்டங்களில் விற்பதற்குத் தகுந்த உத்தரவுகளை வழங்க வேண்டுமென்று மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்களை நான் கேட்டுக் கொள்கிறேன்.

ஏழை விவசாயிகளுக்கும், வாழ்வில் நலிவடைந்தோருக்கும், சமுதாயத்தில் பிற்பட்டோருக்கும் மத்திய கூட்டுறவு வங்கிகளின் மூலம் இதய தெய்வம் புரட்சித் தலைவர் அரசு ஏராளமாக சலுகைகளை அளித்துள்ளது. சிறு தொழில் செய்வோர்க்கு உதவும் வண்ணம் ஏராளமான கடன்களை கூட்டுறவு வங்கிகள் வழங்கி வருகின்றன.

கூட்டுறவு நிலவள வங்கிகள் விவசாயிகளுக்குத் தேவையான அனைத்து கடன்களையும் வழங்கிக் கொண்டிருக்கின்றன. கிணறு வெட்டுவதற்கு, ஃபென்சிங், ஃபார்ம் ஹவுஸ், பம்ப் ரூம் போன்ற விவசாயிகளின் அத்தியாவசியமான வேலைகளுக்குக் கடன் வழங்கப்பட்டு வருகின்றது. டிராக்டர் வாங்குவதற்கும், மினி டெய்ரி என்ற சிறிய பால் பண்ணை அமைப்பதற்கும் நிலவள வங்கிகள் கடன் கொடுத்து வருகின்றன. டிராக்டர், மினி ஃபார்ம் போன்றவற்றிற்கும், ஃபென்சிங், பம்ப் ரூம் போன்றவற்றிற்கும் அண்டை மாநிலமான கேரளா மாநிலத்தில் கூட நிலவள வங்கிகளின் மூலமாக கடன் கொடுக்கப்படுவதில்லை. தென் மாநிலங்களில் குறிப்பாகத் தமிழகத்தில் மட்டும்தான் மினி டெய்ரி போன்றவற்றை அமைப்பதற்கு நிலவள வங்கியின் மூலமாக கடன் கொடுக்கப்பட்டு வருகிறது என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

நான் ஏற்கெனவே குறிப்பிட்டபடி எனது தொகுதி மக்கள் விவசாயத்தை மட்டும்தான் நம்பியுள்ளார்கள். எனது தொகுதி ஒரு பள்ளத்தாக்கில் அமைந்துள்ளதால் ஏராளமான மழை

[திரு. சி. சுப்புராயர்] [1987 ஏப்ரல் 11

பெய்யும். மேலும் பெரியாறு அணைக்கட்டு எனது தொகுதியில் தான் உள்ளது. எனவே என்னுடைய தொகுதியில் உள்ள கிணறுகளில் நல்ல தண்ணீர் ஊற்று கிடைக்கிறது. தற்போது நிலவள வங்கியின் மூலம் கிணறு வெட்டுவதற்கோ அல்லது ஆழப்படுத்துவதற்கோ கடன் வாங்க வேண்டுமென்றால் புதிதாக வெட்ட அல்லது ஆழப்படுத்த உள்ள கிணறுக்கும் அருகே உள்ள கிணறுக்கும் சுமார் 500 அடி இடைவெளி இருக்க வேண்டுமென்று விதிமுறை இருக்கிறது. அந்த விதிமுறையைத் தளர்த்தி, கம்பம் தொகுதியில் நீர்வளம் இருக்கும் பட்சத்தில் கிணறு வெட்டுவதற்கும் ஆழப்படுத்துவதற்கும் நிலவள வங்கி மூலம் கடன் கொடுக்க ஆவன செய்ய வேண்டுமென்று மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்களை நான் கேட்டுக் கொள்கிறேன்.

விவசாய விளை நிலங்கள் எனது தொகுதியில் ஏராளமாக உள்ளதால் கால்நடைக்குத் தேவையான தீவனங்கள் எனது தொகுதியில் ஏராளமாகக் கிடைக்கின்றன. கம்பம் கூட்டுறவு நிலவள வங்கியின் மூலம் முதலில் சுமார் 45 பேருக்கு மினி டெய்ரி துவங்க கடன் கொடுத்துள்ளார்கள். ஆனால் தற்சமயம் மினி டெய்ரி துவங்க கடன் கொடுப்பது நிறுத்தி வைக்கப்பட்டு இருக்கிறது. எனது தொகுதியில் ஏராளமான கால்நடைகள் இருப்பதால் விவசாயிகளின் நலனைக் கருதி மினி டெய்ரி துவங்குவதற்கு ஏராளமான கடனை நிலவள வங்கிகள் மூலமாகக் கொடுக்க மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் ஆவன செய்ய வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

தமிழகம் முழுவதும் விவசாய சேவை கூட்டுறவுச் சங்கங்கள் நல்ல முறையில் இயங்கி வருகின்றன. ஐ.ஆர்.டி.பி. திட்டத்தின் கீழ் கிராமப்புற மக்களுக்கு ஏராளமாகக் கடன் பெறுவதற்கு இந்த விவசாய சேவை கூட்டுறவுச் சங்கங்கள் மிகவும் உதவிகரமாக இருக்கின்றன. கடந்த ஆண்டு என் விவசாயம் மிகவும் பாதிக்கப்பட்டுள்ளது. சரியான விளைச்சல் கிடையாது. சரியான விலையும் கிடையாது. எனவே என் விவசாயிகள் செலுத்த வேண்டிய கடன் தொகைக்கான வட்டித் தொகையை நீக்கிக் கொடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். மேலும் எனது தொகுதியில் வறட்சி காரணமாக விவசாயம்



1987 ஏப்ரல் 11] [திரு. சி. சுப்புராயர்]

பாதிக்கப்பட்டு இருப்பதால் விவசாயிகள் செலுத்த வேண்டிய கடனுக்கு கால நீட்டிப்பு தர வேண்டுமென்று மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்களை நான் கேட்டுக் கொள்கிறேன். தற்போது விவசாய சேவைக் கூட்டுறவு சங்கங்கள் தனி அலுவலர்கள் பொறுப்பில் உள்ளது. தனி அலுவலர்கள் கூட்டுறவுத் துறையைச் சேர்ந்தவர்கள். ஆனால் அந்தச் சங்கங்களின் செயலாளர்கள் மத்திய வங்கியைச் சேர்ந்தவர்களாக இருக்கிறார்கள். அந்தச் சங்கங்களின் செயலாளர்கள் அந்தச் சங்கங்களில் நீண்ட காலமாக பணியாற்றியவர்கள். இவர்கள் இருவருக்கும் அடிக்கடி மன வேறுபாடுகள் உண்டாகின்றன. சில சங்கங்களில் தனி அலுவலர்கள் தேவைக்கு அதிகமான ஆட்களை நியமித்து விடுகிறார்கள். அப்படி தேவைக்கு அதிகமாய் ஆட்களை நியமிப்பதால் அந்தச் சங்கங்களில் நஷ்டங்கள் ஏற்படுகின்றன. எனவே பணியாளர்களை நியமனம் செய்வதற்கு இணைப் பதிவாளர் பொறுப்பில் ஒரு குழு அமைத்து, அவர்கள் மூலமாய் நியமனம் செய்யவும், மேலும் சங்கங்கள் சுமூகமான முறையில் செயல்பட தனி அலுவலர்களுக்கும், சங்கத்தின் செயலாளர்களுக்கும் உண்டான வேலைகளையும் முறைப்படுத்த வேண்டுமாயும் மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சரை அன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

டான்ஃபெட் என் அழைக்கப்படும் தமிழ்நாடு மாநில கூட்டுறவு விற்பனை இணையம் மிகவும் நல்ல முறையில் செயல்பட்டு வருகிறது. விவசாயிக்கு தேவையான உபகரணங்களையும், பூச்சி மருந்து உர மருந்துகளை வாங்கிக் கொடுப்பதில் முன்னணியில் நிற்கிறது. மேலும் பாமிலி என்ற உரத்தையும், சூரிய காந்தி எண்ணெயும் தயாரிக்கும் தொழில் நிலையம் நிறுவி, லாபகரமான முறையில் நடத்தி வருகிறது.

கேரளாவிலும், தமிழகத்திலும் உற்பத்தியாகும் ஏலக்காயை சிறிய அளவில் வாங்கி, இந்த டான்ஃபெட் நிறுவனம் வாங்கி, கூட்டுறவுச் சங்கங்களுக்கு தேவையான அளவிற்கு விற்பனை செய்து வருகிறது. கேரள மாநில மார்க்கெட்டிங் பெடரேஷன் ஏலக்காயை மொத்தமாக வாங்கி வெளி மாநிலங்களுக்கும், வெளி நாட்டிற்கும் விற்பனை செய்து வருகிறது. கேரளாவில் இருக்கும் 75 சதவிகிதத்திற்கு மேற்பட்ட ஏலக்காய் தோட்டங்கள்

தமிழ் நாட்டு மக்களைச் சேர்ந்தவை. எனவே டான்ஃபெட் நிறுவனமும் ஏலக்காயை ஆக்ஷன் சென்டரில் பெருமளவில் வாங்கி வெளி மாநிலங்களுக்கும் விற்பனை செய்ய முன்வர வேண்டும் என்று மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சரைக் கேட்டுக் கொள்கிறேன்.

கூட்டுறவு விவசாய சேவா சங்கங்களில் கடன் பெறுபவர்கள் தங்களுக்குத் தேவையான உரங்களையும், பூச்சி மருந்துகளையும் டான்ஃபெட் மூலமாக பெற வேண்டும் எனறும் உத்தரவு பிறப்பித்துள்ளார்கள். என்னுடைய தொகுதியில் உள்ள ஏல விவசாயிகள் நலனைக் கருதி கோள மாநிலம் வண்டன்மெட்டு, பூம்பாறை ஆகிய இரு இடங்களிலும் கடைகள் அமைத்து, விவசாயிகளுக்கு தேவையான உரங்களையும், பூச்சி மருந்துகளையும் தருவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதற்கு என்னுடைய தொகுதி மக்களின் சார்பாக நான் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். விவசாயிகளுக்குத் தேவைப்படும் அனைத்துப் பூச்சி மருந்து தயாரிப்பு நிறுவனங்களிலும் டான்ஃபெட் ரிஜிஸ்தர் செய்யப்படவில்லை. விவசாயிகள் கோரும் பூச்சி மருந்துகளையும், உரங்களையும் வாங்கித் தருவதற்கு, டான்ஃபெட் முன்வர வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். விவசாயிகள் கோரும் பூச்சி மருந்து அல்லது உரத்தை தயார் செய்யும் கம்பெனிகள் கவர்ன்மெண்டில் அப்ரூவ் செய்யப்பட வில்லை என்ற காரணத்தைச் சொல்லாமல், சப்ளை செய்யப்பட வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

என்னுடைய தொகுதியில் கரும்பு, பருத்தி ஆகிய விவசாய பொருள்கள் ஏராளமாய் விளைகின்றன. எனவே என்னுடைய தொகுதியில் கூட்டுறவுத் துறையின் மூலம் ஒரு சர்க்கரை ஆலை அல்லது ஸ்பின்னிங் மில் ஒன்றை அமைக்க ஆவன செய்ய வேண்டும் என்று இதய தெய்வம் புரட்சித் தலைவர் அவர்களையும், மாண்புமிகு அமைச்சர் அவர்களையும் கேட்டுக் கொள்கிறேன்.

என்னுடைய தொகுதியில் கூடலூர் மற்றும் ஹைவேஸ் போன்ற இடங்களில் பாண்டியன் கூட்டுறவு சிறப்பு அங்காடி அமைத்திட வேண்டுமாய் கேட்டுக் கொள்கிறேன். என்னுடைய தொகுதியில் காலணி தொழிலில் ஈடுபடக் கூடிய ஏராளமான



தொழிலாளர்கள். ஆதி திராவிட மக்கள் உள்ளதால், காலணி தயார் செய்யும் கூட்டுறவுச் சங்கம் ஒன்றை அமைத்திட ஆவன செய்ய வேண்டுமாய் கேட்டுக் கொண்டு வாய்ப்புக்கு நன்றி தெரிவித்து அமர்கிறேன். நன்றி, வணக்கம்.

**திரு. க. திருமலைச்சாமிக் கவுண்டர்:** மாண்புமிகு பேரவை மாற்றுத் தலைவர் அவர்களே, வாழ்க காந்தியம், வளர்க கூட்டுறவு. நான் சார்ந்திருக்கும் இந்திய தேசிய காங்கிரசின் சார்பாக என்னுடைய கருத்துக்களை கூட்டுறவுத் துறையின் கீழ் பேசுவதற்கு வாய்ப்பளித்தமைக்கு நன்றி. கூட்டுறவே நாட்டுயர்வு என்ற பழமொழி உண்டு. ஆனால் திராவிட பாரம்பரியம் ஆட்சிகள் தொடங்கப்பட்ட 1967-க்குப் பிறகு கூட்டுறவே நாட்டின் நலிவு என்று சொல்லக் கூடிய புதிய நிலையில் தமிழ்நாடு இருக்கிறது என்று கூறிக் கொள்ள விரும்புகிறேன்.

(பிற்பகல் 12-10)

காரணம் மு. கருணாநிதி அவர்கள் ஏழாண்டுக் காலம் தமிழகத்தை ஆட்சிப் புரிந்த காலத்தில் இந்த நிலை ஏற்பட்டது என்பதை வருத்தத்தோடு பேச விரும்புகிறேன். கூட்டுறவு இயக்கத்தில் நேர்மையான காங்கிரஸ்காரர்களை தேர்ந்தெடுத்து ஊழல் இல்லாமல காங்கிரஸ் காலத்தில் விவசாயிகளுக்கும், ஏழை எளிய மக்களுக்கும் கூட்டுறவு இயக்கத்தால் பல நன்மைகளைச் செய்து வந்தார்கள். தி.மு.க. ஆட்சியில் தேர்தல் வைத்தால் தங்கள் கட்சிக்காரர்கள் தலைவராக வர முடியாது என்று ஆதித்தனார் அவர்கள் கூட்டுறவு அமைச்சராக இருந்தபோது நீர்ப்பாசன கூட்டுறவுச் சங்கம் என்கிற பெயரில் கட்சிக்காரர்களைத் தேர்ந்தெடுத்து மார்க்கெட்டிங் சொசைட்டியில் போட்டு விட்டு காங்கிரஸ்காரர்களை வீட்டிற்கு அனுப்பினார்கள். உதாரணமாக என்னுடைய தொகுதியில் மார்க்கெட்டிங் சொசைட்டி நல்ல முறையில் நடந்து, விவசாயிகள் தங்கள் விளைபொருள்களை சொசைட்டியில் கொண்டு வைத்து 100 ரூபாய்க்கு 60 ரூபாய் வீதம் பணம் கொடுத்து, மீதித் தொகையை நல்ல விலை வந்தபோது விவசாயிகள் விற்கச் சொல்லும்போது விற்று, விவசாயிகள் நல்ல பயனடைந்து வந்தார்கள். மெம்பர்களுக்கு வருஷந்தோறும் இலாபத்தில் டிவிடெண்டும் கொடுத்து வந்தோம். ஆனால்

தி.மு.க. நபர்கள் தலைவராகவும், டைரக்டராகவும் வந்து மூன்று வருடத்திற்குள் பல ஊழல்களைச் செய்து அது மூடும் நிலைக்கு வந்தது. அதற்குப் பின் ஸ்பெஷல் ஆபீசர்களைப் போட்டு அது 30 லட்சம் ரூபாய் கடனில் இருக்கிறது. சிப்பந்திகளுக்கும் சம்பளம் கொடுக்காத நிலை இருக்கிறது. இதன் மீது மாண்புமிகு கூட்டுறவு அமைச்சர் அவர்கள் நடவடிக்கையெடுத்து, அதை நல்ல முறையில் நடத்திக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

காங்கிரஸ் கட்சி ஆட்சியில் இருந்தபோது 18 ஆண்டுக் காலத்தில் கூட்டுறவுச் சங்கங்களில் கடன் வாங்கவில்லையா? கடனைத் திருப்பிச் செலுத்தவில்லையா? கட்ட முடியாது என்று போராட்டம் நடத்தினார்களா என்பதையெல்லாம் சற்று சிந்தித்துப் பாருங்கள். கிராம சேவை கூட்டுறவு நாணயச் சங்கத்தில் திராவிட பாரம்பர்ய நண்பர்கள் வந்தார்கள். பல ஊழல் பினாமி லோன்களைப் போட்டு அவர்களே செலவழித்து விட்டு, பணம் கட்டியவர்களுக்கு கூட ரசீது கொடுக்காமல், தலைவர்களை எல்லாம் மிரட்டிக் கொண்டு இருந்தார்கள். உதாரணத்திற்கு என்னுடைய தொகுதியில் தி.மு.க. நண்பர்கள் தலைவராக இருந்த 4, 5 சொசைட்டிகளில் ரூபாய் பத்தாயிரம் முதல் ஐம்பதாயிரம் வரையில் பணத்தை கள்வாடி விட்டார்கள். அதற்குப் பின்னாலே மிசா சட்டம் கொண்டு வந்தபோது ஜெயில் தண்டனை நடவடிக்கையெடுத்து, அவர்கள் சொத்துக்களை ஜப்தி செய்யும் தருவாயில் பூமிகளை விற்றும், நகைகளை விற்றும் கட்டினார்கள் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

புரட்சித் தலைவர் அவர்கள் ஆட்சிக்கு வந்த பிறகு விவசாயிகள் தங்கள் விளைபொருள்களுக்கு நியாயமான விலை கிடைக்கவில்லையென்றும், மழை பொய்த்து விட்டது என்றும், விவசாயக் கடன்களைத் திருப்பிச் செலுத்த முடியவில்லையென்றும் தெரிவித்து, விவசாயிகள் சங்கங்களை அமைத்துப் போராடியதற்குப் பிறகு 200 கோடி ரூபாய் கடனை தள்ளுபடி செய்துள்ளதை நான் மனமாரப் பாராட்டுகிறேன். இப்போதும் இன்னும் சில பேருக்கு கடன் கட்ட முடியவில்லை. அவர்களுக்கு இன்னும் ஆறு மாதமாவது நீட்டிப்பு கொடுத்து, கடனை வசூல் செய்யும்படி, நம்முடைய கூட்டுறவு அமைச்சர் அவர்களை மிகத் தாழ்மையுடன் கேட்டுக் கொள்கிறேன்.





மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள் ஆட்சியில் மாண்புமிகு திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். அவர்கள் கூட்டுறவு அமைச்சராக வந்தவுடனே, கிராம கூட்டுறவு நாணயச் சங்கங்களில் இருந்த தலைவர்களை நீக்கிவிட்டு ஸ்பெஷல் ஆபீசர்கள் என்ற முறையில் எஸ்.எஸ்.எல்.சி. படித்து விட்டு வந்த நபர்களை ஸ்பெஷல் ஆபீசர்களாகப் போட்டார்கள். அதற்கு முன்னாலே எஸ்.எஸ்.எல்.சி. படித்து, கூட்டுறவு ட்ரெயினிங் முடித்து வந்த சில செகரட்டரிகள் எல்லாம் 10, 15 வருடங்கள் அதிலே சர்வீசாகி இருந்தார்கள். அவர்களை விட இந்த ஸ்பெஷல் ஆபீசர்கள் என்ன செய்ய முடியும் என்பதைப் புரிந்து கொள்ள வேண்டும். முதலில் செகரட்டரியாக இருந்தவர்கள் நல்ல முறையில் சங்கங்களை நடத்தாமல் ஊழல்களை நடத்தி வந்த நேரத்தில், எஸ்.எஸ்.எல்.சி. படித்த இந்த மாணவர்களை, 10 மாதம் ட்ரெயினிங் எடுத்து வந்த அவர்களை ஸ்பெஷல் ஆபீசர்களாகப் போட்டால் அவர்கள் அந்த செகரட்டரிகளிடம் என்ன கணக்குகளைப் பார்த்து வர முடியும் என்பதை நீங்கள் சிந்தித்துப் பார்க்க வேண்டும். அந்த நிலையிலே இன்றைக்கு பல சொசைட்டிகளில் உள்ள ஸ்பெஷல் ஆபீசர்களை கேட்டால், நாங்கள் பணம் செலவழித்துத்தான் ஸ்பெஷல் ஆபீசர்களாக வந்திருக்கிறோம். எங்களுக்கு மாதம் 100 ரூபாய் கொடுத்து விட்டு, நீங்கள் எதையோ செய்து கொள்ளுங்கள் என்று கூறிக் கொண்டிருக்கிறார்கள். இப்படியெல்லாம் இருந்தால், கூட்டுறவுத் திட்டத்தின் மீது ஆரம்பிக்கப்பட்ட சங்கங்கள் எப்படிச் செயல்படும் என்பதை நீங்கள் சிந்தித்துப் பார்க்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து நம்முடைய அரசு காலணி வழங்கும் திட்டத்தைக் கொண்டு வந்துள்ளது. அதையும் கூட்டுறவுத் துறை மூலமாக வழங்குமாறு கேட்டுக் கொள்கிறேன்.

திராவிட இயக்கம் ஆட்சிக்கு வந்ததற்குப் பின்னால், சாராயம், கள் எப்படி இருக்கும் என்று தெரியாதிருந்த தமிழகம் அன்றைக்கு கருணாநிதி முதலமைச்சராக இருந்த போது கள், சாராயக் கடைகளை, அரசுக்கு வருமானம் வர வேண்டும் என்று நினைத்து திறந்துவிட்டதால் ஆயிரக் கணக்கான குடும்பங்கள் சீரழிந்துவிட்டன. அதற்குப்பின் முதலி

அமைச்சர் அவர்கள் நான் ஆட்சிக்கு வந்தால், கள், சாராயக் கடைகளை ஒழித்து விடுவேன் என்று குறிப்பாகத் தாய்மார்களிடம் வாக்குறுதி அளித்தார்கள். ஆட்சியைப் பிடித்தார்கள், அவர்களும் இரண்டு தடவை அதை அமுல்படுத்திப் பார்த்தார்கள். இதை ஒழிக்க முடியவில்லை. ஆகவே தற்போது கூட்டுறவு வளர்ந்து விட்டது. போலீசும், பொது மக்களும் இன்றைக்கு கூட்டுறவு முறையில், கள், சாராயக் கடைகளை நடத்தி வருகிறார்கள் என்பது சாமிகும் அறிந்த விஷயம் .

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. செ. செம்மலை) :** இவைகள் எல்லாம் கூட்டுறவிலே வராது. மதுவிலக்கு மானியத்திலே பேசும்போது சொல்லலாம். கூட்டுறவு பற்றி மட்டும் பேசுங்கள். கற்பனை செய்து கொண்டு கூட்டுறவிலே இது நடக்கிறது, அது நடக்கிறது என்று சொல்ல முடியாது. கூட்டுறவுக்கு என்று தனித் தத்துவம் இருக்கிறது.

**திரு. சு. திருமலைச்சாமிக் கவுண்டர் :** இல்லை என்றால், தமிழ் நாட்டில் ஏழைக் குடும்பங்கள் நலிந்து போய்விடும். மேலும் திருட்டுக்கள், கொள்ளைகள் அதிகமாகி விடும் என்பதை சொல்லி, இவைகளுக்கு நல்ல முறையில் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

உதாரணத்திற்கு, பொது மக்களுக்கு நல்ல வகையில் பொருட்கள் கிடைக்க வேண்டும் என்ற நல்ல எண்ணத்தோடு கூட்டுறவு அமைச்சர் அவர்கள் ஜனநாயக முறைப்படி, தேர்தலை நடத்தி, நல்லவர்களை தேர்ந்தெடுத்து, மக்களுக்கு அரசிலிருந்து கொடுக்கக் கூடிய அத்தனை சாமான்களும் நல்ல முறையில் அவர்களுக்குப் போய்ச் சேர வேண்டும் என்ற ஒரு நோக்கோடு உடனடியாக கூட்டுறவுச் சங்கங்களுக்கு தேர்தல்களை நடத்த வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக தமிழகத்தில் உள்ள தனியார் சர்க்கரை ஆலைகளை எல்லாம் கூட்டுறவு முறையிலே கொண்டு வர வேண்டும். அல்லது அரசே எடுத்து நடத்த வேண்டும். அப்போது தான் கரும்பு பயிரிடும் விவசாயிகளுக்கு நல்ல விலை கிடைக்கும். அவர்கள் குடும்பங்களும், ஏழை எளியவர்களும்



முன்னேற்றமடைய முடியும். இப்போதெல்லாம் தனியார் துறையில் உள்ள ஆலை முதலாளிகள் எல்லாம் ஒன்றாகச் சேர்ந்து அவர்கள் அரசைப் பணிய வைக்கிறார்கள் என்பது நமக்குத் தெரிந்த விஷயம். ஆகவே எல்லாத் தனியார் ஆலைகளையும் கூட்டுறவு அமைப்பிலே கொண்டு வந்து, பாடுபடும் ஏழை விவசாயிகளுக்கு நல்ல விலை கிடைக்க ஆவன செய்யுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

நமது பாரதப் பிரதமர் இந்திரா காந்தி அவர்கள் இந்த நாட்டின் முன்னேற்றத்திற்காக பாங்குகளை தேசியமயமாக்கியதால் எத்தனையோ லோன்களை எல்லாம் கொடுத்துக் கொண்டு வருகிறார்கள். இன்றைக்கு தமிழகத்திலே வேண்டாத காரியங்கள் எல்லாம் நடந்து கொண்டிருக்கின்றன. நாம் எத்தனையோ சொசைட்டிகளை ஆரம்பித்தோம். நகரங்களில் வீடு கட்டும் சொசைட்டி ஆரம்பித்து இருப்பது போல், ஒவ்வொரு பஞ்சாயத்திற்கும் வீடு கட்டும் சொசைட்டிகளை ஆரம்பித்து கிராமங்களில் நல்ல வீடுகளைக் கட்டித் தர வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். அப்போதுதான் காந்தி கண்ட கனவு நனவாகும் என்பதைச் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். ஆகவே இந்த ஆண்டு நமது கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்களை அதற்கு நடவடிக்கை எடுக்குமாறு மிகவும் தாழ்மையுடன் கேட்டுக் கொள்கிறேன்.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

(பிற்பகல் 12-20)

அன்னை இந்திரா அவர்கள் ஆட்சியில் பேங்குகளை தேசியமயமாக்கி ஏழை மக்கள் பல வகையிலே லோன்களைப்பெற ஏற்பாடு செய்தார்கள். ஏழைகளுக்கு மாட்டு லோன், ஆட்டு லோன், இன்னும் பல விதமான லோன்களை கொடுத்து, ஏழை மக்கள் எப்படியாவது முன்னேற வேண்டுமென்ற நோக்கத்தோடு பேங்குகளையெல்லாம் தேசவுடைமையாக்கி, அந்த பேங்குகள் மூலமாக இன்றைக்கு படித்த பட்டதாரிகளுக்குக் கூட லோன்களை கொடுத்துக் கொண்டிருக்கிறார்கள். ஜனாதா பூசாரி அவர்கள் பேங்கு மேனேஜர்களைக் கூட மிரட்டி உள்ளார்கள். ஆனால் தமிழக ஆட்சியில் எத்தனை லோன்களை கொடுத்தாலும் ஏழைகள் முன்னேறப் போவதில்லை என்ற உண்மையைக் கூற

விரும்புகிறேன். காரணம் தமிழகத்தில் மக்களுக்கு எது எது வேண்டாததோ அதையெல்லாம் திராவிட இயக்கம் ஆட்சிக்கு வந்ததற்குப் பின்னால் மக்கள் மத்தியில் புகுத்தி விட்டார்கள். கள்ளுக் கடை, சாராயக் கடை, லாட்டரிச் சீட்டு, உலகத்திலே இல்லாத புதுமையான பல திட்டங்களைக் கொண்டு வந்து—மத்திய அரசு எது கொடுத்தாலும்—மது, மாது, சூது, லாட்டரி, சினிமா போன்றவைகளினால் நாடே குட்டிச் சுவராகிக் கொண்டிருக்கிறது. எந்த வகையிலும் நீண்ட காலத் திட்டங்கள் இல்லை என்பதைக் கூறி இனிமேலாவது நீண்ட காலத் திட்டங்களைக் கொண்டு வர வேண்டுமென்று நமது தமிழக அரசை மிகவும் பணிவோடு கேட்டுக் கொண்டு, இந்த கூட்டுறவு மானியக் கோரிக்கை மீது எனக்குப் பேச வாய்ப்பு கொடுத்ததற்கு தலைவருக்கு நன்றி கூறி விடை பெறுகிறேன், வணக்கம்.

**திரு. மா. சின்னராசு :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்களால் முன்மொழியப்பட்டு இருக்கிற கூட்டுறவு மானியத்தை வரவேற்று என்னுடைய சில கருத்துக்களைச் சொல்ல முன் வருகிறேன். கூட்டுறவு மானியத்தின் மீது கருத்துக்களைச் சொல்வதற்கு முன்னால், மாண்புமிகு பெரியவர் திருமலைச்சாமி கவுண்டர் அவர்கள் தன்னுடைய நல்ல நோக்கத்தை, மதுவாலும் மற்ற தீய பழக்கங்களாலும் இந்தியாவில் இருக்கிற அவர்களுடைய கட்சி ஆளுகின்ற 18 மாநில மக்கள் அழிந்து விடாமல் பாதுகாக்கிற முயற்சிகளை முதலில் எடுத்துக் கொள்ள வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

தமிழக கூட்டுறவு நிறுவனங்களின் மூலமாக கொடுக்கப்பட்ட கடன்கள் பல கோடி ரூபாயை நம்முடைய புரட்சித் தலைவருடைய அரசு நலிந்த விவசாயிகளின் நலனுக்காக தள்ளி வைத்திருப்பதை நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். பல காலம் தள்ளி வைக்கப்பட்ட கடனை, இன்று முழுவதும் அதனுடைய வட்டி, கூடுதல் வட்டியை ரத்து செய்து லட்சக்கணக்கான விவசாய குடும்பங்களின் வாழ்விலே ஒளியேற்றியதையும் அதற்காக இந்த நேரத்தில், அந்த விவசாயிகள் சார்பில், ஏழை எளியவர்கள் சார்பில், நிவாரணம்





பெற்றவர்கள் சார்பில், இதயபூர்வமான நன்றியை காணிக்கையாக்கிக் கொள்கிறேன். ஆனால் ஒன்றை மட்டும், தமிழக விவசாயிகளும், விவசாயிகளுக்காகப் பேசுகிற அரசியல் கட்சிக்காரர்களும் மறந்து விடுகிறார்கள். விவசாயச் சங்கங்கள் கூட மறந்து விடுகின்றன. தேசியமயமாக்கப்பட்ட வங்கிகளில் இன்று நாம் வாங்குகின்ற கடனுக்கு வட்டி கொடுக்கப்படுவது 12½ சதவீதம். ஆனால் ரிசர்வ் வங்கி எப்பொழுதெல்லாம் அந்த வட்டி வீதத்தை உயர்த்துகிறதோ, அப்போதெல்லாம் விவசாயிகள் வாங்குகிற கடனுக்கும் வட்டியை கூட்டுகிறது. அந்தக் கடனைப் பெற விவசாயிகள் கிணறு வெட்டினாலும், பயிர் சாகுபடி செய்தாலும், வேறு விவசாயப் பணிகளை, தேசியமயமாக்கப்பட்ட வங்கிகளிலிருந்து கடன் பெற்று செய்தாலும், அவர்கள் இயற்கைச் சீற்றத்தாலும், வறட்சியாலும் அல்லலுறுகின்றபோது நிவாரணத்தை நாம் அந்த வங்கிகளிடமிருந்து கேட்பதில்லை. ஆக, தேசியமயமாக்கப்பட்ட வங்கிகளிலிருந்து கடன் பெற்ற விவசாயிகளுக்கு மட்டும் நிவாரணம் தேவையில்லை என்பதோ அல்லது அங்கே கடன் வாங்கியவர்கள் கஷ்டத்திற்கு ஆளாகவில்லை என்பதையோ எத்தனைக் காலம் இங்கே மக்கள் மத்தியில் மூடி மறைக்கப் போகிறோம் என்பது எனக்குத் தெரியவில்லை. முழுவதும் வட்டியைத் தள்ளுபடி செய்யவில்லையென்றாலும் கூட, இவ்வளவு வறட்சியையும், பல்வேறு சோதனைகளையும் தாங்கிக் கொண்டிருக்கிற விவசாயிகளுக்கு குறைந்தபட்ச வட்டி வீதத்திலாவது கடன் கொடுக்கின்ற ஒரு நல்ல ஏற்பாட்டை மத்திய அரசாங்கம் தேசியமயமாக்கப்பட்ட வங்கிகளின் மூலம் அவர்களுக்கு செய்ய வேண்டும். குறைந்த வட்டியில் கடன் வழங்குகின்ற அந்தத் திட்டத்தின் காரணமாக பல்லாயிரக் கணக்கான கோடி பணப் புழக்கத்தைக் கொண்டிருக்கிற தேசியமயமாக்கப்பட்ட வங்கிகள், அதுவும் அரசுடைமையாக்கப்பட்ட வங்கிகள் எந்த விதத்திலும் நஷ்டத்திற்கு ஆளாகி விடாது. ஒரு குறிப்பிட்ட சதவீத விவசாயிகளுக்கு குறைந்தபட்சம் 4 சதவீத வட்டி என்று நஷ்டம் இல்லாத கடனாகக் கொடுத்தால் நிச்சயமாக அது வரவேற்கக்கூடிய ஒன்றாக இருக்கும். ஆகவே அதை இந்த நேரத்தில் வலியுறுத்திச் சொல்ல விரும்புகிறேன்.

தமிழகத்தில் இருக்கின்ற கூட்டுறவு இயக்கங்கள் மக்கள் இயக்கமாக பல காலம் பேணி பாதுகாக்கப்பட்டு வந்திருக்கிறது என்பதை நாம் அனைவரும் அறிவோம்.

[திரு. மா. சின்னராசு] [1987 ஏப்ரல் 11

1904 ஆம் ஆண்டில் Edward Law Committee -ன் சிபாரிசுகளின் அடிப்படையில் துவக்கப்பட்ட இந்த இயக்கம் இன்று வரை மற்ற மாநிலங்களை காட்டிலும் தமிழகத்தில் பல்வேறு வளர்ச்சியை கொண்டிருக்கிறது என்பதையும் அதிலும் குறிப்பாக மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவர் அவர்கள் ஆட்சிப் பொறுப்பை ஏற்றுக் கொண்டதற்குப் பின்னால் தான் இது ஏழை எளிய விவசாயிகளுக்காகவும், சாதாரண மக்களுக்காகவும் இயங்குகிற ஒரு மக்கள் இயக்கம் என்கிற உணர்வை மக்கள் பெற்றார்கள். அந்த வகையில் இது ஒரு Mass Movement என்று சொல்லக்கூடிய அளவுக்கு சட்டத்திலே சாதாரண மக்கள் இடம் பெற வழி இல்லாமல் கூட்டுறவு இயக்கங்களில், சங்கங்களில் பங்கு பெறுவதற்கு வாய்ப்பு இல்லாத நிலையை மாற்றி ஆதி திராவிட மக்களும், கூலி விவசாயிகளும், மிக சிறிய விவசாயிகளும் எந்த சங்கங்களாக இருந்தாலும் எந்த நிபந்தனையும் இல்லாமல் உறுப்பினராக ஆகிக் கொள்ளலாம் என்ற சலுகையை இயக்கத்தில் இருக்கிற புதிய சட்டத்தில் தந்து இந்த சட்டத்தினுடைய முழு நோக்கத்தையும் மக்கள் பெறுகிற அளவுக்கு, பயன் பெறுகிற அளவுக்கு மாற்றி இருப்பதை நான் இங்கே சுட்டிக் காட்டி வரவேற்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

Co-operative is an Association of like minded persons in furtherance of common good without profit motive—

என்று இதற்கு விளக்கம் அளித்தவர்கள் சொல்லியிருக்கிறார்கள். ஆனால் இன்று Association of like minded persons கிராம அளவிலோ, மாவட்ட அளவிலோ எவ்வளவு தூரம் நாம் பார்க்க முடியும் என்ற ஐயப்பாடு சமுதாயத்தில் இருந்து வருகிறது. இருந்தாலும் Like minded persons with social cause வேண்டும். தேவை என்பதை கூட்டுறவு இயக்கங்களின் மூலம் பிரச்சாரம் செய்து ஏழை எளியவர்கள் மத்தியிலே அடிப்பட்டவர்களை தேர்ந்தெடுத்து புதிய நிர்வாகத்தை அமைப்பதற்கு மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள் அரசில் நம்முடைய மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் எல்லா முயற்சிகளையும் மேற்கொண்டிருக்கிறார். ஆக அப்படி மக்களுடைய இயக்கமாக இது மாற வேண்டும் என்றால், தமிழகத்தைப் பொறுத்த அளவில் கிராம அளவில் இருக்கின்ற சங்கங்கள் அரசியல் ஆதிக்கங்களிலிருந்து விடுபட வேண்டும்.



1987 ஏப்ரல் 11] [திரு. மா. சின்னராசு]

இது Association of like minded persons என்று இருந்தது ஒரு காலத்தில். பிறகு Association of money minded people என்று இருந்தது. அதற்குப் பின்னால் இது Association of Power-mongers என்று இருந்தது. ஆக இந்த நிலை இன்று மாற்றப்பட வேண்டும் என்ற நல்ல நோக்கத்தோடு நம்முடைய புதிய சட்டம் பல்வேறு வழிமுறைகளைக் கொண்டிருக்கிறது. இந்தச் சட்டங்களை அமல் செய்கிறபோது அரசியலில் தீவிர ஆதரவு இல்லாதவர்களை, ஈடுபாடு இல்லாதவர்களை சங்கங்களுடைய தலைவர்களாக வருவதற்கு வழி வகைகளைச் செய்ய வேண்டும் என்று பணிவன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

தனக்கு ஒரு கண் போனாலும் எதிரிக்கு 2 கண்ணும் போக வேண்டும் என்ற அளவில் அரசியல் நிகழ்வுகள் தமிழகத்தில் நிகழ்ந்து கொண்டிருக்கின்றபோது இந்த ஊராட்சி மன்றங்களிலும், நகராட்சி மன்றங்களிலும், தேர்ந்தெடுக்கப் பட்ட தலைவர்களும், உறுப்பினர்களும் கட்சி சார்பில் வந்துவிட்ட பின்னால் நடந்து வருகிற நிலைமைகளை பார்க்கிறபோது நிச்சயமாக கூட்டுறவுத் துறை இவைகளை எல்லாம் தாங்கி எவ்வளவு வளர்ச்சியைப் பெற்று இருந்தாலும் அது நிலைத்து இருக்க முடியாது என்கிற உண்மையினை இங்கே கருத்தில் கொண்டு இதில் அரசியல் கலப்புக்கு இடம் இல்லை என்ற நல்ல முடிவை விதிகளின் மூலம் ஏற்படுத்தித் தரவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

நம்முடைய கூட்டுறவு இயக்கம், பொருளாதார வளர்ச்சிக்கும், தொழில் வளர்ச்சிக்கும், பல்வேறு முயற்சிகளை பல்வேறு நிறுவனங்களின் மூலம் இன்றைக்கு ஏற்படுத்திக் கொண்டிருக்கிறது. பொருளாதார வளர்ச்சியில் முக்கியமாக உழவர்களுடைய வளர்ச்சிக்கு நடுத்தர, ஏழை எளிய விவசாயிகளின் வளர்ச்சிக்கு என்று சொல்லக்கூடிய நிலவள வங்கிகளும், பல்வேறு பொருளாதார கூட்டுறவு நிறுவனங்களும் இயங்கி வருவதை நாம் பார்க்கிறோம். 'டான்ஃபெட்' இருக்கிறது. இதைப்போல பல்வேறு அமைப்புகள் தமிழகத்தில் இருக்கின்றன. ஒரே நோக்கத்திற்காக விவசாயிகளுடைய விளை பொருட்களுக்கு அவர்களுக்கு பொருளாதாரத்தில்

[திரு. மா. சின்னராசு] [1987 ஏப்ரல் 11

உதவுவதற்கு என்றும், விளை பொருட்களை விற்பதற்கு என்றும் பல நிறுவனங்கள் செயல்பட்டு வருகின்றன. ஆனால் ஒரே நோக்கத்திற்காக இவ்வளவு நிறுவனங்கள், அமைப்புகள் தேவையா என்பதை இன்று நாம் சிந்தித்துப் பார்க்க வேண்டும்.

(பிற்பகல் 12-30)

ஆக அந்த வகையில் நான் உதாரணத்திற்குச் சொல்வது, என்னுடைய கோவை மாவட்டத்தில் துடியலூர் விவசாய சேவா சங்கம் என்கிற ஒரு சங்கம் 'ட்யூகர்ஸ்' என்றிருக்கிறது. அது அந்த வட்டாரத்தில் இருக்கிற சுமார் 10 கிராமங்களுடைய உழவர்களின் அனைத்து தேவைகளையும் நிறைவேற்றக்கூடிய ஒரு சங்கமாக இருக்கிறது. அதிலே விவசாய விளைபொருளுக்கான இடுபொருளை உற்பத்தி செய்து கொடுப்பது மட்டுமல்ல, தேவையான இடுபொருளை வாங்கிக் கொடுக்கிறார்கள். நல்ல தரமான விதைகளை உற்பத்தி செய்கிறார்கள். வாங்கியும் கொடுக்கிறார்கள். மற்ற விவசாயிகளுக்கும் விற்பனை செய்கிறார்கள். விவசாயிகளுக்கான பூச்சிக்கொல்லி மருந்துகளையும் தயாரித்துக் கொடுக்கிறார்கள். ஆக விவசாயிகளுக்குத் தேவையான எல்லா பொருளாதார நடவடிக்கைகளையும் ஒரே சங்கத்தின் கீழ் அமைந்திருக்கிற ஒரு சங்கம் அந்தத் துடியலூர் சேவா சங்கம் ஆகும். ஆக அதை முன்மாதிரியாகக் கொண்டு, ஒவ்வொரு வட்டாரத்திற்கும், ஒவ்வொரு பிளாக், யூனிட்டிற்கும் அதுபோன்று ஒரு சங்கத்தை நிறுவி, அந்தச் சங்கம் அந்த வட்டாரத்தில் இருக்கிற எல்லா விவசாயிகளுக்கும், ஆரம்ப கிராம கூட்டுறவுச் சங்கமாக சகல காரியங்களையும் மேற்கொள்ளும் என்கிற உத்தரவாதத்தைத் தந்து, அந்த அமைப்பு மாவட்ட ஒன்றியமாகவும், மாநில இணையமாகவும் ஆக மூன்று பணிகளில் எல்லா கூட்டுறவு அமைப்புகளும் இணைக்கப்பட்டு சிறந்த சேவையை பல்வேறு மக்களுக்கு பயனுடையதாக ஆக்க வேண்டுமென்று என்னுடைய எண்ணத்தை இங்கே சொல்ல விரும்புகிறேன்.

இன்று விவசாயிகளுக்காகச் செய்து வரும் நன்மைகளில் மிக முக்கியமாக பாராட்டத்தக்கது அவர்கள் அளித்த நிவாரணம், வறட்சிக் காலத்தில் நம் விவசாயிகளுக்கு அது ஒரு



1987 ஏப்ரல் 11] [திரு. மா. சின்னராசு]

வரப்பிரசாதமாக அமைந்திருக்கிறது. கொடுக்கப்பட்ட கடனில் அசலை மட்டும் கட்டினால் போதும் என்ற சலுகை வழங்கப்பட்டு, விவசாயிகள் பலர் அதைக் கட்டியிருந்தாலும்கூட, கட்ட வேண்டுமென்ற நல்ல எண்ணமுடைய விவசாயிகள்கூட, இன்றைக்கு இருக்கின்ற சூழ்நிலையில் கட்ட முடியாமல் இருக்கிறார்கள். கட்ட வேண்டுமென்று எண்ணம் இருக்கிறது. அரசுடன் ஒத்துழைக்க வேண்டுமென்று நல்ல நோக்கம் இருக்கிறது. இருந்தாலும் கட்டுவதற்கு வழி இல்லை. பாதி அசல் தொகையைத் தருவதற்கான வாய்ப்பில்லை என்கிற காரணத்தால், வறட்சி நிலையைக் கருத்தில் கொண்டு, ஏற்கனவே கொடுக்கப்பட்ட சலுகையை இன்னும் சில மாதங்கள் நீட்டித்துக் கொடுப்பதன் மூலம் அந்த விவசாயிகளுக்கு உதவுவதோடு மட்டுமல்லாமல், நிலுவையிலுள்ள கடன்களை மேலும் வசூலிப்பதற்கு வாய்ப்பிருக்கிறது என்பதை மாண்புமிகு அமைச்சருடைய மேலான கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

1985-86-ல் ஒரு குறிப்பிட்ட காலத்திற்கு மட்டும் 1—7—1985 முதல் 31—3—1986 வரை கட்டிய வட்டி, ஆகாத வட்டி மட்டும் தள்ளுபடி செய்யப்பட்டிருக்கிறது. என்னுடைய தொகுதியில் கூட, சில விவசாயிகள் 1—7—1985-க்கு முன்னால் 5, 10 நாட்களுக்கு முன்னால், தங்களுடைய நிலத்தைக் கூட விற்று, முழு அளவில் அசலையும், வட்டியையும் கட்டியிருக்கிறார்கள். நாம் கொடுத்திருக்கின்ற நிவாரணத்தில், அவர்களுக்குக் கட்டிய வட்டியைத் திருப்பிக் கொடுக்கக்கூடிய வாய்ப்பில்லை. ஆக ஆயிரக்கணக்கில் நல்ல எண்ணத்தோடு அரசாங்கத்திற்குக் கூட்டுறவுக் கடனுக்கு திருப்பிக் கொடுத்த அந்த விவசாயிகளுக்கு குறைந்தது 1981-லிருந்து கட்டிய வட்டியையாவது, அசலையும் திருப்பிக் கொடுக்கக் கூடிய அளவில் நாம் இந்த நிவாரணத்தில் மாறுதல் செய்து தர வேண்டுமென்று இந்த நேரத்தில் நான் கேட்டுக் கொள்கிறேன்.

சமுதாயத்தினுடைய ஒருமித்த வளர்ச்சிக்காக, இந்தக் கூட்டுறவுத் துறை பயன்பட வேண்டுமென்ற நல்ல நோக்கத்தில் 1958 ஆவது ஆண்டு நம்முடைய தேசிய வளர்ச்சிக் கௌன்சில் எடுத்து வைத்திருக்கின்ற தீர்மானத்தின் அடிப்படையில் கூட்டுறவு இயக்கம் மக்களுடைய இயக்கமாக மாற வேண்டும்.

[திரு. மா. சின்னராசு] [1987 ஏப்ரல் 11

The Co-operative Society should be organised on the basis of village community as the primary unit and that the responsibility and initiative for the social and economic development at the village level should be placed on the Village Co-operative Panchayats என்ற நோக்கோடு வெளிப்படுத்தியிருக்கிறார்கள். ஆக அந்த வகையில் அமையவிருக்கின்ற, கொண்டுவர இருக்கின்ற புதிய சட்டமும், விதிகளும் முழு அளவில் ஆரம்ப கிராமக் கூட்டுறவு சங்கங்களுக்கு சுதந்திரம் அளிப்பதாக இருக்க வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

அதுபோன்று இன்றைக்கு நம்முடைய துறையில் இவ்வளவு நிறுவனங்களை நடத்தி வருகிற கூட்டுறவுத் துறையின் பல்வேறு அமைப்புகளில் தேர்தல் நடக்காத காரணத்தினால், அதிகாரிகளே, தனி அதிகாரிகளாக இருந்து, கோவை சிந்தாமணி போன்ற மிகப் பெரிய நிறுவனங்களில் கூட ஒரே அதிகாரி தனித்து இருந்து, அரசினுடைய கொள்கைகளை சில நேரங்களில் நிறைவேற்ற முடியாத சூழ்நிலை இருக்கிறது. ஆகவே தேர்தல் நடக்கிற வரை இதுபோன்று மாவட்ட அளவில் இருக்கிற நிறுவனங்களுக்குக் குறைந்தபட்சம் அரசியல்வாதிகள் இல்லையென்றாலும்கூட, பொது மக்கள் பிரதிநிதிகளையாவது கொண்டு, அங்கே ஒரு ஆலோசனைக் குழு உறுப்பினர்களாக நியமித்து, அங்கே நல்ல பணிகளுக்கு ஆலோசனை சொல்வதற்கான வாய்ப்பை ஏற்படுத்தித் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதுபோன்று பல்வேறு துறைகளிலே இன்றைக்கு சட்டமன்ற 'கன்சல்டேடிவ் கமிட்டிகள்' இருக்கின்றன. கூட்டுறவுத் துறை என்பது ஒரு முக்கியமான துறை. மக்களுடைய அன்றாட வாழ்க்கையில் பல்வேறு நிலையில் ஈடுபட்டிருக்கின்ற துறை. ஆகவே இந்தத் துறையினுடைய கொள்கை மாறுதல் பற்றியும், துறை எடுத்திருக்கின்ற புதிய முயற்சிகள் பற்றியும், இருக்கின்ற குறைகளைக் களைவதைப் பற்றியும் குறைந்தபட்சம் நம்முடைய சட்டமன்ற 'கன்சல்டேடிவ் கமிட்டி' ஒன்றை நிறுவி, அதன் மூலம்—இந்த கூட்டுறவுத் துறை வளர்ந்து வருகின்ற துறை, 1904-லிருந்து பல்வேறு கமிஷன்கள் மூலமும், கமிட்டி அறிக்கைகள் மூலமும் பல்வேறு மாறுதல்களை ஏற்படுத்திக்



1987 ஏப்ரல் 11] [திரு. மா. சின்னராசு]

கொண்டிருக்கின்ற இந்தத் துறைக்கு—ஆலோசனை வழங்க வாய்ப்பாக இருக்கும் என்று இந்த நேரத்திலே நான் சுட்டிக் காட்ட விரும்புகிறேன்.

இறுதியாக நம்முடைய தமிழ்நாடு கூட்டுறவு நிலவள வங்கி இன்று கிராம அளவிலே மக்களுக்கு பயன்பட வேண்டிய வங்கி கிராம மக்களுக்குத் தேவையான கடன் கொடுக்க முடியாமல் முடங்கிக் கிடக்கின்றது. அவர்கள் கடனை வசூல் செய்து கடன் வழங்குகின்ற தன்மையை வரையறுக்கப்பட்ட நியதிக்குள் வரவில்லை என்றாலும் கூட கடன் பெற்றவர்கள் கட்ட மறுக்கிறார்கள் என்ற காரணத்தினால், இனிமேல் கடன் வாங்கி வாழ வேண்டிய விவசாயிகளுக்கு கிடைக்க வேண்டிய நன்மையை நாம் தடுக்காமல் உரிய கடன்களை நிலவள வங்கி கொடுப்பதற்கு தகுந்த ஏற்பாடுகளைச் செய்ய வேண்டும் என்று பணிவோடு கேட்டுக் கொள்கிறேன். அதைப்போலவே நம்முடைய விற்பனை இணையம். பல்வேறு பொருள்களை வாங்கி விற்கின்ற நேரங்களில் விலை கூடும் தன்மை இருக்கிறது. நாம் விவசாயிகளுக்கு நியாயமான விலையை கொடுத்து பல்வேறு கூட்டுறவு நிறுவனங்களுக்கு நியாயமான விலையிலே கன்சூமர் களுக்குப் பொருள்கள் போய்ச் சேர வேண்டும் என்பதற்காக ஏற்படுத்தப்பட்ட நிறுவனம், இன்று விலை ஏற்றத்திற்கு காரணமாக இருந்து கொண்டிருக்கிறது என்பதை ஆய்ந்து அதைக் களைவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

குறிப்பாக கோவை மாவட்டத்தில் இருக்கின்ற மத்திய கூட்டுறவு வங்கி லட்சக்கணக்கான ரூபாயை வைப்பு நிதியாக தேசியமயமாக்கப்பட்ட வங்கியிலே வைத்திருக்கிறது. தன்னிடம் இருக்கின்ற நிதியை இன்னும் சிறப்பாக சிறு தொழில்களுக்கும், ஏழை எளியவர்களுக்கான வியாபாரத்திற்கும் கொடுப்பதற்கு அங்கே இருக்கின்ற மற்ற கிளை வங்கிகள் மூலம் தீவிரமான ஏற்பாடுகளைச் செய்ய வேண்டும். பல்வேறு ஏற்பாடுகளை, தொழில் வளர்வதற்கான ஏற்பாடுகளைச் செய்து இருக்கிறோம் என்று சொல்லி இருந்தாலும், பரவலாக கிராம மக்களுக்கு இந்தக் கூட்டுறவு வங்கி மூலம், மத்திய வங்கியானாலும் சரி, ஸ்டேட் கோ-ஆப்பரேட்டிவ் பேங்கானாலும் சரி இதன் மூலம் தொழில் தொடங்குவதற்கு

[திரு. மா. சின்னராசு] [1987 ஏப்ரல் 11

கடன் கொடுக்கப்படவில்லை. அதைக் கேட்கப் போனால் பல்வேறு காரணங்களைச் சொல்கிறார்களே ஒழிய, 5,000-லிருந்து 25,000 ரூபாய் வரை கொடுக்கின்ற ஏற்பாட்டை செய்யவில்லை. அதைத் தீவிரப்படுத்த வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

இந்தத் தொழில் கடன் வழங்குவதற்காக ஒவ்வொரு வங்கியும் ஒரு குறிப்பிட்ட தொகையைக் கட்டாயமாக செலவிட வேண்டும் என்கின்ற முறையை ஏற்படுத்த வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். இந்த பயிர் இன்ஷூரன்ஸ் திட்டம். இது மிக நல்ல திட்டம். ஆனால் 1985-86-ல் 38,527 நபர்கள் தான், விவசாயிகள் தான் இந்தத் திட்டத்திலே பயன் பெற்றிருக்கிறார்கள். தமிழ்நாடு முழுவதும் பயன் பெற்றவர்கள் 38,527 விவசாயிகள் தான். இது மிகக் குறைவு. ஆகவே எல்லா விவசாயிகளும் இந்தக் கூட்டுறவு பயிர் இன்ஷூரன்ஸ் திட்டத்திலே வருகின்ற அளவிற்கு இதை விரிவாக்க வேண்டும் என்று கேட்டு இந்தத் திட்டத்தை தென்னை, மஞ்சள் போன்ற பணப் பயிர்களுக்கும் விரிவாக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். பொய்த்த கிணறுகளுக்காக கோவை மாவட்டத்திலே பல இடங்களில் உதவி கிடைக்கவில்லை. முழு அளவு 150 அடி, 200 அடி தோண்டி பொய்த்துவிட்ட கிணறுகளுக்கு எல்லா ஆதாரங்களைக் காட்டியும் அவர்களுக்கு உதவி கிடைக்காமல், நிவாரணம் கிடைக்காமல் இருக்கிறது என்பதை இந்த நேரத்திலே சுட்டிக்காட்டி இந்த மானியக் கோரிக்கையில் கொடுக்கப்பட்டிருக்கின்ற வளர்ச்சித் திட்டங்களினால் நலிந்த சமுதாய மக்களுக்கு ஏற்பட்டிருக்கின்ற பொருளாதார மேம்பாடுகளை வரவேற்று என்னுடைய உரையை முடிக்கின்றேன். வணக்கம்.

திரு. எஸ். என். இராமசாமி: மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, நிதியமைச்சர் அவர்களால் கொண்டு வரப்பட்டிருக்கின்ற இந்தக் கூட்டுறவு மானியக் கோரிக்கையின் மீது நான் சார்ந்துள்ள இந்திய காங்கிரஸ் சார்பில் சில கருத்துக்களைச் சொல்ல விழைகின்றேன். இந்த 'கூட்டுறவே நாட்டுயர்வு' என்ற அமைப்பில் தமிழகத்தில் எல்லா மாவட்டங்களிலும் கூட்டுறவு நல்ல முறையில் இயங்கி வருகின்றது. ஆனால் அந்த அமைப்புகளுக்கு இன்னும் ஸ்பெஷல் அதிகாரிகளை சில இடத்தில் நியமித்து இருக்கிறீர்கள். அவைகள் நல்ல முறையிலே



1987 ஏப்ரல் 11] [திரு. எஸ். என். இராமசாமி]

செயல்படுவதில்லை. சில தடங்கல்கள் இருக்கின்றன. ஆகவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இந்தக் கூட்டுறவு அமைப்புகளுக்கு உடனடியாக தேர்தலை நடத்த வேண்டும். அப்படித் தேர்தலை நடத்துவதன் மூலமாகத்தான் கிராம மக்கள் இந்தக் கூட்டுறவு மூலம் நல்ல பயன் பெற முடியும் என்ற எண்ணம் எங்களுக்கெல்லாம் ஏற்பட்டுள்ளது. அதே நேரத்தில் சில கூட்டுறவு வங்கிகள் நல்ல முறையிலே செயல்படுகின்றன. நாசரேத் கூட்டுறவு வங்கி மிகவும் சிறப்பான முறையில் நடைபெற்று அதிக லாபங்களைத் தந்து கொண்டிருக்கிறது.

(பிற்பகல் 12-40)

ஆனால், அந்த வங்கிகளிலே மக்களுக்கு, தங்கத்திற்கு அடகு வகையில் 5,000 ரூபாய்க்குத் தான் ஒரு ஈடு வைக்கிறார்கள். ஆனால் ஒரு ஈட்டின் பெயரால் கிராம விவசாயிகளுக்கு 10,000 ரூபாய் வைக்க வேண்டும் என்று இந்த நேரத்தில் மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன்.

அதேபோன்று, அந்தப் பகுதியில் இருக்கக்கூடிய விவசாயிகள் விவசாய உற்பத்தி செய்யும் அனைத்துப் பொருட்களையும், வாழைக்காய், வற்றல், பருத்தி போன்றவைகளை இந்தக் கூட்டுறவுச் சங்கங்கள் மூலமாக இருப்பு வைத்து, கொள்முதல் அடிப்படையில் நாம் இருப்பு வைத்து அவர்களுக்கு, அந்த விளைவிக்கக்கூடிய பொருட்களுக்கு பாதுகாப்பு அனுமதி அளிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)

சாத்தான்குளத்தில் கருப்புக்கட்டி சொசைட்டி ஒன்று கூட்டுறவு அமைப்பிலே நல்ல முறையிலே செயல்படுவதாக இருந்து வருகிறது. ஆனால் அங்கே இருக்கக்கூடிய மெம்பர்கள் அதனை சரியான முறையில் செயல்படுத்தாமல் அந்தப் பகுதிகளிலே இருக்கக்கூடிய மக்கள் உற்பத்தி செய்யக்கூடிய கருப்பட்டியை, கோவில்பட்டி பகுதிகளுக்குக் கொண்டு போகிறார்கள். அதன் காரணமாக உற்பத்தி செய்யக்கூடிய கருப்பட்டிகளுக்குச் சரியான

[திரு. எஸ். என். இராமசாமி] [1987 ஏப்ரல் 11

விலை கிடைப்பதில்லை. ஆகவே, அந்தச் சங்கத்தைத் திரும்பட நடைபெறச் செய்ய வேண்டும் என்று இந்த நேரத்திலே அமைச்சர் அவர்களை நான் கேட்டுக் கொள்கிறேன்.

கூட்டுறவு அமைப்பால் பனைப் பொருட்கள் அதிகமாகச் செயல்படக் கூடிய வகையிலே, அந்தப் பகுதியிலே பனைகள் இருந்துவருவதன் காரணமாக, எனது தொகுதியைப் பொறுத்தவரையில், பாய் முடைவோர் கூட்டுறவுச் சங்கம்—பனைப் பொருள்கள், அனைத்துக் கூட்டுறவுச் சங்கங்கள் மூலமாக செய்வதற்கு அந்தத் தொகுதியைத் தேர்ந்தெடுத்து அங்கே கூட்டுறவு அமைப்பில் பனைப் பொருள் செய்வதற்கு ஏற்பாடு செய்து தர வேண்டும் என்று இந்த நேரத்தில் கேட்டுக் கொள்கிறேன்.

அதுபோன்று, நரசரேத் கூட்டுறவு நூல் மில் ஒன்று கடந்த காங்கிரஸ் அரசாங்கம் இருந்த காலத்தில், சிலோன் அகதிகளுக்காக ஏற்பாடு செய்யப்பட்டது. அந்த மில் நல்ல முறையில் செயலாற்றி வருகிறது. ஆனால் அதிலே 12,500 கதிர்கள் தான் தற்போது இயங்கி வருகின்றன. ஆகவே, அங்கே அந்த 12,500 கதிர்களை இன்னும் 12,500 கதிர்கள் கூட்டுவதற்கு வாய்ப்பாக கட்டிடங்களும், இடங்களும் இருப்பதன் காரணமாகவும், அந்தப் பகுதி பின்தங்கிய பகுதியாக இருப்பதன் காரணமாகவும் அந்த நூல் மில்லில், 12,500 கதிர்களைக் கூட்டி, அங்கே வேலையற்றவர்களுக்கு வேலை கொடுக்க வாய்ப்பாக உடனடியாக அரசு ஏற்பாடு செய்து தர வேண்டும் என்று இந்த நேரத்தில் கேட்டுக் கொள்கிறேன்.

கூட்டுறவுச் சங்கம், கடன்களை இன்று ஓரளவு நிறுத்தி வைத்திருக்கிறது. ஆனால் இருக்கப்பட்ட கடன்களை வசூல் செய்யும்போது அங்குள்ள விவசாயிகளுக்கு வட்டியைக் குறைத்து வாங்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

மேலும், மீனவர் கூட்டுறவுச் சங்கங்கள் சரியான அமைப்பில் இயங்காமல், அந்தப் பகுதியிலே அதிகமா மீனவர்களுக்கு மீன் பிடிப்பதிலே தகராறுகள் இருந்து வருகின்றன. ஆகவே, அந்த மீனவர் கூட்டுறவுச் சங்கங்களை நல்ல முறையிலே இயங்க வைத்து அவர்களுக்கு வலை, இன்ஜின் போன்றவைகளை



136519 ...600 001

1987 ஏப்ரல் 11] [திரு. எஸ். என். இராமசாமி]

கூட்டுறவுச் சங்கங்கள் மூலமாக வழங்க வேண்டும் என்று இந்த நேரத்தில் கேட்டுக் கொள்கிறேன்.

கூட்டுறவுத் துறையில் பணி புரிபவர்களை அரசு நிரந்தரப் படுத்த வேண்டும். அங்கே நிரந்தரப்படுத்தப்பட்டவர்களுக்கு—அரசு ஊழியர்கள் இறந்தால் ஒரு குடும்பத்திற்கு 10 ஆயிரம் ரூபாய் என்று கொடுக்கக்கூடிய அளவுக்கு இருப்பது போல், கூட்டுறவு பாங்குகளிலே பணி புரிபவர்களை நிரந்தரமாக்கி, அவர்கள் இறந்தால் அங்கே 10,000 ரூபாய் வழங்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அதுபோல், வறட்சி அதிகமாக இருப்பதன் காரணமாக, கிணறுகளுக்கு லோன்கள் கூட்டுறவுச் சங்கங்கள் மூலமாக வழங்கப்படுகின்றன. ஆனால் அந்தக் கிணறுகள் தோண்டும் போது, அந்தக் கடன்கள் கொடுப்பதில் நிறுத்தி வைத்துக் கொடுக்கிறார்கள். ஆகவே, அந்தக் கிணறுகள் தோண்டுவதிலே சுணக்கம் ஏற்படுகிறது. ஆகவே, ஒரு நபருக்கு கொடுக்க வேண்டிய கடனை எந்த அளவுக்கு அரசாங்கம் பாஸ் செய்து இருக்கிறதோ, அந்தக் கடனை இரண்டு முறையாக, இரண்டு தவணையாக கொடுத்து, விவசாயிகளுக்கு நன்மை தேடித் தர வேண்டும் என்று கேட்டு, வாய்ப்புக்கு நன்றி கூறி அமர்கிறேன். வணக்கம்.

*திரு. இரா. சண்முகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு டாக்டர் நாவலர் அவர்களால் கொண்டு வரப்பட்டிருக்கும் கூட்டுறவுத் துறை மானியக் கோரிக்கையை ஆதரித்துப் பேச வாய்ப்பு அளித்தமைக்கு நன்றி கூறி என்னுடைய கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன்.

கூட்டுறவுத் துறையானது இன்றைக்கு நம்முடைய மாநிலத்தில் சிறப்பாக நடைபெற்றுக் கொண்டிருக்கிற ஒன்றாக விளங்கிக் கொண்டிருக்கிறது. கூட்டுறவுத் துறை விவசாயிகளுக்கும் வேளாண்மைப் பெருங்குடி மக்களுக்கும், விவசாயக் கூலி வேலை செய்பவர்களுக்கும் ஏற்ற நன்மைகளை காலத்தில் அளிக்கின்ற அமைப்பாக விளங்கிக் கொண்டிருப்பதை நான் இந்த நேரத்தில் சுட்டிக்காட்டிப் பாராட்டக் கடமைப் பட்டிருக்கிறேன். அந்த வகையில் இந்த நாட்டை ஆண்ட

[திரு. இரா. சண்முகம்] [1987 ஏப்ரல் 11

கொண்டிருக்கிற மரியாதைக்குரிய டாக்டர் புரட்சித் தலைவர் அவர்கள் விவசாயிகளுடைய கஷ்டங்களையெல்லாம் அறிந்து—அவர்கள் நீண்ட நாட்களாகப் பெற்றிருந்த கடனைத் திருப்பிச் செலுத்த முடியாமல் போய் வட்டியும் அபராத வட்டியும் கூடி, அந்தச் சுமையின் காரணமாகக் கடந்த 10 அல்லது 12 ஆண்டுகளாக எதையும் திருப்பிக் கட்டாமல் நிறுத்தி வைத்திருந்தார்கள். அப்படிப்பட்ட கடன்களையெல்லாம் திரும்பப் பெற்று நலிவுற்ற சங்கங்களையெல்லாம் மீண்டும் அவைகள் மேற்கொண்டிருந்த பழைய தொழிலைத் தொடர்ந்து செய்து விவசாயிகளுக்குச் சேவை செய்ய வேண்டும் என்ற நோக்கத்தோடு அந்தக் கடன்களுக்குரிய வட்டியையும் அபராத வட்டியையும்—அதாவது சுமார் 200 கோடிக்கும் மேலாக—தள்ளுபடி செய்து தந்திருக்கிறார்கள். அந்தப் பலனைப் பெற்ற விவசாயிகள் இன்றைக்கும் மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்களைப் பாராட்டிக் கொண்டிருக்கிறார்கள்.

அவ்வாறு வட்டியையும், அபராத வட்டியையும் தள்ளுபடி செய்து சலுகை அளித்தும் கடன் தொகையைக் கட்டாமல் இருக்கிற விவசாயிகளைப் பொறுத்தவரையில்—அவர்கள் நிலுவையாக வைத்திருக்கிற தொகையை—தற்போது ஏற்பட்டிருக்கிற வறட்சியின் காரணமாக வசூல் செய்வதைச் சற்று தள்ளி வைக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். கடன் தொகைகளை உரிய காலத்தில் வசூலிக்க வேண்டும் என்று சொன்னாலும் கூட தற்போதைய வறட்சி காரணமாக இரண்டொரு மாதங்களுக்காவது சலுகை அளித்து வசூலைத் தள்ளி வைக்க வேண்டுமென்று நான் இந்த நேரத்தில் கேட்டுக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அடுத்து கூட்டுறவு சேவைச் சங்கங்கள் மற்றும் கூட்டுறவு வங்கிகள் எல்லாம் விவசாயிகளுக்கு உரிய காலத்தில் வேளாண்மைக்குப் பயன்படுத்துகிற உரங்களையும் அதோடு அவர்களுக்கு "கேஷ் போர்ஷன்" என்ற கையிலே கொடுக்கிற பணத்தையும், அவர்கள் கடன் தொகையைக் கட்டிய பிறகு 3 அல்லது 4 நாட்களுக்குள் கொடுத்துவிட வேண்டும். குறைந்த பட்சம் உரங்களை மட்டுமாவது கொடுத்து விட்டு ஒரு மாத கால அவகாசத்திற்குப் பின்னாலே கூட அவர்களுக்குக் கேஷ் போர்ஷன் என்கிற தொகையைக் கொடுத்தால் அவர்கள்



1987 ஏப்ரல் 11] [திரு. இரா. சண்முகம்]

பெற்றுக் கொள்ளத் தயாராக இருக்கிறார்கள். இன்னும் உரங்களை உரிய காலத்தில் கொடுப்பார்களானால் அவர்கள் எடுத்துக் கொண்டு போய் வைத்து விட்டு விவசாயம் செய்யும்போது அந்த நேரத்தில் போட்டு நடவு நட வாய்ப்பாக இருக்கும். அதுமட்டுமல்ல. விவசாய சேவைச் சங்கங்களிலும் விவசாய வங்கிகளிலும் விற்கப்படுகிற உரங்கள் தனியார் கடைகளில் விற்கப்படுகிற உரங்களின் விலையைக் காட்டிலும் அதிகமான விலைக்கு விற்கப்படுகின்ற சூழ்நிலை இருக்கிறது. இதற்குக் காரணம் தனியார்கள், அவர்கள் உரங்களை வாங்குகிறபோது அவர்களுக்கு தள்ளுபடி செய்து கொடுக்கிற தொகையைக் கணக்கில் கொண்டு விவசாயிகளுக்கு மிகக் குறைந்த லாபம் மட்டும் வைத்து விற்றுவிடுகிறார்கள். ஆனால் கூட்டுறவு நிறுவனங்களில் அப்படி விற்க முடியாத நிலை இருக்கிறபோது அதற்குரிய பணத்தை விவசாயிகளிடம் வாங்குகிற காரணத்தால் முழுமையாக எல்லா விவசாயிகளும் கூட்டுறவுத் துறையில் உரங்களை வாங்க முடியாத நிலையில் இருக்கிறார்கள். விவசாயிகளிடம் பணம் இல்லாத அவல நிலை இருக்கிறபோது—அவர்கள் வேறு வழியில் பணம் பெற முடியாத போது மட்டும்தான்—கூட்டுறவு நிறுவனங்களில் பூச்சி மருந்து முதலும் உரங்களைப் பெறுகிறார்கள். எனவே இந்த நிலைமையைத் தவிர்த்து தனியார் கடைகளில் விற்கப்படுகிற அதே விலையில்தான் கூட்டுறவு அமைப்புகளிலும் உரங்களை விற்க வேண்டுமென்று அரசு ஆணை பிறப்பிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அதுமட்டுமல்ல. கூட்டுறவுத் துறையில் பணியாற்றுகிற பல எழுத்தர்கள் கூட்டுறவுத் துறையில் பயிற்சி பெற்று வேலை வாய்ப்பகங்களில் தங்கள் பெயர்களைப் பதிவு செய்து கொண்ட பிறகுதான் வங்கிகளிலும் சேவை சங்கங்களிலும் நியமிக்கப் பட்டிருக்கிறார்கள். அவ்வாறு அவர்கள் கூட்டுறவு அமைப்புகளில் எழுத்தராக அமர்த்தப்பட்டால் அவருடைய பதிவு எண்ணை, வேலைவாய்ப்பு நிலையங்களில் எடுத்து விடுகிறார்கள். 8 அல்லது 10 ஆண்டுகளுக்குப் பிறகும் கூட அவர்களுக்கெல்லாம் ஒரு ஒட்டுமொத்தமான சம்பளமாக ரூ. 200 அல்லது ரூ. 250 கொடுத்துவிட்டு வேலை வாங்கும் நிலைமைதான் இருக்கிறது. ஆனால் அவர்களைச் செயலாளர்களாகப் போடுவதற்கு நேர்முகத் தேர்வுக்கு அழைக்கும்போது இவர்களுக்கு அந்த

வாய்ப்பு அளிக்கப்படுவதில்லை. அதன் காரணமாக அவர்கள் எப்போதுமே எழுத்தர்களாகவே இந்தக் குறைந்த சம்பளத்தில் பணியாற்ற வேண்டிய நிலைமை ஏற்படுகிறது. எனவே அதைத் தவிர்த்து அவர்களுக்கு முதலிடம் தந்து செயலாளர்களாக நியமிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, தனியதிகாரிகள் என்ற பதவிக்கு 900 பேர்களை நியமித்திருக்கிறார்கள். கடந்த 2 ஆண்டுக் காலமாக முறையாக இருக்க வேண்டிய போர்டு இல்லாமல் இருக்கிற காரணத்தால் தனியதிகாரிகள் மூலமாக தீர்மானம் போட வேண்டும். எனவே இதற்கும் முறையாகப் பயிற்சி பெற்றவர்களை நியமனம் செய்திருக்கிறோம்.

(பிற்பகல் 12-50)

இப்போது அவர்களையெல்லாம் வேலையிலேயிருந்து நீக்கி விடுவதாக, அவர்களை அந்தப் பணியிலிருந்து பணி நீக்கம் செய்வதாகக் கூறுகிறார்கள். ஆகவே பல இடங்களில் காலியாகவுள்ள செயலாளர் பதவிகளில், சேவை சங்கங்களில், கூட்டுறவு வங்கிகளில் எல்லாம் அவர்களை நியமனம் செய்யும்படி அன்போடு கேட்டுக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதுமட்டுமல்லாமல் அந்த கிராம கூட்டுறவு சேவை சங்கங்கள் மூலமாக காய்கறிகளை எல்லாம் சத்துணவு கூடங்களுக்கு சப்ளை செய்கிறார்கள். சத்துணவுக் கூடங்களுக்குச் சப்ளை செய்கிறபோது தரமான காய்கறிகளாக இல்லை என்ற புகார் இருப்பதால் தனியாக அதற்கென்று இருக்கின்ற சி.ஓஸ். மற்றும் தணிக்கை அதிகாரிகள் மூலமாக அவர்களே நேரிடையாகப் பார்த்து, அதற்கென்று சரியான பதிவேடுகள் முறையாக வைத்திருக்கிறார்களா, எங்கே வாங்குகிறார்கள், உற்பத்தியாளர்களின் விவசாயிகளிடம் வாங்குகிறார்களா என்பதையெல்லாம் விலை அட்டவணையோடு பார்த்தால் நிச்சயமாக சத்துணவுக் கூடங்களுக்கு நல்ல காய்கறிகள் போக வாய்ப்புக் கிட்டும். ஆகவே அந்த வகையிலே தணிக்கை அதிகாரிகள் தணிக்கை செய்வதற்கு அறிவுரை வழங்க வேண்டும் என்று சொல்லிக்கொள்ளக் கடமைப் பட்டிருக்கிறேன்.





அதுமட்டுமல்லாமல், அந்த நியாய விலைக் கடைகளில் அரிசி, மண்ணெண்ணெய், சர்க்கரை போன்ற நான்கைந்து அத்தியாவசியமான பொருள்களை மட்டும் இப்போது கொடுத்துக் கொண்டிருக்கிறோம். இதற்கு முன்பு 16 அத்தியாவசிய பொருள்களை அந்தப் பகுதியிலே வாழ்ந்து கொண்டிருக்கிற ஏழையெளிய மக்களுக்கு வழங்கி வந்தோம். அப்படி நியாய விலைக் கடைகளில் விற்கப்படாமல் போகிற அதிகமான எண்ணிக்கையில் உள்ள பொருள்கள் புழுத்துப் போன வகையில் நஷ்டம் ஏற்படுகிறது என்ற காரணத்தால் சமையல் எண்ணெய், மண்ணெண்ணெய், அரிசி, சர்க்கரை போன்ற பொருள்களை மட்டும் இப்போது விநியோகம் செய்து கொண்டிருக்கிறோம். இதற்குக் காரணம், அங்கேயெல்லாம் ஒரு கிலோ, அரை கிலோ என்று வைத்துவிட்டு அதற்குக் கீழே வாங்க வாய்ப்பு இல்லாததுதான். விலையில் கூட வெளியே இருக்கும் விலையோடு ஒப்பிட்டுப் பார்க்கும்போது அதிகமாக இருக்கிற காரணத்தால், அவைகளை வெளியே தனியார் கடைகளிலேயே வாங்கிக் கொள்ளுகிறார்கள். ஆகவே நியாய விலைக் கடை என்று வைக்கும்போது ஒட்டு மொத்தமாக ஒரு 100 கிலோ 50 கிலோ என்று வாங்கி வைத்துவிட்டு, ஏழையெளிய மக்கள் எந்த அளவு கேட்டாலும், அதாவது 50 கிராம் என்றாலும் அந்த அளவிற்குக் கொடுக்கும் வாய்ப்பை உருவாக்கித் தர வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அரிசியை வாங்குகிறபோது யார், யார் குடும்ப கார்டுகளை வைத்திருக்கிறார்களோ அத்தனை பேரும் வாங்கிக் கொள்கிறார்கள். குறைந்தது 3 ஏக்கரும் அதற்கு மேலும் வைத்திருப்பவர்களுக்கு நியாய விலைக் கடைகளில் அரிசியை கொடுக்க வேண்டாம் என்று ஆணை பிறப்பிக்க வேண்டும். காரணம்—வசதி படைத்தவர்கள், 10 ஏக்கர், 20 ஏக்கர் என்று வைத்திருப்பவர்கள் கூட வேண்டுமென்றே போய் அந்த அரிசியை வாங்கி வந்து அவர்களுடைய வீட்டிலே வேலை செய்கிற பணியாட்களுக்கு சமைத்துப் போடுகிற வழக்கத்தை வைத்துக் கொண்டிருக்கிறார்கள். ஆகவே மூன்று ஏக்கருக்குக் குறைவாக வைத்துள்ளவர்களுக்கு, நிலமற்றவர்களுக்கு மட்டும் கொடுக்கும் வாய்ப்பை உருவாக்கித் தர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

மேலும் கூட்டுறவு சேவை சங்கங்களின் மூலமாக கொடுக்கிற கடன்களையெல்லாம் ஒவ்வொரு ஆண்டும் ஜூன் மாதத்தில்

[திரு. இரா. சண்முகம்] [1987 ஏப்ரல் 11

வசூல் செய்ய வேண்டும் என்று சொல்லிக் கொண்டிருக்கிறோம். ஜூன் மாதம் என்று வருகிறபோது—தை மாதத்தில் நல்ல அறுவடை கிடைத்தாலும், மழை பெய்து சுமாராக அறுவடை நடந்தாலும் அதற்கடுத்து தை மாதத்திற்குப் பிறகு வறட்சியாக இருக்கின்ற காரணத்தால், ஒவ்வொரு ஆண்டும் மழை இல்லாமல் வறட்சி நேரமாக இருக்கிறது. வறட்சி நேரத்தில் வசூலுக்கு வருகிறார்கள். இந்த வசூலை நிறுத்த வேண்டும் என்று வாடிக்கையாக சொல்லுகிற நிலைமையில், எதிர்க்கட்சி நண்பர்கள் அத்தனை பேரும் இதையே வாடிக்கையாக வைத்துக் கொண்டு ஒவ்வொரு ஆண்டும் கடனை தள்ளுபடி செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொண்டிருக்கிறார்கள். அப்படி கேட்டுக் கொண்டிருக்கிற காரணத்தால், ஜூன் மாதத்தில் வைப்பதைக் காட்டிலும், ஏப்ரலில் இருந்து ஏப்ரல் என்று வசூல் செய்யும் நிலையை வைத்தால், இப்படி வெளியே உள்ளவர்கள், இதன் மூலம் கட்சியை வளர்க்க வேண்டும் என்று எண்ணிக் கொண்டிருப்பவர்களுக்கு அரிய சந்தர்ப்பம் இல்லாமல் போகும். எப்போதும் மழை பொய்த்துப் போகிறது. ஒவ்வொரு ஆண்டும் பார்த்தால், மழை குறைந்து பெய்து கொண்டிருக்கிறது. ஆகவே அந்த வகையிலே வைத்தால் நிச்சயமாக நல்ல வாய்ப்பை அது கொடுக்கும் என்று இந்த நேரத்திலே சொல்லிக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

கிராமப் பகுதிகளில் உள்ள வங்கிகள் எல்லாம் நல்ல முறையிலே நடைபெற வேண்டும். அங்கே தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்கள் அங்கம் வகித்திருந்தால், அந்த கிராமங்களிலே உள்ள மக்கள் போய் சுலபமாக அணுகி தங்கள் குறைகளைக் கேட்க முடியும். அதிகாரிகள் அங்கே இருப்பதில் பாமர மக்களாக உள்ள அவர்கள் உள்ளே சென்று, சேவை சங்கங்களின் உள்ளே சென்று, தங்களுடைய குறைகளை எப்படி நிவர்த்தி செய்து கொள்ள முடியும் என்று கேட்டால் என்ன சொல்வார்களோ என்ற அச்சத்தால், பாமர மக்கள் தாங்களாக உள்ளே போக வாய்ப்பு இல்லாமல் வெளியிலே போய் பார்த்து, மற்றவர்களைக் கேட்டு, நமக்குக் கிடைக்காது என்று எண்ணி போய்விடும் நிலை இருக்கிறது. எனவே தேர்தல்களை நடத்தும் வரையிலும், ஆலோசனைக் குழுக்கள் அவசியம் என்று கூறி, அந்தக் குழுக்களுக்கு நியமனம் செய்ய வேண்டுமென்று இந்த நேரத்தில் கேட்டுக் கொள்கிறேன். இப்படிப்பட்ட ஆலோசனைக்



1987 ஏப்ரல் 11] [திரு. இரா. சண்முகம்]

குழுக்கள் இருந்தால், அந்தச் சேவை சங்கங்கள் விவசாயிகளுக்கு மட்டும்தான் கடன் கொடுக்கிற சங்கங்கள் என்று நினைத்துக் கொண்டிருக்கும் நிலை மாறி, ஏழை எளிய மக்களுக்கு சிறிய கடைகள் வைக்க, ஆடு மாடுகள் வாங்க, கறவை மாடுகள் வாங்க, பெட்டிக் கடைகள் வைக்க கடன் கொடுக்கிறார்கள் என்ற நிலையைத் தெரிந்துகொள்ள வாய்ப்பாக இருக்கும்.

அடுத்து, தேசியமயமாக்கப்பட்ட வங்கிகளில் கடன் கொடுக்காமல் நிறுத்தி வைக்கப்பட்டிருக்கும் மனுக்களை ஓரிரு மாதங்களுக்குள்ளாக கூட்டுறவு சேவை சங்கங்களுக்கும், கூட்டுறவு வங்கிகளுக்கும் திருப்பி அனுப்ப வேண்டுமென்று கேட்டு, அதன் மூலமாக விவசாய சேவை சங்கங்களுக்கும், கூட்டுறவு வங்கிகளுக்கும் 60, 70, 100, 200 என்று மனுக்கள் வந்திருக்கின்றன. அந்த மனுக்களை குறுகிய காலத்தில் பார்த்து, அவர் எங்கே இருக்கிறார், கட்டக்கூடிய தகுதி பெற்றிருக்கிறாரா என்றெல்லாம் பார்க்க வேண்டும். என்னதான் வங்கிகளுக்கு சப்சிடி கொடுத்தாலும், மனுதாரர்களைப் பரிசோதித்து, அவர்களுக்குக் கொடுத்தால் மீண்டும் வருமா என்று பார்க்க கால அவகாசம் இல்லாமல், கடன் கொடுக்கிறார்கள். 500 ரூபாய், 250 ரூபாய் என்று அவர்களிடம் பங்குத் தொகை வாங்கிய பிறகு, மத்திய கூட்டுறவு வங்கியானது இப்போது கடன் கொடுப்பதற்கு முடியாது என்று உத்திரவு பிறப்பித்திருப்பதாக கிராம மக்கள் எங்களிடம் சொல்லுகிறார்கள். நாங்கள் கடன் கேட்டிருக்கிறோம். பங்குத் தொகை வாங்கி விட்டார்கள், இப்போது மத்திய கூட்டுறவு வங்கியிலிருந்து கடன் கொடுக்க வேண்டாம் என்று உத்திரவு வந்திருக்கிறது, எனவே கடன் கொடுக்க முடியாது என்று சொல்லுகிறார்கள் என்று பலர் சொல்கிறார்கள். அப்படிப்பட்ட அதிருப்தியான நிகழ்ச்சிகளைச் செய்யாமல் இருக்கும் நிலையில், கொடுக்க முடியும் என்றால், இந்தக் காலத்திற்குள் மனுச் செய்தால் கொடுக்க முடியும் என்று சொல்ல வேண்டும். கொடுக்க முடியாது என்று சொல்லும்போது, காலம் தாழ்த்தி வருகிறோம், அதனால் கடன் பெற முடியவில்லை: காலத்தோடு பார்க்க வேண்டும் என்ற உணர்வு வரும். அந்த உணர்வு வரும்போது, அவர்கள் அடுத்த முறை காலத்தோடு வந்து கடனைப் பெற்றுக் கொள்ள வாய்ப்பாக இருக்கும். அந்த நிலையை உருவாக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அது மட்டுமல்ல. பால் உற்பத்தியாளர் சங்கங்கள் ஒவ்வொரு கிராமத்திலும் இருக்க வேண்டும். வறட்சி அதிகமாக நிலவும் இந்த நேரத்தில் பால் உற்பத்தியாளர்கள் சங்கம் கிராமத்தில் இருந்தால், ஒவ்வொரு குடும்பமும் வாழ வாய்ப்பு இருக்கும். வேளாண்மை இல்லாமல் இருக்கும் இந்த நேரத்தில் பால் உற்பத்தியாளர்கள் சங்கங்களை ஒழுங்காக நடைமுறைப் படுத்தினால் ஒவ்வொரு குடும்பத்திற்கும் 250 ரூபாயிலிருந்து 500, 1000 ரூபாய் வரை வருமானம் வரும். அந்த வருமானத்தைக் கொண்டு அந்த மக்கள் வாழ வாய்ப்பு இருக்கும். பால் உற்பத்தியாளர் சங்கங்களைத் தொடங்க அனுமதி வழங்க வேண்டுமென்று கேட்டால், பி.டி.ஓ. அவர்கள் அனுமதி கொடுக்க மறுக்கிறார் என்று சொல்லுகிறார்கள். கேட்டால், பக்கத்திலுள்ள பால் உற்பத்தியாளர் சங்கம் நடைபெறாமல் இருக்கிறது, அதனால் புதிதாகத் தொடங்க அனுமதி கொடுக்க மாட்டோம் என்று சொல்லுகிறார்கள். அப்படியில்லாமல், பால் உற்பத்தியாளர் சங்கங்களை நடைமுறைப்படுத்த, யோக்கியமான தலைவர்களைத் தேர்ந்தெடுக்கும்போது, மக்களைக் கூட்டி அவர்கள் முன்னால் தேர்ந்தெடுக்காமல், சூப்பர்வைசர் கூட்டம் கூட்டியதுபோலப் போட்டு, கிராம மக்கள் கையொப்பம் போட்டது போலப் போட்டு, ஒரு தலைவரைத் தேர்ந்தெடுப்பதால் அந்தப் பால் உற்பத்தியாளர் சங்கம் சரியாக இயங்காமல் போகிறது. அப்படிப்பட்ட நிலையில்லாமல் பார்த்துக் கொள்ள துறைக்கு ஆணை பிறப்பிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து திருக்கழுக்குன்றத்தில் 16,000 மக்கள் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். அங்கே மினி சூப்பர் மார்க்கெட் துவங்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். கல்பாக்கம் அணு மின் நிலையம் அமைந்துள்ள சதுரங்கப்பட்டினத்தில் மினி சூப்பர் மார்க்கெட் ஒன்றைத் துவங்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

துணைத் தலைவர் அவர்கள் கேள்வி கேட்கும்போது ஒன்றைச் சொன்னார்கள். அவருடைய பகுதியில் வெங்காயம் அதிகமாக உற்பத்தியாகிறது என்றும், வெங்காயம் அழுகிப் போகும் நிலை இருப்பதால், அவை அழுகாமல் இருக்க பதப்படுத்தும் கூடத்தை ஏற்படுத்தி, அங்கே அவற்றைப்





பதப்படுத்தி, வெளியிலே விநியோகம் செய்ய வாய்ப்பை உருவாக்கித் தர வேண்டுமென்றும் கேட்டபோது, அதைத் துவங்குவதற்கு வாய்ப்பு இருக்குமென்று சொன்னார்கள்.

(பிற்பகல் 1-00)

அந்த நிலையிலே வேடசந்தூர் பகுதியிலே நபார்ட் என்ற அந்த நிறுவனத்திலேயிருந்துகூட பணம் கொடுத்து விட்டார்கள். குளிர் சாதனம் பொருத்தி கட்டுவதற்கான பணங்கள் எல்லாம் கட்டப்பட்டு இருக்கிறது. கூட்டுறவுத் துறையிலே அனுமதி கொடுக்கவில்லை என்று சொல்கிறார்கள். இந்த அனுமதியை உடனடியாக நீங்கள் வழங்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

கடைசியாக அந்த சர்க்கிள் சூப்பர்வைசர் என்று இருப்பார்களேயானால், ஈ.ஓ. போன்றவர்கள் இருப்பார்களானால், அவர்களை, நல்லவர்களை, அதற்கு என்று இருக்கின்ற சர்வீசை வைத்து அவர்களை நியமனம் செய்வதைக் காட்டிலும், அவர்களுடைய தகுதிகளை, நல்லவர்களாக ஒழுக்கமுள்ளவர்களாக, தங்களுடைய கடமைகளில் தவறாமல் இருப்பவர்களை கொண்டு வந்து சர்க்கிள் சூப்பர்வைசர்களாக வைக்க வேண்டுமேயொழிய, ஏதோ ஒரு பகுதியிலே தவறு செய்தவர்களை, மாவட்டத்திலே வேறு ஒரு பகுதியிலே தவறு செய்தவர்கள் என்று தெரிந்தும்கூட எப்படி சர்க்கிள் சூப்பர்வைசர்களாகப் போடுகின்றார்கள்? அவர்கள் ஒரு வங்கியிலே செய்திருக்கின்ற தவறுகளைப்போல், இந்த சங்கங்களில் உள்ள ஒன்றியத்திற்கு வந்தால், அத்தனை சேவை சங்கங்களில் உள்ளவர்களுக்கும், அந்த செயலாளர்களுக்கும் சொல்லிக் கொடுக்க மாட்டார்களா என்பதைப் பற்றி நாம் சிந்தித்தாக வேண்டும். அப்படிப்பட்ட ஒழுங்கற்றவர்களை, தவறு செய்பவர்களை சர்க்கிள் சூப்பர்வைசர்களாக நியமனம் செய்யாமல் அவர்களுடைய சர்வீசை எண்ணிப் பார்க்காமல், அவர்களுடைய தகுதியை எண்ணிப் பார்த்து அவர்களுக்கு அந்த சர்க்கிள் சூப்பர்வைசர் கேடரை நீங்கள் கொடுக்க வேண்டும் என்று அன்போடு கேட்டுக் கொள்கிறேன். ஈ.ஓ. என்று ஒரு நிர்வாக அதிகாரியைப் போட்டிருக்கிறோம். அவர்கள் ஒவ்வொரு இடத்திலே போகிறபோது அந்த தணிக்கை செய்திருக்கிறார்கள். தாங்கள் போகிறபோது கடனை வசூல் செய்வதற்கு மட்டுமல்ல, அந்த வங்கிக்குப் போகிறபோது

அங்கே இருக்கிற சூப்பர்வைசர்களை அழைத்து பார்த்துவிட்டு அங்கே இருக்கிற நியாய விலைக் கடைகளையும் பார்த்து விட்டு, ஸ்டாக்கைப் பார்த்து விட்டு, அவர்கள் போகிற தேதியிலே போய் பார்த்துவிட்டு அந்த தேதியை அவர்கள் போட வேண்டும். கையொப்பம் இட்டுவிட்டு தேதியைப் போட வேண்டும். பல பேர்கள் அப்படி செய்வது கிடையாது. செயலாளரைப் பார்த்துவிட்டு வருகிறார்கள். அவர்களிடம் சி.பி. கேஷ் பேலன்ஸ் ரூ. 10,000 இருக்கிறது என்றால் அதை அவர்கள் எண்ணிக்கூட பார்க்காமல் கையொப்பம் மட்டும் போட்டு விட்டு தேதியைப் போடாமல் வந்து விடுகிறார்கள். காரணம் நாளைக்கு ஒரு வேளை அவர்களுக்கு மேலாக இருக்கிற அதிகாரிகள் வந்து தணிக்கை செய்கிறபோது, இந்த தவறு இருக்குமானால் இது இதற்கு முன்னாலே போட்டது, அதற்குப் பின்னாலே இது போட்டது என்று சொல்வதற்கு. இதுபோன்ற தவறுகளை கூட்டுறவுத்துறை சமூகத்தில் நடைமுறைப்படுத்திக் கொண்டிருக்கின்றனர். அங்கே இதுபோன்ற நிலைமைகளை சர்க்கிள் சூப்பர்வைசர்கள், ஈ.ஓ.க்கள் தொடர்ந்து நடைமுறைப்படுத்திக் கொண்டிருக்கின்றார்கள். நல்ல முறையிலே நடைபெற்றுக் கொண்டு வந்த அந்த பகுதியிலே, இன்று அதிலே பணியாற்றுகின்ற செயலாளர்கள் எல்லாம் முறையாக இருக்கின்ற, சரியாக இருக்கின்ற செயலாளர்கள் பயந்து கொண்டு இருக்கிறார்கள். தவறு செய்தவர்கள் தலை நிமிர்ந்து நடந்து கொண்டிருக்கின்றார்கள். ஆகவே அந்த நிலைகளைப் போக்க முறையாக இருக்கின்றவர்களை நியமனம் செய்து அந்த தொகுதியிலே அந்த விவசாயப் பெருங்குடி மக்களுக்கு நல்ல முறையிலே சேவை செய்யும் நிலையை உருவாக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

கடைசியாக, அர்பன் வங்கிகள் என்று இருக்கின்றன. அதிலே இயக்குநர்கள் உள்ளார்கள். உதாரணத்திற்குச் சொல்கிறேன், 20 பேர்கள் இருப்பார்களானால் அந்த 20 பேர்களிலே 3 ஆண்டுக்கு ஒரு முறை அல்லது காலாவதியாகி ஒவ்வொருவராக போய்க் கொண்டே இருந்து, கடைசியாக 5, 6 பேர்கள் நிற்கிறார்கள். அந்த 5, 6 பேர்கள் இருக்கும்போது ஒரு தீர்மானத்தை அவர்கள் எழுதி ஒப்புதலைப் பெற வேண்டும் என்றால் அந்த





5, 6 பேர்கள் போடுகின்ற தீர்மானத்தை அங்கீகரிக்க முடியாத நிலை இருக்கிறது. அங்கு இயக்குநர்கள் இல்லாத நிலையை மாற்றி அல்லது காலாவதியாகிப் போனவர்கள் இடங்களில் நியமனம் செய்து ஒரு முழுமையான குழுவை ஏற்படுத்தி அவைகள் இயங்குகின்ற நிலையை உருவாக்கினால், அந்த அர்பன் வங்கிகள் முறையாக செயல்பட வாய்ப்பாக இருக்கும். அந்த நிலையில்லாமல், மெஜாரிட்டி இல்லை, மைனாரிட்டி இருக்கின்ற காரணத்தினால் நீங்கள் போடுகின்ற தீர்மானங்கள் ஏற்றுக் கொள்வதற்கில்லை என்ற நிலை இருக்கிறது. அதை எல்லாம் போக்கி மீண்டும் இந்த தமிழகத்திற்கு கூட்டுறவு சேவை சங்கங்களின் மூலமாக முறையாக சேவையைத் தொடர்ந்து கொடுப்போமானால் விவசாய மக்கள் இந்த கூட்டுறவு நிறுவனங்களுக்கு நன்றி உள்ளவர்களாக இருப்பார்கள் என்று சொல்லி, இந்த மானியத்தை வரவேற்று அமைகிறேன். நன்றி, வணக்கம்.

திரு. ந. சிவஞானம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1987-88 ஆம் ஆண்டுக்கான கூட்டுறவு மானியக் கோரிக்கையின் மீது நான் சார்ந்திருக்கின்ற காங்கிரஸ் இயக்கத்தின் சார்பிலே சில விளக்கங்களைக் கூற விழைகின்றேன். நாடு விடுதலை அடைந்த பின்பு மறைந்த பண்டிட் ஜவஹர்லால் நேரு அவர்கள் இந்த நாட்டிற்கு உறுதியான சோஷலிச கொள்கைகள் வர வேண்டுமென்ற நோக்கத்தோடு பாடுபட்டார்கள். அப்போது கூட்டுறவுத் துறை இந்த நாட்டுக்கு உயர்ந்த லட்சியத்தோடு பாடுபட்டது. அதற்கு அதிக முக்கியத்துவம் கொடுத்து நாடு பூரா அதனை நல்ல முறையில் செயல்படுத்தி காட்டிய பெருமை நேரு அவர்களுக்கு உண்டு. அப்படிப்பட்ட நிலையிலே தான் தமிழகத்தைப் பொறுத்தவரையிலும், சென்ற காலங்களிலே, நாமெல்லாம் பெருமைப்படக் கூடிய அளவிலே, உயர்ந்த லட்சியத்தோடு கூட்டுறவுத் துறை இயங்கி வந்தது. அந்த வகையில் கூட்டுறவு இயக்கம் இந்த நாட்டுக்கு மிக நல்ல பணிகளை ஆற்றிக் கொண்டிருக்கிறது. வேளாண்மைத் துறைக்கு கடன் வசதி செய்து கொடுத்தல், நாட்டிலுள்ள உழைக்கின்ற மக்களுக்காக நன்மை செய்தல், விவசாயிகளுக்கு பயிர் கடன் அளித்தல், நுகர்பொருளை ஏழையெளிய மக்களுக்கு வழங்குவதற்குரிய

பொறுப்பை ஏற்றுக்கொள்ளல், விவசாயிகளுக்கு இடுபொருளை வழங்கி அதற்கான பொறுப்பை ஏற்றுக்கொள்ளல் இப்படி பல்வேறு பணிகளை கூட்டுறவு இயக்கத்தின் மூலம் நாட்டு மக்களுக்கு செய்ய வேண்டுமென்ற லட்சிய நோக்கத்தோடு மிக நல்ல முறையில் கூட்டுறவு ஸ்தாபனம் இயங்கிக் கொண்டிருக்கிறது.

அடுத்து, இந்த இயக்கத்திலே சாதாரணமாக நாட்டு மக்களுக்கு நன்மை செய்ய வேண்டுமென்ற நோக்கத்தோடு இந்த சபையாலே சிபாரிசு செய்யப்பட்டு பல கூட்டுறவுச் சட்டங்களை இயற்றினாலும் கூட, தேர்தல் முறையாக நடைபெறாத காரணத்தால் நம்முடைய நோக்கங்களை முழுமையாக செயல்படுத்த முடியாத நிலை இருக்கிறது. ஆகவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இதற்கான பதிலுரை ஆற்றும்போது தேர்தலைப் பொறுத்தவரையில், இன்ன நாள் தேர்தல் நடைபெறும் என்று குறிப்பிட்டு அறிவிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, கூட்டுறவுத் துறை மூலமாக விவசாயிகளுக்கு இன்றைய தினம் பல்வேறு உதவிகளைச் செய்வதற்கான நடவடிக்கைகளை எடுத்துக் கொண்டிருக்கிறோம். குறிப்பாக தமிழகத்தைப் பொறுத்தவரையில் கடந்த காலத்தில் விவசாயி களுக்கு பல்வேறு கஷ்டங்கள் இருந்தன. இயற்கைச் சீற்றங்கள், புயல், வெள்ளம் போன்ற நிலைமைகள் மாறி மாறி வருகின்ற காரணத்தால் விவசாயிகளுக்கு உற்பத்திச் செலவு அதிகமாகின்ற நிலைமையும், கடன் சுமை மேலும் மேலும் அதிகமாகின்ற நிலைமையும் இருந்து வந்தது. பல்வேறு கோரிக்கைகள் விவசாயிகளின் சார்பில் விடுக்கப்பட்டன. அதன் பிறகு கூட்டுறவுத் துறையிலே கடனுக்காக உள்ள வட்டி, அபராத வட்டி போன்றவற்றை இந்த அரசு தள்ளுபடி செய்ததற்காக இந்த அரசை நான் பாராட்டுகிறேன்.

அடுத்து, விவசாயிகள் கட்டுகின்ற கடன் தொகையைப் பொறுத்தவரையில் 28—2—1987 கடைசி நாள் என்று நிர்ணயிக்கப்பட்டிருந்தது. பிறகு விவசாயப் பெருங்குடி மக்களின் வசதிக்காக, அவர்கள் அதனைக் கட்டுகின்ற அளவுக்கு காலத்தை தளர்த்தி 30—6—1987 என்று தவணைக்





காலத்தை இரண்டாவது நீட்டித்துக் கொடுத்து, கடைசி நாள் என்று நிர்ணயித்திருப்பதை நான் பாராட்டுகிறேன். ஆக், அவர்கள் ஜூன் மாதத்திற்குள் கட்ட வேண்டும். இன்றைக்கு வறட்சி மிகக் கடுமையாக தமிழகத்தில் இருக்கிற நிலையில், ஜூன் மாதத்திலே நல்லமாதிரியாக பருவ மழை வந்தால், அந்த நேரத்திலேதான் விவசாயிகள் விவசாயத்தை ஆரம்பிக்க முடியும். ஆகவே, விவசாயிகள் கட்ட வேண்டிய கடன் பாக்கி தவணையைப் பொறுத்தவரையில் 30—6—1987 என்று இருக்கின்ற கடைசி நாளை இன்னும் நீட்டித்துக் கொடுக்க வேண்டுமென்று மாண்புமிகு அமைச்சர் நாவலர் அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, உணவு உற்பத்திக்கு முதலிடம் கொடுத்தாக வேண்டும். உணவு உற்பத்தியை நல்ல முறையில் பெருக்க வேண்டும். தமிழகத்தைப் பொறுத்தவரையில், பொருளாதார நிலையும், வேளாண்மை உற்பத்தியும் ஒன்றுக்கொன்று தொடர்புடையன. நம்முடைய பொருளாதாரம் உயர வேளாண்மைத் துறை மிக முக்கியமான பங்கு வகிக்கிறது. குறிப்பாக தமிழகத்திற்கு இன்றைக்கு காவிரி நீர் வருமா வராதா என்கிற ஏக்கத்தோடு விவசாயிகள் இருக்கிறார்கள். ஆகவே, உணவு உற்பத்திக்கு இன்னும் அதிக ஆக்கமும் ஊக்கமும் அளிக்க வேண்டும். தஞ்சை மாவட்டத்தை எடுத்துக் கொண்டால் காவிரி டெல்டா பகுதியில் இன்றைக்கு ஏறத்தாழ 12 லட்சம் ஏக்கர் சாகுபடி செய்யக்கூடிய நிலம் இருக்கிறது. இன்றைக்கு தண்ணீருக்கு மாற்று ஏற்பாடு செய்தாக வேண்டும். நிலவள வங்கி மூலமாக போர்வெல் போட்டு அவர்களுக்கு இருக்கிற குறைகளை போக்க வேண்டும். அதுபோல கீழ் தஞ்சையில் ஏறத்தாழ 10 லட்சம் ஏக்கர் நிலம் இருக்கிறது. அங்கே பில்டர் பாயின்ட் போட்டு தண்ணீர் கிடைக்க ஆவன செய்ய வேண்டும். அதுபோல மேல் தஞ்சை பகுதியை பொறுத்தவரையில் ஆழ் குழாய் கிணறுகளை போட்டுக் கொடுக்க நிலவள வங்கி மூலம் அரசு ஆவன செய்ய வேண்டும். இந்த இரண்டு திட்டங்களையும் செயல்படுத்த, அதற்கு தேவையான பணத்தை இந்த அரசு நிலவள வங்கிக்கு ஒதுக்க முன்வர வேண்டும். அதற்கு மாண்புமிகு நாவலர் அவர்கள் ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

[திரு. ந. சிவஞானம்] [1987 ஏப்ரல் 11

இன்றையதினம் காவிரி தண்ணீரை நம்பி இருந்த காரணத்தால், தண்ணீர் இல்லாத நிலையில் பயிர்கள் எல்லாம் சரியாக பயிரிட முடியாத காரணத்தால், கிரவுண்ட் வாட்டரை, பூமிக்கு கீழ் மட்டத்தில் இருக்கின்ற தண்ணீரை, மேலே கொண்டு வர வேண்டிய நிலைமை ஏற்பட்டிருக்கிறது. ஆகவே, இதற்கு மிக மிக முக்கியத்துவம் கொடுத்து, ஒரு முனைப்புத் திட்டமாக, கூட்டுறவு துறையும், வேளாண்மைத் துறையும் ஒன்றாக இணைந்து நின்று போர்வெல் போடுவது, பாசன வசதிக்கு வழிவகை செய்வது போன்ற அத்தியாவசியப் பணிகளை முடுக்கி விட மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் கடமைப் பட்டிருக்கிறார்கள். என்னுடைய பகுதியைப் பொறுத்த வரையில் கடன் தொகைகள் எல்லாம் நல்ல முறையில் வசூல் செயயப்பட்டுள்ள நிலையில் வங்கிகள் நல்ல முறையில் கடன் கொடுப்பதற்கான அடையாளம் தெரிகிறது. தஞ்சை மற்றும் கும்பகோணம் கூட்டுறவு வங்கிகளைப் பொறுத்தவரையில் இவைகள் எல்லாம் இணைந்து விவசாயிகளுக்கு கடன் கொடுப்பதற்கான சூழ்நிலையை, வாய்ப்பை ஏற்படுத்த வேண்டும். ரிசர்வு வங்கியிடமிருந்தும் மற்றும் கூட்டுறவு மாநில வங்கியிடமிருந்தும் கடன் பெறுகின்ற தகுதி அவைகளுக்கு இருப்பதால் வருகின்ற காலத்திலே பயிர்களுக்கான கடன் அதிகமாகக் கிடைக்கும் என்று அரசு தரப்பிலே சொல்லி யிருக்கிறார்கள். அந்த வகையிலே, வருங்காலத்திலே மிக அதிகமாக விவசாயிகளுக்கு கொடுக்க அரசு ஏற்பாடுகளை செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்ளக் கடமைப் பட்டிருக்கிறேன்.

(பிற்பகல் 1-10)

சாதாரண சிறு விவசாயிகளுக்கு 5,000 ரூபாய் வரையிலே பயிர்க் கடன் கொடுக்கப்படுகிறது. அது போதாது. இப்பொழுது இருக்கின்ற விலைவாசியிலே. இடுபொருள் விலை அதிகமாகி இருக்கிறது; பூச்சி மருந்து விலை அதிகமாகியிருக்கிறது; விவசாயிகளின் உற்பத்திக்குக் கூலி அதிகமாகச் செலவாகிறது. ஆகவே, இப்படிப்பட்ட செலவுகளையெல்லாம் நாம் பார்க்கின்ற பொழுது 5,000 ரூபாய் என்று கடன் கொடுப்பதை, ஜாமீன் பேரில் கடன் கொடுப்பதை 7,500 ரூபாயாக உயர்த்த வேண்டுமென்று இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.



1987 ஏப்ரல் 11] [திரு. ந. சிவஞானம்]

கூட்டுறவு மூலமாக பல்வேறு வகைகளிலே கிராமப்புறங்களில் கட்டிடங்கள் கட்டுவது நிறுத்தப்பட்டுள்ளது. ஆகவே, இந்த நிறுத்தப்பட்ட கூட்டுறவு வங்கிகளினுடைய சேவையை அந்தக் கட்டிடங்களுக்கு மிகவும் அதிகமான முறையிலே செயல்படுத்த வேண்டும்.

சாதாரண மக்களுக்கு நுகர்பொருள் வழங்குகின்ற நிலைமை—அத்தியாவசியமாக இருக்கின்ற அரிசி, மண்ணெண்ணெய், இன்னும் பல்வேறு பொருட்களை வழங்குவதற்குக் கூட்டுறவும், நுகர்பொருள் வாணிபக் கழகமும் வழங்கும் நிலைமை—இருந்தது உண்டு. ஆனால், உச்ச மன்றத்தின் தீர்ப்பின்படி கூட்டுறவுக் கடைகளைத்தான் வைக்க வேண்டுமென்று ஆணை பிறப்பித்ததன் காரணமாகப் பல்வேறு இடங்களில், குக்கிராமங்களில், பல்வேறு வசதிகளை அளிப்பதற்கு, மக்களுக்குப் பல்வேறு வாய்ப்பை அளிப்பதற்காக அங்கே பணியாற்றுகின்ற அந்த அரசு அதிகாரிகளெல்லாம் குறிப்பாகக் கூட்டுறவுப் பணியிலே இருக்கின்ற அந்த அதிகாரிகளெல்லாம் மிக நல்ல முறையிலே பணியாற்ற வேண்டும். காலையிலே விவசாயி வேலைக்குச் சென்றுவிட்டு மாலையிலே வந்தால் அவனுக்குக் கிடைக்க வேண்டிய பொருட்கள் கிடைப்பதில்லை. பலயிடங்களில் இப்படிப்பட்ட புகார்கள் இருக்கின்றன. அதுமட்டுமல்ல, கூட்டுறவு அங்காடியிலே நான்கு கிலோ மீட்டர் தூரத்திற்கு; ஐந்து கிலோ மீட்டர் தூரத்திற்குக் குக்கிராமங்களிலேயிருந்து வந்து வாங்க வேண்டிய சூழ்நிலை ஏற்படுகிறது. ஆகவே, அப்படி வாங்க வருகின்ற அந்த நிலையிலே, சாதாரணமாக நடந்து வந்து கேட்டால் கடைகளை மூடி விடுகிறார்கள். ஆகவே, அந்தக் கிராமங்களுக் கெல்லாம் கிராமக் கூட்டுறவு அங்காடியினுடைய, மக்களுக்குப் போய்ச் சேர வேண்டிய அந்த நுகர்பொருள் நிச்சயமாகப் போய்ச் சேருவதற்காக, குக்கிராமமாக இருந்தாலும் அங்கேயும் இப்படிப்பட்ட அங்காடிகளை அமைப்பதற்கு அரசு முயல வேண்டுமென்று இந்த நேரத்தில் நான் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

காவிரி டெல்டா பகுதியிலே இடுபொருள்களுக்காக ஏறத்தாழ குவிண்டாலுக்கு 35 ரூபாய் என்று கொடுக்கப்பட்டுள்ளது. காவிரி டெல்டா பகுதியிலே உற்பத்திச் செலவு மிகவும் அதிகம்.

[திரு. ந. சிவஞானம்] [1987 ஏப்ரல் 11

வேளாண்மைத் துறையின் மூலமாக அவர்களுக்கு உரம், இடுபொருள், பூச்சி மருந்து கொடுக்கப்படுகிறது. அதைப் பணமாகக் கொடுக்க வேண்டுமென்று மீண்டும் நான் வலியுறுத்தக் கடமைப்பட்டிருக்கிறேன். அதைப் பணமாகக் கொடுத்தால்தான், உற்பத்தி செய்கின்ற அந்த விவசாயப் பெருங்குடி மக்களுக்குப் பல்வேறு வாய்ப்புகள் கிடைக்கின்ற காரணத்தாலேதான் அதையும் நிச்சயமாகச் செய்ய வேண்டுமென்பதை இந்த நேரத்தில் கேட்டுக்கொள்ளக் கடமைப் பட்டிருக்கிறேன்.

மத்திய வங்கியிலே பணி புரிந்து வருகின்ற அலுவலர்களுக்கு நிரந்தரமாகவே பதவி உயர்வு கொடுக்க வேண்டும். இருபதாண்டுக் காலமாகப் பணி செய்தால் அங்கேயேதான் சூப்பர்வைசர். ஆகவே, அங்கேயே 20, 25 ஆண்டுகளாகப் பணி புரிகின்ற பல்வேறு வங்கி ஊழியர்களுக்குப் பதவி உயர்வு கிடைப்பதில்லை. ஆகவே, அங்கே பணிபுரிகின்ற அந்த வங்கி அதிகாரிகளுக்குப் பதவி உயர்வு கொடுக்க வேண்டுமென்பதை இந்த நேரத்தில் நான் தெரிவித்துக் கொள்ளக் கடமைப் பட்டிருக்கிறேன்.

மாவட்டத் தலைநகரங்களிலே மிகச் சிறப்பாக சிறப்பங்காடிகள் ஒரு காலகட்டத்திலே நன்றாக நடைபெற்றுக் கொண்டிருந்தன. ஆனால் தனி அதிகாரி வந்தவுடனே அந்தச் சிறப்பங்காடிகளைப் பற்றியெல்லாம் சாதாரண மக்கள் மத்தியிலே குறை ஏற்பட்டுள்ளது. தரமான பொருட்கள் கிடைப்பதில்லை; நாணயமான நல்ல நிலையில் கிடைப்பதில்லை; பக்கத்திலிருக்கின்ற பல்வேறு இடங்களிலே பல்வேறு தனிப்பட்ட வியாபாரிகளிடத்தில் வாங்கி இங்கே வியாபாரம் செய்கிறார்கள். உதாரணத்திற்கு ஒன்றைச் சொல்ல வேண்டுமென்றால் ஊராட்சி ஒன்றியத்தின் மூலமாக மின்சார பல்பு வேண்டுமென்று சொல்கிறார்கள், அது கூட்டுறவுத் துறையில் என்றால் ஆடிட்டிலே ஆட்சேபணை இல்லை என்று சொல்கிறார்கள். அதற்காகத்தான் இன்றையதினம் ஊராட்சி ஒன்றியமோ அல்லது கமிஷனரோ அல்லது ஊராட்சி ஒன்றியத் தலைவரோ அங்கே வாங்குவது என்றால், அங்கே பொருள் இருக்காது; பக்கத்திலே இருக்கின்ற ஒரு கடையிலே சென்று அங்கே ஆயிரம் ரூபாய்க்குப் பொருட்களை வாங்கி, 150 ரூபாய் இலாபம் வைத்து, அதற்கு



1987 ஏப்ரல் 11] [திரு. ந. சிவஞானம்]

மேல் இங்கே விற்கப்படுகின்ற ஒரு இக்கட்டான சூழ்நிலையைப் பெற்றிருக்கிறோம். ஆகவே, மக்கள் மத்தியிலே ஏன் இப்படி இந்த நிலையில் அங்காடிகள் செயல்பட வேண்டுமென்பதைப் பற்றி நாம் சிந்திக்க வேண்டும். அதற்காகத்தான் மக்களுடைய பிரதிநிதி இருக்க வேண்டும். ஒரு காலகட்டத்திலே தனியார் கடைக்கும், சிறப்பு கூட்டுறவு அங்காடிக்கும் வித்தியாசம் இருந்தது உண்டு. கூட்டுறவு அங்காடியிலே கொடுக்கப்படுகின்ற பொருள் நாணயமாக இருந்தது; கூட்டுறவு அங்காடியிலே கிடைக்கின்ற பொருள் தரமானதாக இருந்தது; விலையும் குறைவாக இருந்தது. ஆனால் இன்றைக்கு அந்தக் கடை களுக்குப் போவதற்கே மக்கள் அஞ்சுகிறார்கள். அப்படிப்பட்ட அஞ்சுகின்ற நிலையை மாற்றுவதற்கு அதற்கென்று பிரத்யேகமாக அல்லது ரெஜிஸ்தார் தலைமையிலே இதற்கு என்னென்ன சீர்திருத்தங்களைச் செய்ய வேண்டும் என்றும், இதற்கு என்னென்ன கஷ்டங்கள் இருக்கின்றன என்பதையும் அறிந்து அவற்றைப் போக்குவதற்கு அரசு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

பல்வேறு இடங்களிலே சொல்ல வேண்டுமென்றால், நம்முடைய மாநிலத்திலே கோயம்புத்தூரிலே சிந்தாமணி என்று ஒரு பெரிய அங்காடி இருக்கிறது. அது ஒரு காலகட்டத்திலே சிறப்பாக இயங்கி இலாபத்தைப் பெற்றுத் தந்தது. ஆனால் இன்றைய தினம் அதனுடைய நிலைமைகளைப் பார்க்கின்றபொழுது கீழே வந்துவிட்டது. இப்படி ஒட்டுமொத்தமாக தமிழ் நாட்டில் இருக்கிற எல்லா பெரிய அங்காடிகளும் சாதனை நிலையை இழந்து, தொய்ந்து இருக்கின்றன. அந்த அங்காடிகளின் இந்த தொய்வு நிலையை மாற்றி, மீண்டும் பழைய நிலைக்குக் கொண்டு வந்து, நல்ல முறையில் செயல்படச் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

பொதுவாக கூட்டுறவுத் துறையில் தூய்மையும் நாணயமும் நேர்மையும் மிகவும் முக்கியம். அந்தத் தூய்மை, நாணயம், நேர்மை மாண்புமிகு அமைச்சரிடம் இருக்கிறது. அதைப்போன்று அதிகாரிகளிடமும் இருக்க வேண்டும். அந்த வகையில் நடைபெற தகுந்த ஏற்பாடுகளைச் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

[திரு. ந. சிவஞானம்] [1987 ஏப்ரல் 11

இன்றைக்கு கூட்டுறவு இலாகாவில் இருந்த தணிக்கை பிரிவு தனியாகப் பிரிக்கப்பட்டு, தனியாக அதிகாரிகள் எல்லாம் நியமிக்கப்பட்டு நல்லமுறையில் செயல்பட்டு வருகிறது. தணிக்கை இலாகாவுக்கு ஒரு ஐ.ஏ.எஸ். அதிகாரி தலைவராக நியமிக்கப்பட்டால் இன்னும் நல்லமுறையில் செயல்பட வாய்ப்பு இருக்கிறது. ஆகவே, தணிக்கை இலாகாவுக்குத் தலைவராக ஒரு ஐ.ஏ.எஸ். அதிகாரியை நியமிக்க முயற்சி செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அன்னை இந்திரா காந்தி அவர்களுடைய இருபது அம்சத் திட்டத்தில் கூட்டுறவு சிறப்பான இடம் பெறுகிறது. இருபது அம்சத் திட்டத்தின் பெரும்பகுதி கூட்டுறவுத் துறையின் மூலமாக நிறைவேற்றப்பட நல்ல வாய்ப்பு இருக்கிறது. குறிப்பாக நலிவுற்ற மக்களுக்கு பல்வேறு கடன்களை வழங்க கூட்டுறவு அமைப்பில் இடமிருக்கிறது. நலிவுற்ற மக்கள் பெட்டிக்கடை வைக்க, ஆட்டுப்பண்ணை வைக்க, கோழிப்பண்ணை வைக்க கூட்டுறவுத் துறையில் 4 சதவீத வட்டியில் கடன் கொடுக்கிறார்கள். ஆனால் இப்போது வழங்குவதைவிட இன்னும் அதிகமாக கடன் வழங்க ஏற்பாடு செய்ய வேண்டும். கூட்டுறவு வங்கியில் 4 சதவீதத்தில் கடன் வழங்கப்படுவதைப்போன்று தேசியமயமாக்கப்பட்ட வங்கிகளில் எல்லாம் கடன் கொடுக்கிறார்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. சின்னராசு அவர்கள் 12 சதவீத வட்டியில் பயிர்க் கடன் கொடுக்கிறார்கள் என்று சொன்னார்கள். இன்றைக்கு தஞ்சை மாவட்டத்தில் கூட்டுறவு ஸ்தாபனங்கள் ஸ்தம்பித்துவிட்ட நிலையில் நாட்டுடைமையாக்கப்பட்ட வங்கிகளும் நிலவள வங்கியும் கடன் அளிக்காவிட்டால் விவசாய பெருங்குடி மக்கள் பெரும் துன்பத்திற்கு உள்ளாகியிருப்பார்கள். ஸ்டேட் பாங்காக இருந்தாலும், ஐ.ஓ.பி-யாக இருந்தாலும் இன்னும் நாட்டுடைமையாக்கப்பட்ட வங்கிகளாக இருந்தாலும் குறுகியகால கடன்கள் ஏராளமாக வழங்கியிருக்கின்றன. இருந்தபோதிலும் இது போதாது. இன்னும் அதிகமாகக் கொடுக்க வழிவகைச் செய்ய வேண்டும்.

நலிவுற்றவர்களுக்கு, சிறு விவசாயிகளுக்குத்தான் 4 சதவீத வட்டியில் கடன் வழங்குகிறார்கள். மற்றவர்களுக்கு 12 சதவீத வட்டிதான். இந்த வட்டி விகிதத்தைக் குறைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.



1987 ஏப்ரல் 11] [திரு. ந. சிவஞானம்]

அதைப்போன்று இன்றைக்கு நகை ஈட்டுக்கடன் வழங்கும் முறை இருக்கிறது. அதை நான் பாராட்டுகிறேன். தனியாரிடத்தில், மார்வாடியிடத்தில் 30 சதவீதம், 40 சதவீதம் வட்டி பெற்றுவந்த விவசாயப் பெருங்குடி மக்கள் பல்வேறு கஷ்டங்களை அனுபவித்தார்கள். அந்தக் கஷ்டங்களைப் போக்குகின்ற வகையில் கூட்டுறவுத் துறையின் மூலமாக நகை ஈட்டுக்கடன் கொடுப்பதை நான் பாராட்டுகிறேன். கஷ்டப்படுகின்ற மக்களைக் காப்பாற்ற கிராமப்புறங்களில் 1987-88 ஆம் ஆண்டுக்கு ஏறத்தாழ 320 கோடி நகை ஈட்டுக் கடனுக்காக ஒதுக்கீடு இருப்பதாகச் சொல்லியிருக்கிறார்கள். இந்தப் பணமும் போதாது. இன்னும் அதிகமாகக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

கூட்டுறவுத் துறையில் நகை ஈட்டுக் கடன் கொடுக்கிறபோது அந்த நகைகளைப் பாதுகாப்பாக வைத்துக்கொள்ள தனியாக அதிகாரிகள் இருக்க வேண்டும். இன்றைக்கு பல்வேறு இடங்களில் தங்கத்தை மாற்றி பித்தளையை வைத்துவிட்டார்கள் என்ற புகார்கள் வந்துகொண்டிருக்கின்றன. சட்டமன்றத்தில் கூட இந்தப் பிரச்சினை வந்ததை நாம் பார்த்தோம். ஆகவே, நகைகளை பரிசோதனை செய்து பார்ப்பதற்கும், பார்த்து வாங்கப்பட்ட நகைகளை பாதுகாப்பாக வைத்துக்கொள்ளவும் ஒவ்வொரு மாவட்டத்திலும் தனி அதிகாரிகளை நியமிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதைப்போன்று, நகைகளைப் பாதுகாப்பாக வைத்துக் கொள்ள தனி அதிகாரிகளுக்கு தனியாக பாதுகாப்பான அறை கட்டிக்கொடுக்க வேண்டும். அதோடு பாதுகாப்புப் பெட்டகமும் வாங்கி வைத்தால் நன்றாக இருக்கும். அந்த ஏற்பாடுகளை ரெஜிஸ்திரார் செய்து கொடுக்க நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதைப்போன்று, வீடு கட்டிக்கொடுக்கின்ற கூட்டுறவுச் சங்கங்களுக்கு நிதி ஒதுக்கீடு குறைவாக இருக்கிறது. விவசாயப் பெருங்குடி மக்களுக்கு அதிகமாக வீடு கட்ட கடன் வழங்க வேண்டும் என்று எனக்கு முன்னால் பேசிய மாண்புமிகு உறுப்பினர் கோடிட்டு காட்டினார். அந்த அளவுக்கு தொகை

[திரு. ந. சிவஞானம்] [1987 ஏப்ரல் 11

ஒதுக்கிடப்படவில்லை; குறைவாக இருக்கிறது. ஆகவே, இதற்கு அதிகமாக நிதி ஒதுக்கிட வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அதைப்போன்று நம்முடைய குடந்தை கூட்டுறவு பண்டக சாலை ஒன்று நடைபெற்று வருகிறது. நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் திரு. கிருஷ்ணமூர்த்தி அவர்கள்தான் அதற்கு தலைவராக இருக்கிறார்கள். அந்தப் பண்டகசாலை ஏதோ பாரபட்சமாக நடைபெறுவதாகச் சொல்லப்படுகிறது; அப்படிப் பட்ட நிலையைத் தவிர்க்க வேண்டும்; நல்லமுறையில் பாரபட்சம் இல்லாமல் நடக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

நான் முன்னால் சொன்னதைப்போல கூட்டுறவு அமைப்பு களுக்கு மக்கள் பிரதிநிதிகள் இல்லாத காரணத்தால் சில தவறு கள் இப்படி நடைபெற வாய்ப்புகள் இருக்கின்றன. ஆகவே, விரைவில் தேர்தலை நடத்த ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

(பிற்பகல் 1-20)

தேர்ந்தெடுக்கப்பட்ட மன்றத்தில் இருக்கிற, சட்டத்தினை உருவாக்குகிற பொறுப்புள்ள மன்றத்தில் இருப்பதன் காரணத் தால் தான் அப்படிப்பட்ட தேர்தலை உடனடியாக நடத்துவதற் குரிய வகையில் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தன்னுடைய பதிலுரையிலே நிச்சயமாக இதைக் குறித்து அறிவிக்கவேண்டும். இந்த மன்றத்தில் உள்ள அத்தனைபேரும் அதைத்தான் எதிர் பார்த்துக்கொண்டிருக்கிறார்கள். அந்தத் தேதியைத்தான் எதிர் பார்த்துக்கொண்டிருக்கிறார்கள். ஆகவே அந்த வகையில் மாண்புமிகு நிதியமைச்சர் டாக்டர் நாவலர் அவர்கள் நிச்சய மாக அறிவிப்பார்கள் என்ற நம்பிக்கையோடு நான் முடித்துக் கொள்கிறேன். நன்றி.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** மாண்புமிகு அவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தில் 1987-88-ஆம் ஆண்டின் கூட்டுறவு இயக்கத்தை நல்ல முறையில் இயக்கி வைக்கவும், அதனை பல்வேறு வகைகளில் ஊக்குவிக்கவும், கூட்டுறவாளர் களை உறுதுணையாக உருவாக்கவும், கூட்டுறவுச் சங்கங்களை ஆங்காங்கே வளர்க்கவும், பேணவும், அவைகளுக்குக் கடனுதவி



1987 ஏப்ரல் 11] [டாக்டர் இரா. நெடுஞ்செழியன்]

புரியவும், மானிய உதவி வழங்கவும், கூட்டுறவுக்கு பயிற்சி அளிக்கவும், கூட்டுறவுக் கொள்கைகளையும் குறிக்கோள் களையும் திட்டங்களையும் நாட்டு மக்களுக்கு பரவலான வகை களில் எடுத்துரைத்து அவர்களுக்கு தெளிவுபடுத்தவும் பொது மக்களை கூட்டுறவு இயக்கத்தோடு பெருவாரியான வகையில் இயங்கும்படியாகச் செய்யவுமான பல்வேறு பணிகளை மேற் கொள்வதற்கு ரூபாய் 37 கோடியே 73 இலட்சத்து 50 ஆயிரத் திற்கும் மேற்படாத தொகை இந்த மானியக் கோரிக்கை மூல மாக கேட்கப்பட்டிருக்கிறது.

இந்தத் துறை எந்தெந்த வகைகளில் பணியாற்றிவருகிறது, பணியாற்றவேண்டும் என்பதற்கான கருத்துக்களை இங்கே பேசிய மாண்புமிகு உறுப்பினர்கள் கோடிட்டுக் காட்டி நல்லா தரவைத் தெரிவித்திருப்பதற்காகவும், இந்தக் கூட்டுறவுத்துறை மேலும் பொலிவோடும், வலிவோடும் பணியாற்றவேண்டும் என்பதற்கான காரண காரிய விளக்கங்களை எடுத்துச் சொல்லி, நல்ல உறுதுணையான ஆதரவை நல்கி இருப்பதற்காகவும் என்னுடைய நன்றியை நான் தெரிவித்துக்கொள்ள விரும்பு கிறேன். இது கூட்டுறவுத்துறையாக இருப்பதன் காரணமாக இதற்கு காரசாரமான எதிர்ப்பு காட்டுவது கூட அவ்வளவு நல்லதாக இருக்காது என்று கருதி கூட்டுறவோடு நடை பெறுவதுதான் நல்லது என்று கருதி, அதற்கான சூழ்நிலையை ஏற்படுத்திவிட்டுச் சென்ற நண்பர்களுக்கும் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்ள நான் கடமைப்பட்டிருக்கிறேன். ஏனென்றால் எல்லோருடைய நல்லுறவின் அடிப்படையில்தான் இது நடைபெறவேண்டும். அப்போதுதான் நாட்டினுடைய உறவு காப்பாற்றப்பட்டு நல்லுறவு நிலை நாட்டப்படும். அந்த வகைகளில் இந்தக் கூட்டுறவு இயக்கம் மாண்புமிகு உறுப்பினர்கள் பலரும் எடுத்துத் தெரிவித்ததற்கிணங்க பொதுமக்களுடைய நல்ல ஒத்துழைப்போடும், ஆதரவோடும், ஈடுபாட்டோடும், அவர்களை அரவணைத்துக் கொண்டும், அவர் களுடைய நன்மைபொருட்டும் அவர்களால் நடத்தப்படவேண்டிய ஒரு இயக்கமாகவும் இருந்துவருவதற்கான வகைகளில் உள்ள காரண காரிய விளக்கங்களை மிகத் தெளிவாக எடுத்துச் சொன்னார்கள்.

இந்த இயக்கம் மிகப் பெரிய அளவில் பணியாற்றி வருகிறது என்பதையும் இங்கே பலரும் மிகச் சிறப்பாகச் சுட்டிக் காட்டினார்கள். கூட்டுறவு இயக்கம் இந்தியாவிலேயே மிகச் சிறப்பாகப் பணியாற்றி வருகின்ற மாநிலங்களில் தமிழகமும் ஒன்று என்பதையும் உறுப்பினர்கள் சிலர் இங்கே சுட்டிக் காட்டினார்கள். அந்த வகையிலே மகாராஷ்டிரா, குஜராத், தமிழகம் ஆகிய மாநிலங்கள் மிகச் சிறந்த நிலையில் இருந்து பணியாற்றி வருவதை எல்லோரும் நன்கறிவார்கள்.

மொத்தத்தில் 1904 ஆம் ஆண்டு கூட்டுறவு இயக்கம் தோன்றியபோது, கூட்டுறவுத் துறையினுடைய முதல் வித்தினை இட்ட இடமே தமிழகம்தான் என்பதையும் நாடும் உணரும், உறுப்பினர்களும் நன்கு அறிவார்கள். 1904 ஆம் ஆண்டில் தான் மத்திய அரசு கூட்டுறவு இயக்க சட்டத்தை முதன் முதல் உருவாக்கிற்று. அதனை உருவாக்கியவுடனே அப்போது சென்னை மாகாணமாக இருந்த நிலைமையில் சர். பி. இராஜகோபாலாச்சாரியார் அவர்களை மாநில கூட்டுறவு பதிவாளராக உருவாக்கி அவர்களுடைய தலைமையின் கீழ் கூட்டுறவுச் சங்கங்கள் அமைத்தபோது அவர்களுடைய சொந்த மாவட்டமாக இருக்கிற செங்கற்பட்டு மாவட்டத்தில் இருக்கிற தன்மையை அடிப்படையாக வைத்து முதல் கூட்டுறவுச் சங்கம் செங்கற்பட்டு மாவட்டத்தைச் சேர்ந்த மப்பேடு கிராமத்திற்கு அருகேயுள்ள கீழச்சேரியில்தான் துவங்கப்பட்டது என்பதையும் இந்தியாவிலேயே முதல் விளைச் சங்கம் அங்கேதான் துவக்கப் பட்டது என்பதையும், அங்கே விதைத்த விதைதான் இன்றைக்கு நாடு முழுவதும் தழைத்து ஓங்கி நிற்கிறது என்பதையும் நாம் நன்றாக அறிவோம்.

அந்த வகையிலே முதன் முதல் நகர வங்கி ஏற்படுத்தப்பட்ட இடமும் காஞ்சிபுரமே ஆகும். அப்படி வளர்ந்தோங்கி வந்திருக்கிற கூட்டுறவு இயக்கம் இப்போது பல்வேறு வகைகளிலேயும் சிறந்து பரந்து விளங்கி வருகிற தன்மையின் அடிப்படையில் இப்போது 8 தலைமைச் செயலகத்தைச் சார்ந்த செயலாளர்களின் ஆளுகையின் கீழ், 14 துறைத் தலைவர் களுடைய தலைமையின் கீழ், 14 செயற் பதிவாளர்களுடைய ஆளுகையின் கீழ், 49 வகையான கூட்டுறவு இயக்கங்கள் 29,980 கூட்டுறவுச் சங்கங்களை கொண்டனவாக 1 கோடியே



93 லட்சத்து 45 ஆயிரம் உறுப்பினர்களை உள் அடக்கிக் கொண்டு வளர்ந்து வருகிற பாங்கினை கவனிக்கிறபோது அது எந்த அளவுக்கு பொது மக்களை அணைத்துக் கொண்டு, எவ்வளவு துறைகளின் சார்பாக எப்படி பணியாற்றி வருகிறது என்பது ஓரளவுக்கு மாண்புமிகு உறுப்பினர்கள் அறிந்துக் கொள்வதற்கும், புரிந்துக் கொள்வதற்கும் மிக மிக பயன் பெறுவனவாக அமையும்.

அந்த வகையிலேதான் இந்தக் கூட்டுறவு இயக்கம் மிகச் சிறப்பாக நடைபெற வேண்டும். பொது மக்களுடைய ஈடுபாடு கொண்டு, ஆங்காங்கு இருக்கிற பொதுமக்களில் அறிந்தவர்களும், புரிந்தவர்களும், வல்லவர்களும், நல்லவர்களும் இதில் பொறுப்பு ஏற்று நடத்துவதற்கு முன்வருவார்களேயானால் இந்த இயக்கம் மாண்புமிகு உறுப்பினர்கள் கூறுவது போன்று மிகச் சிறப்பான முறையிலேயும், நாம் எதிர்பார்க்கிற அளவுக்கு நன்மைகள் பலவற்றை ஆங்காங்கு அந்தந்த துறையில் ஏற்படுவதற்கு வழிவகைகள் ஏற்படக் கூடும். அந்த நிலைமையினுடைய அடிப்படையிலேதான் அதற்கு தேர்தல் நடக்க வேண்டும் என்ற கருத்தை மாண்புமிகு உறுப்பினர்கள் பல பேர் பல தடவை இந்த அவையிலே குறிப்பிட்டுச் சொல்லி யிருக்கிறார்கள். இந்த வாதத்தின்போதும் மாண்புமிகு உறுப்பினர்கள் பலரும் சுட்டிக் காட்டியிருக்கிறார்கள். அப்படிப் பட்ட சூழ்நிலை அதற்கு ஏற்பட வேண்டும் என்பதுதான் அரசினுடைய நோக்கமும் கூட. அப்படி ஒரு சூழ்நிலையை உருவாக்க வேண்டும் என்பதிலும், அரசு அதிகாரிகள், அரசு அலுவலர்கள், பணியாளர்கள் ஆகியவர்களை மட்டுமே வைத்துக் கொண்டு இந்த இயக்கத்தைச் செம்மையாக நடத்திட முடியாது என்பதையும் அரசு உணர்கிறது.

பொது மக்கள் இயக்கமாக இருக்கிற இந்தக் கூட்டுறவு இயக்கம் பொது மக்களுடைய முழு பங்கும் இருக்கிற சூழ்நிலைக்கு இருக்குமேயானால்தான் அக்கறையோடும், ஆர்வத்தோடும் ஆங்காங்கே அந்த நிர்வாகத்தினுடைய அடிப்படையிலே ஆங்காங்கு அமைவதற்கும் ஆங்காங்கே சிறப்போடு பணியாற்றுவதற்கும் வழிவகை ஏற்படும். அந்த முறையிலேதான் கூட்டுறவு சட்டத்திலே உள்ள பல்வேறு குறைபாடுகள், பல்வேறு முரண்பாடுகள் மற்றவைகளை எல்லாம்

நீக்க வேண்டும் என்ற முறையில் பல்வேறு கருத்துக்கள் எல்லாம் கொண்டுவரப்பட்டு கூட்டுக் குழுவும் அமைக்கப்பட்டு, 1980-லே இங்கே ஒரு சட்டம் இயற்றப்பட்டது என்பதையும், அதற்கேற்றபடி அதன் விதிமுறைகள் எல்லாம் வகுக்கப்பட்டு, அந்த விதிமுறைகளை அரசு ஏற்றுக் கொண்டு, அதை அறிவிப்பு செய்ததற்குப் பிறகு தேர்தலை நடத்த வேண்டும் என்ற ஒரு முனைப்பு உள்ளத்தையும் அரசு கொண்டிருக்கிறது என்பதையும் இதற்கு முன்னாலே கேள்விக்கு விடை அளிக்கும்போதே நான் குறிப்பிட்டேன்.

அது மட்டும் அல்லாமல் அகில இந்திய அளவிலே நடைபெற்ற கூட்டுறவு அமைச்சர்கள் மாநாட்டிலும், இது மாதிரி கூட்டுறவு இயக்கங்களுக்கு தொடர்ந்து தேர்தலை நடத்த முடியாது இருக்கிற மாநிலங்கள் எல்லாம், பொது மக்கள் பங்கு கொள்கிற அளவுக்கு அதனுடைய தேர்தல்களை விரைவாக நடத்தவும், செம்மையாக நடத்தவும் செய்கிற அந்தத் தீர்மானத்தை நிறைவேற்றி எல்லா மாநிலங்களும் வற்புறுத்தப்பட்டிருக்கின்றன. சில பல மாநிலங்கள் இந்த கூட்டுறவு தேர்தலை தொடர்ந்து நடத்திக் கொண்டு வருகின்றன. சில பல இடங்களில் கலைப்பும், தேர்தலும், கலைப்பும், தேர்தலும் மாறி மாறி நடைபெற்றுக் கொண்டு வருகின்றன. சில பல இடங்களிலே தொடர்ந்து கலைப்பு இருந்து கொண்டு வருகிறது. அங்கே தேர்தல்களை நடத்த வேண்டிய கட்டத்தில் அவர்கள் இருந்துக் கொண்டிருக்கிறார்கள்.

உதாரணத்திற்கு நம்முடைய மாநிலத்திலேயே சில பல இடங்கள் இருக்கின்றன. ஆகவேதான் அண்மையிலே இந்தியாவினுடைய பிரதமர் ராஜீவ் காந்தி அவர்களும் கூட இந்த கூட்டுறவு அமைச்சர்கள் மாநாட்டிலே நிறைவேற்றிய தீர்மானத்தை அடிப்படையாக வைத்து எல்லா மாநில அமைச்சர்களுக்கும் அனுப்பி, விரைவிலே அதனுடைய பணிகள் செம்மையாக நடைபெற வேண்டும், பொது மக்கள் ஈடுபாடு கொள்கின்ற அளவுக்கு எந்தெந்த மாநிலத்தில் இந்த கூட்டுறவுத் தேர்தல் நடைபெறவில்லையோ அங்கேயெல்லாம் விரைவிலே நடத்தி, பொது மக்களை ஈடுபாடு கொள்ளச் செய்து அதனுடைய நோக்கங்களை நிறைவேற்ற உறுதுணையாய் இருக்க வேண்டும் என்று மாநில அரசையெல்லாம் மத்திய அரசின்

சார்பாக இந்தியாவினுடைய பிரதமர் அவர்கள் கேட்டுக் கொண்டும் இருக்கிறார்கள். அந்தக் கடிதம் எல்லா மாநில முதலமைச்சர்களுக்கும் அனுப்பப்பட்டிருக்கிறது. அந்த வகையிலே ஆந்திரப் பிரதேசத்தை எடுத்துக் கொண்டாலும் கூட்டுறவுச் சங்கங்கள் ஒட்டுமொத்தமாக 1975 ஆம் ஆண்டிலே கலைக்கப்பட்டு, 1985-ல் மறுபடியும் தேர்தல் நடத்தப்பட்டு, மறுபடியும் 1986-ல் ஒட்டுமொத்தமாக கலைக்கப்பட்டு, இப்போது தேர்தல் நடத்த வேண்டிய கட்டத்தில் அங்கே இருந்து கொண்டிருக்கிறார்கள். அங்கேயும் தேர்தல் நடத்த வேண்டுமென்ற சூழ்நிலை இருந்து கொண்டு வருகிறது. அங்கே மத்திய, மாநில கூட்டுறவு வங்கிகள் 1975 முதல் 1982 வரையில் கலைக்கப்பட்டு மறுபடியும் 1985 வரையில் தேர்தல் நடைபெற்று, மறுபடியும் 1985-லிருந்து தனி அலுவலர்கள் நியமிக்கப்பட்டு நடத்த வேண்டுமென்ற ஒரு முறை தான் இருந்து வருகிறது.

(பிற்பகல் 1-30)

கர்நாடகத்தில் பிரதமச் சங்கங்களுக்கு மட்டும் அண்மையில் தேர்தல் நடத்தி இருக்கிறார்கள். மற்றைய மாவட்ட அளவிலும், மாநில அளவிலும் தேர்தல் நடத்த வேண்டிய கட்டத்தில் அங்கே இருந்து கொண்டு வருகிறார்கள். அதுமட்டுமல்லாமல் மணிப்பூர், இராஜஸ்தான், திரிபுரா, உத்திரபிரதேசம், மேற்கு வங்காளம் ஆகியவைகளில் நம்முடைய மாநிலத்தைப் போலவே தனி அதிகாரிகள் பல்வேறு மட்டங்களில் நியமிக்கப் பட்டிருப்பதன் காரணமாக அங்கேயும் தேர்தல் நடைபெற வேண்டியிருக்கிறது. ஒரிஸ்ஸா, பீகார், அஸ்ஸாம், ஹரியானா, பஞ்சாப் போன்றவைகளில் தொடர்ந்து தேர்தல்கள் நடைபெற்று கொண்டு வருகிறது. ஆகவே அவைகளை எல்லாம் வைத்து கணக்கிடுகின்றபோது தமிழகத்தைப் பொறுத்தவரையிலும் மாண்புமிகு உறுப்பினர்கள் வற்புறுத்துவதைப் போன்று தேர்தல் நடத்த வேண்டுமென்ற எண்ணத்தில்தான் தமிழக அரசு இருந்து வருகிறது என்பதைக் குறிப்பிட்டுக் கூறிக் கொள்ள விரும்புகிறேன். அதிலே ஏற்கனவே நான் குறிப்பிட்டுக் கூறியதைப் போன்று கூட்டுறவுச் சங்கங்களினுடைய பதிவாளரின் ஆளுகைக்கு கீழ் 11,675 சங்கங்கள் செயல்பட்டு வருகின்றன. 1976 ஆம் ஆண்டில் நெருக்கடி காலத்தில் இயற்றப்பட்ட

[டாக்டர் இரா. நெடுஞ்செழியன்] [1987 ஏப்ரல் 11

தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் தனி அலுவலர்கள் நியமனச் சட்டத்தின் கீழ் 380 சங்கங்களில் தனி அலுவலர்கள் நியமிக்கப் பட்டார்கள். அதற்குப் பிறகு 1986 ஆம் ஆண்டு இயற்றப்பட்ட வேளாண்மைக் கூட்டுறவுச் சங்கங்கள் தனி அலுவலர்கள் நியமனச் சட்டத்தின் கீழ் 4,655 கிராம விவசாய சேவை கூட்டுறவுச் சங்கங்களில் தனி அலுவலர்கள் நியமிக்கப்பட்டார்கள். ஏற்கனவே பல்வேறு குறைபாடுகள் காரணமாக கலைக்கப்பட்ட சங்கங்கள் மட்டும் 126 சங்கங்கள். அவற்றில் தனி அலுவலர்கள் செயல்பட்டு வருகிறார்கள். ஆகவே 11,675 சங்கங்கள் கூட்டுறவுச் சங்கங்கள் பதிவாளரின் ஆளுகையின் கீழ் இருந்து வருவதால் 5,161 சங்கங்களில் தனி அலுவலர்கள் பணிபுரிந்து வருகிறார்கள். 6,514 சங்கங்களிலே ஏற்கனவே தேர்ந்தெடுக்கப் பட்ட குழுக்களே தொடர்ந்து பணியாற்றி வருகின்றன. அல்லது நியமிக்கப்பட்ட குழு உறுப்பினர்கள் பணியாற்றிக் கொண்டு வருகிறார்கள். ஆகவே ஏற்கனவே 10 ஆண்டுக் காலம், 11 ஆண்டுக் காலத்திற்கு முன்பு தேர்ந்தெடுக்கப்பட்டவர்களே தொடர்ந்து அவர்கள் வேறு தேர்தல் நடத்தாமலே அனுபவித்துக் கொண்டு, தொடர்ந்து இருந்து வருகிற நிலைமை இருக்கிறது. அவ்வப்போது நியமிக்கப்படுகிற சூழ்நிலையில் ஆறாயிரத்து சில்லரை அளவிற்கு இந்த 11 ஆயிரத்தில் இருந்து கொண்டு வருகின்றன. ஆகவே அவற்றில் குழுக்கள் செயல்படுகிற அளவில் 550 சங்கங்களில் நியமன உறுப்பினர்கள் இருக்கிறார்கள். மற்றவைகளில் குழுக்கள் எல்லாம் செயல்பட்டு வருகின்றன. தேர்ந்தெடுக்கப்பட்ட குழுக்கள், நியமிக்கப்பட்ட குழுக்கள் என்ற அளவில் இவைகள் அத்தனைக்கும் சேர்த்து தேர்தல் நடைபெற வேண்டுமென்ற சூழ்நிலையில் முதல் முதலாக பால் வளத்தைப் பொறுத்தவரையில் கிட்டத்தட்ட 5,000-க்கும் மேற்பட்ட பிரதம கூட்டுறவுச் சங்கங்கள், பால் வளச் சங்கங் களுக்கு உடனடியாக தேர்தல் நடத்துவதற்கான அத்தகைய முயற்சிகளை வேளாண்மைத் துறையின் கீழ் நடவடிக்கை யெடுக்கப்பட்டு, அதற்கான முயற்சிகள் எல்லாம் நடைபெற்றுக் கொண்டு வருகின்றன.

நான் முதலில் கூறியபடி 49 வகையான இயக்கங்கள் நடைபெற்று வருகிறபோது எல்லாவற்றையும் ஒரே நேரத்தில் குறிப்பிட்டு நான் குறித்து செய்ய இயலாது. அவற்றை படிப்படியாக நாம் செய்ய வேண்டும். ஒவ்வொரு வகையாகவும்



1987 ஏப்ரல் 11] [டாக்டர் இரா. நெடுஞ்செழியன்]

செய்ய வேண்டும். இவைகளுக்கு புதிய சட்ட திட்டங்களை நாம் நிறைவேற்றி இருக்கிறோம். அதற்கான விதிமுறைகளை வகுத்திருக்கிறோம். அதனுடைய அடிப்படையில் சில பல உறுப்பினர்கள் சேர்ப்பதில், ஏற்கனவே இருக்கிற பழைய உறுப்பினர்களுக்கு நாம் இடம் தர வேண்டும். பல இடங்களில் போதுமான அளவிற்கு உறுப்பினர்கள் இல்லாத காரணத்தால் சில பல சங்கங்கள் கலைக்கப்பட்டு போதுமான அளவிற்கு பொது மக்களிடத்தில் அக்கறையும், ஆர்வமும் இல்லாத காரணத்தால் சேர வேண்டிய அளவிற்கு உறுப்பினர்கள் சேர்ந்து அந்தச் சங்கங்களை வளர்க்க முடியாமல் இருக்கிறார்கள். அதற்கு ஒரு வாய்ப்பு அளிப்பதற்கு 2 மாதமோ, 3 மாதமோ, 4 மாதமோ கால வரையறை கொடுத்து, இந்த புதிய சட்ட திருத்தத்தின் அடிப்படையிலே அவர்கள் உறுப்பினர்களாக சேருவதற்கு வாய்ப்பு கொடுத்து, அதற்குப் பிறகு அவர்கள் நாமினேஷன் போட்டதற்குப் பிறகு அடிமட்டத்தினுடைய தேர்தலை நாம் நடத்த வேண்டும், அதற்குப் பிறகு மாவட்ட அளவிலே தேர்தல் நடத்த வேண்டும், மாநில அளவிலே தேர்தல் நடத்த வேண்டும். எப்படியும் நாம் சொல்லியிருப்பது, இந்த ஒரு ஆண்டுக் காலத்திற்குள்ளே— நான் இங்கே தனி அலுவலர்களுக்கு 1 ஆண்டுக் காலம் பதவி நீட்டிப்பு கேட்டு வாங்கியபோது எடுத்துச் சொல்லியது போல அந்தக் காலத்திற்குள்ளே—இந்தத் தேர்தல்களினுடைய நாட்கள் எல்லாம் வரையறுக்கப்பட்டு, நடத்தி முடிக்க வேண்டும் என்ற எண்ணத்தைத்தான் இந்த அரசு வைத்திருக்கிறது. அந்த எண்ணத்தின் அடிப்படையிலே அந்த நாட்கள் எல்லாம் வரையறுக்கப்பட்டு, தனித்தனியாக அந்தத் துறையைப் பொறுத்த வரையிலும், அந்தந்த இயக்கத்தைப் பொறுத்த வரையிலும் அது செம்மையாக நடைபெற வேண்டும் என்பதற்கான முறையில் அந்தந்தத் துறையினர் முடுக்கிவிடப் பட்டிருக்கிறார்கள். ஆகவே பொது மக்களால் தேர்ந்தெடுக்கப் படுகிறபோது பொது மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள் கையிலே, பெரியாரும் மற்றவைகளும் ஒப்படைக்கப்படுகிற போது—தவறு செய்வார்களானால் அவர்கள் மீது நடவடிக்கை எடுப்பதற்கு சட்ட திட்டங்களிலே இப்போது ஏராளமான வழிவகைகள் எல்லாம் வகுக்கப்பட்டு இருக்கின்றன— அவர்களுடைய முயற்சியும் பொது மக்களுடைய ஒத்துழைப்பும் இருக்குமானால், நாம் எதிர்பார்ப்பதைவிட இந்த இயக்கங்கள்

[டாக்டர் இரா. நெடுஞ்செழியன்] [1987 ஏப்ரல் 11

இன்னும் நன்றாக, சிறப்பாக வளர்ச்சி அடைவதற்கு வாய்ப்பு ஏற்படக் கூடும். தனி அலுவலர்களை நாம் நியமிக்கிறபோது ஒரு குறிப்பிட்ட காலத்திற்கு, குறிப்பிட்ட நேரத்திற்குத் தான் இருப்பார்கள். அவர்களுக்கு எல்லாம் அதிக அக்கறை அந்தந்தச் சங்கங்களிலே இருக்கும் என்று நாம் எதிர்பார்ப்பதற்கு இல்லை. அந்தந்த ஊரைச் சேர்ந்த மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டவர்களுக்குத்தான் அதிக அக்கறை இருக்கும், ஆர்வம் இருக்கும். அந்தச் சங்கம் வளர்ந்து அந்த மக்களுக்கும் பயன்பட வேண்டும் என்ற எண்ணம் இருப்பதன் காரணமாகத்தான், இந்தத் தேர்தல் விரைவிலே நடைபெற வேண்டும் என்பதிலே அரசும் அக்கறை கொண்டிருக்கிறது என்பதை இந்த வாய்ப்பிலே மாண்புமிகு உறுப்பினர்களுக்கு நான் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

வேளாண்மைக் கடன்கள் வழங்குவதிலே ஆண்டுக்காண்டு இந்த கூட்டுறவு இயக்கம் அதிகமான அளவிற்கு நிதி ஒதுக்கீடு செய்து வருகிற பாங்கினை விளக்க அறிக்கையிலே நாம் ஓரளவிற்கு குறிப்பிட்டு இருக்கிறோம். 1978-79 ஆம் ஆண்டில் மொத்தமாக 102 கோடியே 65 லட்சம் ரூபாய் கொடுத்தோம் என்று சொன்னால், 1985-86-லே 151 கோடியே 2 லட்சம் ரூபாயை வழங்கினோம். 1986-87-லே கிட்டத்தட்ட 187 கோடி ரூபாயை நாம் வழங்கியிருக்கிறோம்.

அதைப்போல ஆரம்ப நிலவள வங்கிகள், நீண்ட காலக் கடன்கள் வழங்கிய வகையிலேயும், 1980-81-லே 4 கோடி 76 லட்சம் ரூபாய் வழங்கினோம் என்று சொன்னால், 1985-86-ல் 21 கோடியே 41 லட்சம் ரூபாய் வழங்குவதற்கு வசதி அளித்து, 1986-87-லே உத்தேசமாக 20 கோடியே 30 லட்சம் ரூபாய் வழங்குவதற்கு நாம் வாய்ப்புகளை ஏற்படுத்தித் தந்திருக்கிறோம்.

ஆதி திராவிட பழங்குடியினருக்கு கடன் வழங்கிய வகையிலேயும் கூட 1980-81-லே நாம் கடன் தொகையாக 5 கோடியே 30 லட்சம் ரூபாய் வழங்கினோம் என்று சொன்னால், 1986-87-லே—28—2—1987 வரையில்—7 கோடியே 52 லட்சம் ரூபாய் நாம் வழங்கியிருக்கிறோம்.

அதைப் போன்று மத்திய காலக் கடன்கள் 1 கோடியே 75 லட்சம் ரூபாய் வழங்கிய இடத்தில் இப்போது 2 கோடியே 84 லட்சம் ரூபாய் வழங்கியிருக்கிறோம். ஆகவே மொத்தக்



1987 ஏப்ரல் 11] [டாக்டர் இரா. நெடுஞ்செழியன்]

கடன்களிலே, 1981-82-ல் ஆதி திராவிட, பழங்குடியினருக்கு 17.9 சதவீதம் வழங்கியிருக்கிறோம். 1986-87-லே—பிப்ரவரி வரையிலும்—கணக்கிட்டுப் பார்த்தால் 14.7 சதவீதம் வழங்கியிருக்கிறோம்.

ஆதி திராவிடர்களுக்கு, பழங்குடியினருக்கு நீண்ட காலக் கடன் வழங்கிய வகையிலே கூட, 1981-82-லே 47 லட்சத்து 43 ஆயிரம் ரூபாய் வழங்கிய இடத்தில், 1985-86-லே 1 கோடியே 5 லட்சம் ரூபாய் வழங்கியிருக்கிறோம்.

அதேமாதிரி கூட்டுறவு வங்கிகளில் வைப்புத் தொகையை வளர்த்து—வைப்புத் தொகை வளர வளர, மற்ற வங்கிகள் தாராளமாகவும், ஏராளமாகவும், பலருக்கும் கடன் வழங்குகின்ற சூழ்நிலையை ஏற்படுத்தி இருப்பதன் காரணமாக நாமும் அந்த வாய்ப்பு வசதிகளை ஏழை மக்களுக்கு, நலிந்த மக்களுக்கு, மற்றவர்களுக்கு வழங்குகிற வாய்ப்பை, பெரிய பெரிய வங்கிகள், செட்யூல்டு பேங்குகள், தேசியமயமாக்கப்பட்ட வங்கிகளை விட, சாதாரண மக்கள், நலிந்தவர்கள் மற்றவர்களை கவனிக்கின்ற பொறுப்பை, அரசு அக்கறையோடு கவனித்துக் கொள்கிற அளவிற்கு கூட்டுறவு வங்கிகள் இருப்பதன் காரணமாக, அதனுடைய வைப்புத் தொகையை எல்லாம் பெருக்குகின்ற அளவிற்கு நாம் அதிக நாட்டம் செலுத்தி வருகிறோம்.

ஆகவே மற்றைய வங்கிகளைக் காட்டிலும், இந்த வைப்புத் தொகைக்கு அதிகமாக வட்டி தருகிற அளவிற்கு ரிசர்வ் வங்கியும் நமக்கு அனுமதி அளித்திருக்கிறார்கள். ஆக, அதிக வைப்புத் தொகைக்கு ஆக்கமும், ஊக்கமும் தர வேண்டும் என்று ஆங்காங்கு நாம் பிரச்சாரம் செய்து வருகிறோம்.

1976-77-லே 200 கோடி ரூபாய் வைப்புத் தொகையாக இருந்த இடத்தில், 1985-86-லே 920 கோடியே 34 லட்சம் வைப்புத் தொகையாக இருந்து, 1986-87-லே—28—2—1987 வரை—940 கோடியே 80 லட்சம் ரூபாய் வைப்புத் தொகையாக வந்து இருக்கிறது. எவ்வளவுக்கெவ்வளவு இந்த வைப்புத் தொகை வளருகிறதோ அவ்வளவுக்கவ்வளவு வைப்பு வைக்கிறவர்களுக்கும் ஓரளவுக்கு லாபம் ஏற்படுகிறது என்பது மட்டுமல்லாமல் அந்த வைப்புத் தொகை சாதாரண மக்களுக்கு பயன்படுத்துவதற்கும் வசதி ஏற்படுகிறது.

[டாக்டர் இரா. நெடுஞ்செழியன்] [1987 ஏப்ரல் 11

விற்பனை பண்டகசாலைகளைப் பொறுத்தவரையிலும் கூட, நாம் இந்தியாவிலேயே முதல் இடத்தைப் பெற்றிருக்கிறோம். சில குறிப்பிட்ட வகைகளிலே, கூட்டுறவுச் சங்கங்களை நடத்துவதிலே நாம் சிறப்பான இடத்தைப் பெற்றிருக்கிறோம். வீடு கட்டுகின்ற வசதியை ஏற்படுத்தித் தருவதிலே இந்தியாவிலேயே முதல் இடத்தை தமிழகம் தான் பெற்றிருக்கிறது. பால் வளத்தைப் பொறுத்தவரையிலும், பால் வழங்குவதிலேயும் இந்தியாவிலேயே இரண்டாவது இடத்திலே தமிழகம் இருக்கிறது. முதல் இடத்தை குஜராத் பெற்றிருக்கிறது. அதற்கு அடுத்தபடியாக, கொடுக்கப்படுகின்ற கடன் அத்தனையும் வாங்கி, அது பயன்படுகின்ற அளவுக்கும் தமிழகம் மிகச் சிறப்பான இடத்திலேதான் இருந்து வருகிறது.

(பிற்பகல் 1-40)

விற்பனைப் பண்டகசாலைகளைப் பொறுத்தவரையில் 1975-76-ல் கிட்டத்தட்ட தமிழ்நாட்டில் கூட்டுறவு மொத்த விற்பனை பண்டகசாலைகள் 83 கோடியே 30 லட்சம் ரூபாய்க்கு விற்பனை செய்தன என்று சொன்னால் 1985-86-லே 319 கோடி ரூபாய்க்கு விற்பனை செய்கின்ற அளவுக்கும், நுகர்வோர் இணையத்தில் 2 கோடியே 34 லட்ச ரூபாய்க்கு விற்பனை ஆகியிருக்கிறது என்று சொன்னால், இப்பொழுது 14 கோடியே 65 லட்ச ரூபாய்க்கு விற்பனையாகி இருக்கிறது. இந்தியாவிலேயே 5 கோடி ரூபாய்க்கு மேல் விற்பனை செய்த மொத்த விற்பனை கூட்டுறவுப் பண்டகசாலைகளைக் கணக்கெடுத்துப் பார்ப்போமேயானால், அதிலும் 34 நிலையங்கள் 5 கோடி ரூபாய்க்கு மேல் விற்பனை செய்கின்ற தகுதியைப் பெற்றிருக்கின்றன. அந்த 34 நிலையங்கள், அகில இந்தியாவில் என்று சொன்னால், அதிலும் 17 நிலையங்கள் தமிழகத்திலே மட்டும் அமைகின்றன. அதிலே முதல் 10 நிலையங்களை எடுத்துக் கொள்வோமேயானால், அந்த முதல் 10 நிலையங்களிலும் 6 பண்டகசாலைகள் தமிழகத்திலே மட்டுமே அமைகின்றன. இந்தியாவிலேயே இருக்கின்ற சிறந்த நிலையங்களிலே இரண்டாவது நிலையம் வட ஆற்காட்டிலே அமைந்திருக்கிற மொத்த கூட்டுறவு விற்பனை நிலையம் என்பதை நாம் பெருமையோடு கூறிக் கொள்வோம். ஒவ்வொரு மாவட்டத்திலே இருக்கின்ற மொத்த விற்பனை கூட்டுறவு பண்டகசாலையும் இப்படி அதிகமான அளவுக்கு மக்களுடைய



1987 ஏப்ரல் 11] [டாக்டர் இரா. நெடுஞ்செழியன்]

நம்பிக்கையையும், நன்மதிப்பையும் பெறத்தக்க அளவுக்கு மற்ற இடங்களிலே வாங்குகிற சரக்குகளைவிட தரமுள்ள சரக்காக இருக்கிறது என்பதையும், அதுமட்டுமல்ல, மலிவாக இருக்கிறதென்பதையும், கேட்கிற சரக்கைத் தருகிற அளவிற்கான ஒரு பண்பையும் பெற்றிருக்கிற நிலைமையையும் நிலைநாட்டுவீர்களேயானால் இது மேலும் வளருவதற்கு நல்லதொரு சூழ்நிலை ஏற்படும். அதைத்தான் சிலபல பண்டகசாலைகளைப் பின்பற்றுகிற முறையிலே பின்பற்ற வேண்டுமென்று எல்லா வகைகளிலும் நாம் வற்புறுத்தி வருகிறோம். மாண்புமிகு உறுப்பினர்கள் பலரும் இங்கே குறிப்பிட்டது போன்று, நகைக் கடன் அளிப்பது என்ற முறையிலேயும் ஓரளவிற்கு வசதி வாய்ப்பை அளிக்கிறது என்ற தன்மையையும், அதையும் ஆண்டுக்காண்டு கூட்டி வருகின்ற தன்மையையும் நாம் பெற்றிருக்கிறோம். ஏற்கெனவே 1976-77-ல் மொத்தம் 40 கோடியே 10 லட்சம் ரூபாயை நகைக்காக நாம் செலவழித்தோம். 40 கோடியே 10 லட்சம் ரூபாயில் பலன் பெற்றவர்கள் 5 லட்சத்து 71 ஆயிரம் பேர். அதற்குப் பிறகு 1985-86-ல் அதன் மூலம் நாம் செலவழித்தது, நகைக்காக நாம் கடன் அளித்தது 289 கோடியே 82 லட்சம் ரூபாய். இதன் மூலம் பலன் பெற்றவர்கள் 13 லட்சத்து ஓராயிரம் பேர். 1986-87-ல் பிப்ரவரி இறுதி முடிய கணக்கெடுத்துப் பார்ப்போமேயானால் 296 கோடியே 52 லட்சம் ரூபாய். இதன் மூலம் பலன் பெற்றவர்கள் 12 லட்சத்து 41 ஆயிரம் பேர். ஆகவே 320 கோடி ரூபாயை 1987-88 ஆவது ஆண்டில் நாம் நகைக்காக கடன் தருவதற்கு திட்டம் போட்டிருக்கிறோம். இதன் மூலமாக 13½ லட்சத்திலிருந்து 14 லட்சம் பேராவது பலன் அடைவார்கள் என்று நாம் எதிர்பார்க்கிறோம்.

இங்கே கூட்டுறவு வங்கிக் கடன், வட்டிச் சலுகை மற்றவைகளைப் பற்றியெல்லாம் எடுத்துச் சொன்னார்கள். ஆனால், நான் அடிக்கடி எடுத்துச் சொல்லி இருப்பது மாதிரி 1973, 74, 75 ஆவது ஆண்டுக் காலம் வரையிலும் இந்தியாவிற்கே எடுத்துக்காட்டாக இருக்கிற வகையிலே சிறு விவசாயிகளாக இருந்தாலும், குறு விவசாயிகளாக இருந்தாலும், பெரும் விவசாயிகளாக இருந்தாலும், வாங்கிய கடனைத் திருப்பிச் செலுத்தி வந்திருக்கிறார்கள் என்பதை நாம் பெருமையோடு

கூறிக் கொண்டு வந்திருக்கிறோம். இதை நான் அடிக்கடி எடுத்துச் சொல்லி இருக்கிறேன். தஞ்சாவூர் முதன்மையான இடத்திலே கூட இருந்திருக்கிறது. கும்பகோணம் வங்கியும் சரி, தஞ்சாவூர் வங்கியும் சரி, கொடுத்த கடனிலே 99 சதவீதம், 99.6 சதவீதத்தை திருப்பித்தருகிற அளவுக்குக்கூட வந்து தமிழகத்திலேயே முதல் இடத்தை கும்பகோணம் வங்கி பெற்ற காலமும் உண்டு. அப்படிப்பட்ட நிலைமை மாறியது. அப்படி மாறுவதற்கு சூழ்நிலை எல்லாம் கூட காரணம், வங்கிகள் காரணம் அல்ல. ஏன் என்றால் வாங்கிய கடனை திருப்பியே தர வேண்டாம் என்று ஒரு இயக்கம் வளர்ந்து, அந்தப் புயல் நாடு எங்கும் வீசி அதன் காரணமாக நாம் ஏன் ஏமாந்து கொடுக்க வேண்டும் என்று பல பேர் வைத்து இருந்தது ஒரு காரணம். ஏற்கெனவே பஞ்சமே வராமல் இருந்ததா? வெள்ளமே வராமல் இருந்ததா? அதற்கு முன்னால் கணக்கு எடுத்துப் பார்க்க முடியாதா? என்று சொன்னால் ஒரு 100 ஆண்டு காலமாகப் பார்த்தால் 4 ஆண்டுகளுக்கு ஒரு முறை வெள்ளம் வருவதும், 2, 3 ஆண்டு காலத்திற்குள் தொடர்ந்து வறட்சி வருவதும் ஒரு சைக்கிள் மாறி, மாறி வந்து கொண்டு இருந்து இருக்கிறதே தவிர இயற்கையில் ஏற்படுகிற விதிமுறைகள் தொடர்ந்து அதனுடைய சைக்கிள் நடந்து கொண்டு இருந்து இருக்கிறதே தவிர, அது குறிப்பிட்ட 10 ஆண்டு காலத்துக்குத் தான் நிற்கும், அதற்கு முன்னால் இல்லை என்பது அல்ல. ஆனாலும் அப்படிப்பட்ட ஒரு முடிவு ஏற்படுகிற சூழ்நிலை ஏற்பட்டது துர்பாக்கியம் தான். ஆனாலும் கூட அத்தகைய தன்மைகளுடைய அடிப்படையை பார்த்துதான் 31—3—1986 கடன்கள் நிலுவை மத்திய கூட்டுறவு வங்கியைப் பொறுத்த வரையில் 264 கோடியே 69 லட்சம் ரூபாய் இருந்தது. 1—4—1986 முதல் நாம் சலுகையை வழங்கினோம். அதுவரையில் இருந்த அசல் முழுவதையும் கட்டி விட்டால், வட்டி அபராத வட்டி ஆகியவற்றை அரசு தள்ளி விட்டோம். தள்ளிவிட்டோம் என்றால் அதன் மூலம் 125 கோடி தள்ள வேண்டி வரும் என்று சொன்னோம். அதற்கு முன்னால் கட்டியவர்களுக்கு நாம் திருப்பிக் கொடுக்க வேண்டி வரும் என்றும் சொன்னோம். அப்படி திருப்பிக் கொடுக்க வேண்டிய வகையில் 15 கோடி ரூபாய், 20 கோடி ரூபாய் கொடுக்க வேண்டி வரும் என்று சொன்னோம். ஆனால்



125 கோடியை தள்ளு என்றால் அதைக் கவனிக்க வேண்டிய அவசியம் இல்லை என்று அர்த்தம் இல்லை. 125 கோடி ரூபாய் அரசு பணத்தை வேறு வகையில் செலவழிக்கக் கூடிய பணத்தை எடுத்து வங்கிகளுக்கு நாம் செலுத்துகிறோம் என்று பொருள். இங்கே மாமன்றத்து உறுப்பினர்கள் எல்லாம் கேட்கிறார்கள், பள்ளிக்கூடங்கள் வேண்டும், ஆஸ்பத்திரி வேண்டும், டாக்டர்கள் வேண்டும், அதிக படுக்கை வசதிகள் வேண்டும் என்று எல்லாம் கேட்கிறார்கள். அங்கே வெட்டுகிறோம் என்று அர்த்தம். ஆக 125 கோடி ரூபாய் இங்கே வெட்டு விழுகிறது என்று அர்த்தம். இதை எடுத்து அங்கே தரவேண்டிய அவசியம் வருகிறது. தள்ளு, தள்ளு என்றால் இங்கே தள்ள வேண்டும். இங்கே வளர்ச்சித் திட்டங்களைத் தள்ளினால்தான் அங்கே தள்ள முடியும். சுலபமாக சொல்கிறார்கள், அங்கே வட்டியை தள்ள வேண்டுமானாலும் தள்ளு தள்ளு என்று இங்கே இருந்து தள்ளினால்தான் முடியும். ஆக அரசினுடைய கஜானாவிலிருந்து 125 கோடி ரூபாயை எடுக்கிறோம். இல்லாவிட்டால் இந்த 125 கோடி ரூபாயை அங்கே ஒழுங்காகக் கட்டியிருப்பார்களானால் 125 கோடி ரூபாயை இந்த 234 தொகுதிக்கு வேறு வகையில் செலவழித்து இருக்கலாம்; வளர்ச்சிக்கு பயன்படுத்தி இருக்கலாம்; ஆக திட்டங்களுக்கு பயன்படுத்தி இருக்கலாம்; 125 கோடி ரூபாயை நாம் முதலீடாகப் போட்டிருந்தால் 4 வருடத்தில் 250 கோடி ரூபாயாக ஆகி இருக்கும். 8 வருடத்தில்—இன்றைக்கு பணம் செல்கிற வேகத்தில்—5 மடங்கு, 6 மடங்காக ஆகி இருக்கும்; அசட் ஆக ஆகியிருக்கும்.

ஆனாலும் கூட ஏழை எளிய மக்களுடைய நன்மை கருதி, விவசாயிகள் நன்மை கருதி, வேறு எந்த மாநிலமும் கடைப்பிடிக்காத ஒரு முறையைக் கடைப்பிடித்து, இதற்குள் அசலையாவது கட்டட்டும், ஏன் என்றால் 5, 6, 7, 8, 10 ஆண்டாக கூட கட்டாமல் இருக்கிறார்கள்; 3 ஆண்டு, 4 ஆண்டுக்கு மேலும் கட்டாமல் இருக்கக்கூடாது என்பதற்குத்தான் இந்த சலுகை தர வேண்டும் என்று நாம் சொன்னோம்.

அந்த வகையில் 1—4—1986-லிருந்து முதலில் 31 டிசம்பர் வரை சொன்னோம். இந்த ஜனவரியில் அறுவடை ஆவதால் கையில் கொஞ்சம் பணம் வரும் அப்படி வந்தால் கட்டிவிடுவார்கள் என்று சொன்னதற்குப் பிறகு பெரும் பெரும் தலைவர்கள்

[டாக்டர் இரா. நெடுஞ்செழியன்] [1987 ஏப்ரல் 11

சொன்னார்கள், கட்சித் தலைவர்கள் சொன்னார்கள், விவசாயத்தில் ஈடுபட்டு இருப்பவர்கள் சொன்னார்கள். அது வருமானத்தைக் கொடுக்கிற மாதம் என்று எல்லாம் சொன்னார்கள். அதனுடைய அடிப்படையில் நாம் 28—2—1987 வரையில் ஓரளவுக்கு தள்ளினோம். அந்த வகையில் 264 கோடியே 69 லட்சம் ரூபாயில் வசூல் ஆகியிருக்கிற தொகை மத்திய கூட்டுறவு வங்கியை பொறுத்தவரையில் 155 கோடியே 45 லட்சம் ரூபாய் வசூல் ஆகியிருக்கிறது. முழு அளவில் கட்டி விட்டு உடன் கடன் தருகின்ற வகையில் 120 கோடியே 16 லட்சம் ரூபாய் முழுமையாக செலுத்தி இருக்கிறார்கள். முழுமையாக அசல் 20 ஆயிரம் ரூபாய் கட்டி இருப்பார்களானால் சில பேர் 22 ஆயிரம், 23 ஆயிரம், 24 ஆயிரம் கூட வட்டி, அசல், தண்ட வட்டி ஆகியவை அவர்களுக்கு நீக்கப்பட்டு இருக்கிறது. 20 ஆயிரம் ரூபாய் கட்டி, 24 ஆயிரம் ரூபாய் லாபம் பெற்றவர்கள் உண்டு. 20 ஆயிரம் ரூபாய் கட்டி 16 ஆயிரம் ரூபாய், 18 ஆயிரம் ரூபாய் லாபம் பெற்றவர்கள் உண்டு. சில பேர் 1 வார காலம் 1½ வார காலத்தில் பிரஷ் லோன், புதிய கடன் கொடுக்கிற வாய்ப்பைப் பயன்படுத்த வேண்டும் என்பதற்காக முழுமையும் கட்டியிருக்கிறார்கள். அப்படிப்பட்டவர்களை நாம் பாராட்டவும் கடமைப்பட்டிருக்கிறோம். அந்த வகையில் 120 கோடியே 16 லட்சம் ரூபாய் கட்டியிருக்கிறார்கள். வசூல் ஆனதில் பாதி கடன் கட்டியவர்கள் பாதியை இப்போது கட்டலாம் பாதியை 30—6—1987-க்குள் கட்டலாம் என்று சொன்ன வகையில் 32 கோடியே 45 லட்சம் ரூபாயை கட்டியிருக்கிறார்கள்.

(பிற்பகல் 1-50)

ஆக இன்னும் பாக்கி இருப்பது ரூ. 109.24 கோடி. இதிலே பாதியைக் கட்டியவர்கள், இன்னொரு பாதியைக் கட்டினால் தான் அவர்களுக்கு முழு அளவில் வசதி கிடைக்கும். கட்டியும் விடுவார்கள். கட்டாமல் இருக்க மாட்டார்கள். கட்டினால் தான் எஃபெக்ட் வரும் என்று மீதி பாதியைக் கட்டி விடுவார்கள். எனவே இன்னும் ரூ. 32 கோடி வரும். ஆக அரசுக்கு இதுவரையிலும் திருப்பிச் செலுத்த வேண்டிய வட்டியை, 1—4—1986-ல் போட்டாலும், 1—7—1985-ல் கட்டி இருக்கிறார்கள். இந்த அரசாங்கத்தை நம்பி நாணயமாகக்



1987 ஏப்ரல் 11] [டாக்டர் இரா. நெடுஞ்செழியன்]

கட்டியவர்களை காற்றில் விடக் கூடாது என்பதால்தான் அவர்கள் கட்டிய வட்டியைத் திருப்பித் தந்து விடலாம் என்ற வகையில் ரூ. 8.07 கோடியை அவர்களைக் கூப்பிட்டு திரும்பத் தந்துவிட்டோம். அந்த வகையில், நாம் வட்டித் தள்ளுபடியாக ரூ. 40.40 கோடியை இதுவரையில் செலுத்தியவர்களுக்கு நாம் தரவிருக்கிறோம். அதாவது வசூலான கணக்கு மட்டும் இந்த மத்திய கூட்டுறவு வங்கியைப் பொறுத்தவரையிலும் 58.7 சதவீதம். இன்னும் ஒரு பாதியைச் செலுத்தி விடுவார்களேயானால், கிட்டத்தட்ட 70-லிருந்து 75 சதவீதம் வசூலான கணக்கு வந்து சேர்ந்து விடும் என்று நான் எதிர்பார்க்கிறேன்.

அதைப்போலவே நிலவள வங்கியைப் பொறுத்தவரையிலும் 31—3—1986-ல் ரூ. 53.15 கோடி நிலுவையில் இருந்தது. 1—4—1986 முதல் 28—2—1987 வரை ரூ. 28.30 கோடி வசூலாகியிருக்கிறது. முழு அளவில் வசூலானது ரூ. 11.44 கோடி, பாதி அளவில் வசூலானது, ரூ. 15.76 கோடி. 1—3—1987-ல் கடன் நிலுவை பாக்கி இருந்தது ரூ. 24.84 கோடி. அரசு திரும்ப செலுத்திய வட்டி ரூ. 1.93 கோடி. சலுகைகள் தள்ளுபடி செய்த வட்டித் தொகை ரூ. 12.57 கோடி. இந்த நிலவள வங்கியைப் பொறுத்தவரையிலும் வசூல் சதவீதம் 53.3 சதவீதம். இரண்டு வங்கிகளையும் சேர்த்துக் கணக்கிட்டுப் பார்ப்போமேயானால் மொத்தத்தில் இன்னும் கடன்கள் நிலுவையில் இருப்பது ரூ. 134 கோடி. மொத்தம் ரூ. 317.84 கோடி இருந்ததில் இப்போது இருப்பது ரூ. 134 கோடி. அதிலே இன்னும் பாதியைக் கட்டி விடுவார்களேயானால், இன்னும் கொஞ்சம் வசூலாகும் என்ற வகையில், இரண்டு வங்கிகளையும் சேர்த்து கணக்கிட்டுப் பார்த்தால் 57.8 சதவீதத்திற்கு வரும். கட்டுகின்றவர்களைப் பொறுத்தவரையில் இரண்டு கருத்துக்கள் இருக்கும். ஒன்று வட்டி எல்லாம் சேர்த்துக் கட்டி விடலாம் என்ற தைரியம் இருக்கலாம். அல்லது வசதி வரும்போது கட்டலாம் என்று இருக்க வேண்டும். அல்லது வீம்புக்கு கட்டாமல் இருக்கவேண்டும். ஆக இப்போது இருக்கிற சூழ்நிலைகளிலே இந்தத் தன்மைதான் வந்திருக்கிறது. ஆக சலுகைகளைக் கொடுக்க வேண்டுமென்ற நோக்கத்தின் அடிப்படையில் தான் இவையெல்லாம் வைத்துக் கொண்டிருக்கிறோம். அந்த அளவில் தான் அரசு முடிவு எடுத்திருக்கிறது.

**திரு. ந. சிவஞானம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய நாவலர் அவர்கள் பல்வேறு சலுகைகளை இப்போது அளித்திருக்கிறார்கள். 28—2—1987 ஆம் தேதியன்று கட்டாத விவசாயிகள் 30—6—1987-ல் முழு அசலையும் கட்டினால் அவர்களுக்கு இந்த அரசாங்கம் கொடுக்கின்ற சலுகைகள் அளிக்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** மாண்புமிகு அவைத் தலைவர் அவர்களே, இப்போது நிறைவேற்றிய சட்டத்தின்படி முடியாது. இப்போது போட்டிருக்கின்ற உத்தரவுப்படி முடியாது. அதைப் பற்றி நான் முடிவு எடுக்கவும் இயலாது. அதற்குப் பிறகு வேறு பல பிரச்சினைகளைப் பற்றி எல்லாம் மாண்புமிகு உறுப்பினர்கள் பலரும் இங்கே எடுத்துத் தெரிவித்தார்கள் என்றாலும்கூட, அவற்றைப் பற்றி எல்லாம் இங்கே பல விளக்கங்களைக் கூற வேண்டிய அவசியமில்லை என்று கருதுகிறேன். ஆனால் சில பல தன்மைகளை மட்டும் 1987-88 ஆம் ஆண்டில் இந்த அரசு நிறைவேற்ற இருக்கிற சில திட்டங்களை மட்டும் கூறிவிட்டு, என்னுடைய உரையை முடிக்கலாம் என்று கருதுகிறேன்.

மேலும் மாண்புமிகு உறுப்பினர்கள் ஆங்காங்கே தொகுதியில் இருக்கின்ற தன்மைகளைப் பற்றியும், இந்தத் துறையில் இருக்கிற வேறு பல ஏற்பாடுகள், மாற்றங்கள் பற்றியும், மற்றவைகளை எல்லாம் பற்றியும் குறிப்பிட்டிருக்கிறார்கள். இதையெல்லாம் துறையினர் குறித்துக் கொண்டிருக்கிறார்கள். அதன் மீது நடவடிக்கை எடுக்க முடியும். அவ்வப்போது எடுக்க வேண்டிய நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்பதை நான் குறிப்பிட்டு, 1987-88 ஆம் ஆண்டில் நிறைவேற்றப் போகும் சில பல திட்டங்களை மட்டும் மாண்புமிகு உறுப்பினர்களுக்கு இந்த வாய்ப்பில் நான் அறிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

1—5—1987 முதல் ஒரு சவரன் தங்க நகைக்கு ஈட்டின் பேரில் வழங்கப்படும் தொகையளவு ரூ. 1,000 என்று இருப்பதை மாற்றி ரூ. 1,200 ஆக உயர்த்திக் கொடுக்க அரசு முடிவு செய்திருக்கிறது. இதுவரையில் ரூ. 1000 என்ற லிமிட் வைத்திருந்தோம். இப்போது சவரன் விலை உயர்ந்திருப்பதன் காரணமாக இனிமேல் ரூ. 1,200 வரையில் ஒரு சவரனுக்குக் கொடுக்கலாம் என்று 1—5—1987-லிருந்து இந்த முறை கடைப்பிடிக்கப்படும். 1987-88 ஆம் ஆண்டு வேளாண்மைக் கூட்டுறவுக் கடன்களை





குறித்த காலத்திற்குள் திருப்பி செலுத்தும் சிறு விவசாயிகள், மற்றும் குறு விவசாயிகளுக்கு மட்டும் வட்டியில் 3 சதவீதம் தள்ளுபடி சலுகை வழங்கப்படும். அவர்கள் குறித்த ஒரு ஆண்டிற்குள் திருப்பிச் செலுத்த வேண்டும் என்று இருக்கின்ற காலத்திற்குள் கட்டி விட்டார்களானால் 11 சதவீதம் வட்டி என்றால் 3 சதவீதம் தள்ளுபடி செய்யப்படும். குறித்த காலத்திற்குள் கட்டி விட்டார்களானால் அந்தச் சலுகை அந்த ஆண்டு தரப்படுகிறது. இதே விதமான சலுகை நிலவள வங்கியில் கடன் வாங்கும் சிறு விவசாயிகள் மற்றும் குறு விவசாயிகள் மார்ஜினல் பார்மர்ஸ், ஸ்மால் பார்மர்ஸ் ஆகியவர்களுக்கு மட்டும் அளிக்கப்படும். தவணை தவறும் ஆண்டுகளில் இந்தச் சலுகை தர முடியவில்லை. அந்த அந்த ஆண்டுக்கு இவ்வளவு தவணை என்று இருக்கிறது. எந்தெந்த ஆண்டுகளில் தவணை தவறாமல் கட்டுகிறார்களோ அதற்குண்டு. தவறினால் இல்லை. தவறாமல் கட்டினால் நிலவள வங்கியிலும் இந்தச் சலுகை உண்டு. 1987-88 ஆம் ஆண்டு முதல் குறிப்பிட்ட சொந்த நிதி வசதியுடைய விவசாய சேவை கூட்டுறவுச் சங்கங்கள் மூலம் கிராமப்புறங்களில் திருப்பி கடனைச் செலுத்துகின்ற வாய்ப்பு வசதி, வழிவகைகளுடைய உறுப்பினர்களுக்கு நுகர்பொருளான மோட்டார் சைக்கிள், தொலைக் காட்சிப் பெட்டி, வானொலிப் பெட்டி போன்றவை வாங்குவதற்கு ரூ. 10,000-க்கு மேற்படாமல் 16 சதவீதம் வட்டியில் கடன் தொகை வழங்கப்படும். இதுவரை இப்படிப் பட்ட கடன் வழங்கப்படுவது இல்லை. ஆகவே கிராம மக்களுக்கு வழங்குவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி) தேர்ந்தெடுக்கப்பட்ட விவசாய சேவை கூட்டுறவுச் சங்க உறுப்பினர்களிடம் பெறப்படும் வைப்புத் தொகைக்கு வணிக வங்கிகள் வழங்குகின்ற வட்டியை காட்டிலும் இனிமேல் கூட்டுறவு வங்கிகளிலே வைப்புத் தொகை பிக்ஸெட் டெபாசிட்டில் வைத்தால் 2 சதவீதம் வட்டி கிராமக் கூட்டுறவு வங்கி கூடுதலாகத் தரும். ஷெட்யூல்ட் வங்கியோ, தேசியமயமாக்கப்பட்ட வங்கியோ தருகின்ற வட்டியை விட 2 சதவீதம் கூடுதலாக கிராமக் கூட்டுறவு வங்கி தரும் என்கின்ற சலுகை இனி தரப்படும். 1987-88 ஆம் ஆண்டில் வேளாண்மை சார்ந்த கிராம தொழில் வளர்ச்சி குடிசைத் தொழில் வளர்ச்சி போன்ற உற்பத்தி பெருக்க காரியங்களுக்கு மைய கூட்டுறவு வங்கிகள்

[டாக்டர் இரா. நெடுஞ்செழியன்] [1987 ஏப்ரல் 11

மற்றும் நகர கூட்டுறவு வங்கிகள் ஆகியவற்றின் மூலம் ரூ. 10 கோடி அளவிற்கு கடன்கள் வழங்க ஒதுக்கீடு செய்யப்படும். 1987-88 ஆம் ஆண்டு முதல் மகளிர் மேம்பாடு கருதி அவர்களுக்கு சுய தொழிலுக்காகவும், பிற ஏற்றுக் கொள்ளப்பட்ட காரியங்களுக்காகவும் விவசாய சேவை கூட்டுறவுச் சங்கங்கள் வழங்கும் மொத்தக் கடனில் சுமார் 5 சதவீதம் கடன் உதவி முறைப்படி வழங்கப்படும். மகளிர்க்கென்று 5 சதவீதம் அளவிற்குத் தனியாக ஒதுக்கித் தரலாம் என்று வைத்திருக்கிறோம். இதற்காவது பெண்கள் கை தட்டுங்கள். கூட்டுறவு நிறுவனங்களில் பணியாற்றும் பணியாளர்கள் பணிக் காலத்தில் இயற்கை எய்திவிட்டால் அவர்களின் வாரிசுதாரர்களுக்கு உதவுகிற குடும்ப நலத் திட்டத்தின்கீழ் இதுவரையிலும் ஒவ்வொருவரும் சந்தா தொகையாக கட்டி வரும் 12-ஐ இனி 20 ஆக உயர்த்திக் கட்ட வேண்டும். அதுபோன்று கூட்டுறவுச் சங்கமும் 12-ஐ ஈடு கட்டுவதை 20 ஆக ஈடு கட்டும். அந்த வகையில் அவர்களுக்கு இதுவரையில் வழங்கப்பட்டு வருகின்ற 6,000 ரூபாய் தொகை இனி 1—7—1987 முதல் 10,000 ரூபாயாக உயர்த்தி வழங்கப்படும். இப்போது கூட்டுறவு மொத்த விற்பனை பண்டகசாலைகள் மாநிலத்தில் 31 இடங்களில் சுய சேவை பிரிவுகளை துவக்கி நடத்திக் கொண்டு வருகின்றன. 1987-88 ஆம் ஆண்டில் கூட்டுறவு மொத்த விற்பனை பண்டகசாலைகள் மேலும் 20 இடங்களில் சுய சேவை பிரிவுகளை துவக்கி நடத்தும். மைய அரசு நிதி உதவியை பயன்படுத்தி 1987-88 ஆம் ஆண்டில் காலி மனை உள்ள இடங்களில் சிறப்பு அங்காடிகள் மற்றும் சிறப்பு சிற்றங்காடிகள் கட்ட திட்டமிடப்பட்டிருக்கிறது. இத்திட்டத்தின் கீழ் சிறப்பு அங்காடிகள் கட்ட ரூபாய் 10 இலட்சமும், சிறப்பு சிற்றங்காடிகள் கட்ட ரூபாய் 2 இலட்சமும் நிதியுதவி வழங்கப்படும். இதில் 75 சதவீதம் 15 ஆண்டுகளில் திருப்பி செலுத்தக்கூடிய கடனாகவும், 25 சதவீதம் மானியமாகவும் வழங்கப்படும். இப்போது 22 மொத்த விற்பனை பண்டக சாலைகள் 40 பகுதிகளில் நுகர்வோருக்கு வேண்டிய பொருள்களை மக்களது இல்லங்களுக்குச் சென்று விநியோகிக்கும் முறையை மகளிர் மூலமாக செயல்படுத்தி வருகின்றன. இந்த முறை வெற்றிகரமாக செயல்பட்டு வருகிறது. 1987-88 ஆம் ஆண்டில் இந்த முறையை மேலும் விரிவுபடுத்தி மேலும் பல



1987 ஏப்ரல் 11] [டாக்டர் இரா. நெடுஞ்செழியன்]

இடங்களுக்குக் கொண்டு வருவதற்கு முயற்சி மேற்கொள்ளப்படும். கிராம அங்காடிகளில் பணியாற்றும் விற்பனையாளர்களுக்கு கட்டுப்பாடற்ற பொருள்கள் விற்பனைக்கு அளிக்கப்படுகின்ற ஊக்குவிப்புத் தொகையின் மீது இதுவரையில் இருந்த சம்பளத்தின் 20 சதவீதம் என்ற உச்சவரம்பு இனி நீக்கப் படுகிறது. இனி அவர்கள் மாதம் 4,000 ரூபாய் வரை விற்பனை செய்தால் போதும் என்பதில்லை. அவர்கள் 10,000 ரூபாய்க்குக் கூடுதலாக விற்றாலும் அதற்கான ஊக்கத் தொகை உண்டு. 20,000 ரூபாய்க்குக் கூடுதலாக விற்றாலும் ஊக்கத் தொகை உண்டு என்ற தன்மை இருந்தால் அவர்கள் அதிகப்படி அக்கறை காட்டி விற்பார்கள் என்ற காரணத்தினால் அந்த உச்சவரம்பு நீக்கப் படுகிறது, இந்த ஆண்டிலிருந்து.

(பிற்பகல் 2-00)

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** பேரவையின் அனுமதியுடன் அவையின் அலுவல் நேரம் சிறிது நீட்டிக்கப்படுகிறது.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** இப்போது மொத்தம் 51 கூட்டுறவு விற்பனைச் சங்கங்களில் ஏல விற்பனை முறை நடைமுறையில் இருந்து வருகிறது. 1987-88 ஆம் ஆண்டில் மேலும் 10 கூட்டுறவு விற்பனை சங்கங்களில் ஏல விற்பனை முறை அறிமுகப்படுத்தப்படும்.

1987-88 ஆம் ஆண்டில் ஆரூர், விழுப்புரம், மணப்பாறை, ராசிபுரம் மற்றும் கள்ளக்குறிச்சி கூட்டுறவு விற்பனைச் சங்கங்கள் மற்றும் தஞ்சாவூர் கூட்டுறவு விற்பனை இணையம் ; ஆக 6 கூட்டுறவு விற்பனைச் சங்கங்கள் தேசிய கூட்டுறவு வளர்ச்சிக் கழகத்திடமிருந்து நிதியுதவியைப் பெற்று, பருத்தி அரவை ஆலைகள் நவீன முறையில் அமைக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

1987-88 ஆம் ஆண்டில், திருவாரூர், திருச்சி மற்றும் சென்னை ஆகிய மூன்று நகரங்களிலும் புதிய கூட்டுறவு அச்சகங்கள் அமைக்கப்படும்.

1987-88 ஆம் ஆண்டில் மேலும் இரண்டு இளநிலை கூட்டுறவு பயிற்சி நிலையங்கள், தென்னாற்காடு மாவட்டம் கடலூரிலும், பெரியார் மாவட்டம் ஈரோட்டிலும் துவக்கப்படும்.

[டாக்டர் இரா. நெடுஞ்செழியன்][1987 ஏப்ரல் 11

ஆகவே, இவைகளுக்கெல்லாம் நல்ல ஆக்கமும், ஊக்கமும் தர வேண்டும் என்று கேட்டுக் கொண்டு, மானியக் கோரிக்கைக்கு நல்லாதரவு தந்த உறுப்பினர் பெருமக்கள் அவ்வளவு பேருக்கும் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். இந்தத் துறைக்கு உறுதுணையாக இருந்து பணி புரிகிற செயலாளர், பதிவாளர் மற்றைய அலுவலர்கள், அதிகாரிகள் அத்தனை பேருக்கும் நன்றி தெரிவித்துக் கொள்கிறேன்.

கூட்டுறவுச் சங்கங்களில் வைக்கப்படுகிற வைப்புத் தொகைகளுக்கு, மற்ற வணிக வங்கிகளை விட ¼ சதவிகிதம் முதல் 2 சதவிகிதம் வரை—ஒரு கணக்கு இருக்கிறது—¼ சதவிகிதம் முதல் 2 சதவிகிதம் உச்சவரம்பு. அதுவரையிலும் வட்டி அதிகமாகத் தரப்படும் என்று திருத்திக் கொள்ளும்படியாகக் கேட்டுக் கொண்டு அமைகிறேன்.

**திரு. மு. இராசாங்கம்:** பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் பதிலுரையில், 1978 ஆம் ஆண்டு முதல் எழுத்தர்களாக பணியாற்றுகின்றவர்களை, வங்கியினுடைய ஊழியர்களாக அரசு எடுத்துக் கொள்ள வேண்டும் என்று ஆணை பிறப்பித்தும், கூட்டுறவுப் பதிவாளர் அதைப் பரிந்துரை செய்தும், இன்னும் அவர்களை வங்கி ஊழியர்களாக ஆக்கவில்லை என்பது பற்றி பதில் இல்லையே, பதில் தருவார்கள் என்று எண்ணுகிறேன். அதே நேரத்தில், அமைச்சர் அவர்கள் குடந்தை—தஞ்சாவூர் கூட்டுறவு வங்கி 1975 ஆம் ஆண்டுக்கு முன் சிறப்பாக இயங்கி வந்தது என்று குறிப்பிட்டார்கள். அதற்காக மாவட்டத்தின் சார்பாக என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்வதோடு . . . . . (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** முடித்துவிட்டீர்கள். (குறுக்கீடு) எல்லாம் உங்களுக்கு நல்ல செய்தி தான். போதும். (குறுக்கீடு) சரி, நீங்கள் சொல்லுங்கள்.

**திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய அமைச்சர் அவர்களுடைய பதிலிலே நகைகள் அடகு வைத்தால் இப்போது பவுனுக்கு 1,200 ரூபாய் கொடுப்பதாகச் சொன்னார்கள். வரவேற்கிறேன். நாங்கள் முதலில் கிராப் லோன் வாங்கிவிடுகிறோம். அதற்கு 12 சதவிகிதம் வட்டி, ஆனால் அந்தக் கடனைக் கட்ட முடியாமல்,



1987 ஏப்ரல் 11] [திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள்]

விவசாயம் பாதிக்கப்பட்ட பிறகு நகைகளையாவது கொண்டு போய் அடகு வைத்து அந்தக் கடனைக் கட்டலாம் என்றால், கடனுக்கு 16 சதவிகிதம் வட்டி. ஆகவே, அது 12 சதவிகிதம் வட்டியாக ஆக்கப்படுமா? அதோடு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பழனிக்கு வந்தபோது, மேடையிலேயே நிலக்கோட்டைக்கு தனியாக ஒரு எல். எம். பாங்க் சாங்க்ஷன் செய்யப்பட்டது என்று சொன்னார்களே, அதன் மீது எடுக்கப் பட்ட நடவடிக்கை என்ன என்பதைச் சொல்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** மாண்புமிகு அவைத் தலைவர் அவர்களே, வட்டி போடுகின்ற தன்மைகள், 18 சதவிகிதத்திலிருந்து 16 சதவிகிதம், 17 சதவிகிதம், 15 சதவிகிதம், 14 சதவிகிதம்—என்று ஒவ்வொன்றுக்கும் ஒன்று வரும். ஆதி திராவிட மக்கள், பழங்குடி மக்களுக்குத் தருகிற போது அதனுடைய நோக்கம் கருதி, 4 சதவிகிதத்திற்குக் கூட தருகிறோம். 6 சதவிகிதம், 8 சதவிகிதம் என்றும் வரும். ஆகவே, நகை ஈட்டுக்கு, விவசாயிகளுக்கு மட்டும் தான் என்று இல்லை. யார் கொண்டு வந்து நகை வைத்தாலும் வட்டி. அப்படி வரும்போது 16 சதவிகிதம் தான் போட வேண்டும். ஆகவே, நகை என்று வரும்போது, அதற்கு 16 சதவிகிதம் தான். அதை நாம் ஓரளவுக்கு குறைத்தே வைக்கிறோம். மார்வாடியிடம் போனீர்களானால் ஏராளம். மற்றவர்கள் இடம் போனால் இன்னும் ஜாஸ்தி. ஆகவே, அங்கே எல்லாம் போகாதீர்கள். இங்கே நம்மிடமே வரலாம். நிலக்கோட்டை செய்தியைப் பற்றி தனியாகக் கேட்பார்களேயானால், அதனுடைய நிலைமையை அறிந்து சொல்லலாம்.

**திரு. இரா. சண்முகம்:** பேரவைத் தலைவர் அவர்களே, கூட்டுறவுத் துறைகளில் இருக்கின்ற தனி அதிகாரிகளுக்குப் பதிலாக ஆலோசனைக் குழுக்கள் ஆங்காங்கே போடப்படுமா? மற்றொன்று, முதலமைச்சர் சத்துணவுத் திட்டத்தின் கீழ் வாங்குகின்ற காய்கறிகளை அந்தந்த சத்துணவு அமைப்பாளர்களே வாங்குவதற்கான அறிவிப்பு வழங்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

[1987 ஏப்ரல் 11

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: மாண்புமிகு அவைத் தலைவர் அவர்களே, தனி அலுவலரை வைத்திருப்பதற்குக் காரணம், அவர் நிர்வாகத்தினுடைய தலைவர், கூட்டுறவுச் சங்கங்களை நிர்வகிக்க வேண்டும். சட்டதிட்டப்படி, முறைப்படி, ஒழுங்குப்படி நிர்வகிக்க வேண்டும். அதிலே கேடுகள் ஏற்படும்போது தனி அலுவலர்மீது நடவடிக்கை எடுக்க முடியும்; அவர்களை ஒழுங்கு நடவடிக்கைகளுக்கு உள்ளாக்க வேண்டிய அவசியம் ஏற்படுகிறது. ஆலோசனைக்குழு ஆலோசனை தான் சொல்லமுடியும். நிர்வகிக்க முடியாது. ஆலோசனைக் குழுவை நாம் அமைக்கலாம். அப்படி அமைப்பதற்கு 1961 ஆம் ஆண்டு சட்டம் இடம் கொடுக்கிறது. அதற்குப் பிறகு வந்த சட்டத்தில்கூட இடம் இருக்கிறது. ஆக, ஆலோசனை சொல்வது என்பது ஆலோசனை அளவுக்குத்தான் இருக்கும். அதை ஏற்றுக் கொண்டுதான் ஆக வேண்டும் என்பதில்லை. ஆலோசனைக் குழு அமைப்பது அரசின் பரிசீலனையில் தனியாக இருக்கிறது. ஆனால் தனி அலுவலர்களுக்குப் பதிலாக ஆலோசனைக் குழு அமைப்பது என்பது ஆகாது.

அடுத்து காய்கறி உற்பத்தியாளர் கூட்டுறவு சங்கம் வைப்பதன் நோக்கமே காய்கறி பயிரிடுகிற விவசாயிகள் ஒன்று சேர்ந்து ஒரு கூட்டுறவு சங்கம் அமைத்து அதன் மூலம் பயன்பெற வேண்டுமென்பதுதான். அதற்காக 5 பேர் ஒன்றாகக் கூடி கூட்டுறவு சங்கம் என்று சொல்லிக் கொண்டு கொத்தவால் சாவடிக்கு வந்து காய்கறிகளை வாங்கிக் கொண்டு வந்து கொடுப்பதற்குப் பெயர் கூட்டுறவு சங்கம் ஆகாது. அதுதான் இப்போது நடப்பது. அமைப்பாளர்களுக்கு இதைக் கொடுக்கக் கூடாது என்பதற்குக் காரணம் அவர்களே பயிரிட்டு அவர்களுக்குப் பயன் தருகிற சங்கமாக அது இருக்க வேண்டும். எனவே இந்த நோக்கத்தை மாண்புமிகு உறுப்பினர்கள் எந்த அளவுக்கு பரப்ப முன்வருகிறார்களோ அந்த அளவுக்கு நல்லது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திருமதி டி. யசோதா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தங்கள் மூலமாக ஒன்றைத் தெரிந்து கொள்ள விரும்புகிறேன். உலக வங்கி போன்ற நிறுவனங்களிடமிருந்து கூட்டுறவு சங்கத் தேர்தல்களை நடத்தினால்தான் பால்வளத் துறையில்



1987 ஏப்ரல் 11] [திருமதி டி. யசோதா]

3-வது தவணையாகத் தர வேண்டிய தொகை ரூ. 57 கோடி
தரப்படும் என்ற நிலையில் தற்போது கறவை மாடு வங்கப்
பணம் தரப்படவில்லை என்று அறிகிறோம். அவ்வாறு
தேர்தல்கள் நடக்காததால்தான் பணம் வரவில்லையா என்று
அறிய விரும்புகிறேன். மேலும் தவறு செய்கிற சங்கங்களைப்
பொறுத்த வரையில் அரசாங்கத்தின் மூலமாக கலைக்கப்பட்ட
பிறகு அவர்கள் நீதிமன்றத்திற்குச் சென்று தடை உத்தரவு
வாங்கிவிடும் காரணத்தால் மீண்டும் அப்படித் தவறு
செய்தவர்களே நிர்வகிக்கும் பொறுப்பை ஏற்றுக் கொண்டு
நடத்துகிற துர்ப்பாக்கிய நிலை ஏற்படுகிறது. எனவே
அப்படிப்பட்ட நிலைமைகளில் வழக்கைத் துரிதமாக நடத்தி
அவ்வாறு தவறு செய்தவர்கள்மீது நடவடிக்கை எடுக்க அரசு
முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: பால்வள அமைப்புகளைப் பொறுத்த வரையில் குஜராத்தில் உள்ள டாக்டர் குரியன் அவர்கள் எழுதியிருப்பதைக் குறிப்பிடுகிறார் என்று நினைக்கிறேன். தமிழகத்தைப் பொறுத்த மட்டும், இங்கே முழுக்க முழுக்கச் சிறப்பாக நன்றாக இருக்கிறது என்று சொல்லியிருக்கிறார். இப்போது 3 வது திட்டத்திற்கான பணம் வாங்க வேண்டிய கட்டாயம் வந்திருக்கிறது. அதை வாங்குவதற்கு முன்னால் தேர்தலை நடத்திவிட்டால் வசதியாக இருக்கும் என்று சொல்லியிருக்கிறார்.

Tamil Nadu is one of the few States in the country which has made considerable progress in the field of Dairy Development along co-operative lines. With the initiation of the Operation Flood Scheme in Tamil Nadu, Tamil Nadu has become the first State in South India.

Tamil Nadu has utilised Rs. 18 crores and Rs. 35 crores under the Operation Flood I and II respectively. அதை நாம் பயன்படுத்திவிட்டோம். Operation Flood III involves 55 crores.

மாண்புமிகு உறுப்பினர் திருமதி யசோதா அம்மையார் அவர்கள் இதைத்தான் குறிப்பிடுகிறார்கள் என்று எண்ணுகிறேன். இந்த ரூ. 55 கோடியைப் பெறுவதற்காக தேர்தல் நடக்காமல் இருப்பது தவறு, நடக்க வேண்டும் என்று சொல்லுகிறார்கள். அதற்கான முயற்சிதான் நடக்கிறது. அதை வாங்குவதற்கான முறையில்தான் முயற்சி நடக்கின்றது. வாங்கிவிடுவோம்.

**திரு. ந. சிவஞானம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு நாவலர் அவர்கள் இன்றைக்குப் பல்வேறு சலுகைகளை அறிவித்திருக்கிறார்கள். கடன் வாங்கியவர்கள் கடன் தவணைக்கு முன்பே பணத்தைத் திருப்பிக் கட்டினால் வட்டியில் 3 சதவீதம் குறையும் என்றார்கள். அது எல்லா விவசாயிகளுக்கும் பொருந்துமா என்று அறிய விரும்புகிறேன். அதாவது 11 சதவீதத்திலிருந்து 3 சதவீதம் வட்டியில் குறையும் என்பது எல்லா விவசாயிகளுக்கும் பொருந்துமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** குறு விவசாயிகளுக்கும், சிறு விவசாயிகளுக்கும்தான். பெரு விவசாயிகளுக்கு அல்ல.

**திருமதி பா. வளர்மதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நகரங்களில் நகைகளின் பேரில் ரூ. 1,200 என்ற அடிப்படையில் கடன் தருவதாக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அந்தத் திட்டம் சென்னை நகரத்தில் செயல்படுத்தப்படுமா? மேலும் நகைகளின் பேரின் கடன் பெற்றால் ரூ. 5,000 மட்டும்தான் தருகிறார்கள். 10 பவுன் வைத்தாலும் ரூ. 5,000 தான் தருகிறார்கள். எனவே அதை அதிகப்படுத்தும் உத்தேசம் அரசுக்கு உண்டா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்னை மத்திய கூட்டுறவு வங்கியின் சார்பாக நகைக் கடன் தரப்படுகிறது. ரூ. 5,000 என்று வைத்ததற்குக் காரணம் அது பலருக்கும் போய்ச் சேர வேண்டும் என்பதுதான் பெரும் பணக்காரர்களாக இருப்பவர்கள் 200 பவுன் நகையைக் கொண்டு வந்து வைத்தால் பிறகு ஒதுக்கப்பட்ட பணத்தை அவர்களே எடுத்துக் கொண்டு போய்விடுவார்கள். சாதாரண மக்களுக்குப் போய்ச் சேராது.

(பிற்பகல் 2-10)

ஏதாவது கொஞ்சம் அதிகமாக உயர்த்துவதற்கு வாய்ப்பு இருக்கிறதா, எவ்வளவு கொடுப்பது என்பதை தனியாக பார்க்கலாம். இப்படி ஒரு சீலிங் இருப்பது நல்லது. அப்படியானால் தான் ஏழைகள் வாங்க முடியும். இல்லாவிட்டால் வசதி படைத்தவர்கள்தான் வாங்க முடியும்.



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** விவாதம் முடிவுற்றது; இப்போது வாக்கெடுப்பு.

திரு. எஸ். என். இராமசாமி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெற்றுக் கொள்ளப்பெற்றது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவை முன்னுள்ள கேள்வி:

"கோரிக்கை எண் 23—கூட்டுறவு என்ற தலைப்பின்கீழ் ரூ. 37,73,50,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்".

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, கோரிய தொகை அரசுக்கு வழங்கப்பெற்றது.

## 6. அரசினர் தீர்மானம்.

### பேரவை ஒத்திவைக்கப் பெறுதல்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** மாண்புமிகு அவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்:

"பேரவை விதி 25(1)-ன் கீழ் பேரவை இன்று ஒத்தி வைக்கப்பெற்று மீண்டும் ஏப்ரல் திங்கள் 20 ஆம் நாள் திங்கட்கிழமை காலை 10-00 மணிக்குக் கூடலாம்".

தீர்மானம், பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, ஒருமனதாக நிறைவேற்றப்பெற்றது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவையின் இன்றைய அலுவல்கள் இத்துடன் முடிவுற்று, 20—4—1987. திங்கட்கிழமை காலை 10-00 மணிக்குப் பேரவை மீண்டும் கூடும்.

பின்னர் பேரவை பிற்பகல் 2-11 மணிக்கு ஒத்திவைக்கப் பெற்றது.

[1987 ஏப்ரல் 11

## 7. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்.

### (அ) சட்டப்படிக்கான விதிகளும், ஆணைகளும்.

74. 1984—85-ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு மேக்னசைட் மற்றும் மேக்னசைட் புராடக்ட்ஸ் நிறுவனங்களின் ஆறாவது ஆண்டறிக்கைகள். [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-எ பிரிவின்கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது].

### (ஆ) அறிக்கைகள், அறிவிக்கைகள், ஏனைய தாள்கள்.

149. கோரிக்கை எண் 23—கூட்டுறவு பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 1987—88 (தமிழ், ஆங்கிலம்).

150. தமிழ்நாடு மாநில கூட்டுறவு வங்கி பற்றிய சிறு குறிப்பு—31—12—1986-ல் உள்ளபடி (தமிழ், ஆங்கிலம்).

151. 'தமிழகத்தில் மத்தியக் கூட்டுறவு வங்கிகள்' என்கிற புத்தகம் (1986-87) (தமிழ், ஆங்கிலம்).

152. தமிழ்நாடு கூட்டுறவு மாநில நிலவள வங்கியின் பணிகள் பற்றிய குறிப்பு (தமிழ், ஆங்கிலம்).

153. தமிழ்நாடு நுகர்வோர் கூட்டுறவு இணையம் பற்றிய குறிப்பு, 1986—87 (தமிழ், ஆங்கிலம்).

154. உழவர்களின் உற்ற நண்பன் 'டான்ஃபெட்—தமிழக உழவர்க்கு ஒரு கூட்டுறவு நிறுவனம்' என்கிற புத்தகம் (தமிழ், ஆங்கிலம்).

155. கூட்டுறவு சர்க்கரை ஆலைகள் பற்றி மதிப்பீட்டுக் குழுவின் ஆறாவது அறிக்கை.

156. கால்நடை பராமரிப்புத் துறை பற்றி மதிப்பீட்டுக் குழு அளித்த பரிந்துரைகளின் மீது அரசு மேற்கொண்ட நடவடிக்கைகள் குறித்து மதிப்பீட்டுக் குழுவின் ஏழாவது அறிக்கை.



1987 ஏப்ரல் 11]

157. கைத்தறி மற்றும் துணி நூல் துறை பற்றி மதிப்பீட்டுக் குழு அளித்த பரிந்துரைகளின் மீது அரசு மேற்கொண்ட நடவடிக்கைகள் குறித்து மதிப்பீட்டுக் குழுவின் எட்டாவது அறிக்கை.

158. சட்ட விதிகள் ஆய்வுக் குழுவின் ஐந்தாவது அறிக்கை.

159. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள் குழுவின் இரண்டாவது அறிக்கை.

160. உடுக்குறியிடப்பெறாத வினாக்களும், விடைகளும் (எண்கள் 1 முதல் 50 வரை).

| (1) | (2) | (3) | (4) | (5) |
|---|---|---|---|---|
| | (கோடி ரூபாயில்) | | | |
| 3. நகைஈட்டுக் கடன்களை வழங்குதல். | 289.82 | 300.00 | 296.52 | 320.00 |
| 4. இரசாயன உரங்களை வழங்குதல். | 73.38 | 82.00 | 86.39 | 100.00 |
| 5. வேளாண்மை விளை பொருட்களை விற்பனை செய்தல். | 149.29 | 135.00 | 127.23 | 175.00 |
| 6. நுகர்பொருட்களை சில்லரை விற்பனை செய்தல். | 605.39 | 500.00 | 662.99 | 590.00 |

3. வளர்ச்சித் திட்டங்களுக்கான செலவு.—1985–86ஆம் ஆண்டில் கூட்டுறவு வளர்ச்சித் திட்டங்களுக்கான மொத்த செலவு, 1986-87ஆம் ஆண்டிற்கான வரவு-செலவு திட்ட மதிப்பீடு மற்றும் திருத்திய மதிப்பீடு மற்றும் 1987–88ஆம் ஆண்டிற்கான வரவு-செலவு திட்ட மதிப்பீடு விவரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன :

| திட்டங்களின் விபரங்கள். | 1985-86—ல் செலவு. | வரவு—செலவு திட்ட மதிப்பீடு. 1986–87. | திருத்திய மதிப்பீடு 1986–87. | வரவு—செலவு திட்ட மதிப்பீடு 1987–88. |
|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) |
| | (கோடி ரூபாயில்.) | | | |
| அ. மாநில திட்டப் பணிகள் — | | | | |
| 1. கடன் கூட்டுறவுச் சங்கங்கள் | 2.95 | 0.98 | 1.28 | 12.77 |



| (1) | (2) | (3) | (4) | (5) |
|---|---|---|---|---|
| | (கோடி ரூபாயில்) | | | |
| 2. விற்பனைக் கூட்டுறவுச் சங்கங்கள். | 0.17 | 0.10 | 0.12 | 0.07 |
| 3. நுகர்வோர் கூட்டுறவுச் சங்கங்கள். | 0.27 | 0.12 | 0.19 | 0.28 |
| 4. ஏனைய கூட்டுறவுச் சங்கங்கள் | 0.09 | 0,03 | 0.09 | 0.04 |
| 5 கல்வி, ஆராய்ச்சி மற்றும் பயிற்சி. | 0.01 | 0.01 | 0.03 | 0.02 |
| 6. பழங்குடியினர் பகுதிகள் துணைத் திட்டம். | 0.38 | 0.41 | 1.01 | 1·13 |
| 7. உணவு (கிராம அங்காடி திட்டம்). | 3.66 | 3.72 | 3.77 | 3.85 |
| மாநிலத் திட்டப் பணிகளின் மொத்தம் | 7.53 | 5.37 | 6,49 | 17.71 |

## இணைப்பு I

(389 ஆம் பக்கத்திலுள்ள உடுக்குறியிட்ட வினா எண் 388-க்கான விடையைக் காண்க.)

(1) உசிலம்பட்டித் தொகுதியில் உசிலம்பட்டி பேரூராட்சியும் அதனைச் சார்ந்த குடியிருப்புகளும், செல்லம்பட்டி பேரூராட்சியும், அதனைச் சார்ந்த குடியிருப்புகளும் அடங்கும்.

(2) ஆயுள் காப்பீட்டுக் கழக நிதியுதவியுடன் நிறைவேற்றப்படும் உசிலம்பட்டி பேரூராட்சிக்கான குடிநீர்த் திட்டம் செயலாக்கத்தில் உள்ளது. இதற்கிடையில் ஒரு முன்னோடி குடிநீர்த் திட்டமும் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

(3) உசிலம்பட்டி ஒன்றியத்தில் 63 குடியிருப்புகளிலும், செல்லம்பட்டி ஒன்றியத்தில் 49 குடியிருப்புகளிலும் கையிறைப்பான் மற்றும் மின்னிறைப்பான்கள் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தால் நிறுவப்பெற்றுள்ளன.

(4) வறட்சி நிவாரணப்பணிகளின்கீழ் உசிலம்பட்டி ஒன்றியத்தில் 5 குடியிருப்புகளிலும், செல்லம்பட்டி ஒன்றியத்தில் 5 குடியிருப்புகளிலும் கையிறைப்பான்கள் அமைக்கப்பட்டுள்ளன.

(5) (1986-87 ஆம் ஆண்டு) ஊரகக் குடிநீர்த் திட்டத்தின் கீழ் உசிலம்பட்டி ஒன்றியத்தில் உள்ள 12 குடியிருப்புகளிலும், செல்லம்பட்டி ஒன்றியத்தில் உள்ள 8 குடியிருப்புகளிலும் நடப்பாண்டில் கையிறைப்பான்கள் அமைக்கப்பட உள்ளன.

(6) இவை தவிர, உசிலம்பட்டி ஒன்றியத்தில் 14 குடியிருப்புகளிலும், செல்லம்பட்டி ஒன்றியத்தில் 8 குடியிருப்புகளிலும் பொய்த்துப்போன கிணறுகளுக்குப் பதிலாக மாற்று ஆழ்துளைக் கிணறுகள் அமைக்கப்பெற உள்ளன.

(7) உசிலம்பட்டி ஒன்றியத்தில் 5 கிராமங்களிலும், செல்லம்பட்டி ஒன்றியத்தில் 2 குடியிருப்புகளிலும் நீராதாரங்களை கண்டறியும் பணி முடிவுற்றதும். கையிறைப்பான்கள் அமைக்கும் பணி மேற்கொள்ளப்படும்.





## இணைப்பு—II.

(465 ஆம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க.)

### கூட்டுறவுத் துறையின் 1987-88ஆம் ஆண்டிற்கான கொள்கை விளக்கம்

ஏழாவது ஐந்தாண்டுத் திட்டத்தின் நோக்கங்களுக்கு ஏற்ப, விவசாயிகள், கிராமியக் கைவினைஞர்கள், மற்ற நலிந்த பிரிவினர் நுகர்வோரின் பொருளாதாரத் தேவைகளை நிறைவு செய்வதில் தமிழகத்தில் உள்ள கூட்டுறவுச் சங்கங்கள் ஒரு முக்கியமான பங்கினை ஆற்றி வருகின்றன. தம் செயல்களைப் பன்முகப்படுத்தியதின் மூலம் இன்று அவை மக்களின் அனைத்துப் பிரிவினருக்கும் பணியாற்றி வருகின்றன.

2. பொதுவான முன்னேற்றம்.—ஏழாவது ஐந்தாண்டுத் திட்டத்தின் முக்கிய நோக்கங்கள், உணவு உற்பத்திப் பெருக்கத்தை விரைவுபடுத்துதல், வேலை வாய்ப்புகளை அதிகரித்தல் மற்றும் உற்பத்தித் திறனை உயர்த்துதல் ஆகும். வேளாண்மை கடன்கள் வழங்குதல், வேளாண்மை இடுபொருள்களை விநியோகம் செய்தல், வேளாண்மை விளை பொருள்களை விற்பனை செய்தல், நுகர் பொருள்களை விநியோகம் செய்தல் போன்ற முக்கிய செயல்களில் 1985–86 ஆம் ஆண்டில் எய்திய முன்னேற்றம் 1986–87-ஆம் ஆண்டிற்கான திட்டம், 28–2–1987 வரை எய்திய முன்னேற்றம், மற்றும் 1987–88ஆம் ஆண்டிற்கான திட்டம் ஆகியவை பற்றிய ஒரு கண்ணோட்டம் கீழே தரப்பட்டுள்ளது.

| விவரம். | 1985–86-ல் முன்னேற்றம் | 1986–87-க்கான திட்டம். | 1986–87-ல் முன்னேற்றம் (28–2–1987 வரை)]. | 1987–88க்கான திட்டம். |
|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) |
| | (கோடி ரூபாயில்) | | | |
| 1. குறுகிய கால மற்றும் மத்திய கால வேளாண்மைக் கடன்களை வழங்குதல். | 151.02 | 180.00 | 160.30 | 207.00 |
| 2. நீண்டகால வேளாண்மைக் கடன்களை வழங்குதல். | 24.19 | 20.00 | 14.91 | 20.00 |

[1986 ஏப்ரல் 11

| | (2) | (3) | (4) | (5) |
|---|---|---|---|---|
| | | (கோடி ரூபாயில்) | | |
| (ஆ) மத்திய அரசு பொறுப்பேற்கும் திட்டங்களும், தேசிய கூட்டுறவு வளர்ச்சிக் கழகம் மற்றும் கிராமிய மின்வசதிக் கழகம் போன்ற தன்னாட்சி நிறுவனங்கள் நிதி உதவி செய்யும் திட்டங்கள். | 5.58 | 0.41 | 0,45 | 0.42 |
| திட்டப் பணிகளின் மொத்தம். | 13.11 | 5.78 | 6.94 | 18.13 |
| (இ) திட்டத்தில் சேராத பணிகள். | 23.77 | 20.87 | 21.22 | 17.92 |
| பெரு மொத்தம் | 36.88 | 26.65 | 28.16 | 36.05 |



1987 ஏப்ரல் 11]

## கூட்டுறவு விவசாயக் கடனுதவி

### குறுகிய கால மத்தியகால மற்றும் நீண்ட கால கடன்கள்

**4. தன்னிறைவான கூட்டுறவுச் சங்கங்களை உருவாக்குதல்:** மாநிலத்தில் கூட்டுறவு இயக்கத்தின் மைய அமைப்பாக பிரதம விவசாய சேவைக் கூட்டுறவுச் சங்கங்கள் விளங்குகின்றன இவ்வகையான சங்கங்கள் 4,655 ஆகும். இவை பெருத்த நிதி உதவி திட்டத்தின் கீழ் கடன்கள் வழங்குவதுடன், பயிர் செலவிற்காக குறுகிய காலக் கடன்களையும், விவசாயத்தைச் சார்ந்த துணைத் தொழில்களுக்காக மத்திய காலக் கடன்களையும் வழங்கி வருகின்றன. விவசாய சேவைக் கூட்டுறவுச் சங்கங்களைத் தன்னிறைவுள்ள சங்கங்களாக மாற்றியமைப்பதற்கான திட்டத்தின் கீழ் தன்னிறைவு அடையாத நிலையில் உள்ள 142 சங்கங்களை ஒருங்கிணைப்பதன் மூலம் 104 புதிய சங்கங்கள் பதியப்பட்டன. எஞ்சியுள்ள 185 சங்கங்களையும் தன்னிறைவுள்ள சங்கங்களாக மாற்றியமைக்கும் திட்டமும் செயற்படுத்தப்பட்டுள்ளது. தன்னிறைவுள்ளவையாக அமைக்கப்பட்ட 182 பிரதமக் கூட்டுறவு நிலவள வங்கிகள் நில மேம்பாட்டிற்காகவும் மற்றும் இதர பல்வகைப்படுத்தப்பட்ட காரணங்களுக்காகவும் நீண்ட காலக் கடன்களை வழங்கி வருகின்றன.

**5. விவசாயிளை கூட்டுறவுச் சங்கங்களில் உறுப்பினர்களாகச் சேர்த்தல்.**—1979–80ஆம் ஆண்டின் வேளாண்மைக் கணக்கெடுப்பின்படி, மாநிலத்தில் உள்ள விவசாயக் குடும்பங்களின் எண்ணிக்கை 71.51 இலட்சம் ஆகும். இதில் 61.48 இலட்சம் சிறு மற்றும் மிகச் சிறு விவசாயக் குடும்பங்களைச் சார்ந்ததாகும். ஏழாவது ஐந்தாண்டுத் திட்ட காலத்தின் முதல் ஆண்டில் அதாவது 1985–86ஆம் ஆண்டின் இறுதிக்குள் மொத்த விவசாயக் குடும்பங்களில் 70 சதவீதத்தினரையும், மற்றும் மிகச் சிறு விவசாயிகளைச் சார்ந்த விவசாயக் பங்களில் 65 சதவீதத்தினரையும், கூட்டுறவு இயக்கத்தின் கொண்டு வர திட்டமிட்டதில் எய்திய முன்னேற்றம் றயே 69.6 மற்றும் 66.2 சதவீதம் ஆகும். 1986–87ஆம் டின் இறுதிக்குள் மொத்த விவசாயக் குடும்பங்களின் சதவீதத்தினரையும் சிறு மற்றும் மிகச் சிறு விவசாயிகளைச் ர்ந்த விவசாயக் குடும்பங்களில் 70 சதவீதத்தினரையும்

[1987 ஏப்ரல் 11

கூட்டுறவு இயக்கத்தின் கீழ் கொண்டுவர திட்டமிடப்பட்டது. 1987-ஆம் ஆண்டில் பிப்ரவரி மாதம் 28-ம் தேதிய நிலவரப்படி இந்த இனத்தில் எய்திய முன்னேற்றம் கீழே கொடுக்கப்பட்டுள்ளது

| விவரம். | விவசாயக் குடும்பங்களின் எண்ணிக்கை (விவசாய நில உடமைகளின்படி). | |
|---|---|---|
| | மொத்த விவசாயக் குடும்பங்கள். | சிறு மற்றும் மிகச் சிறு விவசாயக் குடும்பங்கள் |
| (1) | (2) | (3) |
| 1. மொத்த குடும்பங்களின் எண்ணிக்கை (இலட்சத்தில்). | 71.51 | 61.48 |
| 2. கூட்டுறவுச் சங்கங்களில் உறுப்பினர்களான குடும்பங்களின் எண்ணிக்கை (இலட்சத்தில்). | 50.36 | 41.25 |
| 3. உறுப்பினர்களாக்கப்பட்ட குடும்பங்களின் சதவிகிதம். | 70.4 | 67.1 |

விவசாயக் குடும்பங்களை அதிக அளவில் கூட்டுறவு இயக்கத்தின் கீழ் கொண்டு வருவதற்கான முயற்சிகள் தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

6. ஆதி திராவிடர்களை உறுப்பினர்களாகச் சேர்த்தல்:—ஆதி திராவிட வகுப்பைச் சார்ந்த விவசாயிகளை அதிக அளவில் கூட்டுறவு இயக்கத்தின் கீழ் கொண்டுவரும் நோக்கத்துடன் ஒவ்வொரு குடும்பத்திலிருந்தும் ஒவ்வொருவரை விவசாய சேவைக் கூட்டுறவுச் சங்கத்தில் சேர்ப்பதற்காக ஒரு திட்டத்தை அரசு 1981—82 ஆம் ஆண்டு முதல் செயல்படுத்தி வருகிறது. இதனால் அவர்கள் பயிர்ச் செலவிற்காக குறுகிய காலக் கடன்களையும், பால் பண்ணை, கோழி வளர்ப்பு, ஆடு வளர்த்தல் போன்ற காரியங்களுக்காக மத்திய காலக் கடன்களையும் சங்கங்கள் வழங்கும் இதர சேவைகளையும் பெற்று, அவ்வகையில் தமது வருவாயைப் பெருக்கிக் கொள்ள இயலும். கூட்டுறவுச் சங்கத்தில் உறுப்பினராக சேர்க்கப்படும் ஒவ்வொருவருக்கும் அவர் சங்கத்திற்குச் செலுத்த வேண்டிய பங்கு மூலதனத்திற்காக அரசு மானியம் நூறு ரூபாய் வழங்கப்படுகிறது. ஆறாவது ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் ஆதிதிராவிட வகுப்பைச் சார்ந்த 90,000 நபர்கள் கூட்டுறவு சங்கங்களில் அரசு மானிய உதவியுடன் உறுப்பினர்களாக



1987 ஏப்ரல் 11]

சேர்க்கப்பட்டனர். ஏழாவது ஐந்தாண்டுத் திட்டக் காலத்தின் முதல் இரண்டு ஆண்டுகளில் (அதாவது 1985—86 மற்றும் 1986—87) ஆதி திராவிட வகுப்பைச் சார்ந்த மேலும் 20,000 நபர்கள் அரசு மானிய உதவியுடன் கூட்டுறவுச் சங்கங்களின் உறுப்பினர்களாகச் சேர்க்கப்பட்டுள்ளனர்.

7. கடன் வழங்குதல்.—தம் உறுப்பினர்களுக்குத் தேவையான விவசாயக் கடன்களை வழங்குவது விவசாயக் கடன் கூட்டுறவுச் சங்கங்களின் முக்கிய பணி ஆகும். ஆனால் 1977—78ஆம் ஆண்டு முதல் விவசாயிகளின் சங்கங்கள் கூட்டுறவு கடன்களை திருப்பிச் செலுத்துவதைத் திட்டமிட்டுக் கடுமையாக தொடர்ந்து எதிர்த்து வந்தமையால் உறுப்பினர்கள் அளவில் தவணை தவறிய கடன்கள் உயர்ந்ததன் விளைவாக தவணை தவறிய கடன்களை வசூலிக்க கூட்டுறவுச் சங்கங்கள் உறுதியான முயற்சிகளைத் தொடர்ந்து எடுத்து வருவதன் காரணமாக 1980—81 முதல் கடன் வழங்குதலில் கீழ் குறிப்பிட்ட வகையில் சீரான முன்னேற்றம் காணப்படுகிறது.

| ஆண்டு. | வழங்கப்பட்ட கடன்கள். | | | |
|---|---|---|---|---|
| | குறுகிய காலப் பயிர்க் கடன்கள். | விவசாயம் மற்றும் துணைத் தொழில் களுக்காக மத்தியக் காலக் கடன்கள். | விவசாய காரியங் களுக்காக நீண்ட காலக் கடன்கள். | மொத்தம் |
| (1) | (2) | (3) | (4) | (5) |
| | (கோடி ரூபாயில்). | | | |
| 1980—81 .. | 21.52 | 4.25 | 4.76 | 30.53 |
| 1981—82 .. | 77.20 | 9.79 | 5.52 | 92.51 |
| 1982—83 .. | 67.18 | 15.97 | 14.35 | 97.50 |
| 1983—84 .. | 75.34 | 13.22 | 15.42 | 103.98 |
| 1984—85 .. | 110.80 | 17.35 | 20.37 | 148·52 |
| 1985—86 .. | 130.88 | 20.14 | 24.19 | 175.21 |

1985—86ஆம் ஆண்டில் வழங்கப்பட்ட வேளாண்மைக் கடன்கள் இதுவரை வழங்கப்பட்ட வேளாண்மைக் கடன் தொகைகளிலேயே அதிகம் என்பது குறிப்பிடத்தக்கது.

1986–87ஆம் ஆண்டில் குறுகிய கால, மத்திய கால மற்றும் நீண்ட காலக் கடன்கள் வழங்குவதற்கான திட்டமும், அவற்றின் 28—2—1987 வரை எய்திய முன்னேற்றமும் கீழே கொடுக்கப் பட்டுள்ளன.—

| விவரம். | 1986–87 திட்டம். | 28–2–1987 வரை முன்னேற்றம். |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| | (கோடி ரூபாயில்.) | |
| 1. குறுகிய காலக் கடன் | 160.00 | 141.04 |
| 2. மத்திய காலக் கடன் .. .. | 20.00 | 19.26 |
| 3. நீண்ட காலக் கடன் .. .. | 20.00 | 14.91 |
| மொத்தம் .. | 200.00 | 175.21 |

1987–88 ஆம் ஆண்டில் குறுகிய காலக் கடன்களை 185 கோடி ரூபாய் அளவிற்கும், மத்திய காலக் கடன்களை 22 கோடி ரூபாய் அளவிற்கும், நீண்ட காலக் கடன்களை 20 கோடி ரூபாய் அளவிற்கும் வழங்க திட்டமிடப் பட்டுள்ளது.

8. சமுதாயத்தில் நலிந்த பிரிவினர்களுக்கு கடன்கள் வழங்குதல்.—நலிந்த பிரிவினர்களின் தேவைகளை பூர்த்தி செய்வதில் கடன் கூட்டுறவுச் சங்கங்கள் போதிய கவனம் செலுத்தி வருகின்றன. தேசீய வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கி (நாபார்ட்) வகுத்துள்ள வழிமுறைகளின்படி வழங்கப்படும் மொத்தக் கடன்களில் 20 சதவீதம் நலிந்த பிரிவினருக்கு அதாவது, ஐந்து ஏக்கர் அல்லது அதற்கு குறைவான நிலங்களைச் சொந்தமாக வைத்திருப்பவர்களுக்கு அல்லது குத்தகைக்கு பயிரிடுபவர்களுக்கு கொடுக்கப் பட வேண்டும். ஆனால் தமிழ்நாட்டில் உள்ள விவசாய சேவை





கூட்டுறவுச் சங்கங்கள் 1985–86 ஆம் ஆண்டில் கீழ் விவரிக்கப் பட்டுள்ள வகையில் நலிந்த பிரிவினர்களுக்கு கடன்கள் வழங்கியுள்ளன.

| விவரம். | கடன் வழங்கப் பட்ட அளவு. | வழங்கப் பட்ட மொத்த கடன் களின் சதவிகிதம். |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| | (கோடி ரூபாயில்.) | |
| 1. குறுகிய காலக் கடன்கள் .. | 70.93 | 54.2 |
| 2. மத்திய காலக் கடன்கள் .. | 18.92 | 89.5 |
| 3. நீண்ட காலக் கடன்கள் .. | 11.75 | 48.6 |

இவ்வகையில் தேசீய வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கி நிர்ணயித்துள்ள இலக்கைவிட கூடுதலாக அடைந்து கூட்டுறவு சங்கங்கள் சாதனை புரிந்துள்ளன.

ஏழாவது ஐந்தாண்டு திட்ட காலத்தின் இரண்டாம் ஆண்டில் அதாவது 1986–87 ஆம் ஆண்டில் 28–2–1987 வரையில் நலிந்த பிரிவினர்களுக்கு கடன்கள் வழங்குவதற்கான திட்டமும், எய்திய முன்னேற்றமும் பின்வருமாறு.—

| விவரம். | இலக்கு. (சதவீதம்.) | முன்னேற்றம். 28-2-1987 வரை வழங்கிய கடன்கள். | முன்னேற்றம். வழங்கப் பட்ட மொத்த கடன் களின் சதவீதம். |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| | | (ரூபாய் கோடியில்.) | |
| 1. குறுகிய காலக் கடன்கள். | 66 | 80.54 | 57.1 |
| 2. மத்திய காலக் கடன்கள். | 89 | 17.05 | 88.5 |
| 3. நீண்ட காலக் கடன்கள். | 50 | 6.89 | 46.2 |

1987–88 ஆம் ஆண்டில் நலிந்த பிரிவினர்களுக்கான பங்கினைக் குறுகிய காலக் கடன்களில் 69 சதவீதமும், மத்தியக் காலக் கடன்களில் 91 சதவிகிதமும், நீண்ட காலக் கடன்களில் 51 சதவிகிதமும் வழங்கத் திட்டமிடப்பட்டுள்ளது. இவ்வாறாக கூட்டுறவு சங்கங்கள் வழங்கும் கடன்களில் நலிந்த பிரிவினர்களுக்கான பங்கினை மேலும் அதிகரித்து, அவர்கள் வாழ்க்கைத் தரத்தை உயர்த்திக் கொள்ள நடவடிக்கைகள் மேற்கொள்ளப் பட்டு வருகின்றன.

9. **ஆதி திராவிட மற்றும் பழங்குடி வகுப்பைச் சார்ந்தவர்களுக்கு கடன்கள் வழங்குதல்.**—தற்போது வழங்கப்படும் குறுகிய காலக் கடன்களில் 5.3 சதவிகிதமும், மத்திய காலக் கடன்களில் 13.7 சதவிகிதமும், நீண்ட காலக் கடன்களில் 5.5 சதவிகிதமும் ஆதி திராவிட மற்றும் பழங்குடி வகுப்பைச் சார்ந்த உறுப்பினர்களுக்கு வழங்கப்படுகின்றன. 1987–88 ஆம் ஆண்டில் இவ்வகை உறுப்பினர்களுக்கு வழங்கப்படும் கடன் அளவு குறுகிய காலக் கடன்களில் 9.2 சதவிகிதமாகவும், மத்திய காலக் கடன்களில் 18.8 சதவிகிதமாகவும், நீண்ட காலக் கடன்களில் 9.2 சதவிகிதமாகவும் உயர்த்தத் திட்டமிடப்பட்டுள்ளது. ஆதி திராவிட வகுப்பைச் சார்ந்த உறுப்பினர்கள் விவசாய சேவைக் கூட்டுறவுச் சங்கங்களில் கூடுதலாக பங்குத் தொகைகளை செலுத்துவதற்காக வட்டியில்லாக் கடனாக ஓர் உறுப்பினருக்கு ரூ. 250 வீதம் 1985–86 ஆம் ஆண்டு முதல் அரசு நிதி உதவி செய்கிறது. 1985–86 ஆம் ஆண்டில் 1,000 உறுப்பினர்களும் 1986–87 ஆம் ஆண்டில் 1,250 உறுப்பினர்களும் இத் திட்டத்தின் கீழ் நிதி உதவி அளிக்கப் பட்டனர்.

10. **புன்செய் நில விவசாயத்திற்குச் சலுகை வட்டியில் கடன் வழங்குதல்.**—சோளம், கம்பு, கேழ்வரகு மற்றும் பருத்தி முதலிய மானாவாரி பயிர்களைச் சாகுபடி செய்வதில் சிறு மற்றும் மிகச் சிறு விவசாயிகள் எதிர்கொள்ளும் சிரமங்களைக் கருதியும், இவர்களின் பொருளாதார நிலையைக் கருதியும், இத்தகைய உறுப்பினர்களுக்கு 4 சதவிகித வட்டி விகிதத்தில் குறுகிய காலக் கடன் வழங்கும் திட்டத்திற்கு அரசு ஒப்புதல் அளித்துள்ளது. இத் திட்டம் 1–4–1985 முதல் செயற்படுத்தப் பட்டு வருகிறது. இச்சலுகை வட்டி விகிதத்திற்கும், சிறு விவசாயிகளுக்கு குறுகிய காலக் கடனுக்காக சாதாரண வட்டியாகிய 11.5 சதவிகிதத்திற்கும் உள்ள வித்தியாசத்தை அரசு மானியமாக வழங்கும். இத் திட்டத்தின் கீழ், 1985–86 ஆம் ஆண்டில் மேற் கூறிய மானாவாரிப் பயிர்களுக்கு 53.12 இலட்ச ரூபாய் அளவிற்கு சிறு மற்றும் மிகச் சிறு விவசாயிகளுக்கு கடன் வழங்கப்பட்டது. 1986–87 ஆம் ஆண்டில், சலுகை வட்டி விகிதத்திற்கும், சிறு விவசாயிகளுக்கான சாதாரண வட்டி விகிதத்திற்கும் உள்ள வேறுபாட்டிற்கு 0.32 இலட்சம் ரூபாய் அரசு மானியமாக அளித்துள்ளது. இத் திட்டம் 1987–88 ஆம் ஆண்டிலும் தொடர்ந்து செயல்படுத்தப்படும்.



11. **விவசாய உற்பத்தியைப் பெருக்குவதற்காக சிறு மற்றும் மிகச் சிறு விவசாயிகளுக்கான தேசிய பெருந்த நிதி உதவித் திட்டத்தை நிறைவேற்றுவதில் கூட்டுறவுச் சங்கங்களின் ஈடுபாடு.**—இந்தத் தேசீய திட்டம் 1983–84 ஆம் ஆண்டிலிருந்து செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத் திட்டத்தின் முக்கிய அங்கம் சிறு பாசனத் திட்டமாகும். இத் திட்டத்தின் கீழ் இனங்கண்டு கொள்ளப்பட்ட உறுப்பினர்களுக்கு மானியத்துடன் கூடிய கடன் அளிக்கப்படுகிறது. மானியத்துக்கான செலவினத்தை மாநில அரசும், மத்திய அரசும் 50 : 50 என்ற விகிதத்தில் ஏற்றுக் கொள்கின்றன. வர்த்தக வங்கிகள், பிரதம நிலவள வங்கிகள், மண்டல ஊரக வங்கிகள் மற்றும் குறிப்பிட்ட சில மத்திய கூட்டுறவு வங்கிகள் தேவையான கடன் வசதியை அளித்து வருகின்றன. மாவட்ட ஊரக வளர்ச்சி நிறுவனங்களால் குறிப்பிடப்படும் பகுதிகளில் தேவையான நீண்ட காலக் கடன்களைக் கூட்டுறவுச் சங்கங்கள் வழங்கி வருகின்றன. இத்தகைய கடன்கள் இனங்கண்டு கொள்ளப்பட்ட விவசாயிகளுக்கு 10 சதவிகிதம் வட்டி விகிதத்தில் வழங்கப்படுகின்றன. இத் திட்டத்தின் கீழ் 1983–84 ஆம் ஆண்டில் 1.17 கோடி ரூபாய் அளவிற்கும், 1984–85 ஆம் ஆண்டில் 7.53 கோடி ரூபாய் அளவிற்கும், 1985–86 ஆம் ஆண்டில் 8.19 கோடி ரூபாய் அளவிற்கும், 1986–87 ஆம் ஆண்டில் பிப்ரவரி மாத இறுதி வரை 4.42 கோடி ரூபாய் அளவிற்கும் கடன்கள் வழங்கப்பட்டுள்ளன

12. **நீண்ட காலக் கடன்களை பல்வகை காரணங்களுக்காக வழங்குதல்.**—தேசீய வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கியின் உதவியுடன் திட்டங்கள் உருவாக்கப்பட்டு வேளாண்மை வளர்ச்சிக்கு நீண்ட காலக் கடன்களை வழங்கி வருவதன் மூலம் மாநிலத்தை பகுதி வாரியாக மேம்படுத்துவதற்கு 1968–69 முதல் திட்டமிடப்பட்டு வருகிறது. தற்பொழுது, 12.58 கோடி ரூபாய் மூலதனம் கொண்ட 60 சிறு பாசனத் திட்டங்களும், 18.51 கோடி ரூபாய் மூலதனம் கொண்ட 98 சிறு பாசனமல்லாத இதர திட்டங்களும் நிறைவேற்றப்பட்டு வருகின்றன. தமிழ்நாடு மாநில கூட்டுறவு நிலவள வங்கி, தமிழ்நாடு மின் வாரியத்திற்கு 1976–77 ஆம் ஆண்டிலிருந்து 2.49 கோடி ரூபாய் அளவிற்கு 5,212 மின்சார மோட்டார் பம்ப் செட்டுகளுக்கு மின் இணைப்பு அளிக்க கடன் வழங்கியுள்ளது.

மேலும் நில அடமானத்தை வற்புறுத்தாமல் நிலவள வங்கிகள் நிலமற்றவர்களுக்குத் திட்ட ரீதியாகப் பல்வகை காரணங்களுக்காக பெரும் அளவில் கடன்கள் வழங்கும் பொருட்டு அரசு 5 கோடி ரூபாய் அளவிற்கு உத்திரவாதம் அளித்துள்ளதையொட்டி, நிலமற்றவர்களுக்கு கடன்கள் வழங்கப்படுகின்றன. இவ்வகைக் கடன்கள் இத் திட்டம் துவக்கியதிலிருந்து 28–2–87 வரை 5.82 கோடி ரூபாய் அளவிற்கு வழங்கப்பட்டுள்ளன. அரசு உத்திரவாதத்தை 10 கோடி ரூபாய் அளவிற்கு உயர்த்துவதற்கான கருத்துருக்கள் அரசின் பரிசீலனையில் உள்ளது.

**13. தவணை தவறிய கடன்கள்.**—கடந்த மூன்று கூட்டுறவு ஆண்டுகளின் இறுதியிலும், 1987 ஆம் ஆண்டு பிப்ரவரி 28-லும் விவசாய சேவைக் கூட்டுறவுச் சங்கங்கள் மற்றும் பிரதமக் கூட்டுறவு நிலவள வங்கிகள் அளவில் இருந்த தவணை தவறிய கடன்கள் குறித்த விவரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன.—

விவசாயிகளுக்கு சேவைக் கூட்டுறவுச் சங்கங்கள் அளவில்.

| நாள். | கேட்பு. | வசூல். | நிலுவை. | கேட்பில் நிலுவை யின் சத விகிதம். |
|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) |
| | | (கோடி ரூபாயில்.) | | |
| 1984 ஜூன் 30-ல். | 277.90 | 143.47 | 134.43 | 48.4 |
| 1985 ஜூன் 30-ல். | 330.61 | 180.15 | 150.46 | 45.5 |
| 1986 ஜூன் 30-ல். | 353.32 | 196.33 | 156.99 | 44.4 |
| 1987 பிப்ரவரி 28-ல். | 312.35 | 145.23 | 167.12 | 53.5 |

பிரதமக் கூட்டுறவு நிலவள வங்கிகள் அளவில்

| நாள். | கேட்பு. | வசூல். | நிலுவை | கேட்பில் நிலுவை யின் சத விகிதம். |
|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) |
| | | (கோடி ரூபாயில்.) | | |
| 1984 ஜூன் 30-ல். | 64.75 | 16.87 | 47.88 | 73.9 |
| 1985 ஜூன் 30-ல். | 73.62 | 26.32 | 47.30 | 64.2 |
| 1986 ஜூன் 30-ல். | 71.47 | 18.88 | 52.59 | 73.6 |
| 1987 பிப்ரவரி 28-ல். | 68.74 | 23.68 | 45.06 | [illegible] |





1986 ஆம் ஆண்டு ஜூன் திங்கள் இறுதியில், விவசாய சேவைக் கூட்டுறவுச் சங்கங்கள் அளவில் தவணை தவறிய கடன்களை வசூலிப்பதில் ஓரளவு முன்னேற்றம் இருந்த போதிலும், பிரதமக் கூட்டுறவு நிலவள வங்கி உறுப்பினர்கள் அளவில் தவணை தவறிய கடன்கள் உயர்ந்துள்ளன. தவணை தவறிய கடன்கள் வசூல் குறைவாக இருந்ததினால் கடந்த 5 ஆண்டுகளாகத் தஞ்சாவூர் மத்திய கூட்டுறவு வங்கி அதன் தவணை தவறிய கடன் நிலுவையை மறுநிதி அளிக்க அனுமதிக்கக்கூடிய அளவான 60 சதவிகிதத்திற்கும் கீழே குறைக்க இயலவில்லை. எனவே, இவ்வங்கிக்குத் தமிழ்நாடு மாநில கூட்டுறவு வங்கி அதன் சொந்த நிதியிலிருந்து போதிய நிதி உதவி அளிக்க வேண்டிய தேவை ஏற்பட்டது. எனவே, சாகுபடி காரியங்களுக்குப் போதிய அளவு கடன் தேவைகளை நிறைவு செய்ய ஏதுவாக மத்தியக் கூட்டுறவு வங்கிகள் தேசிய வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கியிடமிருந்து மறுநிதி பெறும் பொருட்டும், பிரதமக் கூட்டுறவு நிலவள வங்கிகள் வரையறையின்றிக் கடன் வழங்கும் தகுதியைப் பெறும் பொருட்டும் விவசாய சேவைக் கூட்டுறவுச் சங்கங்கள் அளவிலும் பிரதமக் கூட்டுறவு நிலவள வங்கிகள் அளவிலும் வசூல் பணியில் முன்னேற்றம் காண்பிப்பது மிகவும் இன்றியமையாததாகும். இயற்கைப் பேரிடர்களால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் தள்ளிப் போடப்பட்ட நீண்டகாலக் கடன்களைக் கொண்ட இரண்டாவது முடக்கப்பட்ட கணக்கின் வசூலில் 1982–83 ஆம் ஆண்டு முடிய ஏற்பட்ட குறைவில் 20.81 கோடி ரூபாய் அளவிற்கு அரசு ஈடு செய்துள்ளது. இதே போன்று 1983–84 மற்றும் 1984–85 ஆம் ஆண்டுகளில் இரண்டாவது முடக்கப்பட்ட கணக்கில் 9.59 கோடி ரூபாய் அளவிற்கு அரசு ஈடு செய்ய வேண்டியுள்ளது. இதில் ஒரு கோடி ரூபாய்க்கு மட்டுமே அரசு ஒப்பளித்துள்ளது. மீதமுள்ள 8.59 கோடி ரூபாயை அனுமதிப்பதற்கான கருத்துரு அரசின் பரிசீலனையில் உள்ளது. இரண்டாவது முடக்கப்பட்ட கணக்கில் குறைவை ஈடு செய்ய அரசு செய்த நிதி உதவியினால் 45 பிரதமக் கூட்டுறவு நிலவள வங்கிகள் வரையறையின்றி கடன் வழங்கும் தகுதியையும் மீதமுள்ள 137 வங்கிகள் வரையறுக்கப்பட்ட அளவுக்குக் கடன் வழங்கும் தகுதியையும் பெற்றுள்ளன. பிரதமக் கூட்டுறவு நிலவள வங்கிகளில் தவணை தவறிய கடன்கள் அதிகரித்துக் கொண்டே போவது குறித்து தேசீய வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கி தனது கடுமையான கருத்தைத் தெரிவித்துள்ளது. மேலும், பிரதம கூட்டுறவு நிலவள வங்கிகளின் கடன் வசூலில் குறிப்பிடத்தக்க முன்னேற்றம் இருந்தாலொழிய உலக வங்கி மேற்கொண்டு கடனளிக்கத் தயங்குகிறது என்றும் அது தெரிவித்துள்ளது. விவசாய சேவைக் கூட்டுறவுச் சங்கங்களிலும் பிரதமக் கூட்டுறவு நிலவள வங்கிகளிலும் தவணை தவறிய கடன்களைப் பெருமளவு குறைப்பதற்கான முயற்சிகள் தொடர்ந்து மேற்கொள்ளப்படுகின்றன.

**14. கடன் வசூலைத் தள்ளி வைத்தல்.**—விவசாய சேவைக் கூட்டுறவுச் சங்கங்களின் உறுப்பினர்களின் பயிர்கள் வறட்சி, வெள்ளம் அல்லது புயல் ஆகியவற்றால் பாதிக்கப்படும்பொழுது அவர்களின் குறுகிய கால கடன்கள் மூன்றாண்டுகளில் திருப்பி அளிக்கக்கூடிய மத்தியக் காலக் கடன்களாக மாற்றப்பட்டு உறுப்பினர்களுக்கு நிவாரணம் அளிக்கப்படுகிறது. அடுத்த ஆண்டிலும், பயிர் பாதிக்கப்படுமானால், ஏற்கனவே மாற்றப்பட்ட கடன்களின் தவணைக் காலம் மொத்தத்தில் ஐந்தாண்டுகளுக்கு மேற்படாமல் மேலும் இரண்டு ஆண்டுகளுக்கு நீட்டிக்கப்படுகிறது. 1982–83 முதல் 1984–85 வரை 30.20 கோடி ரூபாய் அளவிற்குக் குறுகிய காலக் கடன்கள் மத்திய கால மாற்றுக் கடன்களாகவும், 2.66 கோடி ரூபாய் அளவிற்கு மத்திய கால மாற்றுக் கடன்கள் தவணை நீட்டித்த மத்திய கால மாற்றுக் கடன்களாக மாற்றப்பட்டன. 1985–86 ஆம் ஆண்டிலும் 2.25 கோடி ரூபாய் அளவுக்குக் குறுகிய காலக் கடன்கள் மத்திய கால மாற்றுக் கடன்களாக மாற்றப்பட்டன. குறுகிய காலக் கடன்களை மத்திய கால மாற்றுக் கடன்களாக மாற்றுவதிலான சுமையில் 15 சதவிகிதத்தை அரசு ஏற்கிறது. இவ்வகையில் குறுகிய காலக் கடன்கள் மத்திய கால மாற்றுக் கடன்களாக மாற்றப்பட்டதால், பாதிக்கப்பட்ட கடன்தாரர்கள் சாகுபடிக் காரியங்களை மேற்கொள்ளப் புதிய கடன் பெறும் தகுதியைப் பெற்றனர்.

1982–83 மற்றும் 1983–84 ஆம் ஆண்டுகளில் மாநிலத்தில் நிலவிய வறட்சி மற்றும் வெள்ளம் காரணமாகப் பாதிக்கப்பட்ட கடன்தாரர்களின் 13.03 கோடி ரூபாய் அளவிற்கான நீண்ட காலக் கடன் தவணைகள் தள்ளி வைக்கப்பட்டன.

**15. விவசாயிகளின் கடன் சுமையைக் குறைத்தல்.**—விவசாயிகளின் கடன் சுமையைக் குறைக்கும் நோக்கத்துடன் 1979–80 ஆம் ஆண்டு முதல் 1984–85 ஆம் ஆண்டு வரை வட்டி தள்ளுபடி செய்த அல்லது திருப்பித் தந்த வகையில் 46 கோடி ரூபாயும், சிறு விவசாயிகளிடம் நிலுவை நின்ற மத்திய கால மாற்றுக் கடன்கள் அல்லது தவணை நீட்டித்த மத்திய கால மாற்றுக் கடன்களைத் தள்ளுபடி செய்த வகையில் 57 கோடி ரூபாயும் ஆக மொத்தம் 103 கோடி ரூபாய் அளவிற்கு அரசு நிதி உதவி அளித்துள்ளது.

1979 முதல் 1985 வரையில் தொடர்ந்து சலுகைகள் அரசால் அறிவிக்கப்பட்டிருந்தும், வசூல் பணியில் முன்னேற்றம் காணக் கடன் கூட்டுறவுச் சங்கங்கள் குறிப்பிடத்தக்க முயற்சிகள் எடுத்திருந்தும், கடன்களை வசூலித்தல் கடந்த சில ஆண்டுகளாக பிரச்சினையாக இருந்து வருகிறது. வேளாண்மைக் கூட்டுறவு நிறுவனங்களிலிருந்து கடன் பெற்றவர்களுக்கு நிவாரணம் அளிப்பது அரசின் கவனத்தில் இருந்து வந்தது. கடந்த சில ஆண்டுகளில் அடுத்தடுத்து ஏற்பட்ட இயற்கைச் சீற்றத்தினால் பெற்ற கடனைத் திருப்பிச் செலுத்திவிட்டு பயிர் செலவிற்கு புதிதாகக் கடன் பெற இயலாத அளவிற்கு, விவசாயிகளின் கடன் சுமை





கணிசமான அளவிற்கு உயர்ந்திருந்தது. வேளாண்மைக்குக் கடன் பெற்ற உறுப்பினர்களின் கடன் சுமையை குறைக்கவும், கூட்டுறவுக் கடனமைப்பை வலுப்படுத்தவும், 31–3–1986 அன்று நிலுவை நின்ற கீழ்க் குறிப்பிட்டவகைக் கடன்கள் மீதான வட்டி, அபராத வட்டி மற்றும் தவணை தவறிய கடன்கள் மீதான வட்டி ஆகியவற்றை ஒரு சில நிபந்தனைகளுக்குட்பட்டு அரசு தள்ளுபடி செய்தது.

(அ) குறுகிய காலக் கடன்கள் நிலுவை.

(ஆ) தவணைக் கடந்த மத்தியக் காலக் கடன்கள்.

(இ) ஒருங்கிணைக்கப்பட்ட கடன்கள் உள்ளிட்டு மத்திய கால மாற்றுக் கடன்கள் மற்றும் தவணை நீட்டித்த மத்திய கால மாற்றுக் கடன்கள் நிலுவை.

(ஈ) தவணை கடந்த நீண்ட காலக் கடன்கள்.

1–7–1985 முதல் 31–3–1986 வரை மேற்கூறிய வகையான கடன்கள் மீதான வட்டி, அபராத வட்டி மற்றும் தவணை தவறிய கடன் மீதான வட்டி ஆகியவற்றை விவசாயிகள் செலுத்தியிருந்தால் அதனைத் திருப்பித் தரவும் அரசு ஆணை பிறப்பித்துள்ளது. மேற்கூறிய காலத்தில் குறுகிய காலக் கடன்களை முழுமையாகச் செலுத்திய விவசாயிகள் மற்றும் இதர கடன்களைப் பொறுத்தமட்டில் மேற்கூறிய காலத்தில் தவணை ஏற்பட்டு கடனைச் செலுத்திய (தவணை கடந்த கடன் உட்பட) விவசாயிகளுக்கும் இச்சலுகை பொருந்தும். 31–3–1986 அன்று நிலுவையில் இருந்த கடன் தொகையில் 50 சதவீதத்திற்கு, குறையாமல் 31–12–1986க்குள் செலுத்தினால், இச்சலுகையைப் பயன்படுத்துவதற்கான கடைசி நாள் 30–6–1987 ஆகும். இந்தச் சலுகையினை அதிக அளவில் விவசாயிகள் பயன்படுத்திக் கொள்ள வாய்ப்பாக, நிலுவையிலிருக்கும் வசூல் தொகையில் 50 சதவிகிதத்தினைத் திருப்பிச் செலுத்துவதற்கான காலத்தை 31–12–1986 லிருந்து 28–2–1987 வரை நீட்டித்து அரசு அனுமதி அளித்துள்ளது. 30–6–1987 ஆம் தேதிக்குள் வசூலிக்கப்படவேண்டிய 295.75 கோடி ரூபாயில் 31–12–1986 வரை 117.70 கோடி ரூபாய் வசூல் செய்யப்பட்டுள்ளது. இச் சலுகையை அளிப்பதால் அரசுக்கு 135 கோடி ரூபாய் செலவினம் ஏற்படுமென எதிர்பார்க்கப்படுகிறது. இவ்வகையில் மாநிலத்தில் அடுத்தடுத்து ஏற்பட்ட இயற்கைப் பேரிடர்களால் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு அரசு கணிசமான அளவிற்கு நிவாரணம் அளித்து வருகிறது.

**16. குறித்த காலத்தில் கடனைத் திருப்பி செலுத்தினால் வட்டி குறைப்பு.**—விவசாய சேவைக் கூட்டுறவுச் சங்கங்களின் உறுப்பினர்கள் குறித்த காலத்தில் கடன்களைத் திருப்பிச் செலுத்துவதை ஊக்குவிக்கும் பொருட்டு குறுகிய காலக் கடன்களையும், மத்திய காலக் கடன்களையும் குறிப்பிட்ட நாட்

களுக்குள் திருப்பிச் செலுத்தும் சிறு விவசாயிகளுக்கு 2 சதவிகித வட்டி தள்ளுபடியை அரசு 1981–82 ஆம் ஆண்டிலிருந்து வழங்கி வருகிறது. இத்திட்டம் 1987–88 ஆம் ஆண்டிலும் தொடர்ந்து செயற்படுத்தப்படும்.

**17. பொய்த்த கிணறுகள் நிதியிலிருந்து உதவி.**—பொய்த்த கிணறுகள் நிதியிலிருந்து உதவி பெறுவதற்கான விதிகளை அரசு தளர்த்தி உள்ளது. இதன்படி, திறந்த வெளிக் கிணறுகள், வடிமுனைக்குழாய், இதர குழாய்க் கிணறுகள் போன்றவற்றிற்கான நீர் சுரப்பு மற்றும் பயிரிடப்படக் கூடிய நிலப் பரப்பு ஆகியவை உயர்த்தப்பட்டுள்ளன. இத்திட்டத்தின்படி, பிரதமக் கூட்டுறவு நிலவள வங்கிக் கடன்தாரர்களின் கிணறுகள் பொய்த்தபோது, பொய்த்த கிணறுகள் நிதியிலிருந்து அவர்கள் செலுத்த வேண்டிய வட்டியிலும், அசலிலும் சிறு விவசாயிகளுக்கு 90 சதவிகித அளவிற்கும், பெரிய விவசாயிகளுக்கு 75 சதவிகித அளவிற்கும் உதவி தரப்படுகிறது. ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் வகுப்புகளைச் சார்ந்த சிறு விவசாயிகளுக்கு அவர்களுடைய சொந்த முதலீடு போக கிணற்றிற்கான மொத்தச் செலவும் மானியமாகத் தரப்படுகிறது. 1986 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் முடிய 2,240 பொய்த்த கிணறுகளுக்கு 121.88 இலட்ச ரூபாய் அளவிற்கு இந்த நிதியிலிருந்து உதவி அளிக்கப்பட்டுள்ளது.

வங்கியின் கடனுதவி பெற்று வெட்டப்படும் கிணறுகள் பொய்த்து விடும்போது, அந்த விவசாயிகளுக்கு நிவாரணம் அளிப்பதற்கு எல்லா மாநிலங்களிலும் பின்பற்றுவதற்காக பொய்த்த கிணறுகள் இழப்பீட்டு திட்ட மாதிரி ஒன்றைத் தேசீய வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கி தெரிவித்துள்ளது. இத் திட்டத்தின்படி, கிணறுகள் பொய்க்கும்பொழுது பாதிக்கப்படும் விவசாயிகளுக்கு அசல் மற்றும் வட்டித் தொகை மானியமாக அளிக்கப்படும். கடனுதவியில் அசல் பகுதியை மானியமாக அரசு அளிக்க வேண்டி வரும். திட்ட காரியங்களுக்கான கடன்கள் எனில் வட்டியைச் சம்பந்தப்பட்ட நிதி உதவி அளிக்கும் வங்கியும் தேசீய வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கியும் சம அளவில் பங்கிட்டு ஏற்கும். திட்டம் சாராத காரியங்கள் எனில் அச் செலவை சம்பந்தப்பட்ட நிதி உதவி அளிக்கும் வங்கியே அதன் சொந்த நிதியிலிருந்து ஏற்க வேண்டும். இத் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளது.

**18. உள் நிதி ஆதாரங்களைப் பெருக்குதல்.**—கடன் கூட்டுறவுச் சங்கங்கள், வேளாண்மைக் கடன்களை வழங்குவதற்கான கடன் திட்டம் அதிகரித்து வருவதற்கேற்ப, தேவையான அளவிற்குக் கடன்களை வழங்குவதற்கு வாய்ப்பாக அவற்றின் நிதி ஆதாரங்களைப் பெருக்குவதில் தொடர்ந்து முன்னேற்றம் காட்டி வருகின்றன. விவசாய சேவைக் கூட்டுறவுச் சங்கங்கள், மத்தியக் கூட்டுறவு வங்கிகள் (சென்னை மாநகரில் உள்ள வங்கி நீங்கலாக) மற்றும் தமிழ்நாடு மாநிலக் கூட்டுறவு வங்கி



ஆகியவற்றின் மொத்தப் பங்கு மூலதனம் (அரசு முதலீடு நீங்கலாக) 1985–86 ஆம் ஆண்டு இறுதியில் 77.12 கோடி ரூபாயிலிருந்து 1987 ஆம் ஆண்டு பிப்ரவரி மாத இறுதியில் 84.18 கோடி ரூபாய் அளவிற்கு உயர்ந்துள்ளது. அவற்றின் மொத்த வைப்புத் தொகைகள், 1985–86 ஆம் ஆண்டு இறுதியில் 668.80 கோடி ரூபாயாக இருந்தது. 1987 ஆம் ஆண்டு பிப்ரவரி மாத இறுதியில், 743.33 கோடி ரூபாயாக உயர்ந்துள்ளது. இவை ஒவ்வொரு ஆண்டிலும் தொடர்ந்து அதிகரித்து வருவது குறிப்பிடத்தக்கது.

**19. பங்கு மூலதனத்திற்கும் கடனீட்டுப் பத்திரங்களுக்கும் அரசு நிதி உதவி அளித்தல்.**—கடன் கூட்டுறவுச் சங்கங்கள் போதிய அளவு கடன் வாங்கும் தகுதியைப் பெறும் பொருட்டு அரசு, தேசீய வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கியின் தேசிய ஊரகக் கடனுதவி (நீண்டகாலச் செயல் முறைகள்) நிதியிலிருந்தும் கடன் பெற்று அச்சங்கங்களின் பங்கு மூலதனத்தில் முதலீடு செய்து வருகிறது. பிரதமக் கூட்டுறவு நிலவள வங்கிகள் மற்றும் நகரக் கூட்டுறவு வங்கிகள் உட்பட கடன் கூட்டுறவுச் சங்கங்களின் பங்கு மூலதனத்தில் அரசின் மொத்த முதலீடு 1985–86 ஆம் ஆண்டின் இறுதியில் 33.85 கோடி ரூபாயாக இருந்தது. மாநில நிலவள வங்கி வெளியிடும் கடனீட்டுப் பத்திரங்களிலும் அரசு முதலீடு செய்கிறது. 1986 ஆம் ஆண்டு டிசம்பர் மாத இறுதியில் அரசின் நிதி உதவி சேர்த்து முதலீடு செய்யப்பட்டு நிலுவையாக இருந்த தொகை 113.20 கோடி ரூபாயாகும். 1987–88 ஆம் ஆண்டில் கடனீட்டுப் பத்திரங்களில் அரசின் பங்காக முதலீடு செய்யத் திட்ட மதிப்பீட்டில் 50 இலட்ச ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**20. விரிவான பயிர் ஈட்டுறுதித் திட்டம்.**—விவசாயிகளை இயற்கைச் சீற்றங்களினால் ஏற்படும் பாதிப்பிலிருந்து காப்பாற்ற உதவும் கருவியாகவும், விவசாயிகளுக்குச் சரியான வழியில் பயன் தரவும் விரிவான பயிர் ஈட்டுறுதித் திட்டம் இம் மாநிலத்தில் 1–4–1985 முதல் செயல்படுத்தப்பட்டு வருகிறது. பிரீமியம் மற்றும் ஈட்டுத் தொகைக்கான செலவு பொது காப்பீட்டுக் கழகம் மற்றும் மாநில அரசினால் ஏற்படுத்தப்பட்ட தமிழ்நாடு பயிர்க் காப்புறுதி நிதியிலிருந்து 2 : 1 என்ற விகிதத்தில் பங்கிட்டு ஏற்றுக் கொள்ளப்படுகிறது. இத்திட்டத்தின் கீழ் கூட்டுறவுச் சங்கங்கள், வர்த்தக வங்கிகள் மற்றும் மண்டல ஊரக வங்கிகள் மூலம் நெல், கோதுமை, எண்ணெய் வித்துக்கள், சிறுதானியங்கள் மற்றும் பயறு வகைகளுக்கு வழங்கப்படும் கடன் தொகைகள் அவற்றின் 150 சதவிகித அளவிற்கும் கட்டாயமாக ஈட்டுறுதி செய்யப்படும். ஈட்டுறுதி செய்யப்படும் தொகையில் நெல், கோதுமை மற்றும் சிறு தானியப் பயிர்களுக்கு 2 சதவிகிதமும், எண்ணெய் வித்துக்கள் மற்றும் பயறு வகைகளுக்கு 1 சதவிகிதமும் பிரிமியமாகச் செலுத்தப்பட வேண்டும். இத்திட்டத்தில் சேரும் சிறு மற்றும் மிகச் சிறு விவசாயிகள் அவர்கள் செலுத்த

[1987 ஏப்ரல் 11

வேண்டிய பிரீமியத் தொகையில் 50 சதவிகிதம் மானியமாக பெறுவார்கள். இம்மானியத்திற்கான செலவினத்தை மாநில அரசும், மத்திய அரசும் சமமாக ஏற்கின்றன.

இத்திட்டம் நெல் மற்றும் நிலக்கடலைப் பயிர்களுக்கு 1985 காரிப் பருவத்திலிருந்து நம் மாநிலத்தில் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டம் 1986 காரிப் பருவத்திலிருந்து கம்பு, சோளம், கேழ்வரகு மற்றும் எள் பயிர்களுக்கும் நீட்டிக்கப்பட்டுள்ளது.

1985-86 நெல் இரண்டாம் பயிர் மற்றும் 1985 பாசன நிலக்கடலைப் பயிர்களுக்கு இத்திட்டம் செயல்படுத்தப்படுவது குறித்த விவரம் பின்வருமாறு :—

| வரிசை எண்ணும் விவரமும். | நெல் இரண்டாம் பயிர் 1985–86. | பாசன நிலக் கடலை 1985–86. |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| 1 வட்டாரங்களின் எண்ணிக்கை | 200 | 106 |
| 2 விவசாயிகளின் எண்ணிக்கை | 38,527 | 12,837 |
| 3 திட்டத்தின் கீழ் கொண்டு வரப்பட்ட நிலப் பரப்பு (ஹெக்டேரில்) .. | 54,465 | 18,485 |
| 4 ஈட்டுறுதி செய்யப்பட்ட தொகை (இலட்சம் ரூபாயில்) | 1,383.00 | 391.00 |
| 5 வசூலிக்கப்பட்ட பிரிமியம் (இலட்சம் ரூபாயில்) .. | 27.67 | 3.91 |
| 6 ஈட்டுத் தொகை அளிக்க வேண்டியது (இலட்சம் ரூபாயில்) | 2.18 | 22.445 |



1987 ஏப்ரல் 11]

1986–87 ஆம் ஆண்டில் திட்டம் செயல்படுத்தப்பட அறிவிக்கப்பட்ட வட்டாரங்களின் எண்ணிக்கை மற்றும் பயிர் விவரம் கீழே அளிக்கப்பட்டுள்ளது :—

| வரிசை எண். | பயிர். | வட்டாரங்களின் எண்ணிக்கை. |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| 1986 காரிப் பருவம்— | | |
| 1. | நெல் முதற் பயிர் .. .. .. | 250 |
| 2. | மானாவாரி நிலக்கடலை .. .. | 144 |
| 3. | மானாவாரி எள் .. .. .. | 77 |
| 4. | மானாவாரி சோளம் .. .. .. | 100 |
| 5. | மானாவாரி கம்பு.. .. .. .. | 79 |
| 6. | மானாவாரி கேழ்வரகு .. .. .. | 58 |
| 1986–87 ராபி பருவம்— | | |
| 1. | நெல் இரண்டாம் பயிர் .. .. .. | 249 |
| 2. | பாசன நிலக்கடலை .. .. .. | 138 |
| 3. | பாசனச் சோளம் .. .. .. | 69 |
| 4. | பாசன எள் .. .. .. .. | 63 |
| 5. | பாசன கம்பு .. .. .. .. | 80 |
| 6. | பாசன கேழ்வரகு .. .. .. | 90 |

நம்மாநிலத்தில், பருத்தி மற்றும் வாழைப் பயிர்களுக்கு இத்திட்டத்தினை விரிவுபடுத்துவதற்கான வாய்ப்பு பற்றி மத்திய அரசின் கருத்து எதிர்பார்க்கப்படுகிறது.

21. கடன் விநியோக முறை.—கடன் விநியோக முறையினை வலுவூட்டுவதற்கென தேசிய வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கி திட்ட மாதிரி ஒன்றை உருவாக்கி உள்ளது. இதனில் கடன்தாரர்களின் எண்ணிக்கை அறுதியிடப்பட்டு, ஒவ்வொரு களப் பணியாளரின் நேரடித் தொடர்பு, மேற்பார்வை

மற்றும் வழிமுறை அறிவுரைகளின் மூலம் கடன் பெற்ற உறுப்பினர்களின் பொருளாதார மேம்பாட்டினை உயர்த்துவதே இத்திட்டத்தின் நோக்கமாகும். தேசிய வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கியின் நிதியுதவியின் மூலம் இத்திட்டம் 1986 ஆம் ஆண்டு ஜூலை மாதம் முதல் செங்கல்பட்டு மாவட்டத்தில் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

22. ஒருங்கிணைந்த கூட்டுறவு வளர்ச்சித் திட்டம்.—நமது நாட்டில் சில மாவட்டங்களில் இயங்கும் கூட்டுறவுச் சங்கங்களின் ஒருங்கிணைந்த வளர்ச்சிக்கென தேசிய கூட்டுறவு வளர்ச்சிக் கழகம் ஒரு திட்டத்தினை உருவாக்கி உள்ளது. இத் திட்டத்தினை செயல்படுத்தும்போது அனைத்து நிலையில் உள்ள கூட்டுறவுச் சங்கங்களுக்குத் தேவைப்படும் நிதி உதவிகளையும் தேசிய கூட்டுறவு வளர்ச்சிக் கழகம் வழங்கும். இத்திட்டத்தினை தமிழ் நாட்டில் செயல்படுத்த காமராஜர் மாவட்டம் தேர்ந்தெடுக்கப்பட்டு, அரசு அங்கீகரித்த தனியார் நிறுவனத்தின் மூலம் விரிவான திட்ட அறிக்கை தயாரிக்கப்பட உள்ளது. இத் திட்ட அறிக்கையினை தேசிய கூட்டுறவு வளர்ச்சிக் கழகம் அங்கீகரித்தவுடன் இத்திட்டம் நடைமுறைப்படுத்தப்படும்.

23. நகையீட்டுக் கடன்கள்.—கடன் நிவாரணச் சட்டம் இயற்றப்பட்டதால், நிறுவன அமைப்பில்லாத தனியார் நிறுவனங்களிடமிருந்து கடன் கிடைப்பது அரிதாகியதால், கடன் கூட்டுறவுகள் நகையீட்டின் பேரில் மாநில முழுவதும் கடன் வழங்கி, கடன் தேவையினை நிறைவு செய்வதில் குறிப்பிடத்தக்க பங்கு ஆற்றி வருகின்றன. 1,771 விவசாய சேவைக் கூட்டுறவுச் சங்கங்களும், மத்திய கூட்டுறவு வங்கிகளின் 462 கிளைகளும், 135 கூட்டுறவு நகர வங்கிகளும் அவற்றின் 24 கிளைகளுமாக 2,392 கூட்டுறவு அமைப்புகள் தற்போது நகையீட்டுக் கடன்கள் வழங்குவதில் ஈடுபட்டுள்ளன. ஆனால், 1985–86 ஆம் ஆண்டு இறுதியில் 2,114 கூட்டுறவு அமைப்புகள் மட்டும் இப்பணியில் ஈடுபட்டிருந்தன. 1985–86 ஆம் ஆண்டில் 13.01 இலட்சம் நபர்கள் பயனுறும் வகையில் 289.82 கோடி ரூபாய் அளவிற்கு மட்டுமே நகையீட்டுக் கடன்கள் வழங்கப்பட்டிருந்தன. 1986–87 ஆம் ஆண்டில் (1987 ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் வரை) 12.41 இலட்சம் நபர்களுக்கு 296.52 கோடி ரூபாய் அளவிற்கு கூட்டுறவுச் சங்கங்கள் நகைஈட்டுக்கடன்கள் வழங்கியிருப்பது குறிப்பிடத்தக்கது. மாநிலம் முழுவதும், அநேகமாக ஊரகப் பகுதிகளில், அமைந்துள்ள கூட்டுறவு அமைப்புகள் நகையீட்டுக் கடன்கள் வழங்கி வருவதன் மூலம், சமுதாயத்தின் நலிந்த பிரிவினர்களின் அவசர நிதி தேவைகளை பயன் விளையத்தக்க வகையில் பூர்த்தி செய்து வருகின்றன. இவ்வகையில் கூட்டுறவுச் சங்கங்கள் சமுதாயத்தில் மிகவும் பின் தங்கிய பிரிவினர்கள் குறிப்பாக கிராமப்புறங்களில் உள்ள வேளாண்மைச் சமுதாயத்தின் நலன்களைப் பாதுகாப்பதில் முக்கிய பங்காற்றி உள்ளன. இவ்வகையில் கூட்டுறவுச் சங்கங்கள் கடந்த மூன்று ஆண்டுகளில் எய்தியுள்ள முன்னேற்றம் குறிப்பிடத்தக்கது.





சவரன் ஒன்றுக்கு வழங்கப்படும் கடனின் உச்ச அளவு 1,000 ரூபாயாகும். 1987–88 ஆம் ஆண்டில் 320 கோடி ரூபாய் அளவிற்கு நகையீட்டுக் கடன்கள் வழங்க திட்டமிடப்பட்டுள்ளது.

இச்செயலில் ஈடுபடும் கூட்டுறவுகளை ஊக்குவிக்கும் பொருட்டு விவசாய சேவைக் கூட்டுறவுச் சங்கங்கள் இரும்புப் பெட்டகம் வாங்க, அரசு நிதி உதவி அளித்து வருகிறது.

24. குறைந்த வட்டிக்குக் கடன்கள் :—ஆண்டொன்றுக்கு 4 சதவிகிதத்தில் தொழில் கடன்களை நலிந்த பிரிவினர்களுக்கு மத்திய கூட்டுறவு வங்கிகள், உழவர் பணிக் கூட்டுறவுச் சங்கங்கள் மற்றும் 79 நகர கூட்டுறவு வங்கிகள் தொடர்ந்து வழங்கி வருகின்றன. தேசிய வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கி, அங்கீகரித்துள்ள 22 வகையான சிறு தொழில்களை மற்றும் குடிசைத் தொழில்களில் ஏதேனும் ஒன்றை மேற்கொள்ள எல்லா வகையிலும் ஆண்டு வருவாய் ஊரகப் பகுதிகளில் 2,500 ரூபாய்க்கும் ஓரளவு நகர்ப்புறங்களில் மற்றும் நகரங்களில் 3,000 ரூபாய்க்கும் மேற்படாமல் உள்ளவர்களுக்கு இக்கடன்கள் வழங்கப்படுகின்றன. இச்சலுகை வட்டிக்கும் சாதாரண வட்டிக்கும் இடையிலான வித்தியாச வட்டித் தொகையை அரசு மானியமாக வழங்குகிறது. இக்கடன்கள் நபர் ஜாமீன் பேரில் ஒருவருக்கு நிரந்தர மூலதனச் செலவிற்காக 5,000 ரூபாயும், நடைமுறை மூலதனச் செலவிற்காக 2,000 ரூபாயும் ஆகமொத்தம் 7,000 ரூபாய் வரையில் வழங்கப்படுகின்றது. இத்தகைய கடன்கள், 1984–85 ஆம் ஆண்டில் 1.35 கோடி ரூபாய் அளவிற்கும், 1985–86 ஆம் ஆண்டில் 1.90 கோடி ரூபாய் அளவிற்கும், 1986–87 ஆம் ஆண்டில் பிப்ரவரி மாத இறுதி வரையில் 1.37 கோடி ரூபாய் அளவிற்கும் வழங்கப்பட்டுள்ளன.

### நகர்ப்புற மக்களுக்குக் கடனுதவி.

25. நகரங்களிலும் ஓரளவு நகர்ப்புறங்களிலும் உள்ளவர்களுக்குக் கடன்கள்.—தமிழ்நாட்டில் 135 கூட்டுறவு நகர வங்கிகள் உள்ளன. இவ்வங்கிகள் நகரங்கள் சுற்றும் ஓரளவு நகர்ப்புறங்களில் உள்ள மக்களுக்கு வங்கி வசதிகளை அளிப்பதுடன் அவர்களுக்கு 1985–86 ஆம் ஆண்டில் 227.74 கோடி ரூபாய் அளவிற்குக் குறுகிய கால மற்றும் மத்திய காலக் கடன்களை வழங்கியுள்ளன. 1985–86 ஆம் ஆண்டின் இறுதியில் இவ்வங்கிகளிடமிருந்த வைப்பு தொகைகள் 180.89 கோடி ரூபாயாகும். குடிசைத் தொழில்கள் மற்றும் சிறு தொழில்களுக்கு நிதி உதவி செய்யும் திட்டத்தின் கீழ் இவ்வங்கிகள் 1985–86 ஆம் கூட்டுறவு ஆண்டில் 4.82 கோடி ரூபாய் அளவிற்கு கடன்கள் வழங்கியுள்ளன. சமுதாயத்தில் நலிந்த பிரிவினரின் வருமானத்தையும் வாழ்க்கைத் தரத்தையும் உயர்த்துவதின் மூலம் நியாயமான விநியோக முறையை உறுதி செய்ய வேண்டும் என்ற அடிப்படை நோக்கத்தை வங்கிகள் நிறைவேற்றுவதற்கு ஏதுவாக கூட்டுறவு

[1987 ஏப்ரல் 11

நகர வங்கிகள் வழங்கும் கடன்களில் 60 சதவீதம் குடிசைத் தொழில் மற்றும் சிறு தொழில்கள் உள்ளிட்ட முதன்மைப் பிரிவிற்குச் சேர வேண்டும் என்று இந்திய ரிசர்வ் வங்கி வழிமுறைகளை வகுத்துள்ளது. முதன்மைப் பிரிவுக்குக் கொடுக்கப்படுகின்ற மொத்தக் கடன் தொகையில் குறைந்தது 20 சதவீதம் (அல்லது மொத்தக் கடன் மற்றும் முன்பணத்தில் 15 சதவீதம்) நலிந்த பிரிவினருக்கு வழங்கப்பட வேண்டும். குடிசைத் தொழில்கள் மற்றும் சிறு தொழில்களுக்காக நகர கூட்டுறவு வங்கிகள் மூலம் 1987–88 ஆம் ஆண்டில் 10 கோடி ரூபாய் அளவிற்குக் கடன்கள் வழங்க திட்டமிடப்பட்டுள்ளது.

**26. நலிந்த கூட்டுறவு நகர வங்கிகளை மறு சீரமைத்தல்.**—தற்போது 12 கூட்டுறவு நகர வங்கிகள், நலிந்த வங்கிகளாக இந்திய ரிசர்வ் வங்கியால் வகைப்படுத்தப்பட்டுள்ளன. இதில், 1986–87 ஆம் ஆண்டில் 3 நலிந்த நகரக் கூட்டுறவு வங்கிகளுக்கு பங்கு மூலதனமாக தலா 0.50 இலட்ச ரூபாயும், ஒவ்வொரு வங்கிக்கும் கூட்டுறவு சார் பதிவாளரின் சேவைகளை இலவசமாகவும் அரசு அளித்துள்ளது. 1987–88 ஆம் ஆண்டில் மேலும் மூன்று நலிந்த கூட்டுறவு நகர வங்கிகளுக்கு உதவி செய்யத் திட்டமிடப்பட்டுள்ளது. நலிந்த வங்கிகளை மறு சீரமைக்கும் பணிகளை ஆய்வு செய்யக் கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளர் தலைமையில் குழு ஒன்று அமைக்கப்பட்டுள்ளது.

**27. சுய வேலை வாய்ப்பை ஏற்படுத்த கூட்டுறவு சங்கங்கள் அமைத்தல்.**—படித்த வேலையில்லாத இளைஞர்களுக்குச் சுயமாகத் தொழில் செய்வதற்காக நிதி உதவி அளிக்கும் பொருட்டு சென்னை, கோயம்புத்தூர், தஞ்சாவூர் மற்றும் சேலம் மாவட்டங்களில் கூட்டுறவு சிக்கன மற்றும் கடன் சங்கங்கள் அமைக்கப்பட்டுள்ளன. இச்சங்கங்கள் நபர் ஜாமீன் பேரிலும், கடன்களைக் கொண்டு வாங்கப்படும் இடம் பெயராச் சொத்துக்களின் இணை பிணையத்தின் பேரிலும் கடன்களை வழங்குகின்றன.

**28. மகளிர் கூட்டுறவுக் கடன் சங்கங்கள் அமைத்தல்.**—மகளிர் நலனுக்காகவும், இம்மாநிலத்தில் கூட்டுறவுச் சங்கங்கள் செயல்படுகின்றன. விதவைகள் உட்பட நலிந்த பிரிவைச் சார்ந்த மகளிர் குடிசைத் தொழில்களை மேற்கொண்டு தம் வருவாயை அதிகரித்துக்கொள்ள உதவியாக இரண்டு மகளிர் கூட்டுறவுக் கடன் சங்கங்கள், ஒன்று கோயம்புத்தூரிலும், மற்றொன்று சேலத்திலும் பதிவு செய்யப்பட்டுள்ளன. 1985–86 ஆம் ஆண்டில் பங்கு மூலதனத்திற்கு 80,000 ரூபாயை அரசு அளித்துள்ளது.

முற்றிலும் மகளிரைக் கொண்டு நிர்வகிக்கப்படும் மத்தியக் கூட்டுறவு வங்கிகளின் கிளைகள் இதுவரை ஒன்பது துவக்கப்பட்டுள்ளன.



1987 ஏப்ரல் 11]

## பண்ணை இடுபொருட்களின் கூட்டுறவு விநியோகம்.

**29. இரசாயன உர விநியோகம்.**—விவசாய சேவைக் கூட்டுறவுச் சங்கங்களும், கூட்டுறவு விற்பனைச் சங்கங்களும் இரசாயன உரங்களை உறுப்பினர்களுக்குப் பயிர்க் கடன்களின் ஒரு பகுதியாகவும், உறுப்பினர்களுக்கும், உறுப்பினர் அல்லாதவர்களுக்கும் ரொக்கத்திற்கும் தொடர்ந்து விநியோகித்து வருகின்றன. 1986–87ல் 82 கோடி ரூபாய் அளவிற்கு 1.90 இலட்சம் டன் (என்.ப்பி.கே.) இரசாயன உரங்களை விநியோகிக்க திட்டமிடப்பட்டிருந்தது. 1986 ஏப்ரல் முதல் 1987 பிப்ரவரி மாத இறுதி வரை கூட்டுறவுச் சங்கங்கள் 86.39 கோடி ரூபாய் அளவிற்கு 1.91 இலட்சம் டன் (என்.ப்பி.கே.) உரங்களை விநியோகித்துள்ளன. 1986–87 ஆம் ஆண்டில், இதுவரை கூட்டுறவுச் சங்கங்கள் 344 கூடுதல் சில்லறை உர விற்பனை நிலையங்களை ஏற்படுத்தியுள்ளன. தற்போது மாநிலத்தில் 5,189 சில்லறை உர விற்பனை நிலையங்கள் செயல்பட்டு வருகின்றன. 1987–88 ஆம் ஆண்டில் 100 கோடி ரூபாய் அளவிற்கு 2.30 இலட்சம் டன் அளவிற்கு (என்.ப்பி.கே.) உரங்களைச் சில்லறை முறையில் விற்பனை செய்யத் திட்டமிடப்பட்டுள்ளது.

**30. உற்பத்தி ஊக்குவிப்புத் திட்டம்.**—விவசாயிகளுக்கு உற்பத்தி ஊக்குவிப்பாக காவிரி கழிமுகப்பகுதியில் தமிழ்நாடு நுகர் பொருள் வாணிபக் கழகத்திற்கு நெல் வழங்கிய விவசாயிகளுக்கும், விவசாயத் துறைக்கு நெல் விதைகள் வழங்கிய விதைப் பண்ணை விவசாயிகளுக்கும், ஒரு குவிண்டால் நெல்லுக்கு 15 ரூபாய் மதிப்புடைய உரங்களை கூட்டுறவுச் சங்கங்கள் மூலம் அரசு வழங்கியது. இத்திட்டம் 1984 குறுவைப் பருவம் முதல் செயல்படுத்தப்படுகிறது. இது, 1985 சம்பா மற்றும் குறுவைப் பருவங்களுக்கும், 1986 சம்பா மற்றும் குறுவைப் பருவங்களுக்கும் நடப்பு 1987 சம்பா பருவத்திற்கும் நீட்டிக்கப்பட்டுள்ளது. 1985 சம்பா பருவம் முதல், நெல் குவிண்டால் ஒன்றுக்கு அளிக்கப்படும் மானியத்தின் அளவு 15 ரூபாயிலிருந்து 20 ரூபாய்க்கு உயர்த்தப்பட்டது. இது தவிர, இத்திட்டத்தின் கீழ் 1–11–1985 முதல் கூடுதல் இடுபொருள் மானியமாக 15 ரூபாய் விவசாயிகளுக்கு அளிக்கப்பட்டு வருகிறது. முதலில், கூப்பன்களுக்கு உரம் மட்டுமே விநியோகிக்கப்பட்டது. பின்னர், உரம் மற்றும் பூச்சிக்கொல்லி மருந்துகள் விநியோகிக்கப்பட்டது. 1986 குறுவை பருவத்திலிருந்து விவசாயிகள் உற்பத்தி ஊக்குவிப்புக் கூப்பன்களைக் கொண்டு அவர்கள் விருப்பத்திற்கு ஏற்ற இடுபொருள்களை பெறும் வகையில் இத்திட்டத்தை அரசு தளர்த்தியுள்ளது. கூட்டுறவுச் சங்கங்கள் 1984 குறுவைப் பருவத்தில் 7.42 கோடி ரூபாய் மதிப்புடைய உரங்களையும், 1985 சம்பாப் பருவத்தில் 4.75 கோடி ரூபாய் மதிப்புடைய உரங்களையும், 1985 குறுவைப் பருவத்தில் 11.61 கோடி ரூபாய் மதிப்புடைய உரங்களையும், 1986 சம்பா பருவத்தில் 22.21 கோடி ரூபாய்

[1987 ஏப்ரல் 11

மதிப்புடைய உரங்களையும், விநியோகம் செய்துள்ளது. 1986 குறுவைப் பருவத்தில் 4.70 கோடி ரூபாய் மதிப்புடைய இடு பொருட்கள் கூட்டுறவுச் சங்கங்களால் விநியோகிக்கப்பட்டுள்ளன.

31. விதைகள் பூச்சிக்கொல்லி மருந்துகள் மற்றும் வேளாண்மைக் கருவிகள் விநியோகம் செய்தல்.—விதைப் பெருக்கத் திட்டத்தைச் செயல்படுத்திவரும் துடியலூர் கூட்டுறவு விவசாயப் பணிகள் சங்கமும், கோயம்புத்தூர் மற்றும் பெரியார் மாவட்டங்களில் ஐந்து கூட்டுறவு விற்பனைச் சங்கங்களும் 1985–86 ஆம் ஆண்டில் 71.69 இலட்சம் ரூபாய் மதிப்புடைய சான்று செய்யப்பட்ட விதைகளை விநியோகித்துள்ளன. 1986–87-ல் 31–1–1987 வரை 44.76 இலட்சம் ரூபாய் மதிப்புடைய சான்று செய்யப்பட்ட விதைகள் விநியோகிக்கப்பட்டுள்ளன. துடியலூர் கூட்டுறவு விவசாயப் பணிகள் சங்கம் பூச்சிக் கொல்லி மருந்துகள் தயாரிக்கும் பிரிவு ஒன்றை வைத்துள்ளது. இச்சங்கத்தின் பூச்சிகொல்லி மருந்துகளை விநியோகம் செய்வதற்காக மாநிலத்தில் உள்ள அனைத்துக் கூட்டுறவு விற்பனைச் சங்கங்களும், மொத்த விற்பனையாளர்களாக நியமிக்கப்பட்டுள்ளன. 1985–86 ஆம் ஆண்டில் 175 இலட்சம் ரூபாய் மதிப்புடைய பூச்சிக்கொல்லி மருந்துகள் கூட்டுறவுச் சங்கங்களால் விநியோகிக்கப்பட்டுள்ளன. 1986–87-ல் 28–2–1987 வரை 127·36 இலட்சம் ரூபாய் மதிப்புடைய பூச்சிக்கொல்லி மருந்துகள் விநியோகிக்கப்பட்டுள்ளன. வரும் ஆண்டுகளில் கூட்டுறவுச் சங்கங்களில் பண்ணை இடுபொருட்கள் விநியோகத்தை அதிகரிக்கத் திட்டமிடப்பட்டுள்ளது. 1987–88 ஆம் ஆண்டில் கூட்டுறவுச் சங்கங்கள் இடுபொருட்கள் விநியோகம் செய்வதற்காகக் கீழ்க்கண்ட இலக்குகள் நிர்ணயிக்கப்பட்டுள்ளன.

| இடுபொருட்கள். (1) | மதிப்பு (ரூபாய் இலட்சத்தில்.) (2) |
|---|---|
| 1. விதைகள் | 165.00 |
| 2. பூச்சிக்கொல்லி மருந்துகள் | 300.00 |
| 3. வேளாண்மைக் கருவிகள் | 21.00 |

32. அனைத்து இடுபொருட்களையும் ஒரே இடத்தில் விநியோகம் செய்வதற்காக வேளாண்மை பணிக் கூட்டுறவு விற்பனை நிலையங்கள் திறப்பு.—உரம் மற்றும் பூச்சிக்கொல்லி மருந்துகள் போன்ற இடு பொருள்கள் அனைத்தையும் ஒரே இடத்தில் விநியோகம் செய்வதற்காகத் தம்முடைய தலைமையிடங்கள் அல்லாத இதர கிராமங்களில் கூடுதல் விற்பனை நிலையங்களைத் திறக்க 5[illegible] விவசாய சேவைக் கூட்டுறவுச் சங்கங்களுக்கு அரசு 1986–87 ஆம் ஆண்டில் நிதியுதவி அளித்துள்ளது.



1987 ஏப்ரல் 11]

## கூட்டுறவு விற்பனை, பதப்படுத்துதல் மற்றும் விளைபொருட்கள் சேமிப்பு.

### கூட்டுறவு விற்பனை.

33. விவசாய விளைபொருட்களை விற்பனை செய்தல் .—மாநிலத்தில் 114 கூட்டுறவு விற்பனைச் சங்கங்கள் இருக்கின்றன. அவை, தம் உறுப்பினர்களின் விவசாய விளைபொருட்களை விற்பனை செய்வதன் வாயிலாக அவர்கள் நியாயமான வருமானம் பெற தொடர்ந்து உதவி செய்து வருகின்றன. 1986–87 ஆம் ஆண்டில் 135 கோடி ரூபாய்க்கு விவசாய விளை பொருட்களை விற்பனை செய்வதற்கு திட்டமிடப்பட்டது. 1987 ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் வரை விற்பனை செய்யப்பட்ட விவசாய விளைபொருட்களின் மதிப்பு 127.23 கோடி ரூபாய் ஆகும். 1987–88 ஆம் ஆண்டில் விவசாய விளை பொருள்களின் விற்பனையை 175 கோடி ரூபாய்க்கு மேலும் உயர்த்தத் திட்டமிடப்பட்டுள்ளது. கூட்டுறவு நூற்பாலைகளுடன் கொண்டுள்ள இணைந்த ஏற்பாட்டின் கீழ் தமிழ்நாடு கூட்டுறவு விற்பனை இணையம் நூற்பாலைக்களுக்கு விநியோகிப்பதற்காக 1985–86 ஆம் கூட்டுறவு ஆண்டில் 13.60 கோடி ரூபாய் அளவிற்கும் நடப்பு 1986–87 ஆம் கூட்டுறவு ஆண்டில் டிசம்பர் மாதம் வரையில் 4.07 கோடி ரூபாய் அளவிற்கும் பருத்தியைக் கொள்முதல் செய்துள்ளது.

34. காய்கறி பயிரிடுவோருக்கு விற்பனை வசதி ஏற்பாடு செய்தல்.—காய்கறி பயிரிடுவோருக்கு நியாயமான ஊதியம் கிடைப்பதுடன் நுகர்வோருக்கு தரமான காய்கறிகளை நியாயமான விலைகளில் வழங்கப்பட வேண்டும் என்ற நோக்குடனும், முதலமைச்சரின் சத்துணவுத் திட்டம் செயற்படுத்தப்பட்டு வரும் சூழ்நிலையிலும் மாநிலத்தில் 512 காய்கறி பயிரிடுவோர் கூட்டுறவு விற்பனை சங்கங்கள் அமைக்கப்பட்டுள்ளன. மதிய உணவு மையங்களுக்கு வி[illegible]யாகி[illegible] பிறகு மீதமுள்ள காய்கறிகள் இச்சங்கங்களால் நகர்ப்புற மை[illegible]ங்களில் உள்ள நுகர்வோர் கூட்டுறவுச் சங்க[illegible]களுக்கு நுகர்வோ[illegible]கு விற்பனை செய்யப்படுவதற்காக வ[illegible]ங்கப்படுகின்றது. [illegible]ச்சங்கங்கள் பொது மக்களுக்கும் நேரடி[illegible]ாக காய்கறிகளை விற்ப[illegible]ன செய்து வருகின்றன. காய்கறி ப[illegible]ரிடுவோர் கூட்டுறவு [illegible]ர்பனைச் சங்கங்கள், 1985–86 ஆ[illegible] ஆண்டில் 5.78 கோடி ரூபா[illegible] அளவிற்குக் காய்கறிகளை விற்[illegible]னை செய்துள்ளன. 1986–[illegible] ஆம் ஆண்டில் 31–12–1986 வ[illegible]யில், 4.17 கோடி ரூபாய் அளவிற்கு இச்சங்கங்கள் காய்கறி[illegible]ளை விற்பனை செய்துள்ளன.

35. கூட்டுறவு விற்பனைச் சங்கங்களை விவசாய சேவைக் கூட்டுறவுச் சங்கங்களோடும் நுகர்வோ[illegible] கூட்டுறவு சங்கங்களோடும் இணைத்தல்.—உற்பத்தியாளர்கள் தம் விளைபொருள்களை

விற்பதில் ஆதாயமான வருமானம் பெறவும், நுகர்வோர் இன்றியமையாப் பொருட்களை நியாயமான விலைகளில் பெறவும் ஏதுவாக கூட்டுறவு விற்பனைச் சங்கங்கள், ஒரு பக்கம் விவசாய சேவைக் கூட்டுறவுச் சங்கங்களுடனும் மறு பக்கம் நுகர்வோர் கூட்டுறவுச் சங்கங்களுடனும் இணைக்கப்பட்டுள்ளன. இத்திட்டத்தின்கீழ், விவசாய சேவைக் கூட்டுறவுச் சங்கங்களின் உறுப்பினர்கள் கூட்டுறவு விற்பனைச் சங்கங்களில் உறுப்பினர்களாகச் சேர்க்கப்பட்டு, விற்பனைச் சங்கங்களின் கொள்முதல் காரியங்கள் கடன்தாரர்களுடன் இணைக்கப்படுகின்றன. கூட்டுறவு மொத்த விற்பனைப் பண்டகசாலைகள் அவற்றிற்கு தேவையானவற்றை வாங்குவதில் கூட்டுறவு விற்பனைச் சங்கங்களின் சேவையைப் பெரிதும் பயன்படுத்திக்கொள்கின்றன. 1985–86 ஆம் ஆண்டில் விவசாய விளைபொருட்களை விற்பனை செய்ததின் மூலமாக 111 இலட்சம் ரூபாய் அளவிற்கு உற்பத்திக் கடன்கள் வசூலிக்கப்பட்டன. இது 1987–88 ஆம் ஆண்டில் 1.85 கோடி ரூபாய் அளவிற்கு உயர்த்தப்படும்.

36. விளை பொருளீட்டுக் கடன்கள்.—விவசாய உறுப்பினர்கள் தங்கள் விளைபொருட்களுக்கு நியாயமான விலை கிடைக்கும் வரையில் காத்திருக்கும் பொருட்டு அவர்களது விளைபொருட்களின் ஈட்டின் பேரில் கூட்டுறவு விற்பனைச் சங்கங்களும் விவசாய சேவைக் கூட்டுறவுச் சங்கங்களும் தொடர்ந்து கடன்கள் வழங்கி வருகின்றன. இவ்வகைக் கடன்கள் 1985–86 ஆம் ஆண்டில் 5.25 கோடி ரூபாய் அளவிற்கு வழங்கப்பட்டுள்ளன. இந்தப் பயனுள்ள செயல் வரும் ஆண்டுகளில் விரிவாக்கப்படும். 31–12–1986 வரை 3.00 கோடி ரூபாய் அளவிற்கு விளை பொருளீட்டுக் கடன்கள் வழங்கப்பட்டுள்ளன. 1987–88 ஆம் ஆண்டில் 3.40 கோடி ரூபாய் அளவிற்கு விளைபொருளீட்டுக் கடன்கள் கூட்டுறவுச் சங்கங்களால் வழங்கப்படும்.

## கூட்டுறவுப் பதனிடுதல்.

37. பதனிடும் பிரிவுகளை அமைத்தல்.—விளைபொருட்களை பதனிடும் வசதிகளை உறுப்பினர்களாக உள்ள உற்பத்தியாளர்களுக்குக் குறைந்த செலவில் அளிக்கும் பொருட்டுக் கூட்டுறவுச் சங்கங்கள் விற்பனைச் சங்கங்களுக்கு அருகிலேயே பதனிடும் பிரிவுகளை நிறுவியுள்ளன. இதற்காக அவை அரசிடமிருந்து பங்கு மூலதனமாகவும், தேசிய கூட்டுறவு வளர்ச்சிக் கழகத்திடமிருந்து கடனாகவும் நிதி உதவி பெறுகின்றன. அரிசி ஆலைகள் 38-ம், பருத்தி விதை நீக்கும் ஆலைகள் 20-ம் (16 கூட்டுறவுச் சங்கங்களுக்குச் சொந்தமானவை) கடலை உடைக்கும் அலகுகள் 17-ம், எண்ணெய் பிழியும் இயந்திரங்கள் 8-ம், எண்ணெய் ஆலை ஒன்றும், தவிட்டு எண்ணெய் ஆலை ஒன்றும், பழம் பதனிடும் பிரிவுகள் இரண்டும், காப்பிக்கொட்டை பதனிடும் ஆலை ஒன்றும், மரவள்ளிக் கிழங்கு பதனிடும் பிரிவு ஒன்றும், குளிர்பதன அறை ஒன்றும், மஞ்சள் தூள் அரவை ஆலையொன்றும் மொத்தம் 91 பதனிடும் பிரிவுகள் உள்ளன. கிருஷ்ணகிரியில் உள்ள



பருத்தி விதை நீக்கும் ஆலையும், கொல்லிமலையில், கொல்லிமலை பெரும் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தால் ஏற்படுத்தப்பட்டுள்ள பழம் பதனிடும் ஆலையும் விரைவில் உற்பத்தியைத் துவக்கும் என எதிர்பார்க்கப்படுகின்றது. அரூர், மணப்பாறை, இராசிபுரம் மற்றும் விழுப்புரம் ஆகிய இடங்களில் பருத்தி விதை நீக்கும் இயந்திரங்கள் நிறுவுவதற்கும், விருதுநகரில் துவரம் பருப்பு உடைக்கும் ஆலை நிறுவுவதற்கும் நிதி உதவிக்கான முன் மொழிவுகள் தேசிய கூட்டுறவு வளர்ச்சிக்கழகத்தின் பரிசீலனையில் உள்ளது. 1987–88 ஆம் ஆண்டில் கள்ளக்குறிச்சி கூட்டுறவு விற்பனைச் சங்கமும் தஞ்சாவூர் கூட்டுறவு விற்பனை இணையமும் பருத்தி விதை நீக்கும் இயந்திரம் நிறுவவும் நிதி உதவி அளிக்கப்படும்.

## கிடங்கு வசதி.

38. ஊரக மற்றும் விற்பனைக் கிடங்குகள்.—கூட்டுறவுத் துறையில் உள்ள கிடங்கு வசதிகளை மேம்படுத்துவதின் தேவையைக் கருத்தில் கொண்டு கூட்டுறவுச் சங்கங்கள் அரசிடமிருந்து 40 சதவீதம் மானியத்தையும், தேசிய கூட்டுறவு வளர்ச்சிக் கழகத்திடமிருந்து 60 சதவிகிதம் கடனையும் பெற்று கிராம அளவில் ஊரகக் கிடங்குகளையும் மண்டி அளவில் விற்பனைக் கிடங்குகளையும் தொடர்ந்து கட்டி வருகின்றன. இக்கிடங்குகளின் ஒரு பகுதியை அலுவலகத்திற்குப் பயன்படுத்துவதோடு, விவசாய இடுபொருட்கள் இன்றியமையாத நுகர்பொருட்கள் மற்றும் விவசாய விளை பொருட்களை சேமித்து வைத்து விற்பனை செய்வதற்குப் பயன்படுத்துகின்றன. கிடங்கு கட்ட ஆகும் செலவு உயர்ந்துள்ளதைக் கருத்தில் கொண்டு 107 மெட்ரிக் டன் கொள்திறன் கொண்ட ஓர் ஊரகக் கிடங்கிற்கான நிதியுதவியின் அளவை 1.14 இலட்சம் ரூபாயிலிருந்து 1.28 இலட்சம் ரூபாய்க்கும் 1984–85 ஆம் ஆண்டிலிருந்து உயர்த்தப்பட்டுள்ளது. அதுபோலவே 500 மெட்ரிக் டன் கொள்திறன் கொண்ட ஒரு விற்பனைக் கிடங்கிற்கான நிதியுதவியின் அளவை 2 இலட்சம் ரூபாயிலிருந்து 3.25 இலட்சம் ரூபாய்க்கும் 1,000 மெட்ரிக் டன் கொள்திறன் கொண்ட விற்பனைக் கிடங்கிற்கான நிதியுதவியின் அளவை 3.40 இலட்சம் ரூபாயிலிருந்து 5,25 இலட்சம் ரூபாய்க்கும், 1985–86 ஆம் ஆண்டிலிருந்து உயர்த்தப்பட்டுள்ளது. 107 மெட்ரிக் டன் கொள்திறன் கொண்ட ஊரகக் கிடங்குக்கு 1.28 இலட்சம் ரூபாயிலிருந்து 1.45 இலட்சம் ரூபாய்க்கும், 500 மெட்ரிக் டன் கொள்திறன் கொண்ட விற்பனைக் கிடங்குக்கு 3,25 இலட்சம் ரூபாயிலிருந்து 4.65 இலட்சம் ரூபாய்க்கும் 1,000 மெட்ரிக் டன் கொள்திறன் கொண்ட விற்பனைக் கிடங்குக்கு 5.25 இலட்சம் ரூபாயிலிருந்து 6.65 இலட்சம் ரூபாய்க்கும் நிதியுதவியின் அளவை மேலும் உயர்த்துவது பற்றி பரிசீலனையில் உள்ளது. 1987 பிப்ரவரி மாத முடிவில் 4.89 இலட்சம் மெட்ரிக் டன் கொள்திறன் கொண்ட 4,261 ஊரகக் கிடங்குகளும் 1.50 இலட்சம் மெட்ரிக் டன் கொள்திறன் கொண்ட 289 விற்பனை

மற்றும் நுகர்வோர் கிடங்குகளும் உள்ளன. 31—3—1986-ல் 6.33 இலட்சம் மெட்ரிக் டன் அளவிற்கு இருந்த மொத்த சேமிப்பு கொள்திறன் 28—2—1987-ல் 6.39 இலட்சம் மெட்ரிக் டன் அளவிற்கு உயர்ந்துள்ளது. தற்போது 0.04 இலட்சம் மெட்ரிக் டன் கொள்திறன் கொண்ட 19 ஊரகக் கிடங்குகளும், 4 விற்பனை மற்றும் நுகர்வோர் கிடங்குகளும் கட்டுமானத்தில் இருக்கின்றன. 125 ஊரகக் கிடங்குகள், ஒரு விற்பனைக் கிடங்கு மற்றும் ஒரு நுகர்வோர் கிடங்கு கட்டுவதற்கான நிதி உதவி 1987–88 ஆம் ஆண்டில் அளிக்கப்படும். கூட்டுறவுச் சங்கங்களிடமிருக்கும் கிடங்குகளின் பயன்பாட்டை அதிகரிப்பதற்காகவும் நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன.

## நுகர்வோர் கூட்டுறவு சங்கங்கள்.

39. நுகர் பொருட்கள் சில்லரை விற்பனை.—நுகர்வோர் கூட்டுறவுச் சங்கங்களின் கூட்டமைப்பு 3,075 கல்லூரி மற்றும் உயர்நிலைப் பள்ளி மாணவர் கூட்டுறவுப் பண்டகசாலைகள், 306 தொழிற்சாலை மற்றும் தோட்டத் தொழிலாளர் பண்டகசாலைகள், 17 மகளிர் கூட்டுறவுப் பண்டகசாலைகள் உட்பட 3,868 பிரதம கூட்டுறவு பண்டகசாலைகளையும் அவற்றின் 573 கிளைகளையும் 29 கூட்டுறவு மொத்த விற்பனை பண்டகசாலைகளையும் அவற்றின் 2,162 கிளைகளையும் மாநில நுகர்வோர் கூட்டுறவு இணையத்தையும் கொண்டுள்ளது. நுகர்வோர் கூட்டுறவுச் சங்கங்கள் செய்த சில்லறை விற்பனையின் மதிப்பு 1984–85 ஆம் ஆண்டில் 285 கோடி ரூபாயிலிருந்து 1985–86 ஆம் ஆண்டில் 605 கோடி ரூபாய்க்கு உயர்ந்துள்ளது. தமிழ்நாட்டில் உள்ள நுகர்வோர் கூட்டுறவுச் சங்கங்கள் 1984–85 ஆம் ஆண்டில் செய்துள்ள சில்லரை விற்பனையின் மதிப்ப நாடு முழுவதிலும் உள்ள நுகர்வோர் கூட்டுறவுச் சங்கங்கள் செய்துள்ள சில்லரை விற்பனையின் மதிப்பில் மூன்றில் ஒரு பங்காகும் என்பது குறிப்பிடத்தக்கது. 1986–87 ஆம் ஆண்டிற்கு 500 கோடி ரூபாய்க்கு நிர்ணயிக்கப்பட்ட இலக்கின்மீது 28—2—1987 வரை 626.99 கோடி ரூபாய் அளவிற்கு விற்பனை செய்யப்பட்டுள்ளது. 1987–88 ஆம் ஆண்டில் 590 கோடி ரூபாய்க்கு நுகர்பொருள் சில்லரை விற்பனை செய்ய திட்டமிடப்பட்டுள்ளது.

40. கிராமங்களில் இன்றியமையாப் பொருட்கள் விற்பனை—இன்றியமையாப் பொருட்களை விற்பனைச் செய்ய ஒவ்வொரு வருவாய் கிராமத்திலும் ஒரு நியாயவிலைக் கடை துவக்கி நடத்தும் திட்டம் மற்றும் 1,000 குடும்ப அட்டைகளுக்கு மேல் உள்ள கடைகளைப் பிரித்து புதுக்கடைகள் ஏற்படுத்தும் திட்டம் ஆகியவை செயல்படுத்தப்படுகிறது. இத்திட்டத்தின் கீழ் மாநிலத்தில் கூட்டுறவு சங்கங்களுக்கு ஒதுக்கப்பட்ட வருவாய் கிராமங்களில் 12,596 நியாயவிலைக் கடைகள் நடத்தப்பட்டுகின்றன. விற்பனையாளர் சம்பளம், வாடகை மற்றும் இதர சில்லரை செலவுகளுக்காக கிராம கடைகளுக்கு அரசு தொடர்ந்து மானிய உதவி





வழங்கி வருகிறது. அதிகபட்சத் தொகையாக ஒவ்வொரு முழு நேரக் கடைக்கு 3,600 ரூபாய்க்குட்பட்டும், ஒவ்வொரு பகுதி நேரக் கடைக்கு 2,400 ரூபாய்க்குட்பட்டும் ஒவ்வொரு மாற்றியமைக்கப்பட்ட கடைக்கு 804 ரூபாய்க்குட்பட்டும் நஷ்டத்தில் செயல்படும் கடைகளுக்கு அரசு மானிய உதவி வழங்குகிறது. கிராமக் கடைகள் 1984–85 ஆம் ஆண்டில் 126.20 கோடி ரூபாய் அளவிற்கே விற்பனை செய்திருக்க 1985–86 ஆம் ஆண்டில் 192.72 கோடி ரூபாய் அளவிற்கு இன்றியமையாப் பொருட்களை விற்பனை செய்துள்ளன. விற்பனை உயர்வு கிட்டத்தட்ட 53 சதவீதம் ஆகும். 1986–87 ஆம் நிதியாண்டில் 28—2—1987 வரை 205.85 கோடி ரூபாய் அளவிற்கு இன்றியமையாப் பொருட்கள் விற்பனை செய்யப்பட்டுள்ளது. இவ்வாறாக கிராமக் கடைகளில் பொருட்களின் விற்பனை கணிசமான அளவு உயர்ந்துள்ளது என்பதும் 1986–87 ஆம் நிதியாண்டு முடியுமுன்பே விற்பனை 1985–86 ஆம் ஆண்டு விற்பனையைவிட உயர்ந்துவிட்டது என்பதும் குறிப்பிடத்தக்கது.

பொது விநியோகத் திட்டத்தில் கூட்டுறவுகளுக்குப் பெரும் பங்கை அளித்து அதனை திறம்பட செயற்படுத்தி வருவதில் நாடு முழுவதிற்கும் தமிழ்நாடு முன்னோடியாகத் திகழ்கிறது. திறமையுடன் செயற்படுத்தப்பட்டு வரும் பொது விநியோகத் திட்டம், இன்றியமையாப் பொருட்களின் விலைகளைக் கட்டுப்பாட்டிற்குள் வைத்திருப்பதிலும், சரியான நேரத்தில் உரிய முறையில் பொதுவாக மக்களுக்கும் குறிப்பாக நலிந்த பிரிவினருக்கும் விநியோகம் செய்யப்படுவதை உறுதிசெய்வதிலும் உதவி செய்கிறது என்ற ஒருமித்தக் கருத்து எல்லோராலும் ஏற்றுக்கொள்ளப்படுகிறது. எந்த ஒரு தனியார் நிறுவனமும் இதில் ஈடுபடுத்தப்படவில்லையென்பதே தமிழ்நாட்டில் உள்ள பொது விநியோகத்தின் தனித்தன்மையாகும். கிராமப்பகுதி அளவில், விவசாய சேவைக் கூட்டுறவுச் சங்கங்களும் மற்றும் தமிழ்நாடு நுகர்பொருள் வாணிப கழகமும் இக்கடைகளை நடத்தி வரும் பொறுப்பை ஏற்றுள்ள நிறுவனங்களாகும். கூட்டுறவுச் சங்கங்கள் மாநிலத்தில் உள்ள கடைகளில் 75 சதவீதக் கடைகளை நடத்தி மாநிலத்தில் மொத்தமுள்ள 118 இலட்சம் குடும்ப அட்டைதாரர்களில் 94 இலட்சம் குடும்ப அட்டைதாரர்களுக்குச் சேவை செய்து வருகின்றன.

41. சிறப்பு அங்காடிகளும் சிறப்புச் சிற்றங்காடிகளும் செய்த விற்பனை.—மாநிலத்தில் தற்பொழுது கூட்டுறவு மொத்த விற்பனைப் பண்டகசாலைகள் மற்றும் பிரதம கூட்டுறவு பண்டகசாலைகள் ஆகியவற்றின் 30 பல்பொருள் அங்காடிகளும் (சிறப்பு அங்காடிகள்) 191 நவீன சில்லரை அங்காடிகளும்/பெரிய அளவிலான சில்லரை அங்காடிகளும் (சிறப்புச் சிற்றங்காடிகள்) இயங்கி வருகின்றன. 1984–85 ஆம் கூட்டுறவு ஆண்டில் 95.50 கோடி ரூபாய் அளவிற்கு விற்பனை செய்த இந்த அங்காடிகள் 1985–86 ஆம் கூட்டுறவு ஆண்டில் 98.00 கோடி ரூபாய் அளவிற்கு விற்பனை

செய்துள்ளன. 1986–87 ஆம் ஆண்டில் ஐந்து நவீன சில்லரை அங்காடிகள் திறக்கத் திட்டமிடப்பட்டுள்ளது. ஐந்து பெரிய அளவிலான சில்லரை அங்காடிகள் அமைப்பதற்கும் மத்திய அரசு நிதி உதவி ஒப்பளித்துள்ளது. 1987–88 ஆம் ஆண்டில் மேலும் பத்து நவீன சில்லரை அங்காடிகள் அமைத்து நிதியுதவி அளிக்க வரவு-செலவு திட்டத்தில் வகை செய்யப்பட்டுள்ளது.

**42. சுய சேவைப் பிரிவுகளைத் திறத்தல்.**—நுகர்வோர் கூட்டுறவுச் சங்கங்கள் தனியார் வியாபாரிகளுடன் திறமையாகப் போட்டியிடும் நிலையில் தற்போது இருக்கின்றன. நுகர்வோர்கள் உரிமையுடன் பொருள்களை எடுத்து தரத்தைக் கண்டறிந்து விலைகளை ஒப்பிட்டுப் பார்த்த பிறகு வாங்குவதையே பெரிதும் விரும்புகின்றனர். நுகர்வோரின் இந்த மனப்பாங்கினைப் பூர்த்தி செய்யத் தொடங்கப்பட்டவையே சுயசேவைப் பிரிவுகளாகும். இச்சுய சேவை பிரிவுகள் விற்பனையை பெருக்குவதற்காக ஏற்பட்ட முக்கிய நவீன உத்திகளில் ஒன்றாகும். இந்த போக்கிற்கேற்ப மாநிலத்தில் உள்ள கூட்டுறவு மொத்த விற்பனை பண்டகசாலைகள் மூலம் கவர்ச்சிகரமான நவீன சுயசேவைப் பிரிவுகள் படிப்படியாக அமைக்கப்பட்டு வருகின்றன. இந்த முயற்சிக்குக் கிடைத்த நல்லதொரு வரவேற்பின் விளைவாக நுகர்வோர் கூட்டுறவு பண்டகசாலைகளின் வியாபாரத்தில் முன்னேற்றம் தெரிய வருகிறது. தென்னிந்தியாவிலேயே மிகப் பெரிய நவீன சுயசேவைப் பிரிவு ஒன்று சென்னை நகரில் புதிய கட்டிடவளாகத்தில் 1985 ஆம் ஆண்டு அக்டோபர் திங்கள் முதல் இயங்கி வருகிறது. இது தவிர இருபத்துநான்கு இடங்களில் சுயசேவைப் பிரிவுகள் அமைக்கப்பட்டுள்ளன. மேலும் இருபது சுயசேவை பிரிவுகள் விரைவில் அமைக்கப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

வரவு-செவுத் திட்ட முறை மற்றும் மேலாண்மை கணக்குத் திட்டம் ஆகியவையும் மாநிலத்தில் உள்ள கூட்டுறவு மொத்த விற்பனைப் பண்டகசாலைகளில் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

**43. நலிந்த பிரிவினருக்குச் சேவை.**—மாநிலத்தின் பின்தங்கிய பகுதிகளில் வாழும் நலிந்த பிரிவினர் மற்றும் தொழிற்சாலைத் தொழிலாளர்கள் முதலியோர் தேவைக்கேற்ப நிறுவப்பட்ட 66 சிறு கிளைகளும், மாநகரங்களிலும், நகரங்களிலும் உள்ள குடிசை பகுதிகளில் வாழும் மிகமிக நலிந்தோருக்கென நிறுவப்பட்ட 100 மிகச்சிறு கிளைகளும் (மக்கள் அங்காடிகள்) செயல்பட்டு வருகின்றன. தொழிற்சாலைத் தொழிலாளர்கள், தோட்டத் தொழிலாளர்கள், கூலிகள், குறைந்த வருவாய்ப் பிரிவினர், பின்தங்கிய வகுப்பினர், குடிசைப் பகுதியினர் மற்றும் ஆதி திராவிடர்-பழங்குடியினர் நிறைந்துள்ள இதர குடியிருப்புப் பகுதிகளில் வாழ்வோர் ஆகியோர்களின் தேவைகளை நிறைவேற்ற 17 சிறிய அளவிலான சில்லரை அங்காடிகள் அமைக்கப்பட்டுள்ளன. 1986–87 ஆம் ஆண்டில் மேலும் நான்கு சிறிய அளவிலான



சில்லறை அங்காடிகள் அமைப்பதற்கான நிதி உதவியை மத்திய அரசு ஒப்பளித்துள்ளது. 1987–88 ஆம் ஆண்டில் மேலும் ஐந்து அங்காடிகள் அமைக்க திட்டமிடப்பட்டுள்ளது.

**44. மாணவர் சமுதாயத்திற்குச் சேவை.**—நுகர்வோர் கூட்டுறவுச் சங்கங்கள் நாட்டுடைமையாக்கப்பட்ட பாட நூல்களையும் குறிப்பேடுகளையும், 1986–87 ஆம் கல்வி ஆண்டில் முறையே 4.25 கோடி ரூபாய்க்கும் 2.75 கோடி ரூபாய்க்கும் விநியோகித்ததின் வாயிலாக மாணவர் சமுதாயத்திற்குத் தொடர்ந்து சேவை செய்து வருகின்றன.

**45. தரச்சோதனை வசதிகள் அளிக்கும் திட்டத்தினை விரிவாக்குதல்.**—நுகர்வோர்க்கு தரமான பொருள் விநியோகிக்க வேண்டி நுகர்வோர் கூட்டுறவுச் சங்கங்கள் தரச்சோதனை ஆய்வு கூடங்கள் நிறுவியுள்ளன. இது வரை 20 கூட்டுறவு மொத்த விற்பனைப் பண்டகசாலைகளுக்கு தமிழ்நாடு நுகர்வோர் கூட்டுறவு இணையத்திற்குத் தரச்சோதனை ஆய்வுக் கூடங்களுக்காக அரசு நிதி உதவி செய்ய ஒப்பளித்துள்ளது. கோயம்புத்தூர் மாவட்ட நுகர்வோர் கூட்டுறவு மொத்த விற்பனைப் பண்டகசாலை தன் சொந்த நிதியிலிருந்து தரச்சோதனை ஆய்வுக் கூடம் நிறுவியுள்ளது. 1987–88 ஆம் ஆண்டில் மூன்று கூட்டுறவு மொத்த விற்பனைப் பண்டக சாலைகளுக்குத் தரச்சோதனை நிலையங்கள் அமைப்பதற்காக உதவி செய்யத் திட்டமிடப்பட்டுள்ளது. 1985–86 முதல் ஒவ்வொரு கூட்டுறவு மொத்த விற்பனைப் பண்டகசாலைக்கும் அரசு ஒரு இலட்சம் ரூபாய் மானியம் வழங்கி வருகிறது.

**46. நுகர்வோர் கூட்டுறவுச் சங்கங்களை வலுப்படுத்துதல்**—ஏற்கெனவே இழப்படைந்து சீர்பெற வாய்ப்பும் வளர்ச்சியடைய அடிப்படை வசதியும் கொண்ட தற்போதுள்ள நுகர்வோர் கூட்டுறவு மொத்த விற்பனைப் பண்டகசாலைகளை வலுப்படுத்தவும், புனரமைப்பு செய்யவும் மத்திய அரசு நிதி உதவி பெறும் திட்டத்தின்கீழ் மத்திய அரசு நிதி உதவி செய்கிறது. இதில் மாநில அரசு 25 சதவிகிதம் கூடுதல் வள ஆதாரமாகப் பங்கு மூலதனம் வழங்குகிறது. மொத்தமுள்ள 29 நுகர்வோர் கூட்டுறவு மொத்த விற்பனைப் பண்டகசாலைகளில் 12 நுகர்வோர் கூட்டுறவு மொத்த விற்பனைப் பண்டகசாலைகளுக்கு 151.10 இலட்சம் ரூபாய் அளவுக்கு இத்திட்டத்தின்கீழ் நிதி உதவி அளிக்கப்பட்டுள்ளது. நிதி உதவி பெற்றுள்ள பண்டகசாலைகளின் முன்னேற்றம் தொடர்ந்து கண்காணிக்கப்படுகிறது. அவை முன்னேற்றம் அடைந்துள்ளன. இவ்வித நலிந்த நுகர்வோர் கூட்டுறவு மொத்த விற்பனைப் பண்டகசாலைகளுக்கு நிதி உதவி செய்ய 1987–88 ஆம் நிதியாண்டிலும் அடையாள ஒதுக்கீடுகள் செய்யப்பட்டுள்ளன.

**47. நுகர்வோர் கூட்டுறவுச் சங்கங்களின் பணியாளர்களுக்குப் பயிற்சி.**—நுகர்வோர் கூட்டுறவுகளின் செயல்திறனை மேம்படுத்தும் நோக்குடன் நுகர்வோர் கூட்டுறவுச் சங்கங்களில், உள்ள பணியாளர் அனைவருக்கும் தத்தம் பல்வகைப்பட்ட நடவடிக்கைகளிலும் செயலாற்றும் திறமையை அபிவிருத்தி செய்ய தொடர்ந்து பயிற்சி அளிப்பதற்காக பயிற்சி அலுவலர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். இது தவிர நுகர்வோர் கூட்டுறவு சங்கங்களிலுள்ள பணியாளர்களுக்காகவென்றே பல்வேறு பயிற்சி திட்டங்கள் இத்துறையால் பிரத்தியேகமாக நடத்தப்படுகின்றன. பெங்களூரில் உள்ள கூட்டுறவு பயிற்சிக் கல்லூரியிலும் பூனாவிலுள்ள வைகுந்த மேத்தா தேசிய கூட்டுறவு மேலாண்மை பயிற்சி நிலையத்திலும் நுகர்வோர் மேலாண்மை குறித்து நடத்தப்படும் பயிற்சித் திட்டங்களுக்கும் சுயசேவைத் திட்டம் மற்றும் மொத்த விற்பனைப் பண்டகசாலை தனி வழி வளர்ச்சிக்கான சிறப்பு மேலாண்மை திட்டம் ஆகியவை பற்றிய கருத்தரங்குகளுக்கும் துறை அலுவலர்கள் அனுப்பப்படுகின்றனர்.

**48. நுகர்வோர் சந்திப்பும் கூட்டுக் கொள்முதல் திட்டமும்.**—நுகர்வோர் கூட்டுறவுகளின் செயல்பாட்டில் சங்க உறுப்பினர்கள் நன்முறையில் தங்களை ஈடுபடுத்திக் கொள்ள வேண்டி, 1986 ஆம் ஆண்டு அனைத்து கூட்டுறவு மொத்த விற்பனைப் பண்டகசாலைகளிலும் நுகர்வோர் சந்திப்பு நடத்தப்பட்டது. அதில் உறுப்பினர்கள் தெரிவித்த ஆலோசனைகள் நிறைவேற்றப் பட்டு வருகின்றன.

ஜப்பானில் உள்ள ஹான் குழுவைப்போல் நுகர்வோர் கூட்டுறவுச் சங்கங்களில் பொருள்களைக் கூட்டாக வாங்கும் நுகர்வோர் குழு, பிரத்தியேக மகளிர் அமைப்புகளுக்காகக் கூட்டுறவு மொத்த விற்பனைப் பண்டகசாலைகளில் ஏற்படுத்தப் பட்டு, அக்குழுவின் உறுப்பினர்களின் வீடுகளிலேயே நுகர்வோர் பொருட்கள் விநியோகிக்கப்பட்டு வருகின்றன.

**49. கூட்டுறவு முத்திரையுடன் கூடிய பொருட்கள்.**—நுகர்வோருக்கு நன்முறையில் சேவை செய்யவும் நியாயமான விலையில் தரமான பொருள்கள் விநியோகித்து விற்பனைப் போட்டியை வலுப்படுத்தவும், மாநிலத்தில் சில குறிப்பிட்ட மொத்த விற்பனைப் பண்டகசாலைகள் சாதாரணமாக மிக அதிக அளவில் உபயோகிக்கப்படும் சமையல் எண்ணெய், மஞ்சள் தூள், சீயக்காய் தூள், காப்பிப்பொடி, சேமியா மற்றும் பனியன்கள் ஆகிய நுகர் பொருள்களை உற்பத்தி செய்வதில் ஈடுபட்டுள்ளன. இவ்விதப் பொருள்கள் விற்பனை செய்வதில் தமக்குள்ள முத்திரைப் பெயரை நிலைநிறுத்திக் கொள்ள அவை பாடுபடுகின்றன. கூட்டுறவு முத்திரையுடன் இதர பிரிவின் கீழ் வரும் தேயிலை, கைத்தறி மற்றும் பட்டுத்துணி, எண்ணெய் வகைகள் விற்பனைக்காகவும் கூட்டுறவு அங்காடிகளில் முன்னுரிமை அளிக்கப்படுகின்றன.





**50. மின்சக்தி விநியோகத்தை விரிவாக்குதல்.**—கிராமப்புறங்களில் மின் சக்தியைப் பரவலாக வழங்குவதற்காகவும் பொருளாதார வளர்ச்சியை விரைவுப்படுத்துவதற்காகவும், ஊரக மின்சாரக் கூட்டுறவுச் சங்கங்கள் இயங்கி வருகின்றன. கும்பகோணத்திலும், திருமயத்திலும், வந்தவாசியிலும் இயங்கிவரும் சங்கங்கள் 1986 நவம்பர் முடிய நலிந்த பிரிவினருக்காக ஒவ்வொரு குடிசைக்கும் ஒரு மின் விளக்குத் திட்டத்தின்கீழ் 7,342 மின் இணைப்புகள் உட்பட மொத்தம் 25,717 மின் இணைப்புகளை வழங்கியுள்ளன. இது போன்ற நான்காவது சங்கம் கோயம்புத்தூர் மாவட்டத்தில் சோமனூரில் 1987–88 இல் ஆரம்பிக்கப்படவுள்ளது.

## நலிந்த பிரிவினருக்கான கூட்டுறவு சங்கங்கள்.

**51. தனி வகை கூட்டுறவு சங்கங்கள்.**—தொழிலாளர்கள் சலவைத் தொழிலாளர்கள், முடிதிருத்துவோர், உப்பளத் தொழிலாளர்கள் மற்றும் மலை வாழ் மக்கள் போன்ற நலிந்த பிரிவினரின் நலன் கருதி தனியாகத் கூட்டுறவுச் சங்கங்கள் இயங்கி வருகின்றன. தொழில் ஒப்பந்தக் கூட்டுறவுச் சங்கங்களும், வேலையற்ற பொறியியல் பட்டதாரிகளுக்கான கட்டுமானப் பணிக் கூட்டுறவுச் சங்கமும், ஒப்பந்த வேலைகளைப் பெற்றுத் தருவதன் மூலமாக அவற்றின் உறுப்பினர்களுக்கு வேலை வாய்ப்பை அளிக்கின்றன. பிறவகைச் சங்கங்கள் அவற்றின் உறுப்பினர்களுக்கு சேவைகளையோ அல்லது கடன் உதவியையோ அளிக்கின்றன. மானியம் பங்கு மூலதனம், கடன் மற்றும் துறை அலுவலர்களின் இலவசச் சேவை போன்ற உதவிகள் அரசால் இச்சங்கங்களுக்கு வழங்கப்படுகின்றன.

**52. வேலையில்லாப் பொறியியல் பட்டதாரிகளுக்கான கட்டுமானக் கூட்டுறவுச் சங்கங்கள்.**—பொதுப்பணித்துறையில் கட்டுமானப் பணிகளை நிறைவேற்றுவதில் கூடிய வரையில் தனியார் ஒப்பந்த முறையைத் தவிர்ப்பதன் மூலமாக வேலையில்லாப் பொறியியல் பட்டதாரிகளுக்கும் பட்டயதாரர்களுக்கும், வேலை வாய்ப்பை ஏற்படுத்திக் தரும் நோக்கத்துடன் 1981-ல் சென்னையில் நவீன பொறியியல் பட்டதாரிகள் கட்டுமானக் கூட்டுறவுச் சங்கம் அமைக்கப்பட்டது. இது போன்ற இரண்டாவது சங்கம் 1984 ஆம் ஆண்டில் மதுரையில் வேலையில்லாப் பட்டதாரர்களுக்காக அமைக்கப்பட்டு அரசு நிதியுதவியும் அளித்துள்ளது. இந்த இரண்டு சங்கங்களும் 214.55 இலட்சம் ரூபாய் மதிப்புள்ள 187 ஒப்பந்தப் பணிகளை ஏற்று அவற்றை நிறைவேற்ற உறுப்பினர்களிடம் ஒப்படைத்ததன் மூலம் 109.83 இலட்சம் ரூபாய் அளவிற்கு பணிகள் முடிக்கப்பட்டுள்ளன.

[1987 ஏப்ரல் 11

**53. உடல் ஊனமுற்றோருக்கு உதவி.**— இம்மாநிலத்தில் மொத்தம் ஆறு உடல் ஊனமுற்றோர் நலக் கூட்டுறவுச் சங்கங்கள் உள்ளன. முதற்கட்டமாக சென்னையிலும் திருச்சிராப்பள்ளி யிலும் உள்ள இவ்வகைச் சங்கங்கள் இரண்டிற்கும், 1985-86 ஆம் ஆண்டில் நிதி உதவி வழங்கப்பட்டது. மாவட்ட சமூக நல அலுவலர்களுடன் கலந்தாலோசித்து சங்கங்களின் உறுப்பினர் களுக்குப் பயனுள்ள வேலைகளைத் தரக் கூடிய பணிகளை ஏற்று நடத்துவதற்கு ஏதுவாக இவை அமையும், தஞ்சாவூர் மற்றும் கடலூரில் மேலும் இரண்டு சங்கங்களுக்கு 1986-87 ஆம் ஆண்டில் நிதி உதவி வழங்கப்பட்டுள்ளது.

**54. பழங்குடியினர் மேம்பாடு.**—மாநிலத்தில் 1986 டிசம்பர் 31 ஆம் நாளில் 14 பெரும் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் 47,063 உறுப்பினர்களைக்கொண்டு இயங்கி வந்தது. இதில் 43,651 உறுப்பினர்கள் பழங்குடியினர் ஆவர். இச்சங்கங்கள் பழங்குடியினரின் பொருளாதார மேம்பாட்டிற்காக ஒரேஇடத்தில் ஒருங்கிணைந்த கடன் வசதி, விற்பனை மற்றும் ஏனைய சேவை களை வழங்கி வருகின்றன. 1986-87 ஆம் ஆண்டில் மேலும் 3 பெரும் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் அமைக்க அரசு நிதி உதவி ஒப்பளித்துள்ளது. 1986-87 ஆம் ஆண்டு முடிவில் 17 பெரும் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் செயல்படுமென எதிர்பார்க்கப்படுகிறது. பழங்குடியினரின் நலிந்த பொருளா தார நிலையைக் கருத்தில் கொண்டு அரசு இச்சங்கங்களுக்குத் தாராளமாகத் தொடர்ந்து நிதி உதவி அளித்து வருகிறது. பழங் குடி வகுப்பைச் சார்ந்த உறுப்பினர்களின் வேளாண்மைக் காரியத் திற்காகத் தேவைப்படும் நிதி உதவிகளை இந்தப் பெரும் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் வழங்கி வருகின்றன. அவர் களின் வருவாயைப் பெருக்கும் பொருட்டு பால் பண்ணைத் தொழில் முதலியவற்றிற்கு மத்திய காலக் கடனும் வழங்கப்படு கின்றன. பருவ காலமில்லாத காலத்தில் பழங்குடியினரின் தேவைக் கேற்ப நுகர்வுக் கடன்களும் வழங்கப்படுகின்றன. இவ்வகைக் கடன்கள் 1984-85 ஆம் ஆண்டு வரை ஆண்டொன்றுக்கு 4 சதவிகிதச் சலுகை வட்டி வீதத்தில் வழங்கப்பட்டு வந்தன. 1985 ஏப்ரல் 1-ம் நாள் முதல் பழங்குடி உறுப்பினர்களுக்கு வட்டி யில்லாக் கடன்கள் வழங்கப்பட்டு வருகின்றன. இதனால் ஏற் படும் வட்டி இழப்பை அரசு மானியமாக வழங்குகிறது. 1985-86 ஆம் ஆண்டில், பெரும் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங் களுக்கு வழங்கப்பட்ட கடனுக்காக 3.74 இலட்ச ரூபாய் வட்டி இழப்புக்கு மானியமாக அரசு ஒப்பளித்தது. ஆகவே இவ்வகை பெரும் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம் மூலமாக பழங்குடி உறுப் பினர் பொருளாதார மேம்பாட்டிற்காகப் பல்வகை நலத்திட்டங்



1987 ஏப்ரல் 11]

கள் மூலம் அரசு கவனம் செலுத்தி வருகிறது. இச்சங்கங்கள் செய்துள்ள சேவைகளின் விவரங்கள் கீழே கொடுக்கப் பட்டுள்ளன:—

| ஆண்டு. | வழங்கியக் கடன்கள். | கொள்முதல் செய்த வேளாண்மைப் பொருட்களின் மதிப்பு. | வழங்கிய வேளாண்மை தேவைகளின் மதிப்பு. | கொள்முதல் செய்த சிறு வனப் பொருட்களின் மதிப்பு. | விநியோகிக்க நுகர் பொருட்களின் மதிப்பு. |
|---|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) |
| | (இலட்சம் ரூபாயில்). | | | | |
| 1980-81 .. | 23.85 | 1.41 | 7.31 | 8.01 | 33.51 |
| 1981-82 .. | 48.46 | 2.53 | 12.17 | 7.23 | 56.46 |
| 1982-83 .. | 54.23 | 2.48 | 9.11 | 14.19 | 59.92 |
| 1983-84 .. | 96.80 | 3.23 | 13.90 | 9.38 | 77.49 |
| 1984-85 .. | 76.17 | 5.28 | 17.92 | 14.38 | 76.48 |
| 1985-86 .. | 98.48 | 11.00 | 26.41 | 22.15 | 95.90 |
| 1986-87 .. (1987 பிப்ரவரி 28-ம் நாள் வரை.) | 81.33 | 7.77 | 19.63 | 19.17 | 94.03 |

### கல்வி ஆராய்ச்சி மற்றும் பயிற்சி

**55 கொள்கை பரப்புதல் மற்றும் விளம்பரங்களைத் தீவிரப் படுத்துதல்.**—கொள்கைப் பரப்புதல், விளம்பரம் செய்தல் ஆகிய பணிகளைத் தமிழ்நாடு கூட்டுறவு ஒன்றியம் தீவிரப்படுத்தி யுள்ளது மேலும் கூட்டுறவு பற்றி தமிழிலும், ஆங்கிலத்திலும் மாத இதழ்களைத் தொடர்ந்து வெளியிடுவதுடன், கூட்டுறவுச் சங்கங்களின் முக்கிய நடவடிக்கைகளையும், சாதனைகளையும், திட்டங்களையும் பல தரப்பட்ட பொது மக்களுக்கு பரவலாக

எடுத்துக் கூறுவதற்காக அது ஆங்கிலத்திலும் தமிழிலும் இரு வாரச் செய்தி கடிதங்களை வெளியிட்டு வருகிறது. அவ்வொன்றியம் மாநிலத்தில் அதிகமாக பயன்படுத்தப்படும் புகழ் பெற்ற பத்திரிகைகளில் கூட்டுறவுத் துறையின் முக்கியத் திட்டங்கள் பற்றி விளம்பரங்கள் செய்து வருகின்றது. தொலைக் காட்சி, வானொலி ஆகியவற்றைப் பெரிதும் பயன்படுத்தி கூட்டுறவு இயக்கத்தின் நன்மைகள் பரப்பப்படுகின்றன. கொள்கை பரப்பும் பணிக்காக இவ்வொன்றியம் ஊர்திகளைப் பயன்படுத்தி வருகிறது. கூட்டுறவுக் கடன்களைத் திரும்பச் செலுத்துவதன் அவசியம் பற்றியும் கூட்டுறவுச் சங்கங்களின் பணிகள் பற்றியும் உறுப்பினர்களுக்கு எடுத்துரைக்கும் வகையில் அது மூன்று சிறு சினிமாப் படங்களைத் தயாரித்துள்ளது. அது அனைத்திந்திய கூட்டுறவு வார விழா கொண்டாடியும் நூலகங்கள் நடத்தியும் மாநாடுகள் மற்றும் கருத்தரங்குகள் நடத்தியும் வருகின்றது. மேலும் பொருட்காட்சிகளிலும் சந்தைகளிலும் பங்கு கொள்கின்றது. மாவட்ட கூட்டுறவு ஒன்றியங்களும் மாத இதழ்கள் வெயியிட்டும் மாவட்ட அளவில் நூலகங்கள் நடத்தியும் வருகின்றன. மிகச் சிறந்த முறையில் செயல்படும் கூட்டுறவுச் சங்கங்களுக்கு ஒவ்வொரு ஆண்டும் நவம்பர் திங்களில் கொண்டாடப்படும் அனைத்திந்தியக் கூட்டுறவு வார விழாவின் போது கேடயங்கள் வழங்கப்படுகின்றன.

**56 கூட்டுறவுப் பயிற்சி.**—பலதரப்பட்ட கூட்டுறவு வியாபார நடவடிக்கையினாலும் அதன் விளைவாகக் கூட்டுறவு பயிற்சி பெற்ற பணியாளர் தேவை பெருகி வருவதாலும் காமராசர் மாவட்டத்தில் சாத்தூரில் 1986 ஆம் ஆண்டு நவம்பர் மாதத்தில் ஒரு கூட்டுறவு பயிற்சி நிலையம் பதிவு செய்யப்பட்டது. சென்னை மத்திய கூட்டுறவு பயிற்சி நிலையத்திலும் மாவட்டங்களில் உள்ள எட்டு கூட்டுறவு பயிற்சி நிலையங்களிலும் இளநிலைப்பணியாளர்களுக்கான கூட்டுறவு பயிற்சி அளிக்கப்படுகிறது. சென்னை நடேசன் கூட்டுறவுப் பயிற்சி கல்லூரியிலும், மதுரை கூட்டுறவுப் பயிற்சிக் கல்லூரியிலும் நடுநிலைப் பணியாளர்களுக்கான கூட்டுறவுப் பயிற்சி அளிக்கப்படுகிறது. மேலும் 1987–88 ஆம் ஆண்டில் தென்னாற்காடு மாவட்டத்தில் கடலூரில் இளநிலைப் பணியாளர்களுக்காக ஒரு கூட்டுறவு பயிற்சி நிலையம் அமைக்க திட்டமிடப்பட்டுள்ளது.

**57. மேலாண்மைப் பயிற்சி.**—கொள்முதல் விற்பனை, கணக்கு பணியாளரின் மேலாண்மை போன்ற நடவடிக்கைகளில் உள்ள மேலாண்மை நுட்பங்களை விளக்கும் நோக்கத்துடன் 1983–84 ஆம் ஆண்டில் சென்னை அண்ணா மேலாண்மை நிலையத்தில் கூட்டுறவு விற்பனைச் சங்கங்கள் மற்றும் கூட்டுறவு மொத்த விற்பனைப் பண்டகசாலைகள் ஆகியவற்றின் 25 தலைமை நிர்வாக அலுவலர்களுக்கு ஒரு வார கால பயிற்சி தரப்பட்டது. இது போன்ற பயனுள்ள பயிற்சிகள் கூட்டுறவுத் துறை அலுவலர்கள் மற்றும் கூட்டுறவுச் சங்கப் பணியாளர் ஆகியோர் பயன்பெறும் வகையில் அவ்வப்போது நடத்தப்படுகின்றன.



## பொது.

**58 தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்களின் புதிய சட்டம் 1983.**—கூட்டுறவு இயக்கத்தின் சீரான வளர்ச்சிக்காக, 1961 ஆம் ஆண்டு தமிழ் நாடு கூட்டுறவுச் சங்கங்களின் சட்டம், 1934 ஆம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவு நிலவள வங்கிகளின் சட்டம் ஆகியவற்றை ரத்து செய்து 1983 ஆம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்களின் சட்டம் என்னும் விரிவான சட்டம் ஒன்று 1983-ஆம் ஆண்டு மார்ச் மாதத்தில் இயற்றப்பட்டு தமிழ்நாடு அரசிதழில் வெளியிடப்பட்டது. இப்புதிய சட்டத்தின் கீழ் இயற்றப்பட்ட விதிகள் அரசால் அங்கீகரிக்கப்பட்டுள்ளன. இவை விரைவில் தமிழக அரசின் அரசிதழில் வெளியிடப்படும். அரசு தெரிவிக்கும் நாளிலிருந்து புதிய சட்டமும் விதிகளும் நடைமுறைக்கு கொண்டு வரப்பட்டு, பின்னர் கூட்டுறவுச் சங்கங்களின் நிர்வாகக் குழுக்களுக்கான தேர்தல்கள் நடத்தப்படும்.

**58 சமூகப்பணி.**—தமிழ்நாட்டில் உள்ள கூட்டுறவுச் சங்கங்கள் சீரிய முறையில் சமூகப் பணிகளையும் புரிந்து வருகின்றன. எடுத்துக்காட்டாக கீழ்க்கண்ட இனங்களைக் குறிப்பிடலாம்.

(1) மாநில மற்றும் மாவட்ட அளவில் கூட்டுறவுத் தொண்டர் படை அமைத்து தமிழ்நாட்டில் உள்ள கூட்டுறவுகள் தாமாக முன் வந்து இரத்த வங்கிக்கு இரத்ததானம் செய்கின்றன.

(2) உடல் ஊனமுற்றோர்க்குச் சக்கர நாற்காலி போன்ற துணைக் கருவிகளை வழங்கியுள்ளன.

(3) ஏழைகளுக்கும் தேவைப்பட்டோருக்கும் சில மாவட்டங்களில் கண் சிகிச்சை முகாம் நடத்தியுள்ளன.

(4) ஏழை மகளிருக்குத் தையல் இயந்திரங்களை வழங்கியுள்ளன.

(5) தமிழ்நாடு சட்ட உதவி மற்றும் ஆலோசனை வாரியம், மாண்புமிகு முதலமைச்சரின் மதிய சத்துணவு திட்டம், இலங்கை தமிழ் அகதிகள் மறுவாழ்வு நிதி ஆகியவற்றிற்கு நன்கொடைகள் வழங்கப்பட்டுள்ளன.

(6) கூட்டுறவுச் சங்கங்களின் உறுப்பினர்கள் மற்றும் பணியாளர்கள் பயன்படுத்தவும், நூலகங்கள் நடத்தவும், கூட்டுறவுச் சமுதாயக் கூடங்கள் கட்டப்பட்டு வருகின்றன.

(7) கூட்டுறவாளர்களின் தேவையை பூர்த்தி செய்ய கூட்டுறவு விருந்தினர் இல்லங்களும் கூட்டுறவு தலைமைச் சங்கங்களால் கட்டப்பட்டு வருகின்றன.

(8) கூட்டுறவு விளையாட்டுக் குழுக்கள் அமைக்கப்பட்டு போட்டிகள் நடத்தப்பட்டு பரிசுகள் வழங்கப்படுகின்றன.

60 முடிவுரை.—இவ்வாறாக, பொதுவாக மக்களுக்கும் குறிப்பாக நலிந்த பிரிவினருக்கும் கூட்டுறவுச் சங்கங்களின் பணிகளை விரிவுபடுத்த அரசு அனைத்து முயற்சிகளையும் மேற்கொண்டு வருகிறது. தமிழகத்தில் உள்ள கூட்டுறவுச் சங்கங்கள் மக்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்தும் சீரிய பணியில் புதிய ஊக்கத்துடனும் உறுதியுடனும் 1987–88 ஆம் ஆண்டில் தம்மை மீண்டும் ஈடுபடுத்திக் கொள்ளும்.

136519
சென்னை-600 008

D 1
V211,31 N87
N87-88.3

## LIST OF AGENTS FOR THE SALE OF TAMIL NADU GOVERNMENT PUBLICATIONS.

### IN MADRAS CITY.

Account Test Institute, Egmore, Madras-8.
The City Book Company, Madras-4.
Higginbothams (Private) Limited, Madras-2.
P. Varadachary and Company, Madras-1.
C. Subbiah Chetty and Company, Madras-5.
The Universal Book House, Moore Market, Madras-3.
C. Sitharaman and Company, Madras-14.
Mohan Pathippagam and Book Depot, Madras-5.
C. Venkatesan Chetty and Company, No. 8-C, Pycrofts Road, Madras-5.
The South India Saiva Siddhanta Works Publishing Society (Tirunelveli) Limited, Madras-1.
The Sangam Publishers, No. 11, Sunkurama Chetty Street, Madras-1.
New Century Book House (Private) Limited, Madras-2.
Kalaivani Book Centre, No. 1, Ponniamman Koil Street, Egmore, Madras-8.

### IN MOFFASIL OF TAMIL NADU.

A. Venkatasubban & Company, Vellore (North Arcot) District.
Bharathamatha Book Depot, Thanjavur (Tanjore District).
P. V. Nathan & Company, Kumbakonam (Tanjore District).
Appar Book Stall, Thanjavur.
P. N. Swaminathan and Company, Bazaar Street, Pudukkottai.
Palaniappa Brothers, Tiruchirappalli-2.
S. R. Subramania Pillai, Tirunelveli Junction.
B. Aruldoss, Villupuram (South Arcot District).
Vasantham Stores, Booksellers, 9/31, Cross Cut Road, Coimbatore-12.
Mercury Book Company, 20, Karuppa Gounder Street, Coimbatore-1.
S. M. Jegannatham Book House, 35, Nandhi Koil Street, Tiruchirappalli-1.
Ganesh Stores, South Car Street, Sivakasi.
Mary Martin, Booksellers, Kotagiri (The Nilgiris).
A. K. Chandriah Chettiar & Sons, Salem-1.
5 Parameswari Book Shop, No. 461, Old Market Street, Salem.
5 Meenakshi Pathipagam, Pudukkottai.
7 K. V. Narayana Iyer & Sons, Dindigul, Madurai District.
8 Jayakumari Stores, Nagercoil (Kanyakumari District).
9 Baby Stores, Booksellers, Villupuram (South Arcot District).
0 Dinamani Stores, No. 3/1, Old Post Office Road, Coimbatore-14.
1 Kumaran Book Depot, Booksellers, Erode-1.
2 Vela Book Company, No. A, Annaji Rao Street, Erode-1.
3 Radhamani Stores, 6-A, Raja Street, Coimbatore-1.
4 Ajantha Book Centre, Salem-1.
5 Sri Vidya, 63, Tennure High Road, Tiruchirappalli-2.
6 Sri Ramavilas Book Shop, 90, Amman Sannathi, Madurai-1.

### IN OTHER STATES.

1 Jain Book Agency, New Delhi.
2 International Book House, Trivandrum.
3 The Book Syndicate, Hyderabad-1.
4 Labour Law Publications, Hyderabad.
5 Puthaghalevam, Pondicherry.
6 Prabu Book Service, Gurgaon, Haryana.
7 K. P. Bachi & Company, 286, B.B. Gandhi Street, Calcutta-17.

©

Published under Rules 280 and 283 of the Tamil Nadu Legislative Assembly Rules and printed by the Director of Stationery and Printing Madras.